தொல்காப்பியம்.

இளம்பூரணம்.

எழுத்ததிகாரம்.

பதவுரை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை,
பதிப்பாசிரியன்.

அகஸ்தியர் பிரஸ், அம்பாசமுத்திரம்.
1928.

உ

தொல்காப்பியம்.

இளம்பூரணம்.

பதிப்புரை.

"தொல்காப்பியம்" என்னும் இந்நூல் தமிழ் மொழிக்குத் தலையாக விளங்கும் ஒப்புயர்வற்ற ஓர் இலக்கணம். இஃது அகத்தியனது பன்னிரு மாணாக்கருள் "திரணதூமாக்கினி" என்னும் இயற்பெயரினையும், "பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்" என்னும் புகழ்ப்பெயரினையும் கொண்டு விளங்கிய ஓர் முனிவனால் இயற்றப்பெற்றது. இதற்கு முதல் நூல் அகத்தியனால் இயற்றப்பெற்ற "அகத்தியம்" என்ப. இந்நூல் பன்னீராயிரம் வருஷங்களுக்குமுன் இயற்றப்பெற்றதென வீரசோழியத்தின் பதிப்புரையில் திருமன். சி. வை. தாமோதரம்பிள்ளை நிலைநாட்டியுள்ளனர்.

ஆண், பெண், அலிகளை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் விகுதிகளால் உணர்த்துவது தமிழ்மொழி ஒன்றே. ஆண்பால் விகுதியைப் பொருந்தி ஆணைக்குறியாமலும், பெண்பால விகுதியைப் பொருந்திப் பெண்ணைக் குறியாமலும், ஒன்றன்பால் விகுதியைப் பொருந்தி அலியைக் குறியாமலும்நிற்கும்சொற்கள் ஆரியம் முதலிய மொழிகளில் எண்ணில உண்டு. உயர்திணை, அஃறிணை என்னும் தமிழ் இலக்கணப்பாகுபாடு ஆரியம் முதலியவற்றில் இல்லை. நிலத்தின் பாகுபாடுகளையும், அவற்றின் உரிப்பொருள், கருப்பொருள்களையும், அவற்றின் மக்களது ஒழுக்கங்களையும் கூறுவது தமிழ் இலக்கணம் ஒன்றே.

இவ்வகைத் தனிச் சிறப்புப்பொருந்திய இத்தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரியமொழிகள் சிலவற்றையும், ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும், ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும், இந்நூலாசிரியன் நுழைத்திருத்தலை ஆங்காங்குக் காணலாம். ஆயினும், தமிழ் மக்களின் முற்காலப் பழக்க வழக்க ஒழுக்கங்களும், தமிழ் மொழியின் சீர்மையும் மாண்பும் எற்றும் இந்நூலின்கண் தெற்றெனக் காணலாகும். இந்நூலின் எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைக் கற்போர் நன்னூலாதியவற்றைப் புன்னூலதியனவாகக் காண்பரென்பது திண்ணம்.

இந்நூற்கு உரை எழுதினோர் இளம்பூரணர், கல்லாடர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்னும் ஐவர். அவருள் இளம்பூரணரும், பேராசிரியரும் இந்நூலின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

என்னும் மூன்றதிகாரங்களுக்கும் உரை இயற்றியுள்ளார்கள். கல்லாடர் எழுத்ததிகாரத்திற்கும் சொல்லதிகாரத்திற்கு மாத்திரம் உரையெழுதியிருப்பதாகவும், சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மாத்திரம் உரையெழுதியிருப்பதாகவும் தெரிகிறோம். அவ்வுரைகளும் முறையே இளம்பூரணம், கல்லாடம், பேராசிரியம், நச்சினார்க்கினியம், சேனாவரையம் என வழங்குகின்றன.

சேனாவரையமும்

இவ்வுரைகளில், நச்சினார்க்கினியம் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் தனித்தனியே அச்சாகி வெளிவந்துள்ளன. நச்சினார்க்கினியப் பொருளதிகாரமும், பேராசிரியப் பொருளதிகாரமும் கலந்து அச்சாகி வெளிவந்துள்ளன. பேராசிரியச் சொல்லதிகாரம் கரந்தை தமிழ்ச்சங்கத்தாரால் அச்சிடப்பெற்று முடிந்து விரைவில் வெளிவரும் நிலைமையில் இருக்கின்றது. இளம்பூரணம் எழுத்ததிகாரம் பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பூவிருந்தவல்லிக் கன்னியப்ப முதலியாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. அவ்வெழுத் ததிகாரத்தைப் பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிட்டுப்பார்த்துத் திருத்தி யான் இப்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்துகின்றேன். இளம்பூரணம் பொருளதிகாரம் அகத்திணையியலும் புறத்திணையியலும் முன்னரே அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். சொல்லதிகாரமும் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களும் விரைவில் அச்சிட்டு வெளியிடப்பெறும்.

இளம்பூரணரே முதல் உரையாசிரியர். அவர் "உரையாசிரியர்" எனவே யாவராலும் வழங்கப்படும் பெருமையாய்ந்தவர். அவர் மூன்று அதிகார உரைகளுள்ளும் எழுத்ததிகாரவுரை "எழுத்திற்கு இளம்பூரணம்" என்று யாவராலும் புகழப்பெற்றது. கற்போர் எளிதில் உணருமாறு பொருட்டொடர்புநோக்கிச் சூத்திரச்சொற்களையும் அவற்றின் பொருட்சொற்களையும் பிரித்தும் நிறுத்திப் படித்தற்குரிய அடையாளங்களிட்டும் பதிப்பித்துள்ளேன். ஒவ்வோரிடத்தில் பாட வேறுபாடும், உரைவேறுபாடும் சேர்த்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும் பின்னும் முறையே [ ] இக்குறிகள் இட்டுள்ளேன்.

இவ்வெழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் 1920-ம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன். பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல்கள் முன்னரே அச்சாகி வெளிவந்துள்ளன. இஃது இப்பொழுது வெளிவருகின்றது. பொருளதிகார ஏனைய இயல்களும் சொல்லதிகாரமும் விரைவில் வெளிவரும்.

கோவில்பட்டி,
1—6—1928.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திர அகராதி.

சூத்திரம்.	பக்கம்.
அ ஆ உ ஊ ஏ	௯௬
அவென்னும்	௯௯
அஇ உஅம்	௪௫
அகமென் கிளவிக்கு	௱௭
அகர ஆகாரம்	௱௯
அகர இகரம்	௨௨
அகர உகரம்	௨௨
அகரத் திம்பர்	௨௨
அகர விறுதி	௭௬
அக்கென் சாரியை	௯௬
அடையொடு	௱௮
அணரி நுனிநா	௩௨
அண்ணஞ் சேர்ந்த	௩௩
அண்ண நண்ணிய	௩௨
அதனிலை யுயிர்க்கும்	௱௫௭
அத்தவண் வரினும்	௮௰
அத்திடை வரூஉம்	௯௧
அத்தி னகரம்	௬௬
அத்தே வற்றே	௬௭
அத்தொடு சிவணும்	௱௮
அந்நான் மொழியும்	௱௬௨
அப்பெயர் மெய்யொழித் தன்	௱௰௧
அம்மி னிறுதி	௬௫
அம்மூ வாறும்	௬௨
அரையளபு	௰
அரையென வரூஉம்	௯௰
அல்லதன் மருங்கிற்	௱௰௧
அல்லது கிளப்பி னியற்கை	௱௯
அல்லது கிளப்பினும் வே	௱௰
அல்லது கிளப்பினும் வே	௱௩௯
அல்லது கிளப்பி னெல்	௱௬௧
அல்வழி யெல்லா மியல்	௱௨௨
அல்வழி யெல்லா முறமை	௱௨௩
அல்வழி யெல்லா முறமை	௱௩௧
அல்வழி யெல்லா மெல்	௱௭
அவற்றுள் - அ ஆ வாயிரண்	௩௧
அவற்றுள் - அ இ உ எ	௮
அவற்றுள் - இகர வீற்று	௫௬
அவற்றுள் - இன்னி னி	௬௩
அவற்றுள் - ஏரொற்றுத்	௩௫
அவற்றுள் - காரமுங் காணும்	௬௮
அவற்றுள் - ணனஃகான்	௪௩
அவற்றுள் - நிறுத்த சொல்	௩௮
அவற்றுள் - மெய்யீ	௩௯
அவற்றுள் - மெல்லெழு	௫௧
அவற்றுள் - ரகார	௨௰
அவற்றுள் - ளஃகான்	௪௩
அவற்றுவழி மருங்கிற்	௬௨
அவைதாம் - குற்றிய	௭
அவைதாம் - இயற்கை	௭௩
அவைதாம் - இன்னே வ	௬௨
அவைதாம் - முன்னப்	௬௩
அவைதாம் - மெய்	௩௧
அவையூர் பத்தினும்	௱௫௫
அவ்வழி - பன்னீ ருயிரும்	௩௰
அவ்வா றெழுத்து	௩௨
அவ்விய னிலையு	௰
அழனென் னிறுதி	௱௨௰
அழனே பழனே	௭௰
அளந்தறி கிளவி	௱௬௭
அளபாகு மொழிமுத	௬௩
அளபிறந் துயிர்த்தலும்	௪௫
அளவிற்கு நிறையிற்கும்	௯௨
அளவு நிறையு மாயிய திரியா	௱௫௫
அளவு நிறையு மாயிய திரியா	௱௫௬
அளவு நிறையு மெண்ணும்	௱௨௧
அளவு நிறையும் வேற்றுமை	௱௮
அன்றுவரு காலை	௧௧
அன்ன வென்னு	௭௩
அன்னென் சாரியை	௭௰
அஃதிவ ணுவலா து	௩௬
அஃறிணை விரவும்	௫௬
ஆ ஈ ஊ ஏ ஐ	௮
ஆஎ ஒஎனு	௨௫
ஆஎ ஓஅம்	௪௫
ஆகார விறுதி	௮௰
ஆடூஉ மகடூஉ	௧௬
ஆணும் பெண்ணும்	௱௩
ஆண்மரக் கிளவி	௱௬
ஆதனும் பூதனும்	௱௰௮
ஆயிரக் கிளவி	௱௫௨
ஆயிரம் வரினும்	௱௬௫
ஆயிரம் வரினே	௱௫௬
ஆயிரம் வருவழி	௱௩௰
ஆய்த நிலையலும்	௱௩௨
ஆரும் வெதிருஞ்	௱௨௨
ஆவயின் வல்	௱௩
ஆவு மாவும்	௬௧
ஆவோ டல்லது	௨௫
ஆறன் மருங்	௪௫௩

சூத்திரம்.	பக்கம்.	சூத்திரம்.	பக்கம்.
ஆற னுருபி னகர	௬௧	உணரக் கூறிய	௱௯௪
ஆற னுருபினும்	௫௧	உண்டென் கிளவி	௱௪௯
ஆறென் கிளவி	௱௫௧	உதிமரக் கிளவி	௮௭
ஆனி னகரமு	௪௪	உந்தி முதலா	௯௰
ஆனொற் றகர	௮௪	உப்ப காரமொடு	௨௯
ஆன்முன் வரூஉம்	௮௪	உப்ப கார மொன்றென	௨௮
இ ஈ எ ஏ ஐ	௯	உம்மை யெஞ்சிய	௮௩
இக்கி னிகர	௪௪	உயர்திணைப் பெயரே	௪௨
இகர யகர	௨௯	உயர்திணை யாயி ன	௯௮
இகர விறுதிப்	௮௫	உயர்திணை யாயினு	௱௰௩
இடம்வரை	௮௯	உயிரும் புள்ளியு மிறுதி	௱௫௯
இடைநிலை ரகர	௱௪௯	உயிரும் புள்ளியு மிறுதி யாகி	௯௰
இடைப்படிற்	௧௭	உயிர்முன் வரினு மாயிய	௭௫
இடையெழுத் தென்ப	௧௨	உயிர்முன் வரினு மாயிய	௱௯௰
இடையொற்றுத்	௧௯௭	உயிரிறு சொன்முன்	௯௭
இதழியைந்து	௯௯	உயிரீ றாகிய முன்னிலை	௫௯
இயற்பெயர்	௱௰௮	உயிரீ றாகிய வுயர்திணைப்	௫௯
இரண்டுமுத	௱௫௮	உயிர்மெய் யல்லன	௨௪
இராவென்	௮௨	உயிர்மெய் யீறும்	௯௭
இருதிசை	௱௪௯	உயிரௌ வெஞ்சிய	௨௯
இருளென் கிளவி	௧௯௯	உரிவரு காலை	௮௭
இலமென் கிளவி	௱௭	உருபிய னிலையு	௱௯
இல்ல மரப்	௱௭	உருவினு மிசையினு	௧௮
இல்லென் கிளவி	௱௨௪	உரைப்பொருட் கிளவி	௭௭
இல்லொடு கிளப்	௱	ஊகார விறுதி	௯௯
இறுஅற் றேற்ற	௱௧௭	ஊவெ னொருபெய	௯௪
இனியணி	௮௫	எ என வருமுயிர்	௨௭
இன்றி யென்னு	௮௫	எகர ஒகரத்	௰
இன்னிடை வரூஉம்	௯௭	எகர வொகரம்	௧௫
இன்னென வரூஉம்	௪௯	எகின் மரமாயி	௱௰௫
ஈகார விறுதி	௮௯	எஞ்சிய வெல்லா	௨௮
ஈமுங் கம்மும்	௱௩௨	எட்ட னொற்றே	௱௪௭
ஈரெழுத்து மொழியு மு	௱௯௭	எண்ணி னிறுதி	௭௧
ஈரெழுத்து மொழியும்	௱௯௯	எண்ணுப் பெயர்க்	௱௪௰
ஈரெழுத் தொரு	௱௯௫	எப்பெயர் முன்னரும்	௪௫
ஈறியன் மருங்கினி	௯௨	எருவுஞ் செருவு	௯௰
ஈறியன் மருங்கினு	௧௮	எல்லா மென்னு	௯௮
உஊ ஒஓ வென்னு	௨௫	எல்லா மொழிக்கு	௪௯
உஊ ஒஓஔ வென	௯௧	எல்லாரு மென்னு	௯௮
உஊ கார நவவொடு	௨௭	எல்லா வெழுத்தும்	௯௪
உகர மொடு	௫௯	எழுத்தெனப் படுப	௭
உகர விறுதி	௧௰	எழுத்தோ ரன்ன	௪௯
உச்ச கார மிரு	௨௮	எஔ எனுமுயிர்	௨௭
உச்ச காரமொடு	௨௯	ஏகார விறுதி	௯௫
உட்பெறு புள்ளி	௰	ஏயெ னிறுதி	௯௬

சூத்திரம்.	பக்கம்.	சூத்திரம்.	பக்கம்.
ஏழ னுருபிற்குத்	௭௨	கதநப மவெனும்	௨௪
ஏழென் கிளவி	௱௨௧	கவவோ டியையி	௨௭
ஏனவை புணரின்	௱௨௭	காரமுங் கரமு	௪௭
ஏனவை வரினே	௯௰	கிளந்த வல்ல	௱௬௰
ஏனைப் புளிப்பெயர்	௮௮	கிளைப்பெய ரெல்லாங்	௱௰௫
ஏனைமுன் வரினே	௱௪௧	கிளைப்பெய ரெல்லாங்கொ	௱௫
ஏனை யெகினே	௱௰௫	கீழென் கிளவி	௱௯௩
ஏனை வகரந்	௱௨௮	குமிழென் கிளவி	௱௨௮
ஏனை வகரமின்	௬௭	குயினென் கிளவி	௱௰௪
ஐஒடு குஇன்	௪௰	குறியத னிறுதி	௮௫
ஐஔ வென்னு	௧௧	குறியதன் முன்ன	௬௭
ஐகார ஔகாரங்	௪௮	குறியதன் முன்னரு	௮௨
ஐகார விறுதிப்	௯௭	குறுமையு நெடுமையு	௨௧
ஐந்த னொற்றேம	௱௪௭	குறையென் கிளவி	௬௰
ஐந்த னொற்றே மு	௱௫௰	குற்றிய லிகர	௬௪
ஐந்த னொற்றே மெல்	௱௪௮	குற்றிய லுகரக் கின்னே	௬௩
ஐந்த னொற்றே ய	௱௫௯	குற்றிய லுகரத் திறுதி	௭௰
ஐந்து மூன்று நம	௱௪௯	குற்றிய லுகர முறை	௨௬
ஐயம் பல்லென	௱௯௰	குற்றிய லுகர மு	௯௩
ஐயின் முன்னரும்	௪௫	குற்றெழுத் திம்பரு	௯௯
ஒடுமரக் கிளவி	௯௨	குற்றெழுத் தைந்து	௬௯
ஒவ்வு மற்றே	௨௭	குன்றிசை மொழி	௬௮
ஒழிந்தத னிலையு	௱	கொடிமுன் வரினே	௯௮
ஒற்றிடை யினமிகா	௱௯௭	ஙஞண நமன	௬௯
ஒற்றுநிலை	௱௯௯	சகரக் கிளவியும்	௨௪
ஒற்றுமிகு தகர	௱௰௭	சகார ஞகாரம்	௯௨
ஒன்று முதலாக	௭௧	சாரென் கிளவி	௱௨௯
ஒன்றுமுத லாக வெ	௱௪௪	சார்ந்துவரி னல்லது	௯௪
ஒன்றுமுத லாகிய	௱௫௬	சாவ வென்னுஞ்	௭௫
ஒன்றுமுத லொன்பா	௱௪௫	சிறப்பொடு	௱௰௯
ஒன்பா னிறுதி	௱௫௪	சுட்டி னியற்கை	௮௬
ஒன்பா னிறுதி யுரு	௱௫௩	சுட்டின் முன்னரும்	௯௰
ஒன்பா னொகரமிசை	௱௪௭	சுட்டின் முன்னர்	௭௫
ஒன்பான் முதனிலை	௱௫௨	சுட்டுச்சினை நீடிய	௱௪௨
ஓகார விறுதி யேகார	௱	சுட்டுமுதல் வகரம்	௬௬
ஓகார விறுதிக் கொன்னே	௬௬	சுட்டுமுத லாகிய விகர	௫௭
ஓள பாகு மிடனு	௨௯	சுட்டுமுத லாகிய வையென்	௬௫
ஓரெழுத் தொரு	௧௧	சுட்டுமுத லிறுதி யியல்	[illegible]
ஔகார விறுதி	௱௧	சுட்டுமுத லிறுதி யுருபிய	௯௨
ஔகார விறுவாய்	௯	சுட்டுமுத லிறுதி யுருபிய	௯௭
ஔவென வரூஉம்	௫௯	சுட்டுமுத லாகிய வகர	௱௨௭
ககார ஙகார	௯௨	சுட்டுமுத லிகர	௯௫
கசதப முதலிய	௫௰	சுட்டுமுத லுவ்வினு	௱௰௬
கசதப முதன்மொழி	௱௪௮	செய்யா வென்னும்	௮௰
கண்ணிமை நொடி	௯	செய்யுண் மருங்கின்	[illegible]

தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திர அகராதி.

சூத்திரம்.	பக்கம்.
செய்யு ளிறுதி	௨௧
சேவென் மரப்பெய	௬௬
ஞகாரை யொற்றிய	௱௨
ஞணநம னயரல	௨௮
ஞநமய வவெனு முக	௫௰
ஞநமவ வியையினு	௱௨
ஞநமவ வென்னும்	௪௩
ஞநவென் புள்ளி	௬௬
டகார ணகார	௩௨
டறலள வென்னும்	௧௩
ணகார விறுதி	௱௩
ணனவென் புள்ளி	௫௧
ணளவென் புள்ளிமுன்	௫௨
தகரம் வரும்வழி	௱௨௪
தத்தந் திரிபே	௩௧
தம்மியல் கிளப்பி	௨௰
தமிழென் கிளவி	௱௨௮
தாநா மென்னு	௬௭
தாயென் கிளவி	௱௨௧
தாழென் கிளவி	௱௨௮
தானும் பேனும்	௱௧௯
தான்யா னெனு	௱௰௯
தான்யா னென்னும்	௬௯
திங்கண் முன்வரின்	௮௯
திங்களு நாளும்	௯௯
திரிபுவேறு கிளப்பி	௱௪௩
தேற்ற வெசரமுஞ்	௯௫
தேனென் கிளவி	௱௰௩
தொடர விறுதி	௭௮
தொழிற்பெய	௱௪
தொழிற்பெய	௱௰௨
தொழிற்பெய	௱௨௬
தொழிற்பெய	௱௩௨
நகர விறுதியு	௱௨
நமவ வென்னு	௱௪௯
நாட்பெயர்க் கிளவி	௱௰௩
நாண்முற் றோன்றுங்	௮௮
நாயும் பலகையும்	௱௨௬
நாவிளிம்பு வீங்கி	௩௩
நான்க னொற்றே லகார	௱௫௰, ௱௫௩
நான்க னொற்றே றகார	௱௪௬
நான்கு மைந்து	௱௫௨
நிலாவென் கிளவி	௮௨
நிறுத்த சொல்லுங்	௩௯
நிறையு மளவும்	௱௪௫
நீட வருதல்	௭௫
நீட்டம் வேண்டி	௮
நீயெ னொருபெயருரு	௯௰
நீயெ னொருபெயர்	௬௫
நீயென் பெயரு	௮௯
நும்மெ னிறுதியி	௬௭
நும்மெ னிறுதியு	௫௯
நும்மெ னொருபெயர்	௱௰௧
நுனிநா வணரி	௩௩
நூறு யிரமுன்	௱௫௪
நூறுமுன் வரினுங்	௱௫௧
நூறூர்ந்து வரூஉ	௱௩௰
நூறென் கிளவி	௱௫௫
நெடியத னிறுதி யியல்பா	௱௩௨
நெடியத னிறுதி யியல்பு	௱௨௪
நெடியதன் முன்ன	௫௮
நெட்டெழுத் திம்பரு	௧௬
நெட்டெழுத் திம்ப ரொற்று	௭௧
நெட்டெழுத் தேழே	௧௯
நெல்லுஞ் செல்லுங்	௱௨௪
படர்க்கைப் பெயரு	௱௯
பதக்குமுன் வரினே	௮௬
பத்தனொற் றுக்கெட	௱௬௫
பத்தென் கிளவி	௱௨௯
பலரறி சொன்முன்	௬௩
பலவற் றிறுதி நீடு	௭௮
பலவற் றிறுதி யுரு	௮௰
புல்லவை நுதலிய	௬௪
பல்லித ழியைய	௩௩
பனியென வரூஉங்	௮௭
பனையின் முன்ன	௯௮
பனையு மரையு	௯௮
பனையெ னளவுங்	௬௧
பன்னீ ருயிரு	௨௪
பாழென் கிளவி	௱௨௯
பீரென் கிளவி	௱௨௩
புணரிய னிலையிடை	௬௬
புளிமரக் கிளவி	௮௮
புள்ளி யில்லா	௧௧
புள்ளி யிறுதியு - சொல்	௭௩
புள்ளி யிறுதியு - வல்	௫௫
புள்ளி யீற்றுமு	௪௮
புள்ளும் வள்ளுஞ்	௱௩௩
பூல்வே லென்று	௱௨௬
பூவெ னொருபெய	௯௩

சூத்திரம்.	பக்கம்.	சூத்திரம்.	பக்கம்.
பெண்மெடன் கிளவி	௱௪௰	மெய்யோ டியையினு	௯
பெயருந் தொழிலும்	௪௬	மெல்லெழுத் தென்ப	௧௨
பெற்ற மாயின்	௯௬	மெல்லெழுத் தாறும்	௫௫
பொன் னென்கிளவி	௱௨௩	மெல்லெழுத் தியை யின்னகார	௱௫௩
மகப்பெயர்	௭௯	மெல்லெழுத் தியையி னகார	௱௨௯
மகரத் தொடர்மொழி	௨௯	மெல்லெழுத் தியையி னவ்	௱௨௭
மகர விறுதி வே	௱௬	மெல்லெழுத் தியையி னிறு	௱௰௬
மகன்வினை கிளப்பின்	௱௨௧	மெல்லெழுத்து மிகி	௱௰
மக்க ளென்னும்	௱௫௫	மெல்லெழுத்து மிகி	௱௧௬
மரப்பெயர்க் கிளவிக்கம்மே	௱௫௮	மெல்லெழுத்து மிகு	௫௫
மரப்பெயர்க் கிளவி மெல்	௭௯	மெல்லெழுத் துறழு	௱௯
மருவின் றொகுதி	௪௰	மெல்லெழுத் துறழு	௱௨௨
மழையென் கிளவி	௯௯	மெல்லொற்று	௱௫௮
மன்னுஞ் சின்னு	௱௰௪	மென்மையு மிடைமை	௪௫
மஃகான் புள்ளிமு னத்தே	௬௭	மொழிப்படுத் திசைப்பினு	௨௨
மஃகான் புள்ளிமுன் வவ்வுந்	௧௪	மொழிமுத	௫௨
மாமரக் கிளவியு	௮௫	யகரம் வருவழி	௱௫௯
மாறுகோ ளெ - மெண்	௯௬	யகர விறுதி	௱௨௩
மாறுகோ ளெ - யமைய	௱	யரழ வென்னு மூன்று	௨௰
மின்னும்	௱௰௭	யரழ வென்னும் புள்ளி முன்னர்	௧௪
மீனென் கிளவி	௱௰௫	யவமுன்	௭௫
முதலா வேன தம்	௨௫	யாதெ னிறுதி - மன்	௭௨
முதலீரெண்ணினொ	௱௪௬	யாதெ னிறுதி - முரு	௱௪௰
முதலீ ரெண்ணிஃ	௱௫௰	யாமரக் கிளவியும்	௮௫
முதனிலை நீடினு	௱௫௫	யாவினா மொழியே	௱௪௨
முதனிலை யெண	௱௫௭	யாவென் வினாவி	௬௫
முரணென்	௱௫	யாவென் வினாவும்	௬௪
முற்றிய லுகர	௨௬	ரகார விறுதி	௱௨௨
முன்னுயிர்	௱௪௰	லகார விறுதி	௱௨௫
முன்னென் கிளவி	௱௨௰	லனவென வரூஉ - மூன்	௫௨
மூவள பிசைத்தல்	௮	லனவென வரூஉ - யிறு	௱௫௮
மூன்ற னொற்றே நகார	௱௫௩	வகரக் கிளவி	௨௯
மூன்ற னொற்றே வகார	௱௫௫	வகார மிசையு	௱௰௫
மூன்ற னொற்றே வகாரம்	௱௪௯	வடவேங்கடந் தென்	௧
மூன்ற னொற்றே வந்த	௱௪௮	வண்டும் பெண்டு	௱௪௰
மூன்றன் முதனிலை	௱௫௩	வரன்முறை மூன்று	௪௮
மூன்றுதலை யிட்ட	௫௬	வல்லெழுத் தென்ப	௧௩
மூன்று நான்கு	௱௫௰	வல்லெழுத் தியற்கை	௭௩
மூன்று மாறு	௱௪௬	வல்லெழுத்து முதலிய	௪௩
மெய்ந்நிலை சுட்டி	௧௪	வல்லெழுத்து மிகினு	௮௫
மெய்யி னளபே	௰	வல்லெழுத்து மிகினு - ஒவ்	௮௮
மெய்யி னியக்கம்	௨௰	வல்லென் கிளவி	௱௨௫
மெய்யி னியற்கை	௰	வல்லொற்று - மிகு	௱௪௩
மெய்யின் வழிய	௧௧	வல்லொற்று - வரு	௱௫௯
மெய்யுயிர்	௪௮	வளியென வரூஉம்	௮௯

சூத்திரம்.	பக்கம்.
வன்றொடர் மொழியு	௱௯௮
வஃகான்	௪௯
வாழிய வென்னு	௭௭
விசைமரக் கிளவியு	௬௭
விண்ணென	௮௪
வினையெஞ்சு கிளவிக்கு	௯௯
வினையெஞ்சு கிளவியு	௭௪
வெயிலென் கிளவி	௱௨௭
வெரிந னிறுதி	௱௯
வேற்றுமை குறித்த	௪௰
வேற்றுமை	௭௬, ௮௨, ௬௰, ௬௧, ௬௩, ௬௫
வேற்றுமைக் கண்ணும்	௫௨
வேற்றுமை யல்வழி	௫௭
வேற்றுமை யல்வழிக்குறு	௱௨௰
வேற்றுமை யல்வழி யாய்	௱௨௭
வேற்றுமை வழிய	௪௯
வேற்றுமைக் குகெட	௱௯
வேற்றுமை யாயி	௱௰௭
வேற்றுமை யாயி னேனை	௱௰௨
வேற்றுமை யல்வழி யெண்	௱௫
வேற்றுமை - ஒகர	௱
ழகர வுகர	௯௨
ழகார விறுதி	௱௨௮
ளகார விறுதி	௱௩௧
ணகார விறுதி	௱௰௫
ணகார விறுவாய்	௯
ணகார முன்னர்	௨௧
ணஃகான்	௪௪

பக்கம்.	இயலகராதி.	சூத்திரத்தொகை.
௭௪	உயிர்மயங்கியல்	௯௩
௮௪	உருபியல்	௩௰
௱௩௫	குற்றியலுகரப்புணரியல்	௭௭
௫௰	தொகைமரபு	௩௰
௯	நான்மரபு	௩௩
௩௰	பிறப்பியல்	௨௧
௩௯	புணரியல்	௪௰
௱௨	புள்ளிமயங்கியல்	௱௰
௬௯	மொழிமரபு	௪௯

ஆ இயல் ௯-க்குச் சூத்திரம் — ௪௮௩.

பாயிரம் சூத்திரம்.

ஆ சூத்திரம் — ௪௮௪.

தொல்காப்பியம்

இளம்பூரணம்

சிறப்புப்பாயிரம்

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்கவென்பது மரபு. என்னை? "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவ லன்றே" என்ப வாகலின். பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப்புறவுரையேல் அதுகேட்டு என்னை பயனெனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள்போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும் திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின்மாடம் போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரங்கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சிபுக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரங்கேட்டல் பயனுடைத் தாயிற்று. அப்பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து. எல்லா நூன்முகத்தும் பொதுவாக உரைக்கப்படுதலிற் பொது வெனப்பட்டது. "ஈவோன்றன்மை" முதலிய நூலுட்சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப்பாயிரம் போலாது, நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையேயன்றி, அந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள்முதலிய உணர்த்தலின், அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடைபோல நூற்குச் சிறத்தலாற் சிறப்பெனப்பட்டது.

அவற்றுள், பொது நால்வகைத்து. "ஈவோன் றன்மை யீத லியற்கை, கொள்வோன் றன்மை கோடன் மரபென, ஈரிரண் டென்ப பொதுவின் றொகையே." இதனான் அறிக.

ஈவோர் கற்கப்படுவோரும் கற்கப்படாதோரும் என இருவகையர். கற்கப் படுவோர் நான்கு திறத்தான் உவமம் கூறப்படுவர். "மலைநிலம் பூவே துலாக்கோ லென் றின்னர், உலைவி லுணர்வுடை யார்." இதனான் அறிக.

இனிக் கற்கப்படாதார்க்குக் கூறும் உவமமும் நால்வகைத்து. "கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு,குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப." இதனான் அறிக.

ஈதலியற்கை : "ஈத லியல்பே யியல்புறக் கிளப்பிற், பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்,பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன், புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையிற், றெளிந்த வறிவினன் றெய்வம் வாழ்த்திக், கொள்வோ னுணர்வகை அறிந்தவன் கொள்வாக், கொடுத்தன் மரபெனக்கூறினர் புலவர்." இதனான்அறிக.

கொள்வோர் கற்பிக்கப்படுவோரும் கற்பிக்கப்படாதோரும் என இரு வகையர். கற்பிக்கப்படுவோர் அறுவகையர். அவர்தாம் " தன்மக னாசான் மகனே மன்மகன்,பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே, யுரைகோ ளாளனோ டிவ ரென மொழிப." இதனான்அறிக. இவர்தன்மை : "அன்னங் கிளியே நன்னிற னெய் யரி,யானை யானே றென்றிவை போலக், கூறிக்கொள்ப குணமாண் டோரே." இத னான்அறிக. இனிக் கற்பிக்கப்படாதார் எண்வகையர். " மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன், அடுநோய்ப் பிணியாள னாறாச் சினத்தன், தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர், நெடுநூலைக் கற்கலா தார்." இதனான்அறிக. இவர்தன்மை: "குரங்கெறி விளங்கா யெருமை யாடே, தோணி யென்றாங் கிவையென மொழிப." இதனான் அறிக.

கோடன்மரபு : "கொள்வோன் முறைமை கூறுங் காலைப், பொழுதொடு சென்று வழிபடன் முனியான், முன்னும் பின்னு மிரவினும் பகலினும், அக லா னாகி யன்பொடு புணர்ந்தாங்,காசற வுணர்ந்தான் வாவென வந்தாங், கிருவென விருந்தே டவிழென வவிழ்த்துச், சொல்லெனச் சொல்லிப் போவெனப் போகி, நெஞ்சுகள னாகச் செவிவா யாகக்,கேட்டவை கேட்டவை வல்ல னாகிப், போற்றிக் கோட லவனது தொழிலே"; "எத்திறத் தாசானுவக்கு மத்திறம்,அறத்திற்றிரியாப் படர்ச்சிவழி பாடே" ; "செவ்வன் றெரிகிற்பான் மெய்ந்நோக்கிக் காண்கிற்பான், பல்லுரையுங் கேட்பான் மிகப்பெரிதுங் காதலான், தெய்வத்தைப் போல மதிப் பான் றிரிபில்லான்,இவ்வாறு மாண்பு முடையாற் குரைப்பவே, செவ்வி தி னூலைத் தெரிந்து"; "வழக்கி னிலக்கண மிழுக்கின் றறிதல், பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்,ஆசாற் சார்ந்தவை யமைவரக்கேட்டல்,அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்,வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை,கடனாக் கொளினே மடநனி யிகக் கும்"; "அனைய னல்லோன் கொள்குவ னாயின், வினையி னுழப்பொடு பயன்றலைப் படாஅன்". இவற்றான் அறிக. இவ்வாறு கோடன் மரபுடைய மாணாக்கன் நூன் முற்ற அறிந்தானுமாறு : " ஆசா னுரைத்தவை யமைவரக் கொளினுங், காற்கூற லல்லது பற்றல னாகும்"; "அவ்வினை யாளரொடு பயில்வகை யொருபால், செவ்வி தினு ரைப்ப வவ்விருபாலும்,மையறு புலமை மாண்புநனி யுடைத்தே." இவற்றான்அறிக.

சிறப்புப் பதிஞெருவகைத்து: "ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை, நூற் பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர் பயனொ டாயெண் பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"; "காலங் களனே காரண மென்றிம், மூவகை யேற்றி மொழிநரு முளரே". இவற்றான் அறிக. இனி, அச்சிறப்பிலக் கணம் செப்புமாறு: "பாயிரத் திலக்கணம் பகருங் காலை, நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி, ஆசிரியத் தானும் வெண்பா வானு, மருவிய வகையா னுரைத்தல் வேண்டும்". இதனான் அறிக.

நூல் செய்தான் பாயிரம் செய்வானல்லன், "தோன்று தோற்றித் துறை பல முடிப்பினுந், தான்றற் புகழ்தல் தகுதி யன்றே" என்பவாகலின். பாயிரம் செய்வார் தன் ஆசிரியனும், தன்னொடு ஒருங்கு கற்ற மாணாக்கனும், தன் மாணாக்கனும் என மூவகையர். அவருள் இந்நூற்குப் பாயிரம் செய்தார் தன்னோடு ஒருங்கு கற்ற பனம்பாரனார்.

இ-ள் :—வடவேங்கடம் தென்குமரி அ இடைத் தமிழ் கூறும் நல் உலகத்து வழக்கும் செய்யுளும் அ இருமுதலின்-வடக்கின்கண் ணுளதாகிய வேங்கடமும் தெற்கின்கண் ணுளதாகிய குமரியு மாகிய அவற்றை எல்லையாக வுடைய நிலத்து வழங்கும் தமிழ்மொழியினைக் கூறும் நன்மக்களான் வழங்கும் வழக்கும் செய்யுளுமாகிய இருகாரணத்தானும், எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி-எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக்கணத்தினையும் பொருளிலக்கணத்தினையும் ஆராய்ந்து,செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு-(அவ்வாராய்ச்சியிற் குறைபா டுடையவற்றிற்குச்) செந்தமிழினது இயல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்து வழக்கோடு முதல்நூல்களிற் சொன்னவற்றினைக் கண்டு, முறைப்பட எண்ணி-அவ்விலக்கணம் முறைப்பட ஆராய்ந்து, நிலம் தரு திருவின் பாண்டியன் அவையத்து-மாற்றாரது நிலத்தினைத் தன்கீழ் வாழ்வார்க்குக் கொண்டுகொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன் மாகீர்த்தியது அவைக்கண்ணே, அறம் கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டு ஆசாற்கு-(அவ்வவையுள்ளார்க் கேற்பத் தெரிந்தே நின்ற) மெய் சொல்லும் நாவினையுடைய நான்குவேதத்தினையும் முற்றவுணர்ந்த அதங்கோடென்கின்ற ஊரின் ஆசானுக்கு, அரில் தப தெரிந்து-கடா அறத் தெரிந்துகூறி, மயங்காமரபின் எழுத்துமுறை காட்டி-(அவ்வெழுத்தும் சொல்லும் செய்கின்றுழி முன்னை நூல்போல எழுத்திலக்கணம் சொல்லுட்சென்று) மயங்காத முறைமையானே எழுத்திலக்கணத்தினை வேறு தெரிவித்து, மல்கு நீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என தன் பெயர் தோற்றி-(அவ்வாறு செய்கின்றுழி) மிக்க நீரையுடைய கடலாகிய எல்லையையுடைய வுலகின்கண்ணே, இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணத்தினை நிறைய அறிந்த பழையகாப்பியக்குடியினுள்ளோனெனத் தன் பெயரைத் தோற்றுவித்து, போக்கு அறு பனுவல்-நூற்குச் சொல்லப்பட்ட குற்றங்களற்ற தன்னூலுள்ளே, புலம் தொகுத்தோன்-அவ்விலக்கணங்களைத் தொகுத்துக்கூறினான், (அவன் யாரெனில்,) பல் புகழ் நிறுத்த படிமையோன்-(தவத்தான்வரும்) பல்புகழ்களை உலகிலே நிறுத்தின தவவொழுக் கத்தினையுடையான்.

வழக்கும் செய்யுளும் அ இரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி முறைப்பட எண்ணி ,பாண்டியன் அவையத்து அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத்

தெரிந்து, எழுத்திலக்கணத்தைச் சொல்லும் முறைமை மயங்கா மரபிற் காட்டி, தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றி, பனுவலுள் புலந்தொகுத்தோன் படிமையோன் எனக்கூட்டுக.

வடவேங்கடந் தென்குமரி யெனவே, எல்லை பெறப்பட்டது. வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி னெனவே, நூல் நுதலியதூஉம் பயனும் பெறப்பட்டன. முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி யெனவே, வழியும் யாப்பும் காரணமும் பெறப்பட்டன. பாண்டிய னவையத் தெனவே, காலமுங் களனும் பெறப்பட்டன. அதங்கோட்டாசாற் கரிறபத் தெரிந் தெனவே, கேட்டோர் பெறப்பட்டது. தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்றியெனவே, ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும் பெறப்பட்டன.

மங்கலத்திசையாகலின், வடக்கு முன்கூறப்பட்டது. கடல்கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லைகூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின், கூறப்படா வாயின. பிற இரண்டெல்லை கூறாது இம்மலையும் ஆறும் கூறியது, அவை தீர்த்தமாகலானும் கேடிலவாதலானும் எல்லாரானும் அறியப் படுதலானுமென்பது. இவை அகப்பாட்டெல்லை.

ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்தென்றது, அவ்வெல்லைத் தமிழ்கூறும் நல்லாசிரியரது என்றவாறு. நல்லாசிரியர்-அகத்தியனார் முதலாயினோர். உலக மென்பது ஆசிரியரை. அ என்றது ஆகு பெயரான். அவற்றை எல்லையாக உடைய நிலத்தினை. இடையென்பது ஏழாமுருபு. முறைப்பட வெண்ணி யென்றது, அம்முந்துநூல்களில் ஒன்றற் குரிய இலக்கணத்தினை ஒன்றன் இலக்கணத்தோடு ஆராய்ந்தாற்போல ஆராயாது முறைப்பட ஆராய்ந்து என்றவாறு. மற்று, நூல் செய்யும் இலக்கணமெல்லாம் இந்நூலுட்படச் செய்தானென்பது, இம்முறைப்பட வெண்ணி யென்றதனாற் கொள்க. அவையாமாறு; "ஒத்தே சூத்திர மெனவிரு வகைய", "நேரின மணியை நிரல்பட வைத்தாங், கோரினப் பொருளை யொருவழி வைப்ப, தோத்தெண மொழிப வுயர்மொழிப் புலவர்" [செய்யுளியல்-௧௭௪]; "பட்ப மொட் பந்திட்பஞ் சொல்லிற், சுருக்கங் கருத்துப் பகுதியொடு தொகைஇ, வருத்தமில் பொருட்பய னிகழ்ச்சி சூத்திரம்"; "பொதுவினுஞ் சிறப்பினும் போற்றுங் காலைப், பெறுதல் பெற்றவை காத்தல் காப்பொடு, பிறிதுபெற நிகழ்த்த லதன் கருத் தாகும்"; "அதுவே, பிண்டந் தொகைவகை குறியே செய்கை, கொண்டியல் புறனடை யென்றதன் விகற்பமே, டொன்றிய குறியே யொன்று மென்ப"; "ஆற்றொழுக்கே தேரைப் பாய்வே, சீய நோக்கே பருந்து வீழ்வென், றுவகை நான்கே கிடக்கைப் பயனே"; "பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப், பழிப்பில் சூத்திரப் பயனான் கென்ப"; "பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை, நாடிற் றிரிபில வாகுதல்பொழிப்பே"; "தன்னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினுந், துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம், பன்னிய வகல மென்மனார் புலவர்"; "ஏதுவி னாங்கவை துடைத்த னுட்பம்"; "துடைத்துக்கொள் பொருளை யெச்ச மென்ப". இவற்றானும் பிறவற்றானும் அறிக. இனி, நூல்செய்தற்கு உரியானையும், நூல்செய்யும் ஆற்றையும் சொல்லுதும். "அப்புல மரிதப வறிந்து முதனூல், பக்கம் போற்றும் பயந்தெரிந் துலகத், திட்ப முடைய தெளிவர வுடையோன், அப்புலம் படைத்தற் கமையு மென்ப"; "சூத்திர முரையென் றாயிரு திறனும்,

பாற்படப் போற்றல் படைத்த லென்ப, நூற்பய னுணர்ந்த நுண்ணி யோரே". இவற்றான் அறிக.

போக்கு அறுதல்-நூற்குக்கூறுங் குற்றங்களற்று நன்மையுடைத்தாதல். அவை "ஈரைங் குற்றமு மின்றி நேரிதி னெண்வகைப் புணர்ப்பின தென்மனார் புலவர்". இதனான் அறிக.

'எழுத்தும் சொல்லும் பொருளும்' என வைத்துப் பின்னும் 'மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி' என்றது பிறநூல்போலச் சொல்லுள் எழுத்தினை மயக்கிக்கூறாது, வேறு சேரக்கூறினானென்றதென்பது.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

தொல்காப்பியம்.

இளம்பூரணம்.

எழுத்ததிகாரம்

இவ்வதிகாரம் என் நுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோ வெனின், அதிகாரம் நுதலியதூஉம் அதிகாரத்தினது பெயர் உரைப்பவே அடங்கும். அதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின், எழுத்ததிகாரம் என்னும் பெயர்த்து. எழுத்துணர்த்தினமைக் காரணத்திற்பெற்ற பெயர் என உணர்க.

எழுத்து எனைத்துவகையான் உணர்த்தினரோ வெனின், எட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினரென்பது. அவற்றுள், எட்டுவகையாவன எழுத்து இனைத்தென்றலும், இன்ன பெயர வென்றலும், இன்ன முறைமைய வென்றலும், இன்ன அளவின வென்றலும், இன்ன பிறப்பின வென்றலும், இன்ன புணர்ச்சிய வென்றலும், இன்ன வடிவின வென்றலும், இன்ன தன்மைய வென்றலும். எனவே, அவற்றுள் தன்மையும் வடிவும் ஆசிரியர்தாம் உணருவரேனினும், நமக்கு உணர்த்தல் அருமையின் ஒழிந்த ஆறுமே இதனுள் உணர்த்தினர் என உணர்க. இனி, எட்டிறந்த பலவகையாவன உண்மைத்தன்மையும், குறைவும், கூட்டமும், பிரிவும், மயக்கமும், மொழியாக்கமும், நிலையும், இனமும், ஒன்று பலவாதலும், திரிந்ததன்றிரிபது வென்றலும், பிறிதென்றலும், அதுவும் பிறிதும் என்றலும், நிலையிற்றென்றலும், நிலையா தென்றலும், நிலையிற்றுநிலையா தென்றலும், இன்னோரன்னவும் என இவை. இவையெல்லாம் ஆமாறு மேல் வந்தவழிக் கண்டுகொள்க.

இவ்வதிகாரத் திலக்கணம் கருவியும் செய்கையும் என இருவகைத்து. அவற்றுள், கருவி புறப்புறக்கருவியும், புறக்கருவியும், அகப்புறக்கருவியும், அகக்கருவியும் என நான்குவகைப்படும். செய்கை புறப்புறச்செய்கையும், புறச்செய்கையும், அகப்புறச்செய்கையும், அகச்செய்கையும் என நான்குவகைப்படும். நூன்மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி ; மொழிமரபு புறக்கருவி ; புணரியல் அகப்புறக்கருவி. "எகர வொகரம் பெயர்க்கீ றாகா, முன்னிலை மொழிய வென்மனார்புலவர்" [உயிர் மயங்கியல்-எ௰] என்றாற்போல்வன அகக்கருவி. "எல்லா மொழிக்கு முயிர் வரும் வழியே, உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்", [புணரியல்-௩௮] என்றாற்போல்வன புறப்புறச்செய்கை. "லனவென வரூஉம் புள்ளி முன்னர்த், தந வெனவரிற் றனவா கும்மே" [தொகைமரபு-எ] என்றாற்போல்வன புறச்செய்கை. "உகரமொடு புணரும் புள்ளி யிறுதி, யகரமு முயிரும் வரும்வழி யியற்கை" [தொகைமரபு-உக] என்றாற்போல்வன அகப்புறச்செய்கை. தொகைமரபு முதலிய ஓத்தினுள், இன்ன ஈறு இன்ன வாறு முடியுமெனச் செய்கை கூறுவனவெல்லாம் அகச்செய்கை.

முதலாவது - நூன்மரபு.

இவ்வோத்து என் நுதலிற்றோ வெனின், அதுவும் அதன் பெயர் உரைப்பவே அடங்கும். இவ்வதிகாரத்தாற் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தினை

ஓராற்றால் தொகுத்து உணர்த்துதலின், நூன்மரபு என்னும் பெயர்த்து. இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை [நின்ற] எழுத்திற்கன்றி, தனிநின்ற எழுத்திற்கென உணர்க.

௧. எழுத்தெனப் படுப
அகரமுத னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே.

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எழுத்து எனப்படுப-எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, அகரம் முதல் னகர இறுவாய் முப்பஃது என்ப-அகரமாகிய முதலையுடையனவும் னகரமாகிய இறுவாயினையுடையனவுமாகிய முப்பதென்று சொல்லுப (ஆசிரியர்) ; சார்ந்து வரல் மரபின் மூன்றும் அலங்கடை-சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினையுடைய மூன்றும் அல்லாவிடத்து.

மூன்றும் ஆனவிடத்து முப்பத்து மூன்று என்று சொல்லுப என்றவாறு.

உதாரணம் : அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனவரும்.

எனப்படுப என்ற சிறப்பான், அளபெடையும் உயிர்மெய்யும் வரிவடிவும் சிறப்பில்லா எழுத்தாகக் கொள்ளப்பட்டன. அ ஆ என்பன பெயர். முறை அம்முறை. தொகை முப்பது. அவற்றுள், அகரம் தானும் இயங்கித் தனிமெய்களை இயக்குதற் சிறப்பான், முன்வைக்கப்பட்டது. னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது. தொகை [யென்பது] தொகையுட்டொகையும், தொகையுள்வகையும், தொகையுள்விரியும், வகையுட்டொகையும், வகையுள்வகையும், வகையுள்விரியும், விரியுட்டொகையும், விரியுள்வகையும், விரியுள்விரியும் என ஒன்பதுவகைப்படும். எழுத்தென்பது தொகையுட்டொகை. முப்பதென்பது அதன் வகை. முப்பத்துமூன்றென்பது அதன் விரி. முப்பதென்பது வகையுட்டொகை. முப்பத்துமூன்றென்பது அதன் வகை. அளபெடை தலைப்பெய்து நாற்பதென்பது அதன் விரி. முப்பத்துமூன்றென்பது விரியுட்டொகை. நாற்பதென்பது அதன் வகை. உயிர்மெய் தலைப்பெய்து இருநூற்றைம்பத்தாறென்பது அதன் விரி. செய்யுளின்பம்நோக்கி வகரம் நீக்கிப் பகரம் இடப்பட்டது. அகரமுதல் னகரவிறுவாய் என்ன, இருபெயரொட்டாகுபெயரான் முப்பதன் மேல் நின்றன. (௧)

௨. அவைதாம்
குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.

இது, மேல்சார்ந்துவரும் என்னப்பட்ட மூன்றற்கும் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவைதாம்-மேற் சார்ந்துவரும் எனப்பட்டவைதாம், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பால் புள்ளியும்-குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்றுசொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும் என இவை.

எழுத்து ஓர் அன்ன-(அவை) மேற்சொல்லப்பட்ட முப்பது எழுத்தோடு ஒரு தன்மைய.

அப்பெயர் பெயர். அம்முறை முறை. 'எழுத்தோரன்ன' என வேண்டாகூறிய வதனான். முன் 'எனப்படுப' என்ற சிறப்பு அம்மூன்றற்கும் கொள்ளக்கிடந்தமையின், அது விலக்குதல் பெறாது மென்பது. குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தால் தொக்கன. சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகினவிடத்தும், அவை உயிர் ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சிவேற்றுமையும் பொருள்வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினரென உணர்க. (௨)

௩. அவற்றுள்
அ இ உ
எ ஒ வென்னு மப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

இது, மேற்கூறப்பட்டனவற்றிற்கு அளபும் குறியும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேற்கூறப்பட்ட எழுத்தினுள், அ இ உ எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்-அ இ உ எ ஒ என்று சொல்லப்படுகின்ற அக்கூற்று ஐந்தும், ஓர் அளபு இசைக்கும் (ஒரோவொன்று) ஓர் அளபாக இசைக்கும். குற்றெழுத்து என்ப-(அவைதாம்) குற்றெழுத்தென்னும் குறிய என்றுசொல்லுவர் (புலவர்).

இவர் காரணம்பற்றியன்றிக் குறியிடார். ஆகலின், இது தன்குறுமையான் இக்குறி பெற்றது. இக்குறியை ஆண்டவாறு மேல் வந்தவழிக் கண்டுகொள்க. (௩)

௪. ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ வென்னு மப்பா லேழும்
ஈரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப.

இதுவும் அது.

இ-ள் :—ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்-ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்றுசொல்லப்படுகின்ற அக்கூற்று ஏழும், ஈர் அளபு இசைக்கும்-(ஒரோவொன்று) இரண்டு மாத்திரையாக ஒலிக்கும். நெட்டெழுத்து என்ப-(அவைதாம்) நெட்டெழுத்து என்னும்குறிய என்றுசொல்லுவர் (புலவர்).

ஐகார ஔகாரங்களுக்கு இனம் இல்லை யெனினும், மாத்திரையொப்புமையான் அவை நெட்டெழுத்து எனப்பட்டன. (௪)

௫. மூவள பிசைத்த லோரெழுத் தின்றே.

இது, உயிரளபெடையெழுத்திற்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மூ அளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்று-மூன்று மாத்திரையாக ஒலித்தல் இயல்பாகிய ஓர் எழுத்திற்கு இல்லை. (விகாரமாகிய இரண்டு கூடியதற்கு உண்டு.) (௫)

௬. நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்.

இது, உயிரளபெடை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நீட்டம் வேண்டின்-நீண்டமாத்திரையையுடைய அளபெடை எழுத்துப்பெற வேண்டின், அ அளபு உடைய கூட்டி எழூஉதல்-மேற்கூறிய இரண்டளபுடைய நெடிலையும் ஓர் அளபுடைய குறிலையும்(பிளவுபடாமற்)கூட்டி யெழூஉக, என்மனார் புலவர்-என்று சொல்லுவர் புலவர். (௬)

ஏ. கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே.

இஃது, அம்மாத்திரையிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—கண்ணிமை என நொடி [என] அவ் மாத்திரை-கண்ணிமையும் நொடியு மாகிய அவை மாத்திரைக்கு அளபு, நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறு-(இது) நுண்ணிதாக நூலிலக்கணத்தினை உணர்ந்த ஆசிரியர் கண்ட நெறி.

இமையென்றது இமைத்தற்றொழிலை. நொடியென்றது நொடியிற்பிறந்த ஓசையை. தன் குறிப்பு இன்றி நிகழ்தலின், இமை முன்கூறப்பட்டது. நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணியளத்தல் என எழுவகைய என்னும் அளவினுள், இது சார்த்தியளத்தல். 'நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறு' என்றதனான், நாலுழக்குக் கொண்டது நாழியென்றாற்போல, அவ்வளவைக்கு அளவை பெறாமை அறிக. (௭)

அ. ஔகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப.

இது, மேற்கூறிய குறிலையும் நெடிலையும் தொகுத்து வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இ-ள் :—ஔகார இறுவாய் பன்னீர் எழுத்தும்-ஔகாரமாகிய இறுதியையுடைய பன்னிரண்டு எழுத்தினையும், உயிர் என மொழிப-உயிரென்னும் குறியினையுடைய என்று சொல்லுவர். (அ)

௯. னகார விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப.

இது, மேற்கூறிய உயிரல்லா எழுத்திற்கு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இ-ள் :—னகார இறுவாய் பதினெண் எழுத்தும்-னகரமாகிய இறுதியையுடைய பதினெட்டெழுத்தினையும், மெய் என மொழிப-மெய்யென்னும் குறியினையுடைய என்று சொல்லுவர். (௯)

௰. மெய்யோ டியையினு முயிரிய றிரியா.

இஃது, உயிர்மெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மெய்யோடு இயையினும்-(உயிர்மெய்யாவன) மெய்களோடு உயிர் இயையப்பிறந்த நிலைமையவாயினும், உயிரியல் திரியா-(அவ்வுயிர்மெய்கள் அவ்வியைபின்கண்ணே வேறு ஓர் எழுத்தாய் நின்றமையின், மெய்யோடு இயைபின்றி நின்ற) உயிர்களது இயல்பில் திரியா.

உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க்கூட்டத்தினை, 'மெய்யோடியையினும்' என உயிர்மேல்வைத்துக்கூறியது, அவ்வுயிரின் மாத்திரையே இதற்குமாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப்போலும். இயலென்றது பெரும்பான்மை

மாத்திரையின: சிறுபான்மை குறியும் எண்ணும் கொள்க.
க எனவும், கா எனவும் அவ்வாறு நின்றமை அறிக. (ம)

கக. மெய்யி னளபே யரையென மொழிப.

இது, தனிமெய்க்கு அளபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மெய்யின் அளபு-மெய்யது மாத்திரையினை, அரை என மொழிப-(ஒரோ வொன்று) அரை மாத்திரை யுடைய வென்று சொல்லுவர்.

காக்கை, கோங்கு எனக் கண்டுகொள்க. ஈண்டு வேற்றுமைநயமின்றி ஒற்றுமைநயம் கருதப்பட்டது. (கக)

கஉ. அவ்விய னிலையு மேனை மூன்றே.

இது, சார்பிற்றோற்றத்து எழுத்து மூன்றற்கும் அளபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அ இயல் நிலையும் - மேற்கூறிய அரை மாத்திரையாகிய அவ்வியல் பின்கண்ணே நிற்கும், ஏனை மூன்று-ஒழிந்த சார்பிற் றோற்றத்து மூன்றும்.

கேண்மியா, நாகு, எஃகு எனக் கண்டுகொள்க. [ஏகாரம் ஈற்றசை] (கஉ)

கங. அரையளபு குறுகன் மகர முடைத்தே
இசையிட னருகுந் தெரியுங் காலை.

இது, மெய்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அரை அளபு குறுகல் மகரம் உடைத்து-அரையளபாகிய வெல்லையிற் குறுகிக் கான்மாத்திரை யாதலை மகரமெய் உடைத்து. (அஃது யாண்டோவெனின்) இசையிடன் அருகும்-வேறு ஓர் எழுத்தினது ஒலியின்கண் அது சிறுபான்மையாகி வரும், தெரியுங்காலை-ஆராயுங்காலத்து.

உ - ம். போன்ம், வரும் வண்ணக்கன் எனவரும். கான்மாத்திரையென்பது உரையிற்கோடல். [ஏகாரம் ஈற்றசை.] (கங)

கச. உட்பெறு புள்ளி யுருவா கும்மே.

இது, பகரத்தின் மகரத்திடை வரிவடிவு வேற்றுமைசெய்தல் நுதலிற்று.

இ-ள் :—உள்பெறு புள்ளி உருவு ஆகும்-புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி மகரத்திற்கு வடிவாம். (அஃதின்மை பகரத்திற்குவடிவாம்.)

உ - ம். ம, ப எனக் கண்டுகொள்க.

[உள்ளாற் பெறும்புள்ளி குறுகிய மகரத்திற்கு வடிவாம் என்பதே இச்சூத்திரத்திற்கு நேர் உரை. ஏகாரம் ஈற்றசை.] (கச)

கரு. மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்.

இஃது, உயிர்மெய்யோடு தனிமெய்யிடை வடிவுவேற்றுமை செய்தல் நுதலிற்று.

இ-ள் :—மெய்யின் இயற்கை-தனிமெய்யினது இயல்பு, புள்ளியொடு நிலையல்-புள்ளியொடு நிற்றல். (உயிர்மெய்யினதியல்பு புள்ளியின்றி நிற்றல்.)

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனக் கண்டுகொள்க. (கரு)

கசு. எகர ஒகரத் தியற்கையு மற்றே.

இஃது, எகர ஒகரங்கட்கு ஏகார ஓகாரங்களோடு வடிவுவேற்றுமை செய்தல் நுதலிற்று.

இ-ள்:—எகர ஒகரத்து இயற்கையும் அற்று-எகர ஒகரங்களது இயல்பும் அவ்வாறு புள்ளிபெறும் இயல்பிற்று. (எகார ஒகாரங்களது இயல்பு அப்புள்ளி பெறு இயல்பிற்று.) [ஏகாரம் ஈற்றசை.] (கசு)

உ-ம். எ், ஒ்.

கள. புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே.

இஃது, உயிரும் மெய்யும் கூடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எல்லா மெய்யும் புள்ளி இல்லாக - எல்லா மெய்களும் புள்ளி இல்லை யாம்படியாக, உருவு உருவு ஆகி - தத்தம் முன்னைவடிவே இன்னும் வடிவாக, அகரமோடு உயிர்த்தலும் - அகரத்தோடுகூடி ஒலித்தலும், ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்த்தலும்-ஒழிந்த உயிர்களோடு வடிவு வேறுபட்டு ஒலித்தலுமாகிய, அ ஈர் இயல-அவ்விரண்டு இயல்பினையுடைய, உயிர்த்தல் ஆறு-அவை ஒலிக்கு முறைமை.

"தன்னின முடித்தல்" என்பதனான், அளபெடை உயிரோடும் சார்பிற்றோற்றத்து உயிரோடும் கூடும் உயிர்மெய்யும் கொள்க.

உ-ம். உருவு உருவாகி உயிர்த்தல் க ங எனக் கண்டுகொள்க. உருவு திரிந்து உயிர்த்தல் கா ஙா எனக் கண்டுகொள்க.

ஈண்டு உயிரும் மெய்யும் கூடுகின்ற உயிர்மெய்க்கூட்டத்தினை, எல்லா மெய்யு மென்று மெய்மேல் வைத்துக் கூறியது, அது முன்கூறிக் கூறப்படுதல் நோக்கிப் போலும். உயிர்மெய் யென்பதனை, ஒற்றுமைகொள்வுழி உம்மைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யெனவும், வேற்றுமை கொள்வுழி உம்மைத்தொகையெனவும் கொள்க. 'இல்லாக' என்பது 'இல்லா' என நின்றது. உருவு திரிந்து உயிர்த்தல் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்று உயிர்த்தலும், கோடுபெறுவன கோடுபெற்று உயிர்த்தலும், புள்ளிபெறுவன புள்ளிபெற்று உயிர்த்தலும், புள்ளியும் கோடும் உடன் பெறுவன புள்ளியும் கோடும் உடன்பெற்று உயிர்த்தலும் எனக்கொள்க. (கள)

கஅ. மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே.

இது, உயிர்மெய்யுள் உயிரும் மெய்யும் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இள் :—உயிர்-உயிர், மெய்யின் வழியது-மெய்களின் பின்னவாம், தோன்றும் நிலை-உயிர்கள்தோன்றும் நிலைமைக்கண்.

'தோன்று நிலை' என்றதனான், உயிர்மெய்களைப் பிரிக்குமிடத்தும் கூட்டுமிடத்தும், அவ்வாறே முன்னும் பின்னும் ஆதலைக் கொள்க. மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெறநிற்குமென்றமையால், அக்கூட்டம் பாலும் நீரும்போல உடன் கலந்ததன்றி, விரல் நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறுநின்று கலந்தனவல்ல என்பது பெறுதும். ஈண்டு வேற்றுமைநயம் கருதப்பட்டது. [ஏ-ஈற்றசை.] (கஅ)

கக. வல்லெழுத் தென்ப க ச ட த ப ற.

இது, தனிமெய்களுள் சிலவற்றிற்கு வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இ-ள் :—வல்லெழுத்து என்ப-வல்லெழுத்து என்னும் குறிய என்றுசொல்லுவர், க ச ட த ப ற-க ச ட த ப ற என்னும் தனிமெய்களை.

வல்லென்று இசைத்தலானும், வல் என்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்து எனப்பட்டது. மொழிக்கு முதலாமெழுத்து நான்கு உளவாகலானும், அவற்றால் வழக்குப்பயிற்சி பெரிதாகலானும் [வல்லினம்] முன்கூறப்பட்டது. [க ச ட த ப ற என்னும் தனிமெய்கள் க் ச் ட் த் ப் ற்.] (சக)

உ௰. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன.

இதுவும் அது.

இ-ள் :—மெல்லெழுத்து என்ப - மெல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ங ஞ ண ந ம ன-ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்களை.

மெல்லென்று இசைத்தலானும், மெல் என்ற மூக்கின்வளியாற் பிறத்தலானும், மெல்லெழுத்து எனப்பட்டன. மொழிக்கு முதலாமெழுத்து மூன்று உளவாகலானும் அவற்றின் வழக்குப்பயிற்சியானும் [மெல்லினம்], முதலாமெழுத்துச் சிறுபான்மை வழக்கினவாய் இரண்டாகிய இடையினத்தின்முன் வைக்கப்பட்டது. வன்மை மென்மை கூறலின், எழுத்து அருவன்றி உருவாதல் பெறப்பட்டது. உயிருக்கும் குறுமை நெடுமை கூறலின்,உருவென்பது பெறுதும். (உ௰)
[ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்கள் ங் ஞ் ண் ந் ம் ன்.]

உக. இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.

இதுவும் அது.

இ-ள் :—இடையெழுத்து என்ப - இடையெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ய ர ல வ ழ ள-ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்களை.

இடைநிகரவாகி ஒலித்தலானும், இடைநிகர்த்தாய மிடற்றுவளியாற் பிறத்தலானும் இடையெழுத்து எனப்பட்டது. [ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்கள் ய் ர் ல் வ் ழ் ள்.] (உக)

உஉ. அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை.

இது, தனிமெய் மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அ மூ ஆறும்-மேற்சொல்லப்பட்ட (மூவாறு) பதினெட்டு மெய்யும், வழங்கு இயல் மருங்கின் - தம்மை மொழிப்படுத்தி வழங்கும் இயல்பு உளதாமிடத்து, மெய்மயக்கு-மெய் மயக்கம் என்றும், உடன்நிலை-உடனிலை மயக்கம் என்றும் இருவகைய, தெரியும் காலை-(அவை மயங்கு முறைமை) ஆராயும் காலத்து.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூன்றனையும் உறழ்ச்சிவகையான் உறழ ஒன்பது உளவாமன்றே, அவற்றுள் தனிமெய்யோடு தனிமெய் மயக்கம் ஒன்றே கூறிய தென்னெனின், மற்றவற்றிற்கு வரையறை யின்மையின், வரையறையுடைய தனிமெய்மயக்கமே கூறியொழிந்தார் என உணர்க. மெய் என்றதனால், தனிமெய்யோடு உயிர்மெய் மயக்கமன்றி, தனிமெய்யோடு தனிமெய் மயக்கமாதல் கொள்க. (உஉ)

உரு. டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னு மூவெழுத் துரிய.

இது, மெய்மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ட ற ல ள என்னும் புள்ளி முன்னர்-ட ற ல ள என்று சொல்லப் படும் புள்ளிகளின் முன்னர், க ச ப என்னும் மூ எழுத்து உரிய-க ச ப என்று சொல்லப்படும் மூன்றெழுத்தும் மயங்குதற்கு உரிய.

உ-ம். கட்க, கற்க, செல்க, கொள்க எனவும், கட்சிறார், கற்சிறார், செல்சிறார், கொள்சிறார் எனவும், கட்ப, கற்ப, செல்ப, கொள்ப எனவும் வரும்.

மேல் 'தெரியுங்காலை' என்றதனான், இம்மெய்மயக்கம் கூறுகின்ற சூத்திர மெல்லாம் பலபடியால் மயக்கம் கொள்ளச் சொல்நோக்கு உடையவெனினும்,வழ க்கினோடு பொருந்த ஒன்றனோடு ஒன்றன்றி மயங்காதென்பது கொள்க. மெய் மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின், மேற் கூறும் புணர் மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறி யவா றாயிற்று. (உரு)

உச. அவற்றுள்
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்.

இதுவும் அது.

இ-ள் :—அவற்றுள்-மேற்கூறிய நான்கனுள்ளும், லளஃகான் முன்னர்-லகார ளகாரங்களின் முன்னர், யவவும் தோன்றும்-கசபக்களேயன்றி யகர வகரங்களும் தோன்றிமயங்கும்.

உ-ம். கொல்யானை, வெள்யானை, கோல்வளை, வெள்வளை எனவரும். (உச)

உரு. ஙஞணநமனவெனும் புள்ளி முன்னர்த்
தத்த மிசைக ளொத்தன நிலையே.

இதுவும் அது.

இ-ள் :—ங ஞ ண ந ம ன என்னும் புள்ளி முன்னர்-ங ஞ ண ந ம ன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர், தம்தம் மிசைகள் ஒத்தன-(நெடுங்கணக்கி னுள்) தத்தமக்கு மேல்நிற்கும் எழுத்தாகிய க ச ட த ப ற க்கள் பொருந்தின, நிலை-மயங்கிநிற்றற்கண். [ஏகாரம் ஈற்றசை.]

உ-ம். தெங்கு, மஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று எனவரும். (உரு)

உசா. அவற்றுள்
ணனஃகான் முன்னர்க்
கசஞப மயவவ் வேழு முரிய.

இதுவும் அது.

இ-ள் :—அவற்றுள்-மேற்கூறப்பட்ட மெல்லெழுத்து ஆறனுள், ணனஃகான் முன்னர் - ணகார னகாரங்களின் முன்னர், க ச ஞ ப ம ய வ ஏழும் உரிய-(டறக்களே யன்றி,) க ச ஞ ப ம ய வ என்றுசொல்லப்படும் ஏழும் மயங்குதற்கு உரிய.

உ-ம். வெண்கலம், புன்கண், வெண்சாந்து, புன்செய், வெண்ஞாண், பொன்ஞாண், வெண்பலி, பொன்பெரிது, வெண்மாலை, பொன்மாலை, மண்யாது, பொன்யாது, மண்வலிது, பொன்வலிது எனவரும். (உ௬)

உஎ. ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே.

இதுவும் அது.

இ-ள் :—ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்-ஞ ந ம வ என்றுசொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், யஃகான் நிற்றல் மெய்பெற்றன்று-யகரம் மயங்கி நிற்றல் பொருண்மைபெற்றது. [ஏகாரம் ஈற்றசை.]

உ-ம். உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது எனவரும். (உஎ)

உஅ. மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.

இதுவும் அது.

இ-ள் :—மஃகான் புள்ளிமுன்-மகரமாகிய புள்ளி முன்னர், வ உம் தோன்றும்-(பகர யகரங்களேயன்றி) வகரமும் தோன்றிமயங்கும். (உஅ)

உ-ம். நிலம் வலிது எனவரும்.

உகூ. யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.

இதுவும் அது.

இ-ள் :—ய ர ழ என்னும் புள்ளி முன்னர்-ய ர ழ என்றுசொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், முதல் ஆகு எழுத்து ஙகரமொடு தோன்றும் - மொழிக்கு முதல் ஆம் என்னப்பட்ட ஒன்பதுமெய்யும் (முதலாகா) ஙகரத்தோடு தோன்றி மயங்கும்.

உ-ம். வேய் கடிது, வேர் கடிது, வீழ் கடிது, சிறிது, தீது, பெரிது; ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவரும். வேய்ஙனம், வேர்ஙனம், வீழ்ஙனம் எனவும் ஒட்டுக. வேய் யாது என்புழி, உடனிலையாதலான் யகரம் ஒழித்து ஒட்டுக. (உகூ)

['மொழிக்கு முதல் ஆம் என்னப்பட்ட ஒன்பது மெய்' என்பது மொழிக்கு முதலாய் வரும் ஒன்பது உயிர்மெய்யெழுத்துக்களில் உயிரொழிந்த மெய்களைக் குறிக்துகின்றது.]

௩0. மெய்ந்நிலைச் சுட்டி னெல்லா வெழுத்துந்
தம்முற் றாம்வரூஉம் ரழவலங் கடையே.

இது, நிறுத்த முறையானே உடனிலைமயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மெய்நிலை சுட்டின்-பொருள்நிலைமைக் கருத்தின்கண், எல்லா எழுத்தும் தம்முன் தாம் வரும்-எல்லா மெய்யெழுத்தும் தம்முன்னே தாம் வந்துமயங்கும், ர ழ அலங்கடை-ரகார ழகாரங்கள் அல்லாதஇடத்து. [ஏகாரம் ஈற்றசை.]

உ-ம். காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, மண்ணை, தத்தை, வெந்நோய், அப்பை, அம்மி, வெய்யர், எல்லி, எவ்வீ, கொள்ளி, கொற்றி, கன்னி

எனவரும். 'மெய்ந்நிலைச்சுட்டின்' என்றதனால், 'தம்முற்றும்வரும்' என்றது மெய்ம்முன்னர் மெய்யென்னும் மாத்திரையன்றி உடனிலைமெய் மேலதாம் என்பதுகொள்க. 'எல்லாம்' என்றது, மேல் ய ர ழ என்ற அதிகாரம் மாற்றிவந்து நின்றது. (௩௰)

௩௧. அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு.

இ-ள்:—அ இ உ அமூன்றும் சுட்டு-(குற்றெழுத்து என்னப்பட்ட) அ இ உ என்னும் அம்மூன்றும் சுட்டு என்னும் குறியவாம்.

உ-ம். அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் எனவரும். (௩௧)

௩௨. ஆ எ ஒ அம் மூன்றும் வினா.

இ-ள்:—ஆ எ ஒ அமூன்றும் வினா-(மேல் நெட்டெழுத்து என்னப்பட்ட) ஆ எ ஒ என்னும் அம்மூன்றும் வினா என்னும் குறியவாம்.

உ-ம். உண்கா, உண்கே, உண்கோ சாத்தா எனவரும்.

"தன்னின முடித்தல்" என்பதனால், எகாரமும் யகரஆகாரமும் வினாப் பெறுமெனக்கொள்க. இக்குறிகளையும் முன்குறிலென்றும் நெடிலென்றும் கூறியவழியே கூறுகவெனின், இவை சொல்நிலைமையிற்பெறும் குறியாகலின், ஆண்டு வையாது மொழிமரபினைச் சாரவைத்தார் என்க. இக்குறி மொழிநிலைமைக்கேல் எழுத்தின் மேல் வைத்துக் கூறியது என்னையெனின், இவ்வதிகாரத்துப் பெயர்வினையல்லனவற்றிற்குக் கருவிசெய்யாமையின் என்க. (௩௨)

௩௩. அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலும்
உளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார்புலவர்.

இஃது, எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையின் நீண்டுநிற்கும் இடம் இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—அளபு இறந்து உயிர்த்தலும்-(உயிரெழுத்துக்களெல்லாம்) தமக்குச் சொன்ன அளவினைக் கடந்து ஒலித்தலையும், ஒற்று இசை நீடலும்-ஒற்றெழுத்துக்கள் தம்மொலி முன்கூறிய அளபின் நீடலையும், இசையொடு சிவணிய நரம்பின் மறைய-(இந்நூலுட்கூறும் விளியின் கண்ணேயன்றிக்) குரல்முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசைநூற்கண்ணும், உள என மொழிப என்மனார் புலவர்-உள எனச்சொல்லுவர் அவ்விசைநூலாசிரியர் என்று சொல்லுவர் புலவர்.

ஒற்றிசை நீடலும் என்றனர், அளபிறந்துயிர்த்த லென்றது அதிகாரத்தால் நின்ற உயிர்மேற் சேறலின். உள வென்றது அந்நீட்டிப்பு ஒருதலையன் றென்பது விளக்கிற்று. இசைநூலாசிரியரும் முதனூலாசிரியர்தாமே யெனினும், 'மொழிப' என வேறொருவர்போலக் கூறியது, அதுவும் வேறு ஒரு நூலாகச் செய்யப்படும் நிலைமைநோக்கிப் போலும். 'மறையும்' என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. அகரம் செய்யுள் விகாரம். (௩௩)

முதலாவது நூன்மரபு முற்றிற்று.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற் கன்றி மொழியிடை [நின்ற] எழுத்திற்கு எனவுணர்க.

நுச. குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே.

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், சார்பிற்றோற்றத்து எழுத்துக்களிற் குற்றியலிகரத்தில் ஒருமொழிக்குற்றியலிகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—குற்றியலிகரம்-ஒருமொழிக்குற்றியலிகரம், உரையசைக் கிளவிக்கு-உரையசைச் சொல்லாகிய மியா என் முதற்கு, ஆவயின் வரூஉம்-(சினையாக) அச்சொற்றன்னிடத்து வருகின்ற, யா என் சினைமிசை-யா என் சினைமிசை, மகரம் ஊர்ந்து நிற்றல்வேண்டும்-மகர ஒற்றினை ஊர்ந்து நிற்றலைவேண்டும் (ஆசிரியன்).

உ-ம். கேண்மியா எனவரும். மியா என்னும்சொல் இடம். மகரம் பற்றுக்கோடு. யா என்னும் சினையும் மகரம்போலக் குறுகுதற்கு ஒரு சார்பு. (க)

நுரு. புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.

இது, குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வருமென்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—புணர் இயல் நிலை இடையும்-இருமொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக்கண்ணும், குறுகல் உரித்து-அவ்விகரம் குறுகுதலுடைத்து. உணரக்கூறின்-(ஆண்டை இடத்தினையும் பற்றுக்கோட்டினையும் ஈண்டு) உணரக் கூறப்புகின், முன்னர் தோன்றும்-(அது வேண்டுவதில்லை,) குற்றியலுகரப்புணரியலுள் (அவ்விடனும் பற்றுக்கோடும்) தோன்றும்.

'புணரிய னிலை யிடையும்' என் மொழிமாற்றி உரைக்க. முன்னர்த்தோன்றுமாறு : "யகரம் வரும்வழி யிகரங் குறுகும், உகரக் கிளவி துவரத்தோன்றாது" [குற்றியலுகரப் புணரியல்-ரு] என்பதனுள் அறிக. உகரம்சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

உ-ம். நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது எனவரும். (உ)

நுசு. நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

இஃது, ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நெட்டெழுத்து இம்பரும்-நெட்டெழுத்தினது பின்னும், தொடர்மொழி ஈற்றும்-தொடர்மொழியது இறுதியினும், குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்து (நிற்றல் வேண்டும்)-குற்றிய லுகரம் வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து (நிற்றலை வேண்டும் ஆசிரியன்).

"தந்துபுணர்ந்துரைத்தல்" [மரபு-௱௰] என்னும் தந்திரவுத்தியான், முன்னின்ற 'நிற்றல் வேண்டும்' என்பது ஈண்டும் புணர்க்கப்பட்டது.

உ-ம். காகு, வரகு என வரும்.

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீறும் இடம். வல்லெழுத்துப் பற்றுக்கோடு. இவ்வாறு இடமும் பற்றுக்கோடும் கூறவே, மொழிக்கு ஈறுதலும் கூறியவா றாயிற்று. (௩)

௩௭. இடைப்படிற் குறுகு மிடனு மாருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான.

இது, குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இடைப்படினும் குறுகும் இடன் உண்டு-(அவ்வுகரம்) புணர்மொழி இடைப்படினும் குறுகும் இடமுண்டு. (அதன் இடமும் பற்றுக்கோடும் யாண்டோ பெறுவதெனின்) கடப்பாடு அறிந்த புணரியலான்-அதன் புணர்ச்சிமுறைமை அறியும் குற்றியலுகரப்புணரியலின்கண்ணே.

'இடைப்படினும் குறுகும்' என மொழிமாற்றி உரைக்க. அக்குற்றியலுகரப் புணரியலுள் "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித், தொல்லை யியற்கை நிலையலு முரித்தே" [குற்றியலுகரப் புணரியல்-௪] என்பதனுள் வல்லொற்றுத்தொடர்மொழியும் வல்லெழுத்துவருவழியும் இடம். அவ்வல்லொற்றுத்தொடர்மொழியீற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

உ-ம். செக்குக்கணை, சுக்குக்கோடு எனவரும்.

'இடன்' என்றதனன், இக்குறுக்கம் சிறுபான்மை என்றுணர்க. [ஆர், ஏ என்பன அசைகள். 'புணரியலான்' என்பது வேற்றுமை மயக்கம். அகரம் சாரியை.] (௪)

௩௮. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இஃது, ஒருமொழி ஆய்தம் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆய்தப் புள்ளி-ஆய்தமாகிய புள்ளி, குறியதன்முன்னர்-குற்றெழுத்தின் முன்னர், உயிரொடு புணர்ந்த வல் ஆறன் மிசைத்து-உயிரொடுபுணர்ந்த வல்லெழுத்து ஆறன் மேலது.

உ-ம். எஃகு, கஃசு எனவரும்.

குறியதன்முன்னரும் வல்லெழுத்துமிசையும் இடம். இஃது உயிரன்மையின், இதற்குப் பற்றுக்கோடு என்பதில்லை. கஃறீது என்பதனை மெய்பிறிதாகிய புணர்ச்சி [புணரியல்-௭] என்ப வாகலின், 'புள்ளி' என்றதனன் ஆய்தத்தை மெய்ப்பாற் படுத்துக்கொள்க. ஈண்டும் உயிரென்றது, மேல் 'ஆய்தத்தொடர் மொழி' [குற்றியலுகரப் புணரியல்-௧] என்றோதலின் பெரும்பான்மையும் குற்றியலுகரத்தினை. வெஃகாமை முதலிய பிற உயிர் வரவு சிறுபான்மை யெனக்கொள்க. (௫)

ருசு. ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்.

இஃது, அவ்வாய்தம் புணர்மொழியுள்ளும் வருமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ஈறு இயல் மருங்கினும்-நிலைமொழியீறு வருமொழிமுதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தினும், இசைமை தோன்றும்-ஆய்தவொலி தோன்றும்.

உ-ம். கஃறீது, முஃடீது எனவரும். ஈண்டும் இடங்கள் அவை. (ரு)

ருசு. உருவினு மிசையினு மருகித் தோன்று
மொழிக்குறிப் பெல்லா மெழுத்தி னியலா
ஆய்த மஃகாக் காலை யான.

இஃது. அவ்வொருமொழி ஆய்தத்திற்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உருவினும்-ஒருபொருளினது உருவத்தின்கண்ணும், இசையினும்-ஓசையின்கண்ணும். அருகித் தோன்றும்-சிறுபான்மையாய்த் தோன்றும், குறிப்புமொழி யெல்லாம்-குறிப்புமொழிகளெல்லாம், எழுத்தின் இயலா-ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு [மெழுத்துப்போல] நடவா. (அஃது எக்காலத்துமோ வெனின், அன்று.) ஆய்தம் அஃகா காலையான - அவ்வாய்தம் தன் அரைமாத்திரை அளபாய்ச் சுருங்கிநில்லாது (அவ்வுருவும் இசையது மிகுதியும் உணர்த்துதற்கு) நீண்டகாலத்து அந்நீட்சிக்கு.

உ-ம். 'கஃறென்றது' என்பது உருவு. 'சுஃறென்றது' என்பது இசை. (எ)

ருஅ. குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே.

இது, "நீட்டம் வேண்டின்" [நூன்மரபு-ரு] என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—குன்று இசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும்-(அளபெடையோசையாகச் சொல்லாதொழியில்,) குன்றுவதான ஓசையையுடைய அவ்வளபெடைஎழுத்தானுய மொழிக்கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும், (அவையாவையெனின்,) நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்து-நெட்டெழுத்துக்களின் பின்னுக (அவற்றிற்குப்பிறப்பானும் புணர்ச்சியானும் ஓசையானும்) இனமொத்த குற்றெழுத்துக்கள்.

உ-ம். ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ எனவரும்.

ஈண்டு மொழியென்றது, அவ்வளபெடைஎழுத்து ஒருபொருளுள் உணர்த்தி ஓரெழுத்தொருமொழியாய் நிற்கும் நிலைமையினை. இவையும் மொழிமேற் காணப்படுதலிற் சாற்பிற்றோற்றத்து எழுத்து எனப்படுமாலெனின், பெரும்பான்மையும் அம்மொழிதானே அவ்வெழுத்தாய் வருதலானும், அம்மொழிநிலைமை ஒழிய வேறெழுத்தாகவும் சொல்லப்படுதலானும், அவ்வாறு ஆகாதென்பது.

சிறுபான்மையும் அம்மொழிதானே எழுத்தாய் வாராதெனக் கொள்க.

[உ-ம்.] எருதுகாலுறு அது என்றாற்போல்வன. (அ)

௪௨. ஐ ஔ வென்னு மாயி ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும்.

இது, மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஐ ஔ என்னும் ஆ ஈர் எழுத்திற்கு-(ஒத்த குற்றெழுத்து இல்லா) ஐ ஔ என்றுசொல்லப்படும் அவ்விரண்டெழுத்திற்குமுன், இகரம் உகரம் இசைநிறைவு ஆகும்-(ஈகாரம் ஊகாரங்கட்கு ஒத்த குற்றெழுத்தாகிய) இகர உகரங்கள் (அக்குன்றிசை மொழிக்கண் நின்று) ஓசையை நிறைப்பனவாகும்.

இத்துணையும் நூன்மரபின் ஒழிபு. (௯)

௪௩. நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி.

இஃது, எழுத்தினான் மொழியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நெட்டெழுத்து ஏழும்-நெட்டெழுத்தாகிய ஏழும், ஓர் எழுத்து ஒரு மொழி-ஓர் எழுத்தானாகும் ஒரு மொழியாம்.

உ-ம். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவரும்.

இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது. ஔகாரத்தில் உயிர்மெய்யினையே கொள்க. 'ஏழும்' என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது. [ஏகாரம் அசை.] (௰)

௪௪. குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே.

இது, குற்றெழுத்துக்கள் ஓரெழுத்தொருமொழி ஆகா வென்பதும், அவற்றுள் ஒருமொழியாவன உளவென்பதும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—குற்றெழுத்து ஐந்தும்-குற்றெழுத்தாகிய ஐந்தும், மொழி நிறைபு இல-ஓரெழுத்தாய்நின்று ஒருமொழியாய் நிறைதல் இல.

அவற்றுட் சில நிறைக்கும்.

ஒகரம் ஒழிந்த நான்கும் சுட்டாயும் வினாவாயும் மொழிநிறைக்குமன்றோ வெனின், அவை இடைச்சொல்லாதலின், அவற்றிற்குக் கருவிசெய்யார் என்க. ஐந்தும் என்பதன் உம்மை தொக்கு எச்சப்படுகின்றது. [ஏகாரம் ஈற்றசை.]

இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

உ-ம். து, நொ எனவரும். (௧௧)

௪௫. ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

இஃது, எழுத்தினான் ஆகும் மொழிகளின் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஓர் எழுத்து ஒருமொழி-ஓரெழுத்தான் ஆகும் ஒருமொழி, ஈர் எழுத்து ஒருமொழி-இரண்டெழுத்தான் ஆகும் ஒருமொழி, இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி-இரண்டிறந்து பலவற்றான் இசைக்கும் தொடர்மொழி, உளப்பட மூன்று-உட்பட்ட மொழிகளின் நிலைமை மூன்றாம், தோன்றிய நெறி-அவை தோன்றிய வழக்குநெறிக்கண். [ஏகாரம் ஈற்றசை.]

உ-ம். ஆ, மணி, வரகு, கொற்றன் எனவரும். (௧௨)

சசு. மெய்யி னியக்க மகரமொடு சிவணும்.

இது, தனிமெய்களைச் சொல்லும் முறைநிலை இதுவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மெய்யின் இயக்கம்-தனிமெய்களினது இயக்கம், அகரமொடு சிவணும்-அகரத்தோடு பொருந்தும்.

உ-ம். "ட ற ல ள வென்னும் புள்ளி" [நூன்மரபு-உ௩] எனவரும்.

இது மொழியிடை [நின்ற] எழுத்துக்கள் அன்மையின் நூன்மரபின் வைக்க வெனில், தன்னை உணர்த்தாது வேறு பொருள் உணர்த்தும் சொல்நிலைபோல 'டறலள' வென்றது உயிர்மெய்யை உணர்த்தாது தனிமெய்யை உணர்த்தலானும், ஒற்றினை உயிர்மெய்போலச் சொல்லுகின்ற வழுவமைதியிலக்கணத்தானும் மொழிமரபின்கண்ணதாயிற்றென உணர்க. (க௩)

சஎ. தம்மியல் கிளப்பி னெல்லா வெழுத்து
மெய்ந்நிலை மயக்க மான மில்லை.

இது, மெய்ம்மயக்கத்திற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எல்லா எழுத்தும் தம் இயல் கிளப்பின்-எல்லா மெய்யெழுத்தும் மொழியிடையின்றித் தம் வடிவின் இயல்பைச் சொல்லுமிடத்து, மெய்மயக்கநிலை மானம் இல்லை-மெய்ம்மயக்கநிலையின் மயங்கிவருதல் குற்றம் இல்லை.

உ-ம். "வல்லெழுத் தியையின் டகார மாகும்" [புள்ளிமயங்கு-எ] எனவரும்.

இதனை அம் மெய்ம்மயக்கத்து வைக்கவெனின், இது வழுவமைதிநோக்கி மொழிமரபின்கண்ணதாயிற்று. (கச)

சஅ. யரழ வென்னு மூன்றுமுன் னொற்றக்
கசதப ஙஞநம வீரொற் றாகும்.

இஃது, ஈர் ஒற்று உடனிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ய ர ழ என்னும் மூன்று-ய ர ழ என்றுசொல்லப்படுகின்ற மூன்றனுள் ஒன்று, முன் ஒற்ற-(குறிற்கீழும் நெடிற்கீழும்) முன்னே ஒற்றாய் நிற்ப (அவற்றின் பின்னே), கசதப ஙஞநம ஈர் ஒற்றாகும்-கசதபக்களிலொன்றாதல் ஙஞநமக்களிலொன்றாதல் ஒற்றாய்வர அவை ஈரொற்றுடனிலையாம்.

உ-ம். வேய்க்குறை, வேய்ங்குறை, வேர்க்குறை, வேர்ங்குறை, வீழ்க்குறை, வீழ்ங்குறை, சிறை, தலை, புறம் என ஒட்டுக.

இவ்விதி மேல் ஈற்றகத்து உணர்ந்துகொள்ளப்படுமாலெனின், இது 'ஈர்க்கு' 'பீர்க்கு' என ஒருமொழியுள் வருதலானும், இரண்டுமொழிக்கண் வருதல் விகாரமாதலானும் ஈண்டுக் கூறப்பட்டது. அஃதேல், இதனை நூன்மரபினகத்து மெய்ம்மயக்கத்துக்கண் கூறுக வெனின், ஆண்டு வேற்றுமைநயம்கொண்டதாகலின் மூவொற்று உடனிலையாதல் நோக்கி ஒற்றுமைநயம்பற்றி ஈண்டுக் கூறப்பட்டது. (க௫)

சகூ. அவற்றுள்
ரகார ழகாரங் குற்றொற் றாகா.

இது, ரகார ழகாரங்கட்கு எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேற்கூறப்பட்ட மூன்றனுள்ளும், ரகாரம் ழகாரம் குற்று ஒற்று ஆகா-ரகாரமும் ழகாரமும் குறிற்கீழ் ஒற்றாகா.

அவை நெடிற்கீழ் ஒற்றும்; குறிற்கீழ் உயிர்மெய்யாம்.

உ-ம். தார், தாழ் என நெடிற்கீழ் ஒற்றாய்நின்றன. கரு மழு எனக் குறிற்கீழ் உயிர்மெய்யாய் நின்றன.

இவ்வாறு விலக்கினமையின், யகரம் பொய் எனவும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றாயிற்று. குற்றொற்று என்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத்தொகை. குறிற்கீழ் நிற்றலான், குறியது எனப்பட்டது. ஈண்டுக் குறில் நெடில் என்கின்றது மொழிமுதல் எழுத்தினை என உணர்க. இது மேல் வரையறை இல எனப்பட்ட உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு ஓர் வரையறை கண்டு கூறினவாறு. (சக)

நிy. குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல.

இ-ள் :—குறுமையும் நெடுமையும் அளவின் கோடலின்-உயிரெழுத்திற்குக் குறுமையும் நெடுமையும் அளவிற் கொள்ளப்படுதலில், தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல - தொடர்மொழிக்கீழ் நின்ற ரகார ழகாரங்களெல்லாம் நெடிற்கீழ் நின்ற ரகார ழகாரங்களின் இயல்பையுடைய (என்றுகொள்ளப்படும்).

உ-ம். அகர், புகர், அகழ், புகழ் எனக் கொள்க.

'புலவர்' என்றாற்போல இரண்டுமாத்திரையை இறந்ததன் பின்னும் வருமாலெனின், அவையும் "தன்னின முடித்தல்" என்பதனால் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். எல்லாம் என்றதனான், ரகார ழகாரங்களேயன்றி, பிற ஒற்றுக்களும் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். இதனானே, வீரல் நீது என்புழி லகரம் 'நெடிற்கீழ் ஒற்று' என்று கெடுக்கப்படும். (சஎ)

நிக. செய்யு ளிறுதிப் போலு மொழிவயின்
னகார மகார மீரொற் றாகும்.

இது, செய்யுட்கண் ஈரொற்று உடனிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—செய்யுள் இறுதி போலும் மொழிவயின் - செய்யுள் இறுதிக்கண் 'போலும்' என்னும் மொழிக்கண், னகாரம் மகாரம் ஈர் ஒற்று ஆகும்-னகாரமும் மகாரமும் வந்து ஈரொற்று உடனிலையாய் நிற்கும். ['போலி' எனவும் பாடம்.]

உ-ம். "எம்மொடு தம்மைப் பொருஉங்காற் பொன்னொடு, கூவிளம் பூத்தது போன்ம்" எனவரும். (சஅ)

நிஉ. னகார முன்னர் மகாரங் குறுகும்.

இஃது, "அரையளபு குறுகன் மகர முடைத்து" [நூன்மரபு-கஉ] என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—னகாரம் முன்னர் மகாரம் குறுகும்-(மேற்கூறப்பட்ட) னகாரத்து முன்வந்த மகாரம் மாத்திரை குறுகிநிற்கும். (சக)

௫௩. மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினும்
எழுத்திய றிரியா வென்மனார் புலவர்.

இது, எழுத்துக்கட்கு மொழிக்கண் மாத்திரை காரணமாகப் பிறப்பதோர் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

இ-ள் :—மொழிப்படுத்து இசைப்பினும்-மொழிக்கண்படுத்துச் சொல்லினும், தெரிந்து வேறு இசைப்பினும்-தெரிந்துகொண்டு வேறே சொல்லினும், எழுத்து இயல் திரியா என்மனார் புலவர்-உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் (பெருக்கம் சுருக்கம் உடையனபோன்று இசைப்பினும்,) தத்தம் மாத்திரை இயல்பில் திரியா என்றுசொல்லுவர் புலவர்.

உ-ம். அஃகல், அ எனவும், ஆல், ஆ எனவும், கடல், க எனவும், கால், கா எனவும் கண்டுகொள்க.

வேறு என்றதனுன், எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக்கண்ணும் எழுத்தியல் திரியா வென்பது கொள்க. (உ௰)

௫௪. அகர இகர மைகார மாகும்.

இது, போலி எழுத்து ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அகரம் இகரம்-அகரமும் இகரமும் கூடச்சொல்ல, ஐகாரம் ஆகும்-ஐகாரம்போல ஆகும்.

உ-ம். ஐயர், அஇயர் எனவரும். அது கொள்ளற்க. (உக)

௫௫. அகர உகர மௌகார மாகும்.

இதுவும் அது.

இ-ள் :—அகரம் உகரம்-அகரமும் உகரமும் கூடச்சொல்ல, ஔகாரம் ஆகும்-ஔகாரம்போல ஆகும்.

உ-ம். ஔவை, அஉவை எனக் கண்டுகொள்க. [அது கொள்ளற்க.] (உஉ)

௫௬. அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

இதுவும் அது.

இ-ள் :—அகரத்து இம்பர் யகர புள்ளியும்-அகரத்தின்பின்னர் இகரமேயன்றி யகர மாகிய புள்ளியும், ஐ என் நெடுஞ்சினை-ஐ எனப்பட்ட நெட்டெழுத்தாம் மெய்பெற தோன்றும்-அவை வடிவுபெறத் தோன்றும்.

உ-ம். ஐவனம், அய்வனம் எனவரும்.

'மெய்பெறத் தோன்றும்' என்றதனுன், (அகரத்தின் பின்னர் உகரமேயன்றி,) வகரப்புள்ளியும் ஔகாரம்போல வருமெனக்கொள்க என்றவாறு.

[இச்சூத்திரம்,

"அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐயௌ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றிருத்தல் வேண்டும்.

இ-ள் :—அகரத்து இம்பர் யவகரப் புள்ளியும்-அகரத்தின் பின்னர் யகர வொற்றும் வகர வொற்றும், ஐ ஔ நெடுஞ்சினை-ஐகாரம் ஔகாரம் என்னும் நெட்டெழுத்தாம். மெய் பெற தோன்றும்-(அவை) வடிவு பெறத் தோன்றும்.

உ-ம். ஐபவி, அய்யவி; ஔவை, அவ்வை.

'மெய் பெறத்தோன்றும்' என்றதனல், அவற்றைக் கொள்க என்றவாறு.

காலப் பழைமையில் ஏடு பெயர்த்து எழுதினோர் 'யவகரப்புள்ளி' என்பதனை 'யகரப்புள்ளி' எனவும் 'ஐயௌ நெடுஞ்சினை' என்பதனை 'ஐயெ னெடுஞ்சினை' எனவும் பிழையாக எழுதினர் போலும். அப்பிழைப்பாடத்தைப் பிழையற்ற பாடமெனக் கருதி உரையாசிரியர் அதற்குத் தக்கவாறு உரையெழுதிச் சென்றனர் போலும்.] (உகூ)

நிஎ. ஓரள பாகு மிடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னன.

இஃது, என் நுதலிற்றோ வெனின், உயிர்களுள் ஒன்றற்கு மாத்திரைச் சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—தேருங்காலை மொழிவயின் ஓர் அளபு ஆகும் இடனும் உண்டு-ஐகாரம் ஆராயுங்காலத்து மொழிக்கண் ஓர் அளவாய் நிற்கும் இடமும் உண்டு.

உ-ம். இடையன், மடையன் எனவரும்.

தேருங்காலை என்றதனன் முதற்கண் சுருங்காதென்பது கொள்க. இடன் என்றதனன் இக்குறுக்கம் சிறுபான்மை யென்பது கொள்க.

[இச்சூத்திரத்திற்குப் பின்வருமாறு உரைத்தலே பொருத்தமுடைத்து :—

இஃது, உயிர்களுள் இரண்டற்கு மாத்திரைச்சுருக்கம் கூறுதல் நுதலிற்று.

இ-ள் ;—தேரும் காலை மொழிவயின் ஆன-ஆராயுங்காலத்து மொழிக்கண் நின்ற ஐகார ஔகாரங்கள், ஓர் அளபு ஆகும் இடனும் உண்டு-ஓர்அளபாய்நிற்கும் இடமும் உண்டு.

'தேருங்காலை' என்றதனன், தனியே நின்ற ஐகாரமும் ஔகாரமுமே ஒரு மாத்திரையாகு மென்றுகொள்க.

உ-ம். பை, மை, கை; கௌ, சௌ, வௌ.

'இடனும்' என்றதனன் இக்குறுக்கம் சிறுபான்மை யென்பது கொள்க. ஆர், ஏ என்பன அசைகள்.

மேல், "யகரப் புள்ளியும் ஐயெ னெடுஞ்சினை" என்ற பிழைப்பாடத்தைப் பிழையற்ற பாடமெனக் கொண்டதால் உரையாசிரியர் ஈண்டு ஔகாரத்தைக் கூறாது ஐகாரம் ஓர் அளபாய் நிற்கும் இடமும் உண்டு என்று உரைத்துச் சென்றனர் போலும்.] (உச)

நிஅ. இகர யகர மிறுதி விரவும்.

இதுவும் ஓர் போலியெழுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இறுதி இகர யகரம் விரவும்-இகரவீற்று மொழிக்கண் யகரமும் (அதுபோல) இகரமும் விரவிவரும்.

உ-ம். நாய் நாஇ எனக் கண்டுகொள்க. [விரவும் என்றதனல், அவையிரண்டும் கொள்க என்றவாறு.] (உரு)

௫௯. பன்னீ ருயிரு மொழிமுத லாகும்.

இஃது, உயிரெழுத்து மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்-பன்னிரண்டு உயிரெழுத்தும் மொழிக்கு முதலாம்.

உ-ம். அடை, ஆடை, இடை, ஈயம், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஓசி, ஔவியம் எனவரும். (உசு)

௬0. **உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா.**

இஃது. [உயிர்] மெய்யெழுத்து மொழிக்கு முதலாம் ஆறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயிர்மெய் அல்லன மொழி முதல் ஆகா-உயிரொடுகூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா. உயிரொடுகூடிய மெய்கள் மொழிக்கு முதலாம்.

ஈண்டு உயிர்மெய் யென்பது வேற்றுமைநயம் கருதி யெனவுணர்க. ஈண்டு ஒற்றுமை கருதில், "கதநப மவெனு மாவைந் தெழுத்தும், எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே" [மொழிமரபு-உஅ] எனச் சூத்திரம் சுருங்க வருவதன்றி, இதனுற் சொல்லப்பட்ட அறுபது உயிர்மெய்யினை எடுத்தோத வேண்டிச் சூத்திரம் பரக்கவரு மென்பது.

['சுருங்க ஓதுமன்றி' எனவும், 'ஓதவேண்டில்' எனவும் முந்திய அச்சுப் பிரதியிலும் எட்டுப் பிரதிகளிலும் காணப்படும் (உரைப்) பாடம் ஏடுபெயர்த்தெழுதினோரால் நேர்ந்த பிழை போலும்.] (உஎ)

௬௧. **கதந பமவெனு மாவைந் தெழுத்தும்**
எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே.

இது, மேல் முதலாம் என்னப்பட்ட உயிர்மெய்கட்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—கதநபம எனும் அ ஐந்து எழுத்தும்-கதநபம என்றுசொல்லப்பட்ட ஐந்து தனிமெய்யெழுத்தும், எல்லா உயிரொடும் முதல் செல்லும்-பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும்.

உ-ம். கலை காவி கிளி கீரி குடி கூடு கெண்டை கேழல் கைதல் கொண்டல் கோடை கௌவை எனவும், தந்தை தாடி திற்றி தீமை துணி தூணி தெற்றி தேவர் தையல் தொண்டை தோடு தௌவை எனவும், நடம் நாரை நிலம் நீர் நுழை நூல் நெய்தல் நேயம் நைகை நொய்யன நோக்கம் நௌவி எனவும், படை பாடி பிடி பீடம் புகழ் பூழி பெடை பேடி பைதல் பொன் போதகம் பௌவம் எனவும், மடம் மாலை மிடறு மீனம் முகம் மூதூர் மெலிந்தது மேனி மையல் மொழி மோதகம் மௌவல் எனவும் வரும்.

'முதற்கு' என்பதன் நான்காம் உருபு விகாரத்தாற் றொக்கது. [ஆர் என்பது அசை. ஏகாரம் ஈற்றசை.] (உஅ)

௬௨. **சகரக் கிளவியு மவற்றோ ரற்றே**
அஐ ஔவெனு மூன்றலங் கடையே.

இதுவும் அது.

இ-ள் :—சகர கிளவியும் அவற்று ஓர் அற்று-சகரமாகிய எழுத்தும் மேற் சொல்லப்பட்டவைபோல எல்லா உயிரோடும் மொழிக்கு முதலாம், அ ஐ ஔ எனும் மூன்று அலங்கடை—அ ஐ ஔ என்னும் மூன்றும் அல்லாவிடத்து.

உ-ம். சாலே சிலே சீறுக சுரும்பு சூழ்க செய்கை சேவடி சொறிக சோறு என வரும்.

சகடம் எனவும், சையம் எனவும் விலக்கினவும் வருமாலெனின், அவற்றுள் ஆரியச்சிதை வல்லாதன "கடிசொல் இல்லை"என்பதனுற் கொள்க. [ஏகாரம் இரண்டும் ஈற்றசைகள். இந்நூல் மூலத்தில் 'ஓர் அன்ன,' 'ஓர்அற்று' என்று வரும் இடங்களில் 'ஓர்' என்பதனை அசையென்று கொள்ளுதல் பொருத்தமுடையதாகத் தோற்றுகின்றது.] (உக)

சுரு. உ ஊ ஒ ஓ வென்னு நான்குயிர்
வ என் னெழுத்தொடு வருத லில்லை.

இதுவும் அது.

இ-ள் :—உ ஊ ஒ ஓ என்னும் நான்கு உயிர்-உ ஊ ஒ ஓ என்று சொல்லப் படுகின்ற நான்கு உயிரும், வ என் எழுத்தொடு வருதல் இல்லை-வ என்னும் மெய் யெழுத்தோடு மொழிமுதலில் வருதலில்லை.

பிற உயிர்கள் வரும்.

உ-ம். வளை வாளி விளரி வீடு வெள்ளி வேர் வையம் வௌவு என வரும். ()

சுசு. ஆ எ
ஒ எனு மூவுயிர் ஞகாரத் துரிய.

இதுவும் அது.

இ-ள் :—ஆ எ ஒ எனும் மூ உயிர் ஞகாரத்து உரிய-ஆ எ ஒ என்று சொல் லப்படும் மூவுயிர்கள் ஞகார ஒற்றோடு முதலாதற்கு உரிய. பிற உயிர் உரியவல்ல.

உ-ம். ஞாலம் ஞெகிழி ஞொள்கிற்று எனவரும்.

ஞழியிற்று என்றாற்போல்வன விலக்கினவும் வருமாலெனின், அவை அழி வழக்கென்று மறுக்க. (ருக)

சுரு. ஆவொ டல்லது யகரமுத லாது.

இதுவும் அது.

இ-ள் :—ஆவோடு அல்லது யகரம் முதலாது-ஆகாரத்தோடு அல்லது யகர முதலாகாது.

உ-ம். யான் எனவரும்.

யவனர் என்றாற்போல்வன விலக்கினவும் வருமாலெனின், அவை ஆரியச் சிதைவென்று மறுக்க. (ருஉ)

சுசு. முதலா வேன தம்பெயர் முதலும்.

இது, மொழிக்கு முதலாகாதனவும் ஒரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—முதலா என-மொழிக்கு முதலாகாத ஒழிந்த மெய்களும், தம் பெயர் முதலும்-(அவ்வெழுத்துக்கள்) தம் பெயர் கூறுதற்கு முதலாம்.

முதலாயின மெய் கதநபமக்களும், வகரமும், சகரமும், ஞகரமும், யகரமும் என இவை. முதலாகாத மெய் ஙகரமும், டகரமும், ணகரமும், ரகரமும், லகர மும், ழகரமும், ளகரமும், றகரமும், னகரமும் என இவை.

அவை தம் பெயர்க்கு முதலாமாறு :—ஙக்களைந்தார், டப்பெரிது, ணந்நன்று என்றாற்போல ஒட்டிக்கொள்க.

இனி 'என' என்றதனான், முதலாம் என்னப்பட்ட ஒன்பது உயிர்மெய்யும் பன்னிரண்டு உயிரும் தம்பெயர் கூறும்வழியும் மொழிக்கு முதலாம் எனக்கொள்க.

கக்களைந்தார், தப்பெரிது, அக்குறிது, ஆவலிது என்றாற்போல ஒட்டிக் கொள்க. (௬௬)

கூஎ. குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.

இது, குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின்-குற்றியலுகரம் முறைப் பெயரிடத்து, ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்-ஒற்றாய்நின்ற நகரத்தின் மேலாய நகரத்தோடு மொழிக்கு முதலாம்.

நுந்தை எனவரும்.

இவ்வாறு முதலாக்கம் கூறவே, மொழிமுதற் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் கூறியவா றாயிற்று. இடம் நுந்தை என்னும் முறைப்பெயர். பற் றுக்கோடு நகரமிசை நகரம். [நகரமிசை நகரம்-நகர ஒற்றின் மேலுள்ள நகர ஒற்று.] (௬௪)

கூஅ. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ
தப்பெயர் மருங்கி னிலையிய லான.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

இ-ள் :—முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாது-(அம் முதற்கட் குற்றி யலுகரம் ஆண்டு இதழ்குவித்துக் கூறும்வழி) முற்றுகரத்தோடு பிற உகரம்போ லப் பொருள் வேறுபடாது; (யாண்டெனின்,) அப்பெயர் மருங்கின் நிலை இயலான்-அம் முறைப்பெயரிடத்துத் தான் நிற்றற்கண்.

நாகு எனவும், நகு எனவும் குறுகியும், குறுகாதும் நின்ற உகரங்கள்போல, நுந்தை என்று குறுக்கமாயவழியும், இதழ்குவித்துக்கூறக் குறுகாதவழியும், பொருள் வேறுபடாதவாறு அறிக.

இனி "இரட்டுறமொழிதல்" என்பதனால், பொருள் என்றதனை இடனும் பற் றுக்கோடும் ஆக்கி, பிற உகரங்கள்போல ஈண்டை உகரங்கள் இடனும் பற்றுக் கோடும் வேறுபடா என்பது கொள்க. [ஈற்றகரம் சாரியை.] (௬௫)

கூகூ. உயிர் ஒள வெஞ்சிய விறுதி யாகும்.

இஃது, உயிர் மொழிக்கு ஈறாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயிர் ஒள எஞ்சிய இறுதி ஆகும்-உயிரெழுத்துக்களுள் ஒளகாரம் ஒழிந்தவை மொழிக்கு ஈறாம். ஒளகாரந்தான் ஈறாகாது.

இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது.

ஆஅ, ஆ, ஈஇ, ஈ, ஊஉ, ஊ, ஏஎ, ஏ, ஐஇ, ஐ, ஓஒ, ஓ என உயிர் ஈறாயின. இவற்றுட் குற்றெழுத்தைந்தும் அளபெடைவகையான் ஈறாயின.

உயிர்மெய்களும் மேல்வரையறை கூறுதனவாகிய அகர ஆகார இகர ஈகார ஐகாரங்களோடு இயைந்தன ஈண்டே கொள்க.

உ-ம். விள, பலா, கிளி, குரீ, பனை எனவரும். (௬௬)

௭௰ கவவோ டியையி னௌவு மாகும்.

இஃது, ஈறாகாதென்ற ஔகாரம் இன்னுழி ஆம் என்கின்றது.

இ-ள் :—க வ ஓடு இயையின்-ககர வகரமாகிய மெய்களோடு பொருந்தின், ஔ உம் ஆகும்-முன்ஈறாகாதென்ற ஔகாரமும் ஈறாம்.

உ-ம். கௌ, வௌ எனவரும். (௬௭)

௭௧. எ என வருமுயிர் மெய்யீ றாகாது.

இஃது, எகரம் தானே நின்றவழியன்றி மெய்யோடுகூடி ஈறாகாதென வரையறை கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—எ என வரும் உயிர்-எ என்றுசொல்ல வரும் உயிர், மெய் ஈறு ஆகாது-தானே ஈறாவதன்றி மெய்யோடு இயைந்து ஈறாகாது. (௬௮)

௭௨. ஒவ்வு மற்றே நவ்வலங் கடையே.

இதுவும் வரையறை.

இ-ள் :—ஒவ்வும் அற்று-ஒகரமும் தானேநின்று ஈறுவதன்றி மெய்யோடு இயைந்து ஈறாகாது, ந அலங்கடை-நகரமெய்யோ டல்லாத விடத்து. (௬௯)

௭௩. ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை.

இதுவும் வரையறை.

இ-ள் :—ஏ ஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை-ஏ ஓ என்றுசொல்லப்படும் உயிர் (தாமே நின்றும் பிறமெய்களோடு நின்றும் ஈறுவதன்றி) ஞகரத்தோடு ஈறுவதில்லை.

தாமேயாதல் முன்னே காட்டப்பட்டது. பிறமெய்களோடு ஈறுவனஉற்றுள் வழக்கிறந்தனவொழிய இறவாதன வந்தவழிக் கண்டுகொள்க. (௭௰)

௭௪. உ ஊ கார நவவொடு நவிலா.

இதுவும் வரையறை.

இ-ள் :—உ ஊகாரம் ந வ ஒடு நவிலா-உ ஊகாரங்கள் (தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் பயில்வதன்றி) நகர வகரங்களோடு பயிலா.

தாமே ஈறுதல் மேலே காட்டப்பட்டது. பிற மெய்களோடு ஈறுமவற்றுள், வழக்கிறந்தனவல்லாதன வந்தவழிக் கண்டுகொள்க. 'நவிலா' என்றதனாற் சிறுபான்மை நொவவும் கவ்வும் என [உகரம்] வகாரத்தோடு ஈறுதல் கொள்க. இன்னும் இதனானே சிறுபான்மை நகரத்தோடு வரவு உண்டேனும் கொள்க. (௭௧)

எரு. உச்ச கார மிருமொழிக் குரித்தே.

இதுவும் ஒரோவழி வரையறை.

இ-ள் :—உச்சகாரம் இரு மொழிக்கு உரித்து-உகரத்தோடு கூடிய சகரம் இரு மொழிக்கு ஈறாகும் (பலமொழிக்கு ஈறாகாது).

உ-ம். உசு, முசு எனவரும். பசு வென்பது ஆரியச்சிதைவு. (சஉ)

எசா. உப்ப கார மொன்றென மொழிப
இருவயி னிலையும் பொருட்டா கும்மே.

இதுவும் மொழிவரையறையும் மொழியது பொருள்பாடும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உப்பகாரம் ஒன்று என மொழிப-உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கு ஈறாம் என்று சொல்லுவர். இருவயின் நிலையும் பொருட்டுஆகும்-அது தான் தன்வினை பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத் தாம்.

உ-ம். தபு எனவரும். இது படுத்துச்சொல்ல, நீ சா எனத் தன்வினையாம். எடுத்துச்சொல்ல, நீ ஒன்றனைச் சாவி எனப் பிறவினையாம். [ஏகாரம் ஈற்றசை.] (சந)

எஎ. எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே.

இது, மொழிக்கு ஈறாகா உயிர்மெய்யும் ஒரோவழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இல-மொழிக்கு ஈறாகாது நின்ற உயிர்மெய்களெல்லாம் தம்பெயர் கூறும்வழி ஈறாதற்கு ஒழிபு இல.

எஞ்சிய உயிர்மெய்யாவன: ஔகாரம் ககர வகாரங்களை ஒழிந்த மெய்யோடு இயைந்த உயிர்மெய்யும், எகரம் எல்லாமெய்யோடும் இயைந்த உயிர்மெய்யும், ஒகரம் நகரம் ஒழிந்த மெய்யோடு இயைந்த உயிர்மெய்யும், ஏகார ஓகாரம் ஞகாரத்தோடு இயைந்த உயிர்மெய்யும், உ ஊகாரம் நகர வகரங்களோடு இயைந்த உயிர்மெய்யும் என இவை.

தம் பெயர்க்கு [ஈறு] ஆமாறு: நௌக் களைந்தார் எனவும், கெக் களைந்தார் எனவும், கொக் களைந்தார் எனவும், ஞேக் களைந்தார் எனவும், ஞோக்களைந்தார் எனவும், நுக் களைந்தார் எனவும், நூக் களைந்தார் எனவும், வுக் களைந்தார் எனவும், வூக் களைந்தார் எனவும்வரும். எல்லாம் என்றதனான், மொழிக்கு ஈறாய்நின்ற உயிர்மெய்களும் தம்பெயர் கூறும்வழியும் ஈறாம் என்றுகொள்க. கக் களைந்தார், கா வலிது எனவும், அக் களைத்தார், ஆ வலிது எனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. தன்னை உணர நின்றவழி, மொழிகட்கு இது கருவியாக ஈற்றகத்து முடிபு ஒன்றினமுடித்தலாற் கொள்க. (சச)

எஅ. ஞணநம னயரல வழள வென்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி.

இது, தனிமெய்களுள் மொழிக்கு ஈறுவன கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் அ பதினொன்றே-ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்று கூறப்பட்ட அப்பதினொன்றுமே, புள்ளி இறுதி-புள்ளிகளில் மொழிக்கு ஈறுவன.

உ-ம். உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ் வேள் எனவரும். ணகாரத்தை ஈற்று வையாது, மகரத்தோடு வைத்தது அதன் மயக்க இயைபு நோக்கி என்றுணர்க. (சரு)

எகூ. உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்.

இதுவும் மொழிவரையறை.

இ-ள் :—உச் சகாரமொடு நகாரம் சிவணும்-உகரத்தோடுகூடிய சகாரத்தோடே நகாரம் பொருந்தி அஃது இருமொழிக்கு ஈறுய வாறுபோல தானும் இருமொழிக்கு ஈறும்.

உ-ம். பொருந், வெரிந் எனவரும்.

[உகரத்தோடு கூடிய சகரம் இருமொழிக்கு ஈறுயவாறுபோல நகரம் இருமொழிக்கு ஈறும் என்க.] (சசு)

அ௦. உப்ப காரமொடு ஞகாரையு மற்றே
அப்பொரு ளிரட்டா திவணை யான.

இதுவும் மொழிவரையறை.

இ-ள் :—உப்பகாரமொடு ஞகாரையும் அற்று - உகரத்தோடுகூடிய பகரத்தோடு ஞகாரமும் அத்தன்மைத்தாய் ஒருமொழிக்கு ஈறும். இவணையான அ பொருள் இரட்டாது-இவ்விடத்ததன்பொருள் அவ்வுப்பகரம்போல இருபொருள் படாது.

உ-ம். உரிஞ் எனவரும்.

ஞகாரம் ஒருமொழிக்கு ஈறுதலின், பகரத்தின்பின் கூறப்பட்டது. [ஏகாரம் ஈற்றசை.] (சஎ)

அக. வகரக் கிளவி நான்மொழி யீற்றது.

இதுவும் மொழிவரையறை.

இ-ள் :—வகரக் கிளவி நான்மொழி ஈற்றது-வகரமாகிய எழுத்து நான்கு மொழி ஈற்றதாம்.

உ-ம். அவ், இவ, உவ், தெவ் எனவரும். (சஅ)

அஉ. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன.

இதுவும் ஒரோவழி மொழிவரையறை.

இ-ள் :—புகர் அற கிளந்த அஃறிணைமேல்-குற்றம் அறச் சொல்லப்பட்ட அஃறிணையிடத்து, மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த-மகரவீற்றுத் தொடர்மொழியோடு மயங்காதென்று வரையறுக்கப்பட்ட, னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப-னகரவீற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று சொல்லுவர்.

உ-ம் :—கிலன், கிலம், பிலம், பிலன் என்றாற்போல்வன மயங்குவன.

இனிமயங்காதன உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் எனவரும்.

இவற்றுள் திரிபுடையன களைக. ஒன்பஃது என்னும் ஆய்தம் செய்யுள்விகாரம். அஃறிணையென்றது ஈண்டு அஃறிணைப் பெயரினை. (சகூ)

இரண்டாவது மொழிமரபு முற்றிற்று.

மூன்றாவது பிறப்பியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், எழுத்துக்களது பிறப்பு உணர்த்தினமையின் பிறப்பியல் என்னும் பெயர்த்து. இதனை நூன்மரபின் பின்னே வைக்கவெனின், சார்பிற்றோற்றத்தெழுத்தும் தனிமெய்யும் மொழிமரபிடை உணர்த்தி [ப் பிறப்பு] உணர்த்தவேண்டுதலின், மொழிமரபின் பின்ன தாயிற்று.

அரு. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கும்
அண்ணமு முளப்பட வெண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான.

இத் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், எழுத்துக்களது பொதுப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எல்லா எழுத்தும் நெறிப்பட நாடி சொல்லும் காலை-தமிழெழுத்துக்களெல்லாம் ஒருவன் முறைப்பட ஆராய்ந்து தம்மைச சொல்லுங்காலத்து, உந்தி முதலா முந்து வளி தோன்றி-கொப்பூழ் அடியாக மேலே கிளர்கின்ற உதானன் என்னும் பெயரையுடைய வாயுத் தோன்றி, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ - தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான் உறுப்பு உற்று அமைய-(தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றனோடும்) பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எட்டாகிய முறைமையையுடைய இடங்களில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்புத் தம்மிற்பொருந்தி அமைதிபெற, பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல-பிறப்பினது ஆக்கம் வேறு வேறு புலப்பட்டு வழங்கு தலுடைய, திறப்படத் தெரியும் காட்சியான்-கூறுபாடுளதாக ஆராயும் அறிவிடத்து.

இதழ்போறலான் வாய் இதழெனப்பட்டது. எல்லா எழுத்தும் என்னும் எழுவாய்க்குப் 'பிறப்பினாக்கம் வேறுவேறு இயல'என்பதனை ஒருசொன்னீர்மைப் படுத்திப் பயனிலை யாக்குக. ['முதலாக' என்பது ஈறு கெட்டு நின்றது. ஈற்ற கரம் சாரியை.]

(க)

அச. அவ் வழிப்
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்.

இஃது, உயிரெழுத்திற்குப் பொதுப்பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அ வழி-அவ்விடத்து, பன்னிரு உயிரும் தம் நிலை திரியா-பன்னிரண்டு உயிரெழுத்தும் தத்தம் நிலையில் திரியாவாய், மிடற்று பிறந்த வளியின் ஒலிக்கும்-மிடற்றின்கட் பிறந்த வளியான் ஒலிக்கும்.

'தந்நிலை திரியா' என்றதனுல், குற்றியலிகரம் குற்றியலுகரம் தந்நிலை திரியுமென்பது பெறப்பட்டது. (உ)

௮௫. அவற்றுள்
அ ஆ வாயிரண் டங்காந் தியலும்.

இஃது, உயிரெழுத்துக்களுட் சிலவற்றிற்குச் சிறப்புப்பிறவி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேற்சொல்லப்பட்ட உயிர் பன்னிரண்டினுள், அ ஆ அ இரண்டு அங்காந்து இயலும்-அகர ஆகாரங்களாகிய அவ்விரண்டும் அங்காந்து சொல்ல அஃது இடமாகப் பிறக்கும். (௩)

௮௬. இ ஈ எ ஏ ஐயென விசைக்கும்
அப்பா லைந்து மவற்றோ ரன்ன ;
அவைதாம்
அண்பன் முதனா விளிம்புற லுடைய.

இதுவும் அது.

இ-ள் :—இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அ பால் ஐந்தும்-இ ஈ எ ஏ ஐ என்று சொல்லப்படும் அக்கூற்று ஐந்தும், அவற்று ஓர் அன்ன-மேற்கூறிய அகர ஆகாரங்கள் போல அங்காந்து சொல்லப் பிறக்கும். அவை தாம் பல்அண் நாமுதல்விளிம்பு உறல் உடைய-அவைதாம் (அவ்வாறு சொல்லப் பிறக்குமிடத்துப்) பல்லினது அணிய இடத்தினை நாவினது அடியின் விளிம்பு சென்று உறுதலை யுடைய. (௪)

௮௭. உ ஊ ஒ ஓ ஔவென விசைக்கும்
அப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்.

இதுவும் அது.

இ-ள் :—உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் அ பால் ஐந்தும்-உ ஊ ஒ ஓ ஔ எனச்சொல்ல இசைக்கும் அக்கூற்று ஐந்தும், இதழ் குவிந்து இயலும்-இதழ் குவித்துச் சொல்ல நடக்கும். (௫)

௮௮. தத்தந் திரிபே சிறிய வென்ப.

இது, முன்கூறிய உயிர்க்கும் மேற்கூறிய மெய்க்கும் ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—தம்தம் திரிபு சிறிய என்ப-(எழுத்துக்கள் ஒருதானத்துக் கூடிப் பிறக்கு மெனப்பட்டன. அவ்வாறு கூடிப்பிறப்பினும்,) தத்தம் வேறுபாடுகளைச் சிறிய வேறுபாடுக ளென்று சொல்லுவர்.

அவ்வேறுபாடு அறிந்துகொள்க. [ஏகாரம் அசை.] (௬)

௭. ககார ஙகார முதனா வண்ணம்.

இது, மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ககாரம் ஙகாரம் நாமுதல் அண்ணம்(முதல்)-ககாரமும் ஙகாரமும் நாமுதலும் அண்ணமுதலும் உறப் பிறக்கும். (எ)

௮. சகார ஞகார மிடைநா வண்ணம்.

இதுவும் அது.

இ-ள் :—சகாரம் ஞகாரம் நாஇடை அண்ணம் (இடை)-சகாரமும் ஞகாரமும் நாவது இடையும் அண்ணத்தது இடையும் உறப் பிறக்கும். (அ)

௯. டகார ணகார நுனிநா வண்ணம்.

இதுவும் அது.

இ-ள் :—டகாரம் ணகாரம் நாநுனி அண்ணம் (நுனி)-டகாரமும் ணகாரமும் நாவது நுனியும் அண்ணத்தது நுனியும் உறப் பிறக்கும். (௯)

௧௦. அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின.

இது, மேலனவற்றிற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அ ஆறு எழுத்தும் மூவகை பிறப்பின-மேற்கூறப்பட்ட ஆறு எழுத்தும் நிரனிறைவகையான் (அறுவகைப் பிறப்பின அல்ல.) மூவகைப் பிறப்பின. (௰)

௧௧. அண்ண நண்ணிய பன்முதன் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம்.

இதுவும் மெய்களிற் சிலவற்றிற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கின்-அண்ணத்தைப் பொருந்திய பல்லினது அணிய இடத்தின்கண்ணே, நாநுனி பரந்து மெய் உற ஒற்ற-நாவினது நுனி பரந்து வடிவை உறும்படி ஒற்ற, தாம் இனிது பிறக்கும்-தாம் இனிதாகப் பிறக்கும், தகாரம் நகாரம்-தகாரமும் நகாரமும்.

முன்னே 'உறுப்புற்றமைய' என்று வைத்துப் பின்னும் 'மெய்யுற' என்றதனான், எல்லா எழுத்துக்களும் மெய்யுற்றபோதே இனிது பிறப்பதென்பது கொள்க. (கக)

௧௨. அணரி நுனிநா வண்ண மொற்ற
றஃகா னஃகா னாயிரண்டும் பிறக்கும்

இதுவும் அது.

இ-ள் :—அணரி நுனிநா அண்ணம் ஒற்ற-அணர்ந்து நுனிநா அண்ணத்தைச் சென்று ஒற்ற, றஃகான் னஃகான் அ இரண்டும் பிறக்கும்-றகார னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்.

இங்குநின்று நெடுங்கணக்கு முறைமை விட்டு நா அதிகாரம்பட்டது கண்டு கூறுகின்றதெனவுணர்க. (க௨)

கூரு. நுனிநா வணரி யண்ணம் வருட
ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ-ள் :—நுனிநா அணரி அண்ணம் வருட-நுனிநா அணர்ந்து அண்ணத்தைத் தடவ, ரகார ழகாரம் அ இரண்டும் பிறக்கும்-ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும். (கரு)

கூசு. நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற
ஆவயி னண்ண மொற்றவும் வருடவும்
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ-ள் :—நா விளிம்பு வீங்கி பல் அண் முதல் உற-நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய இடத்தைப் பொருந்த, அ வயின் அண்ணம் ஒற்ற லகாரமும் வருட ளகாரமும் அ இரண்டும் பிறக்கும்-அவ்விடத்து (முதல்நா) அவ்வண்ணத்தை ஒற்ற லகாரமும் அதனைத் தடவ ளகாரமுமாக அவ்விரண்டும் பிறக்கும். (கச)

கூஎ. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்.

இதுவும் அது.

இ-ள் :—இதழ் இயைந்து பிறக்கும் பகாரம் மகாரம்-கீழ்இதழும் மேல்இதழும் தம்மில் இயையப் பிறக்கும் பகாரமும் மகாரமும். (கரு)

கூஅ. பல்லித ழியைய வகாரம் பிறக்கும்.

இதுவும் அது.

இ-ள் :—பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்-மேற்பல்லும் கீழ் இதழும் தம்மில் இயைய வகாரம் பிறக்கும். (கசு)

கூகூ அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

இதுவும் அது.

இ-ள் :—அண்ணம் சேர்ந்த மிடற்று எழு வளி இசை கண் உற்று அடைய யகாரம் பிறக்கும்-அண்ணத்தை நாச சேர்ந்தவிடத்து மிடற்றினின்றும் எழும் வளியானுய இசை அவ்வண்ணத்தை அணைந்து செறிய யகாரம் பிறக்கும். (கஎ)

ஙா. மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.

இது, மெல்லெழுத்திற்கு ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்-மெல்லெழுத்துக்களாறும் தத்தம் பிறப்பினது ஆக்கஞ்சொல்லிய இடத்தே நிலைபெற்றன வாயினும், மூக்கின் வளி இசை யாப்புற தோன்றும்-அவை மூக்கின் கண் ணுளதாகிய வளியது இசையான் யாப்புறத் தோன்றும்.

'யாப்புற' என்றதனான், இடையெழுத்திற்கு மிடற்றுவளியும், வல்லெழுத்திற்குத் தலைவளியும் கொள்க. (௧௮)

௱௧. சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்.

இது, சார்பிற்றோற்றத் தெழுத்திற்குப் பிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல என தேர்ந்து வெளிப் படுத்த ஏனை மூன்றும்-சிலவற்றைச் சார்ந்துவரின் அல்லது தமக்குத்தாமே வரும் இயல்பு இலவென்று ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட ஒழிந்த மூன்றும், தம்தம் சார்பின் பிறப்பொடு சிவணி ஒத்த காட்சியில் தம் இயல்பு இயலும்-தத்தமக்குச் சார்பாகிய எழுத்துக்களது பிறப்பிடத்தே பிறத்தலொடு பொருந்தி பொருந்தின அவ்விடத்தே தமக்குரிய இயல்பில் நடக்கும்.

'ஒத்தகாட்சி' என்றதனான், ஆய்தத்திற்குக் குற்றெழுத்துச் சார்பேயெனினும தலை வளியாற் பிறத்தலின், உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கு மென்பது கொள்க. 'தம்மியல்பியலும்' என்றதனான், அளபெடையும் உயிர்மெய் யும் தமக்கு அடியாகிய எழுத்துக்களது பிறப்பிடமே இடமாக வருமென்பது கொள்க. (௧௯)

௱௨. எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே.

இஃது, எல்லா எழுத்திற்கும் ஆவதோர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எல்லா எழுத்தும்-எல்லா எழுத்துக்களும், வெளிப்பட கிளந்து சொல்லிய பள்ளி-வெளிப்பட விதந்து சொல்லப்பட்ட இடத்தின்கண்ணே, எழு தரு வளியின்-எழுகின்ற வளியானே, பிறப்பொடு விடுவழி-தாம் பிறக்குந் தொழிலு டைய வாதலொடு தம்மைச் சொல்லும் இடத்து, உறழ்ச்சி வாரத்து அகத்து எழு வளி இசை-திரிதருங்கூற்றையுடைய உண்ணின்று எழும் வளியானாய இசையை, அரில் தப நாடி-பிணக்கமற ஆராய்ந்து, அளபின் கோடல்-மாத்திரை வரையறையாற் கோடல், அந்தணர் மறைத்து-பார்ப்பார் வேதத்துக்கண்ணது.

உறழ்ச்சி வாரம் என்றது, உந்திமுதலா எழும் வளி தலைகாறும் சென்று மீண்டு நெஞ்சின்கண் நிலைபெறுதலை எனக்கொள்க. வளி என்னாது வளியிசை என்றது, அவ்வாறு நெஞ்சின்கண் நிலைபெறும் அளவும் வளி எனப்படுவது பின்னை நெஞ்சினின்றும் எழுவழியெல்லாம் வளித்தன்மை திரிந்து எழுத்தாம் தன்மைய தாம் என்பது விளக்கிகின்றது. [ஏகாரம் ஈற்றசை.] (௨௰)

௱௩. அஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளபுநுவன் றிசினே.

இது, மேற்சூத்திரத்திற்கு ஓர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அஃது இவண் நுவலாது-(அகத்தெழுவளியிசை அளபிற் கோடலாகிய) அதனை இந்நூலிடத்துச் சொல்லாது, எழுந்து புறத்து இசைக்கும்-(அகத்தினின்று) எழுந்து புறத்துப் போந்து இசைக்கும், மெய் தெரி வளி இசை அளபு-பொருண்மை தெரிகின்ற வளியானாய இசையது மாத்திரையினை, நுவன்றிசின்-யான் ஈண்டுக் கூறினேன்.

மற்று, இஃது "அளபிற் கோட லந்தணர் மறைத்து" [மொழிமரபு-௨ய] எனவே பெறப்பட்ட தன்றோவெனின், "அந்தணர் மறைத்து" என்பது பிறன் கோட் கூறுதற்கும், பிறன்கோட் கூறி நேர்ந்து உடம்படுதற்கும் ஒப்பக்கிடந்தமையின் அவ்வையம் தீர்தற்குக் கூறினாரென்பது. புறத்து இசைப்பதன் முன்னர், அகத்து இசைக்கும் வளி யிசையை அம்மறைக்கண் ஓர் எழுத்திற்கு மூன்று நிலை உளதாகக் கூறும் [அதன் ஆசிரியன்]. அஃது ஆமாறு அறிந்துகொள்க. 'மெய்தெரி' என்றதனான், முற்கு முதலியன முயற்சியாற் பிறக்குமெனினும், பொருள் தெரியா நிலைமைய வாகலின் அவற்றிற்கு அளபு கூறாராயினா ரென்பது பெறப்பட்டது. 'நுவன்றிசின்' என்பது ஈண்டு இறந்தகாலத்தன்மைவினை. (௨௮)

மூன்றாவது பிறப்பியல் முற்றிற்று.

நான்காவது - புணரியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மொழிகள்,(மேற்செய்கை யோத்துக்களுள்) புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழிமரபிற் கூறிய மொழிகள் புணருமாறு உணர்த்தினமையின் மொழிமரபினோடு இயைபுடைத் தாயிற்று.

௱௪. **மூன்று தலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்**
இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃ
தறுநான் கீறொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கு மிறுதியு முதலும்
மெய்யே யுயிரென் றாயீ ரியல.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், மொழிமரபினுள் முதலும் ஈறும் கூறியவழி உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் என மூன்றாய் விரிந்துநின்றதனை உயிரும் மெய்யும் என இரண்டாகத் தொகுத்தலானும், அவ்வழி இருபத்திரண்டு எழுத்து மொழிக்கு முதல், இருபத்துநான்கு எழுத்து மொழிக்கு ஈறு எனக்கூறலின், முப்பத்து மூன்று எனப்பட்ட எழுத்து நாற்பத்தாறு ஆவனபோல விரிந்ததனை அவையெல்லாம் முப்பத்து மூன்றினுள்ளனவே எனத் தொகுத்தலானும் விரிந்தது தொகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—மூன்று தலை இட்ட முப்பதிற்று எழுத்தின்-மூன்றனை முடிவிலே யிடப்பட்ட முப்பதாகிய எழுத்தினுள், இரண்டு தலை இட்ட முதல் ஆகு இருபஃது-அவ்விரண்டினை முடிவிலே யிடப்பட்ட மொழிக்கு முதலாய இருபதும், அறு நான்கு ஈறொடு நெறி நின்று இயலும்-இருபத்துநான்கு ஈற்றொடு வழக்குநெறிக் கண் நின்றுநடக்கும், எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்-மூவகை மொழிக்கும் ஈறும் முதலுமாவன, மெய் உயிர் என்று அ ஈர் இயல-மெய்யும் உயிருமாகிய அவ்விரண்டு இயல்பினையுடைய.

உ-ம். **மரம்,** இலை, ஆல், விள என மெய்யும் உயிரும், முதலும் ஈறும் ஆயின.

இருபத்திரண்டு எழுத்து முதலாவன பன்னிரண்டு உயிரும் ஒன்பது உயிர் மெய்யும் மொழிமுதற் குற்றியலுகரமும் என இவை. இருபத்து நான்கு எழுத்து ஈறாவன பன்னிரண்டு உயிரும் பதினொரு புள்ளியும் ஈற்றுக்குற்றிய லுகரமும் என இவை. 'ஈற்றொடு' என்பது ['ஈறொடு' என] விகாரத்தாற்றொக்கது. மெய் முற் கூறியவதனால், நால்வகைப்புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழா தென்பது கொள்க. ['என்று' என்பது எண்ணிடைச்சொல்.] (௧)

௱௫. **அவற்றுள்**
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்.

இது, (மேற்கூறியவாற்றான் தனிமெய்யும் முதலாவான் சென்றதனை விலக்கலின்,) எய்தியது விலக்கல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேல் மெய்யும் உயிரும் என்று கூறிய இரண்டினுள், ஈறு மெய்யெல்லாம் புள்ளியொடு நிலையல்-மொழிக்கு ஈறாய மெய்யெல்லாம் புள்ளி பெறுதலொடு நிற்க. முதலாயவையெல்லாம் புள்ளியிழந்து நிற்க என்றவாறு.

உ-ம். மரம் எனவரும்.

மொழிமுதன் மெய் புள்ளியொடு நில்லா தென்றது, ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல் என ஈற்றின்மேல் வைத்துக் கூறிய வதனான், அவ்வீற்றின் மெய் உயிர் முதன்மொழி வந்த இடத்து அஃது ஏற இடம் கொடுக்கு மென்பது பெறப் பட்டது. (உ)

௱௬. குற்றிய லுகரமு மற்றென மொழிப.

இஃது, ஈற்றிற் குற்றியலுகரத்திற்கு ஓர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—குற்றியலுகரமும் அற்று என மொழிப-ஈற்றிற்குற்றியலுகரமும் (புள்ளியீறுபோல உயிரேற இடம்கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர்.

இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல் எனவுணர்க. (௩)

௱௭. உயிர்மெய் யீறு முயிரீற் றியற்றே.

இது, மேல் "மெய்யே யுயிரென் றாயீ ரியல" [புணரியல்-க] என்றதற்கு ஓர் புறநடை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்று-உயிர்மெய் மொழியீற்றில் நின்றதுவும் உயிரீற்றின் இயல்பையுடைத்து. இடையில் நின்றதுவும் உயிரின் இயல்பையுடைத்து.

ஈறும் இடையும் உயிருள் அடங்குமெனவே, முதல் மெய்யுள் அடங்கும் என்ப தாயிற்று.

இதனால், விள முதலிய உயிர்மெய் ஈறெல்லாம் அகரவீறு முதலிய உயிரீற்றுள் அடங்கிப் புணர்ச்சிபெறுவன வாயின. வரகு என்புழி இடை நின்ற ரகரஉயிர்மெய் அகரமாய் உயிர்த்தொடர்மொழி யெனப்பட்டது.

ஈண்டு உயிர்மெய் ஒற்றுமை நயத்தான் உயிர்மெய்யென வேறு ஓர் எழுத்தாவ தன்றி, ஈறும் இடையும் உயிரென ஓரெழுத்தாயும், முதல் மெய்யென ஓரெழுத் தாயும் நின்றதாயிற்ற.

இத்துணையும் ஒருமொழி யிலக்கணங்கூறலின் மொழிமரபின் ஒழிபாயிற்று.(௪)

௱௮ உயிரிறு சொன்மு னுயிர்வரு வழியும்
உயிரிறு சொன்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொன்மு னுயிர்வரு வழியும்
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்
றிவ்வென வறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்
றாயீ ரியல புணர்நிலைச் சுட்டே.

இது, மேற்கூறும் புணர்ச்சி மும்மொழிப்புணர்ச்சியாகாது, இருமொழிப்புணர்ச்சியாமென்பதூஉம், அவை எழுத்துவகையான் நான்கா மென்பதூஉம் உணர்த்து தல் நுதலிற்று.

இ-ள் :—உயிர் இறு சொல் முன் உயிர் வரு வழியும்-உயிரீற்றுச் சொல்முன் உயிர்முதல் மொழி வரும் இடமும், உயிர் இறு சொல்முன் மெய் வரு வழியும்-உயிரீற்றுச்சொல்முன் மெய்முதல் மொழி வரும் இடமும், மெய் இறு சொல்முன் உயிர் வரு வழியும்-மெய்யீற்றுச் சொல்முன் உயிர்முதல் மொழி வரும் இடமும், மெய் இறு சொல்முன் மெய் வரு வழியும்-மெய்யீற்றுசசொல்முன் மெய்முதல் மொழி வரும் இடமும், இவ் என அறிய-(அப்புணர்ச்சிவகை) இவையென அறிய, கிளக்கும் காலை-ஆசிரியர் சொல்லுங்காலத்து, நிறுத்த சொல் குறித்துவரு கிளவி என்று அ ஈர் இயல-அவை நிறுத்த சொல்லும் அதன்பொருண்மையைக் குறித்துவரும் சொல்லுமாகிய அவ்விரண்டு இயல்பையுடைய, புணர்நிலைச் சுட்டு-புணரும் நிலைமைக்கண்.

ஆ ஈ, ஆ வலிது, ஆல் இலை, ஆல் வீழ்ந்தது எனக் கண்டுகொள்க.

விளவினைக் குறைத்தான் என்பது அவ்வுருபுகுறித்து வருகிளவியை நிலைமொழியுள் அடக்கி இருமொழிப்புணர்ச்சியாய் நின்றவாறு அறிக.

[அவ்வுருபு-'விளவினை' என்பதன் ஐ உருபு. முதல் ஏகாரம் பிரிநிலை. இரண்டாம் ஏகாரம் ஈற்றசை. 'என்று' இரண்டும் எண்ணிடைசசொல்.] (ரு)

ராசு **அவற்றுள்**
நிறுத்த சொல்லி னீறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிட னொன்றே யியல்பென
ஆங்கந் நான்கே மொழிபுண ரியல்பே.

இது, மேற்கூறும் புணர்ச்சி புணர்ச்சிவகையான் நான்காமென்பதூஉம், சொல் வகையான் நான்காமென்பதூஉம், புணர்வது சொல்லும் சொல்லுமேயன்றி, எழுத்தும் எழுத்துமே யென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-நிலைமொழி வருமொழி யெனப்பட்டவற்றுள், நிறுத்த சொல்லின் ஈறு ஆகு எழுத்தொடு குறித்து வரு கிளவி முதல் எழுத்து இயைய-நிறுத்த சொல்லினது ஈறுகின்ற எழுத்தினோடு அதனைக்குறித்து வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த, பெயரொடு பெயரை புணர்க்கும் காலும்-பெயர்ச்சொல்லொடு பெயர்ச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், பெயரொடு தொழிலை புணர்க்கும் காலும்-பெயர்ச்சொல்லொடு வினைச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், தொழிலொடு பெயரை புணர்க்கும் காலும்-வினைச்சொல்லொடு பெயர்சசொல்லைப் புணர்க்கும்காலத்தும், தொழிலொடு தொழிலை புணர்க்கும் காலும்-வினைச்சொல்லொடு வினைச்சொல்லைப் புணர்க்கும் காலத்தும், திரிபு மூன்று இயல்பு ஒன்று என அ நான்கே மொழிபுணர் இயல்பு-திரியும் இடம் மூன்றும் இயல்பு ஒன்றும் ஆகிய அந் நான்கே மொழிகள் தம்மிற் புணரும் இயல்பு.

உ-ம். சாத்தன் கை, சாத்தன் உண்டான், வந்தான் சாத்தன், வந்தான் போயினான் எனக்கண்டுகொள்க.

இடையும் உரியும் பெயர் வினைகளை அடைந்தல்லது தாமாக நில்லாமையின், பெயர் வினைகட்கே புணர்ச்சி கூறப்பட்டது.

[இடை-இடைச்சொல். உரி-உரிச்சொல்.'ஆங்கு' என்பது அசை. முதல் மூன்று ஏகாரமும் தேற்றப்பொருளில் வந்தன. நான்காம் ஏகாரம் ஈற்றசை.] (௯)

௱ய. **அவைதாம்**
மெய்பிறி தாதன் மிகுதல் குன்றலென்
றிவ்வென மொழிப திரியு மாறே.

இது, மேற்கூறிய திரிபுமூன்றும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவைதாம்-அத்திரிபுதான், மெய்பிறிதுஆதல் மிகுதல் குன்றல் என்று இவ் என மொழிப திரியும் ஆறு-மெய்பிறிதாதலும் மிகுதலும் குன்றலுமாகிய இவை எனச் சொல்லுவர் திரியும் நெறியினை. இம்மூன்றும் அல்லாதது இயல்பென்று கொள்க.

உ-ம். பொற்குடம், யானைக்கோடு, மரவேர் எனவரும்.

குவளைமலர் என்பது இயல்பு.

இப்புணர்ச்சிநான்கும் ஒருபுணர்ச்சிக்கண்ணே நிகழ்வு பெறுமென்பது உரையிற்கொள்க. மேல் 'இடம்' [புணரியல்-௯] என்றதனால், ஒருபுணர்ச்சிக்குத் திரிபு மூன்றனுள் ஒன்றாயினும் இரண்டாயினும் மூன்றாயினும் வரப்பெறும் எனக்கொள்க.

'மகத்தாற் கொண்டான்' என்பது அம்மிகுதி இரண்டுவந்தது. 'நீயிர் குறியிர்' என்பது அம்மிகுதி மூன்றுவந்தது. பிறவும் அன்ன. [முதல் உதாரணத்தில் 'அத்திரிபு மூன்று வந்தது' என்றிருத்தல் வேண்டும். இரண்டாம் உதாரணம் பிழை. இப்பிழைகள் ஏடுபெயர்த்தெழுதினோரால் நேர்ந்தன போலும். 'என்று' எண்ணிடைச்சொல்.]

௱கக. **நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்**
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய.

இது, "நிறுத்தசொல்லே குறித்துவருகிளவி" [புணரியல்-௫] என்பதற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியும்-நிலைமொழியாக நிறுத்தின சொல்லும் அதனைக்குறித்து வரு சொல்லும், அடையொடு தோன்றினும் புணர் நிலைக்கு உரிய-(தாமேவந்து புணர்வதன்றி,) அவையிரண்டினும் ஓரோர் சொல் லடைவந்து ஒன்றித்தோன்றினும் புணர்நிலைக்கு உரிய.

உ-ம். பதினாயிரத்தொன்று, ஆயிரத்தொருபஃது, பதினாயிரத்தொருபஃது எனவரும்.

ஈண்டு அடையென்றது உம்மைத் தொகையினையும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையினையும் எனவுணர்க. அவையல்லாத தொகைகளுள் வினைத்தொகையும், பண்புத்தொகையும் பிளந்து முடியாமையின் ஒருசொல் எனப்படும். அன்மொழித்தொகையும் தனக்கு வேறு ஓர் முடிபு இன்மையின் ஒருசொல் எனப்படும். இனி, ஒழிந்த வேற்றுமைத்தொகையும் உவமைத்தொகையும் "தன்னினமுடித்தல்" என்றதனான் ஈண்டு ஒருசொல் எனப்படும்.

உண்டசாத்தன் வந்தான், உண்டுவந்தான் சாத்தன் என்பனவும் அவ்வாறே ஒருசொல் எனப்படும். பிறவும் அன்ன, (அ)

௱௧௨. மருவின் றொகுதி மயங்கியன் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே.

இஃது, இலக்கணவழக்கேயன்றி மரூஉக்களும் புணர்க்கப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மருவின் தொகுதி மயங்கு இயல் மொழியும்-(இலக்கணவழக்கேயன்றி) மரூஉத்திரளாகிய தலைதடுமாறாக மயங்கின இயல்பையுடைய இலக்கணத்தொடு பொருந்தின மரூஉவழக்கும், உரியவை உள புணர் நிலைச் சுட்டு-உரியன உள புணரும் நிலைமைக்கண்.

உ-ம். மீகண், முன்றில் எனவரும்.

'நிலை' என்றதனான், இலக்கணத்தொடு பொருந்திய மரூஉவழக்கல்லா மரூஉவழக்கும் புணர்க்கப்படும் எனக்கொள்க. (௫)

௱௧௩. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை யாயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை.

இது, நால்வகைப்புணர்ச்சியுள் மிக்கபுணர்ச்சி இத்தன்மைத் தென்பதூஉம், அந்நால்வகைப்புணர்சியும் வேறு ஓர் ஆற்றான் இருவகையா மென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வேற்றுமை குறித்த புணர் மொழி நிலையும்-வேற்றுமையது பொருண்மையினைக் குறித்த புணர் மொழியது நிலைமையும், வேற்றுமை அல்வழி புணர் மொழி நிலையும்-வேற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணர் மொழியது நிலைமையும், எழுத்து சாரியை அ இரு பண்பின் ஒழுக்கல் வலிய-(மிக்க புணர்ச்சிக்கண்) எழுத்துமிகுதலும் சாரியைமிகுதலு மாகிய அவ்விரண்டு இலக்கணத்தானும் நடாத்துதலைத் தமக்கு வலியாகவுடைய, புணருங்காலை-அவைபுணருங்காலத்து.

விளங்கோடு, மகவின்கை, விளக்குறிது, பனையின்குறை எனக்கண்டுகொள்க.

'ஒழுக்கல்வலிய' என்றதனான், எழுத்தும் சாரியையும் உடன்பெறுதல் கொள்க.

அவற்றுக்கோடு, கலத்துக்குறை எனவரும்.

அல்வழி முற்கூறாதது, வேற்றுமையல்லாதது அல்வழியென வேண்டலின் என்பது. முன்னே 'புணர்மொழி' என்று வைத்து, 'புணருங்காலை' என்றதனாற் புணர்ச்சிக்கண்ணே வேற்றுமை அல்வழி என இரண்டாவது; அல்லாக்கால், வேற்றுமையெனவே படுமென்பது கொள்க. ஈண்டு அல்வழி யென்றது பெரும்பான்மையும் எழுவாயினை. (௬)

௱௧௪. ஐஒடு குஇன் அதுகண் ணென்னும்
அவ்வா றென்ப வேற்றுமை யுருபே.

இது, மேல் வேற்றுமை யென்னப்பட்ட அவற்றது பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஐ ஒடு கு இன் அது கண் என்னும்-ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும், அ ஆறு என்ப வேற்றுமை உருபு-அவ்வாறும் என்று சொல்லுவர் வேற்றுமை யுருபுகளை.

இவ்வாறும் அல்லன வெல்லாம் அல்வழி எனப்படும். அவை எழுவாயும், விளியும், உவமத்தொகையும், உம்மைத்தொகையும், பண்புத்தொகையும், இருபெய ரொட்டுப் பண்புத்தொகையும், முற்றும், இருவகை எச்சமும், இடையும், உரியும் என இவை. (௧௧)

௱௧௫. வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்.

இது, நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலை நோக்கிற்றோர் கருவி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு-வல்லெழுத்து முதலாகவுடைய வேற்றுமை யுருபிற்கு, ஒல்வழி ஒற்று இடை மிகுதல் வேண்டும்-பொருந்தினஇடத்து வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினும் இடைக்கண் மிகுதல் வேண்டும்.

ஊர்க்கு, நீர்க்கு, ஊர்க்கண், நீர்க்கண் என வல்லெழுத்து மிக்கன. தங்கண், எங்கண் என மெல்லெழுத்து மிக்கன.

'ஒல்வழி' என்றதனால், அரசர்கண், பார்ப்பார்கண் என ஒற்று மிகாதனவும் கொள்க. "மெய்பிறிதாதல்" [புணரியல்-எ] முதலாய நான்கு புணர்ச்சியும் உருபு புணர்ச்சிக்கண்ணும் எய்தலின், மெய்பிறிதாதலை எடுத்தோதாது மிக்கதனை எடுத்தோதிய வதனான், மிக்க புணர்ச்சி யல்லனவும் ஈண்டே கொள்க. பொற்கு, பொற்கண், ஆங்கண், ஈங்கண், ஊங்கண், அவற்கு, இவற்கு, நுங்கண், கொற்றற்கு, சாத்தற்கு எனவரும்.

அவன்கண், சாத்தன்கண் என்புழி இயல்பும் இதனானே கொள்க. (௧௨)

௱௧௬. ஆற னுருபி னகரக் கிளவி
ஈறு ககரமுனைக் கெடுதல் வேண்டும்

இஃது, ஆறாவதற்குத் தொகைமரபினை நோக்கியதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஆறன் உருபின் அகரக்கிளவி-ஆறாம் வேற்றுமையாகிய அது என்னும் சொல்லிடத்து அகரமாகிய எழுத்து, ஈறு ஆகு அகரமுனை கெடுதல் வேண்டும்-(நெடுமுதல் குறுகும்) மொழியீற்று உளதாகின்ற அகரத்தின்முன்னர்த் தான் கெடுதல் வேண்டும்.

உ-ம். நமது, எமது, தனது, எனது, நினது எனவரும்.

மேல் ஈறுகு அகரம் இதற்குத் தாராது, இவ்வுருபகரமே ஏறி முடிய அமைதலின், அது கேடாதல் வேண்டா எனின், நெடுமுதல் குறுகி விகாரப்பட்டு நின்ற மொழியாகலின் அதன்மேல் உருபகரமேறி முடியல் வேண்டாவாயினும் போலு மென்பது.

௱௧௭. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.

இது, வேற்றுமையுருபு பெயர்க்கண் நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வேற்றுமை பெயர் வழிய புணர் நிலை-வேற்றுமை பெயர்களின் பின்னிடத்தன அவற்றோடு புணரும் நிலைமைக்கண்.

சாத்தனை, சாத்தனொடு எனவரும்.

மேல் "உருபுநிலை திரியா தீறுபெயர்க் காகும்" [வேற்றுமையியல்-அ] என்கின்றானன்றே வெனின், பெயரொடு பெயர் முதலிய நால்வகைப் புணர்ச்சியையும் வேற்றுமை அல்வழியென இரண்டாக அடக்கலின், வினைவழியும் உருபு வருமென்பதுபட நின்றதாகலின் ஈண்டு இது கூறப்பட்டது. [வேற்றுமை-வேற்றுமையுருபுகள். ஏகாரம் ஈற்றசை.] (கச)

௱சஅ. உயர்திணைப் பெயரே யஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே.

இது, வேற்றுமையொடு புணரும் பெயர்கட்குப் பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயர்திணைப்பெயரே அஃறிணைப்பெயர் என்று ஆ இரண்டு என்ப- உயர்திணைப்பெயரும் அஃறிணைப்பெயருமாகிய அவ்விரண்டு மென்று சொல்லுப, பெயர் நிலை சுட்டு-பெயராகிய நிலைமைத்து கருத்தினை.

ஆடூஉ, மகடூஉ என்பன உயர்திணைப்பெயர். ஒன்று பல என்பன அஃறிணைப் பெயர்.

மற்று விரவுப்பெயர் கூறாராயது என்னையெனின், மற்றது சாத்தன் வந்தான், வந்தது எனப் புணர்ச்சிக்கண் பெரும்பான்மையும் ஒருதிணைப்பாற் படுதலின், அவ்விரண்டாக அடக்கிக் கூறினாரென்பது.

[ஏ, என்று என்பன எண்ணிடைச்சொல். இரண்டாம் ஏகாரம் ஈற்றசை.] (கரு)

௱சகூ. அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே.

இது, சாரியை வரும் இடம் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுவழிமருங்கின் சாரியை வரும்-அப்பெயர்களின் பின்னாகிய இடத்தின்கண்ணே சாரியை வரும்.

ஆடூஉவின் கை, பலவற்றுக் கோடு எனவரும். ['அவற்றுள்வழி' எனவும்பாடம்.]

௱உ௰. அவைதாம்
இன்னே வற்றே யத்தே யம்மே
ஒன்னே யானே யக்கே யிக்கே
அன்னென் கிளவி யுளப்படப் பிறவும்
அன்ன வென்ப சாரியை மொழியே.

இது, சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அவைதாம்-மேற் சாரியை யென்னப்பட்டவைதாம், இன்னே வற்றே அத்தே அம்மே ஒன்னே ஆனே அக்கே இக்கே அன் என் கிளவி உளப்பட பிறவும்-இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன் என்னும் சொல்லுமாகிய அவ்வொன்பதும் உளப்படப் பிறவும், அன்ன என்ப சாரியை மொழி-அசசாரியையாம் தன்மைய என்று சொல்லுவர் சாரியையாகிய மொழிகளை.

'பிறவும்' என்றதனால், தம், நம், நும், எம், கெழு, எ, ஐ, ஞான்று என்பனவுங் கொள்க. "எடுத்த நறவின் குலையலங் காந்தள்" என்புழி 'அலம்' என்பதோர் சாரியையும் உண்டாலெனின், அதனை 'அலங்கு காந்தள்' என்பதன் விகாரமென்ப. இன்சாரியை வழக்குப் பயிற்சியானும் நூலுட் பலகாலும் எடுத்தோதப்படலானும், வாளா ஓதியவழி தானே சேறலானும் முன்வைக்கப்பட்டது. அன்சாரியையும் அதுபோலச் சிறப்புடைமையின் பின் வைக்கப்பட்டது. இடை நின்றவற்றியல்பும் அறிந்து கொள்க. [முதல் எட்டு ஏகாரமும் எண்ணிடைச்சொல். ஒன்பதாம் ஏகாரம் ஈற்றசை.] (கஎ)

௱உக. அவற்றுள்
இன்னி னிகர மாவி னிறுதி
முன்னர்க் கெடுத லுரித்து மாகும்.

இஃது, அவற்றுள் இன்சாரியை முதல் திரியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேற்கூறப்பட்ட சாரியைகளுள், இன்னின் இகரம் ஆவின் இறுதிமுன்னர்-இன்சாரியையினது இகாரம் ஆ என்னும் சொல்லீற்றுமுன்னர். கெடுதலும் உரித்தாகும்-கெடாமையேயன்றிக் கெடுதலும் உரித்தாம்.

உ-ம். ஆனை, ஆவினை, ஆன்கோடு, ஆவின்கோடு எனவரும்.

'முன்னர்' என்றதனான், 'மா' என்னும் சொல்லின்முன்னும் அவ்விரு விதியும் எய்தும். மானை, மாவினை, மான்கோடு, மாவின்கோடு எனவரும். (கஅ)

௱உஉ. அளபாகு மொழிமுத னிலைஇய வுயிர்மிசை
னஃகான் றஃகா னாகிய நிலைத்தே.

இஃது, இன்னிறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அளபாகும் மொழி முதல்-அளபுப்பெயராகும் மொழியின் முதற்கண், நிலைஇய உயிர்மிசை னஃகான்-நிலைபெற்ற உயிர்க்குமேலாய்நின்ற இன் சாரியையது னகாரம், றஃகான் ஆகிய நிலைத்து-றகாரமாகிய நிலைமைத்து.

பதிற்றகல், பதிற்றுழக்கு என்புழி அவ்வாறு வருதல் அறிக.

'நிலைத்து' என்றதனால், பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. பதிற்றொன்று, பதிற்றேழு எனவரும். (க௯)

௱உ௩. வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லைம்முன்
அஃகா னிற்ற லாகிய பண்பே.

இது, வற்று முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டு முதல் ஐமுன்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச் சொல்முன்னர், வஃகான் மெய் கெட அஃகான் நிற்றல் ஆகிய பண்பு-வற்றுச சாரியை தன் வகரமாகியமெய் கெட அகரம் நிற்றலாகிய பண்பினையுடைய.

அவையற்றை, இவையற்றை, உவையற்றை எனவும், அவையற்றுக்கோடு எனவும் வரும்.

'ஆகிய பண்பு' என்றதனால், சுட்டு முதலாகிய ஐ என் இறுதி ஐகாரத்தோடு நில்லாதவழி, வற்றின் வகரம் அகரம் நிற்கக் கெடாது வற்றாயே நிற்றல் கொள்க. மற்றிது, "திரிந்ததன்றிரிபு பிறிது" என்னும் நயத்தாற் கெடாதே நிற்குமாகலின்,

இது கூறவேண்டா எனின், சுட்டு முதல் ஐ ஈற்றுச் சொல்லின் ஐமுன் என ஓதாது, 'சுட்டு முதல் ஐம்முன்' என அச்சொல்முன் எல்லாம் கெடுவதுபோல ஓதினமையின், வேண்டிற்றென்பது.

ஙஉச. னஃகான் றஃகா னான்க னுருபிற்கு.

இது, னகரவீற்றுச் சாரியை நான்கற்கும் ஈறு திரிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—நான்கன் உருபிற்கு னஃகான் றஃகான்-நான்காம் உருபிற்கு (னகார வீற்றுச் சாரியையெல்லாம்) னகாரம் றகாரமாம்.

உ-ம். விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு எனவரும். (உக)

ஙஉரு. ஆனி னகரமு மதனோ ரற்றே
நான்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கே.

இஃது, ஆன்சாரியை பொருட்புணர்ச்சிக்கண் ஈறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—நான்முன் வரும் வல் முதல் தொழிற்கு ஆனின் அகரமும்-நாட்பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாகவுடைய வினைசொற்கண்வரும் ஆன்சாரியையின் அகரமும், அதன் ஓர் அற்று-அந்நான்கனுருபின்கண் வரும் ஆன்சாரியையோடு ஒரு தன்மைத்தாய் னகாரம் றகாரமாம்.

'தொழிற்கு' என்பதனைத் 'தொழிற்கண்' என மயக்கமாகக் கொள்க.

உ-ம். பரணியாற் கொண்டான் எனவரும்.

உம்மையை இரட்டுற மொழிதலானே எதிரது தழீஇய தாக்கி, அதனான் நாளல்லவற்றுமுன் வரும் வன்முதற் றொழிற்கண் இன்னின் னகரமும் றகாரமாய்த் திரிதல் கொள்க. பனியிற் கொண்டான் எனவரும்.

தொழிற்கண் இன்னின் னகரம் திரியுமென, பெயர்க்கண் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையுமுடைய வென்பது ஞாபகத்தாற் கொள்ளப்படும். பறம்பிற் பாரி, வண்டின் கால் எனவரும். (உஉ)

ஙஉசா. அத்தி னகர மகரமுனை யில்லை.

இஃது, அத்து முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அத்தின் அகரம் அகரமுனை இல்லை-அத்துச்சாரியையின் அகரம் அகரவீற்றுச்சொல்முன்னர் இல்லையாகும்.

உ-ம். மகத்துக்கை எனவரும். (உங)

ஙஉஎ. இக்கி னிகர மிகரமுனை யற்றே.

இஃது, இக்குச்சாரியை முதல் திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இக்கின் இகரம் இகரமுனை அற்று-இக்குச்சாரியையினது இகரம் இகரவீற்றுச்சொல்முன்னர் மேற்கூறியவாறுபோலக் கெடும்.

உ-ம். ஆடிக்குக் கொண்டான் எனவரும். (உச)

ரஉஅ. ஐயின் முன்னரு மவ்வியல் நிலையும்.

இதுவும் அது.

இ-ள் :—ஐயின் முன்னரும் அ இயல் நிலையும்-(இக்கின் இகரம்) இகரவீற்றுச் சொல்முன்னன்றி ஐகாரவீற்றுச்சொல்முன்னரும் மேற்கூறப்பட்ட கெடுதலியல் பிலே நிற்கும்.

உ-ம். சித்திரைக்குக் கொண்டான் எனவரும். (உரு)

ரஉகூ. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கி னிறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத்தோன் றாது.

இஃது, அக்கீறு திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—எ பெயர்முன்னரும் வல்லெழுத்து வரு வழி அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முற்ற தோன்றாது-எவ்வகைப்பட்ட பெயர்முன்னும் வல்லெழுத்து வருமிடத்து அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முடியத் தோன்றாது, மெய் மிசை யொடும் கெடும்-அதனாற் பற்றப்பட்ட வல்லெழுத்தாகிய மெய் தனக்கு மேல்நின்ற மெய்யோடும் கெடும்.

உ-ம். குன்றக்கூகை, மன்றப்பெண்ணை, ஈமக்குடம், அரசக்கன்னி, தமிழக் கூத்து, எனவரும்.

['முற்ற' என்றதனால் வன்கணமன்றி மற்றக் கணங்கட்கும் கொள்க.] தமிழ நூல், தமிழயாப்பு, தமிழவரையர் எனவரும். (உகூ)

ரஙப. அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்.

இஃது, அம்மின் இறுதி திரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அம்மின் இறுதி கசத காலை-அம்மின் இறுதியாகிய மகரவொற்று கசதக்கள் வருமொழியாக வந்தகாலத்து, தன் மெய் திரிந்து ங ஞ ந ஆகும்-தன் வடிவு திரிந்து ங ஞ நக் களாம்.

உ-ம். புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல் எனவரும்.

தன்மெய் என்றதனால், அம்மின் இறுதி மகரமேயன்றி, தம் நம் நும் உம் என்பனவற்றின் இறுதி மகரமும் திரியுமென்பது கொள்க.

எல்லார்தங்கையும், எல்லார்நங்கையும், எல்லார்நுங்கையும், வானவரி வில்லுந் திங்களும் எனவரும். (உஎ)

ரஙக. மென்மையு மிடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டு மென்மனார் புலவர்

இதுவும் அது.

இ-ள் :—மென்மையும் இடைமையும் வரும் காலை-அம்மின் இறுதி மென்மையும் இடைமையும் வருமொழியாய் வருங்காலத்து, இன்மை வேண்டும் என்மனார் புலவர்-இன்றிமுடிதலை வேண்டும் என்றுசொல்லுவர் புலவர்.

உ-ம். புளியஞெரி, நுனி, முரி, யாழ், வட்டு எனவரும்.

உரையிற்கோட லென்பதனால், புளிய விலை எனவும் உயிர் வருவழிக் கேடும் கொள்க. (௨அ)

௱௩௨. இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை யின்மை வேண்டும்.

இஃது, இன் சாரியை முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—இன் என வரும் வேற்றுமை உருபிற்கு-இன் என்றுசொல்ல வருகின்ற வேற்றுமையுருபிற்கு, இன் என் சாரியை இன்மை வேண்டும்-இன் என்னும் சாரியை தான் இன்றி முடிதல் வேண்டும்.

உ-ம். விளவின், பலாவின் எனவரும்.

"அவற்றுள் இன்னின் இகரம்" [புணரியல்-கஅ] என்றதன்பின் வையாததனால், சிறுபான்மை இன் சாரியை கெடாதுநிற்றல் கொள்க. பாம்பினிற் கடிது தேள் எனவரும். (௨௯)

௱௩௩. பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா
திடைநின் றியலுஞ் சாரியை யியற்கை
உடைமையு மின்மையு மொடுவயி னொக்கும்.

இது, சாரியைகட்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப-பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாய்ப் பிரிந்தும் பெயரும் பெயருமாய்க் கூடியும் இசைப்ப, வேற்றுமை உருபு நிலை பெறு வழியும்-வேற்றுமையுருபு தொகாது நிலை பெற்ற இடத்தினும், தோற்றம் வேண்டா தொகுதிக்கண்ணும்-அவை தோற்றுதல் வேண்டாத தொகுதிக்கண்ணும், ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி-தாம்தாம் பொருந்துதற்கேற்ப நடந்த வழக்கோடு பொருந்தி, சொல் சிதர்மருங்கின்-சாரியை பெறும் புணர்மொழிகளைப் பிரித்துக்காணுமிடத்து, வழி வந்து விளங்காது இடைநின்று இயலும்-அவற்றின்பின் வந்து விளங்காது அவற்றிடையே நின்று நடக்கும், சாரியை இயற்கை-சாரியையின்இயல்பு.உடைமையும் இன்மையும் ஒடுவயின்ஒக்கும்-அவைதாம் உண்டாதலும் இல்லையாதலும் ஒடு உருபினிடத்து ஒக்கும்.

உ-ம். விளவினைக்குறைத்தான், விளவினைக்குறைத்தவன் எனவும், நிலாத்துக் கொண்டான், நிலாத்துக்கொண்டவன் எனவும் வரும்.

ஒட்டுதற்கொழுகிய வழக்கன்மையின், நிலாக்கதிர் நிலாமுற்றம் என்பன சாரியை பெறாவாயின.

எல்லாநம்மையும் எனச் சாரியை ஈற்றின்கண்ணும் வருதலின், இடைநின்றியறல் பெரும்பான்மை யெனக்கொள்க.

பூவினொடுவிரிந்தகூந்தலெனவும், பூவொடுவிரிந்தகூந்தலெனவும், உண்மையும் இன்மையும் ஒடுவெயின் ஒத்தவாறு.

'இயற்கை' என்றதனான் ஒடுவுருபின்கண் சாரியை பெறுதலும் பெறாமையும் ஒழிய, ஒரோவழிப் பெற்றேவருமென்பது கொள்க. பலவற்றொடு எனவரும்.(௩௰)

௱௩௪. அத்தே வற்றே யாயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுத றெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.

இஃது, அத்தும் வற்றும் வருமிடத்து நிலைமொழியினும் வருமொழியினும் வருஞ் செய்கை கூறுதல் நுதலிற்று.

இ-ள்—: அத்தே வற்றே அ இரு மொழிமேல் ஒற்று மெய்கெடுதல் தெற்றென் றற்று-அத்தும் வற்றுமாகிய அவ்விரு மொழிமேல்நின்ற ஒற்றுத் தன்வடிவுகெடுதல் தெளியப்பட்டது. அவற்றுமுன் வரும் வல்லெழுத்து மிகும்-அவ்விருசாரியை முன்னும் வரும் வல்லெழுத்து மிகும். [முந்திய ஏகாரம் இரண்டும் எண்ணிடைச்சொல். பிந்திய ஏகாரம் இரண்டும் ஈற்றசை.]

உ-ம். கலத்துக்குறை, அவற்றுக்கோடு எனவரும்.

கலன் என னகாரமாக நிறுத்திக்கெடுக்கவே, 'ஒன்றினமுடித்தல்' என்பதனால், புள்ளியீறல்வழி விகார வகையான் நின்றனவும் அவற்றின் மிசையொற்றென்று கெடுக்கப்படு மெனக்கொள்க.

அவற்றுக்கோடு எனவரும். இஃது ஐகார ஈறு.

ஈண்டு வல்லெழுத்து மிகுமென்றது ஈற்றுவல்லெழுத்தின்றித் திரிந்துமுடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கி யெனவுணர்க.

அத்து முற்கூறிய முறையன்றிய கூற்றினான், அத்தின்மிசை யொற்றுக் கெடாது நிற்கவும் பெறும். விண்ணத்துக்கொட்கும், வெயிலத்துச்சென்றான், இருளத்துக் கொண்டான் எனவரும்.

'மெய்' என்றதனால், அத்தின்அகரம், பிறவுயிரின்முன்னும் கெடுதல்கொள்க. அண்ணாத்தேரி எனவரும்.

'தெற்று' என்றதனால், அத்தின்அகரம் கெடாது நிற்றலும் கொள்க. விளவத்துக்கண் எனவரும். (௩௧)

௱௩௫. காரமுங் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்று மெழுத்தின் சாரியை.

இஃது, எழுத்துச்சாரியைகட்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—காரமும் கரமும் கானொடு சிவணி-காரமும் கரமும் கானொடு பொருந்தி, நேர தோன்றும் எழுத்தின் சாரியை-எல்லா ஆசிரியரானும் உடன்படத் தோன்றும் எழுத்துச்சாரியை யாதற்கு.

'நேரத்தோன்றும்' என்றதனான், நேரத்தோன்றாதன ஆனம், ஓனம், என இவை. (௩௨)

௱௩௬ அவற்றுள்
கரமுங் கானு நெட்டெழுத் திலவே.

இஃது, அவற்றுட் சில சாரியை சில எழுத்தோடு வாரா என எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்து இல-மேற்சொல்லப்பட்டவற்றுள் கரமும் கானும்நெட்டெழுத்திற்கு இல.

காரம் நெட்டெழுத்திற்கு உண்டு என்றவாறு. ஆகாரம், ஈகாரம் எனவரும். ()

௱௩௭. வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய.

இது, நெட்டெழுத்திற்குச் சில சாரியை விலக்கினமையின் குற்றெழுத்திற்கும் சில விலக்குவதுண்டுகொல் என்னும் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

இ-ள் :—வரல் முறை மூன்றும் குற்றெழுத்து உடைய-வரலாற்று முறைமையையுடைய மூன்று சாரியையும் குற்றெழுத்து உடைய.

அகாரம், அகரம், அஃகான் எனவரும்.

'வரன்முறை' என்றதனான், அஃகான் என்புழி ஆய்தமிக்கு முடியுமென்பது கொள்க. (௩௪)

௱௩௮. ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்.

இஃது, அவற்றுள் கான் என்பதற்கு ஓர் புறநடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஐகாரம் ஔகாரம் கானொடும் தோன்றும்-நெட்டெழுத்துக்களில் ஐகாரமும் ஔகாரமும் முன்விலக்கப்பட்ட கானொடும் தோன்றும்.

ஐகான், ஔகான் எனவரும். (௩௫)

௱௩௯. புள்ளி யீற்றுமு னுயிர் தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே.

இஃது, உயிர்முதல்மொழி புள்ளியீற்றுமுன் வருங்காற் பிறப்பதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—புள்ளிஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது-புள்ளியீற்றுச்சொல்முன் உயிர் தனித்து நடவாது, மெய்யொடு சிவணும் அ இயல் கெடுத்து-அப்புள்ளியோடு கூடும் தான் தனிநின்ற அவ்வியல்பினைக் கெடுத்து.

உ-ம். ஆல் + அடை, ஆலடை எனவரும்.

"ஒன்றினமுடித்தல்'' என்பதனால், இயல்பல்லாத புள்ளிமுன் உயிர்வந்தாலும் இவ்விதி கொள்க. அதனை எனவும், நாடுரி எனவும் வரும்.

புள்ளியீற்றுமுன்னும் என, தொகுத்துநின்ற உம்மையை விரித்ததனானே குற்றியலுகரத்தின் முன்னும் இவ்விதி கொள்க. நாகரிது எனவரும். (௩௬).

௱௪௰. மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்.

இது, புணர்ச்சியிடத்து உயிர்மெய் உயிர்நீங்கியவழிப் படுவதோர் விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மெய் உயிர் நீங்கின் தன் உரு ஆகும்-மெய் தன்னொடு கூடிய உயிர் புணர்ச்சியிடத்து நீங்கியவழித் தன்புள்ளி வடிவு பெறும்.

உ-ம். அதனை, அதன் + ஐ எனவரும். (கஎ)

ருசக. எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்.

இஃது, உயிரீறு உயிர்முதன்மொழியொடு புணரும்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—எல்லா மொழிக்கும்-மூவகைப்பட்ட மொழிக்கும், உயிர் வரு வழி-உயிர்முதன்மொழி வரும் இடத்து, உடம்படுமெய்யின் உருபு கொளல் வரையார்-இடை உடம்படுமெய் வடிவு கோடலை நீக்கார்.

உ-ம். புளியங்கோடு, எருவங்குழி, விளவத்துக்கொட்கும் எனவரும்.

"உரையிற்கோடல்" என்பதனால், உடம்படுமெய்யாவன யகரமும் வகரமும் எனக்கொள்க. இகரவீறும் ஈகாரவீறும் ஐகாரவீறும் யகரவுடம்படுமெய் கொள்வன; அல்லனவெல்லாம் வகரமெய்கொள்வன. "ஒன்றெனமுடித்தல்" என்பதனான், விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படுமெய் கொள்க. மரவடி, ஆயிருதிணை என வரும்.

'வரையார்' என்றதனால், உடம்படுமெய்கோடல் ஒருதலை அன்றென்பது கொள்ளப்படும். கிளி அரிது, மூங்கா இல்லை எனவரும். (கஅ)

ருசஉ. எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி
இசையிற் றிரித னிலைஇய பண்பே.

இஃது, எழுத்துக்கள் ஒன்று பலவாதல் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—எழுத்து ஓர் அன்ன பொருள் தெரி புணர்ச்சி-எழுத்து ஒரு தன்மையான பொருள் விளங்கிநிற்கும் புணர்மொழிகள், இசையின் திரிதல் நிலைஇய பண்பு-ஓசைவேற்றுமையால் புணர்ச்சிவேறுபடுதல் நிலைபெற்ற பண்பு.

உ-ம். செம்பொன்பதின்றொடி, குன்றேறுமா எனவரும். (கக)

ருசங. அவைதாம்
முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன வென்னு மெழுத்துக்கட னிலவே.

இது, மேலதற்கு ஓர் புறநடை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அவைதாம்-மேற்சொல்லிய புணர்மொழிகள்தாம், முன்னப் பொருள-முன்னத்தினான் உணரும் பொருண்மையையுடைய; புணர்ச்சிவாயின் இன்ன என்னும் எழுத்து கடன் இல-அவை புணர்ச்சியிடத்து இத்தன்மைய வென்னும் எழுத்து முறைமையை உடையவல்ல.

செம்பொன்பதின்றொடி என்றவழி, பொன்னாராய்ச்சி உளவழிப் பொன்னெனவும், செம்பாராய்ச்சி உளவழிச் செம்பெனவும் குறிப்பால் உணரப்பட்டது. மற்று, இதன்மேல் "இசையிற் றிரிதல் நிலைதல்" என அறியுமாறு கூறினானன்றேயெனின், ஓசை என்றமையான் அஃது ஒலியெழுத்திற்கெனவும், 'இன்னவென்னுமெழுத்துக் கடனில' என்றதனான் இது வரிவடிவிற்கெனவுங் கொள்க. (உய)

நான்காவது புணரியல் முற்றிற்று.

ஐந்தாவது - தொகைமரபு

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மேல் அகத்தோத்தினுள் இருபத்துநான்கு ஈற்றினும் விரிந்து முடிவனவற்றையெல்லாம் தொகுத்துமுடித்தலின் தொகைமரபு எனப்பட்டது. மேல் புணரியலுட் கூறிய கருவிகளாற் செய்கைகூறும் வழி, தொக்குப்புணருஞ்செய்கை கூறலிற் புணரியலோடு இயைபுடைத்தாயிற்று.

> ௱சச. கசதப முதலிய மொழிமேற் றோன்று
> மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
> ஙஞநம வென்னு மொற்றா கும்மே
> அன்ன மரபின் மொழிவயி னான.

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், அல்வழியும் வேற்றுமையுமாகிய இருவகைக்கண்ணும், உயிர்மயங்கியலையும் புள்ளிமயங்கியலையும் நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும் மெல்லெழுத்து இயற்கை-உயிரீற்றினும் புள்ளியீற்றினும் இருவழியும் க ச த ப க்களை முதலாகவுடைய மொழிகளின்மேல் தோன்றும் மெல்லெழுத்தினது இயல்புகூறின், சொல்லியமுறையான் ங ஞ ந ம என்னும் ஒற்றாகும்-மெல்லெழுத்து மேற்சொல்லும் முறைமையான் க ச த ப க்களுக்கு நிரனிறை வகையானே ங ஞ ந ம வென்னும் ஒற்றாகும், அன்ன மரபின் மொழிவயினான-அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து.

உ-ம். விளங்கோடு, செதிள், தோல், பூ எனவரும்.

தோன்றுமென்றதனால், தோன்றிநின்றனவும் அவ்வாறே திரிந்து மெல்லெழுத்தா மென்பது. மரங்குறிது, சிறிது, தீது, பெரிது எனவரும். அன்னமரபின் மொழியன்மையின், விளக்குறுமை என்புழி மெல்லெழுத்து மிகாதாயிற்று.

[ஏகாரம் ஈற்றசை. 'ஆன' என்பதன் அகரம் அசை.] (௧)

> ௱சரு. ஞநமய வவெனு முதலாகு மொழியும்
> உயிர்முத லாகிய மொழியு முளப்பட
> அன்றி யனைத்து மெல்லா வழியும்
> நின்ற சொன்மு னியல்பா கும்மே.

இஃது, இருபத்துநான்கு ஈற்றின்முன்னும், வன்கணமொழிந்த கணங்கட்கு இருவழியும் வருமொழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஞ ந ம ய வ எனும் முதல் ஆகுமொழியும்-ஞ ந ம ய வ என்று சொல்லப்படும் முதலெழுத்து உளவாகும் மொழியும், உயிர்முதலாகிய மொழியும் உளப்பட-உயிர்முதலாகிய மொழியுமாக,அன்றி அனைத்தும் எல்லா வழியும்-அவ்வனைத்து மொழியும் அல்வழியும் வேற்றுமையாகிய எல்லா விடத்தும், நின்ற சொல்முன் இயல்பாகும்-இருபத்துநான்கு ஈற்றுப்பெயராகிய நிலைமொழிமுன்னர் இயல்பாகி முடியும்.

ஈண்டு உளப்படவென்பது ஆக வென்னும் பொருண்மைத்து.

உ-ம். விள, தாழ் என நிறுத்து, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, அடைந்தது, ஆடிற்று, இடிந்தது, ஈரிற்று, உடைந்தது, ஊறிற்று, எழுந்தது, எறிற்று, ஐது, ஒடிந்தது, ஓடிற்று, ஔவியத்தது, நுந்தையது எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலுமை, அடைவு, ஆட்டம், இடிபு, ஈட்டம், உடைபு, ஊற்றம், எழு, ஏணி, ஐயம், ஒடுக்கம், ஓக்கம், ஔவியம், நுந்தை எனவும் ஒட்டிக்கொள்க.

'எல்லாம்' என்றதனன், ஒற்றிரட்டலும், உடம்படுமெய்கோடலும், உயிரேறி முடிதலும் எனவரும் இக்கருவித்திரிபு மூன்றுதிரிபும் அன்மையின் திரிபெனப் படா வென்பது கொள்க. இஃது இருபத்துநான்கு ஈற்றிற்கும், அல்வழியினும், வேற்றுமையினும், அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை, ஈண்டு ஒரு சூத்திரத்தான் தொகுத்து முடித்ததாயிற்று. மேலும் இவ்வாறே தொகுத்து முடிக்கின்றவாறு அறிக. (௨)

௱௪௬. அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான.

இது, மேற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு, அம்முடிபு விலக்கிப் பிறிது விதி எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேற்சொல்லப்பட்ட மூன்றுகணத்தினும், மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்-மெல்லெழுத்தினது இயல்பு இயல்பாதலேயன்றி உறழ்ந்துமுடியினும் நீக்கார், சொல்லிய தொடர்மொழி இறுதியான்-சொல்லப்பட்ட தொடர்மொழி யீற்றுக்கண்.

உ-ம். கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி, நுனி, முரி எனவரும்.

வருமொழி முற்கூறியவதனல், ஓரெழுத்தொருமொழியுள்ளும், ஈரெழுத்தொருமொழியுள்ளும் சிலவற்றிற்கு உறழ்ச்சிமுடிபு கொள்க.

உ-ம். பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி எனவும், காய்ஞெரி, காய்ஞ்ஞெரி, நுனி, முரி எனவும் வரும்.

'சொல்லிய' என்றதனன், ஓரெழுத்தொருமொழியுள்ளும் ஈரெழுத்தொருமொழியுள்ளும் சிலவற்றிற்கு மிக்கு முடிதல் கொள்க. கைஞ்ஞெரிந்தார், நீட்டினர், மடித்தார் எனவும், மெய்ஞ்ஞானம், மெய்ந்நூல், மெய்ம்மறந்தார் எனவும் வரும். (௩)

௱௪௭. ணனவென் புள்ளிமுன் யாவு ஞாவும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இது, யகார ஞகாரங்கள் முதலாம்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ண ன என் புள்ளிமுன்-ண ன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன், யாவும் ஞாவும் வினை ஓர் அனைய என்மனார் புலவர்-யாவும் ஞாவும் வினைச் சொற்கண் முதலாதற்கு ஒரு தன்மைய வென்றுசொல்லுவர் புலவர்.

உ-ம். மண்யாத்த எனவும், பொன்யாத்த எனவும், மண்ஞாத்த எனவும், பொன் ஞாத்த எனவும் வரும்.

ஞா முற்கூறுது யா முற்கூறியவதனான், யா முதன்மொழிக்கண் ஞா வருமென்றுகொள்க. (௪)

௱௪௮. மொழிமுத லாகு மெல்லா வெழுத்தும்
வருவழி நின்ற வாயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிட னிலவே.

இது, ணகாரவீற்றிற்கும் னகாரவீற்றிற்கும் அல்வழிக்கண் நிலைமொழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மொழி முதல் ஆகும் எல்லா எழுத்தும் வருவழி-மொழிக்கு முதலாமென்று சொல்லப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் வருமிடத்து, நின்ற அ இரு புள்ளியும் வேற்றுமை அல்வழி திரிபு இடன் இல-பெயர்ச்சொல்லினின்ற ண னக்களாகிய அவ்விருபுள்ளியும் வேற்றுமையல்லாத அல்வழியிடத்துத் திரியும் இடம் இல.

உ-ம். மண், பொன் என நிறுத்து, கடிது, சிறிது, தீது, பெரிது என வன்கணத்தோடு ஒட்டுக. பிற கணத்துக்கண்ணும் அவ்வாறே ஒட்டுக.

வருமொழி முற்கூறியவதனால், ணகாரத்திற்குச் சிறுபான்மை திரிபும் உண்டெனக்கொள்க. அது சாட்கோல் எனவரும். [ஏகாரம் ஈற்றசை.] (௫)

௱௪௯. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூ றியற்கை யாவயி னான.

இஃது, அவ்விரண்டு ஈற்றிற்கும் வேற்றுமைக்கண் நிலைமொழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வேற்றுமைக்கண்ணும்-வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும், வல்லெழுத்து அல் வழி-வல்லெழுத்து அல்லாத விடத்து, மேல் கூறு இயற்கை அவயின்ஆன்-மேற்கூறிய இயல்புமுடிபாம் அவ்விரண்டு புள்ளியிடத்தும்.

உ-ம். மண், பொன் என நிறுத்து, ஞாற்சி, நீட்சி என வன்கணம் ஒழித்து எல்லாவற்றோடும் ஒட்டுக.

௱௫௦. லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
தந வெனவரிற் றனவா குமே.

இது, புள்ளிமயங்கியலை நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ல ன என வரும் புள்ளி முன்னர்-ல ன என்றுசொல்ல வருகின்ற புள்ளிகளின்முன்னர், த ந என வரின்-த ந என வருமொழி வரின், ற ன ஆகும்-அத் தகர நகரங்கள் நிரனிறையானே றகர னகரங்களாம்.

உ-ம். கஃறீது, கன்னன்று, பொன்றீது, பொன்னன்று எனவரும். (௭)

௱௫௧. ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்.

இதுவும் அது.

இ-ள் :—ண ள என் புள்ளிமுன்-ண ள என்னும் புள்ளிகளின்முன்னர் (அதிகாரத்தினால் தகார நகாரங்கள் வரின்), ட ண என தோன்றும்-அவை நிரனிறையால் டகார ணகாரங்களாய்த் தோன்றும்.

உ-ம். மண்டீது, மண்ணன்று, முஃடீது, முண்ணன்று எனவரும். (அ)

ாருஉ. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவு முறழ்பா குநவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே.

இது, முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயிர் ஈறாகிய முன்னிலைக்கிளவியும் புள்ளி இறுதி முன்னிலைக்கிளவியும்-உயிர் ஈறாகிய முன்னிலைச்சொற்களும் புள்ளி இறுதியையுடைய முன்னிலைச் சொற்களும், வல்லெழுத்து வரின்-வல்லெழுத்து முதல்மொழி வரின், இயல்பு ஆகுநவும் உறழ்பு ஆகுநவும் என்று அ ஈர் இயல-இயல்பாவனவும் உறழ்ச்சியாவனவும் என அவ்விரண்டு இயல்பினையுடைய.

உயிரீறு புள்ளியீறு என்றமையான், முன்னிலைவினைச்சொல் என்பதுகொள்க.

உ-ம். எறிகொற்றா, கொணகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும், உண் கொற்றா, தின்கொற்றா எனவும் வரும். இவை இயல்பு.

நடகொற்றா, நடக்கொற்றா எனவும், ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா எனவும் வரும். இவை உறழ்ச்சி. (கூ)

ாருரு. ஒளவென வருஉ முயிரிறு சொல்லும்
ஞ ந ம வ வென்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியு முளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.

இது, மேல் முடிபு கூறியவற்றுட் சிலவற்றிற்கு அம்முடிபு விலக்குதல் நுதலிற்று.

இ-ள் :—ஒள என வரும் உயிர் இறு சொல்லும்-ஒள என வருகின்ற உயிரீற்றுச் சொல்லும், ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும்-ஞ ந ம வ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச்சொல்லும், குற்றியலுகரத்து இறுதியும் உளப்பட-குற்றியலுகரமாகிய இறுதியையுடைய சொல்லுமாகிய இவை, முன்னிலை மொழிக்கு முற்ற தோன்றா-முன்னிலைமொழிக்குக் கூறிய இயல்பும் உறழ்வுமாகிய முடிவிற்கு முற்றத்தோன்றா.

'முற்ற' என்றதனான், ஈண்டு விலக்கப்பட்டவற்றுட் குற்றியலுகரஈறு ஒழித்து, ஒழிந்தனவெல்லாம் நிலைமொழி உகரம்பெற்று, வருமொழி வல்லெழுத்து உறழ்ந்து முடிதலும், குற்றியலுகர ஈறு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுங் கொள்க.

உ-ம். கௌவுகொற்றா, கௌவுக்கொற்றா, உரிஞுகொற்றா, உரிஞுக்கொற்றா; பொருநுகொற்றா, பொருநுக்கொற்றா, திருமுகொற்றா, திருமுக்கொற்றா, தெவ்வு கொற்றா, தெவ்வுக்கொற்றா எனவும், கூடுக்கொற்றா, கூட்டுக்கொற்றா எனவும் வரும். (ம)

ாருச. உயிரீ றாகிய வுயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும்
எல்லா வழியு மியல்பென மொழிப.

இஃது, உயர்திணைப்பெயர் நான்கு கணத்துக்கண்ணும், இருவழியும் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயிர் ஈறுகிய உயர்திணைப்பெயரும்-உயிர் ஈறுகிய உயர்திணைப்பெயர்களும், புள்ளி இறுதி உயர்திணைப்பெயரும்-புள்ளி இறுதியையுடைய உயர்திணைப் பெயர்களும்,எல்லா வழியும் இயல்பு என மொழிப-நான்குகணத்தினும் அல்வழியும் 'வேற்றுமையுமாகிய எல்லா விடத்தும் இயல்பாம் என்று சொல்லுவர்.

உ-ம். நம்பி எனவும் அவன் எனவும் நிறுத்து, அல்வழிக்கண் குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும், ஞான்ருன், நீண்டான், மாண்டான் எனவும், யாவன், வலியன் எனவும், அடைந்தான், ஒளவியத்தான் எனவும், வேற்றுமைக்கண் கை, செவி, தலை, புறம் எனவும், ஞாற்சி, நீட்சி, மாட்சி எனவும், யாப்பு, வலிமை எனவும், அடைபு, ஒளவியம் எனவும் ஒட்டுக. ஒருவென் என நிறுத்து, குறியென், சிறியென் எனவும், கை, செவி, எனவும் தன்மைப்பெயர்க்கண்ணும் ஒட்டுக.

உயிரீறு புள்ளியிறுதி என்றதனல், உயர்திணைப்பெயருள் இயல்பன்றி முடிவன வெல்லாம் கொள்க. பல்சான்ருர், கபிலபரணர், இறைவநெடுவேட்டுவர், மருத்துவ மாணிக்கர், பல்லரசர் என இவை ஈறுகெட்டு முடிந்தன.

கோலிகக்கருவி, வண்ணூரப்பாடி, ஆசீவகப்பள்ளி என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கன.

குமரகோட்டம், குமரக்கோட்டம், பிரமகோட்டம், பிரமக்கோட்டம் என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்துமுடிந்தன. பிறவும் அன்ன.

எல்லாம் என்றதனல், உயர்திணைச்சொல் இயல்பாயும் திரிந்தும் முடிவன கொள்க. உண்ப சான்ருர், உண்டார்சான்ருர், உண்பேன்பார்ப்பென் என இவை இயல்பு. உண்டனெம்சான்றேம், உண்டேநாம் என இவை திரிந்தன. பிறவும் அன்ன. (கக)

௱௫௫. அவற்றுள்
இகரவீற் றுப்பெயர் திரிபிட னுடைத்தே.

இஃது, உயர்திணைப்பெயருட் சிலவற்றிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள் :—அவற்றுள்-மேற்சொல்லப்பட்ட உயர்திணைப்பெயருள், இகர ஈற்றுப் பெயர் திரிபு இடன் உடைத்து-இகரமாகிய இறுதியையுடைய பெயர் திரிந்துமுடியும் இடமும் உடைத்து.

உரையிற்கோடல் என்பதனன், இது மிக்கதிரிபென்பது கொள்ளப்படும்.

உ-ம். எட்டிப்பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ, நம்பிப் பேறு எனவரும்.

இடனுடைத்து என்றதனன், இகர ஈறன்றிப் பிற ஈறும் ஈறு திரியாது வல்லெழுத்து மிக்கு வருவன ஈண்டுக்கொள்க. திணைப்பூ, திணைப்புரவு எனவரும். (கஉ)

௱௫௬. அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே.

இது, விரவுப்பெயர்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அஃறிணை விரவுப்பெயர் இயல்பும் உள-உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப்பெயர் இயல்பாய் முடிவனவும் உள; இயல்பன்றி முடிவனவும் உள. இயல்பன்றிமுடிவன இன்னவாறு முடியுமென, மேல் அகத்தோத்தினுட் கூறப்படும்.

உ-ம். சாத்தன்குறியன், சாத்தன்குறிது எனவும், சாத்தன்கை எனவும், இவ்வாறே அல்வழியினும் வேற்றுமையினும் நான்கு கணத்தோடும் ஒட்டிக்கொள்க. [ஆர் அசை. ஏகாரம் ஈற்றசை.] (௧௩)

௱௫௬. புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையாற்
றம்மி னாகிய தொழிற்சொன் முன்வரின்
மெய்ம்மை யாகலு முறழத் தோன்றலும்
அம்முறை யிரண்டு முரியவை யுளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இது, மூன்றும்வேற்றுமைத்திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும்-புள்ளியீற்றுச்சொல்லும் உயிரீற்றுச்சொல்லும், வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான்-வல்லெழுத்தினது மிகுதிமேற்சொல்லும் முறைமையான், தம்மின்ஆகிய தொழிற்சொல் முன்வரின்-அம்மூன்றுவதன் பொருளாகிய வினைமுதற்பொருள்கள்தம்மான் உளவாகிய வினைச்சொற்கள்தாம் அவற்றுமுன் வரின், மெய்ம்மையாகலும் உறழத்தோன்றலும் அம்முறை இரண்டும் உரியவை உள-இயல்பாகலும் உறழத்தோன்றுதலுமாகிய அம்முறைமையினையுடைய இரண்டுசெய்கையும் உரியன உள. வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்-அவற்றை மேலே வேற்றுமைப் பொருட்புணர்ச்சிமுடிபு சொல்லுமிடத்துப் போற்றியறிதல் வேண்டும்.

உ-ம். நாய்கோட்பட்டான், புலிகோட்பட்டான், சாரப்பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான் என இவை இயல்பு. சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான், வளிகோட்பட்டான், வளிக்கோட்பட்டான் என இவை உறழ்ச்சி.

புள்ளியீறு உயிரீறு என்றதனால், பேஎய்கோட்பட்டான், பேஎய்க்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் எகரப்பேறு கொள்க. உரியவையுள என்றதனான், பாம்புகோட்பட்டான், பாப்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழியொற்றுத் திரியாமையும் திரிதலும் கொள்க. (௧௪)

௱௫௭. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்
சாரியை யுளவழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை யுளவழித் தன்னுருபு நிலையலுஞ்
சாரியை யியற்கை யுறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கி னொழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலும்

மெய்பிறி தாகிடத் தியற்கை யாகலும்
அன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.

இஃது, இரண்டாம் வேற்றுமைத்திரிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்-மெல்லெழுத்து மிகுமிடத்து வல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்-வல்லெழுத்து மிகுமிடத்து மெல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்-இயற்கையிடத்து மிகுதி தோன்றுதலும், உயிர் மிக வருவழி உயிர் கெட வருதலும்-உயிர் மிக வருமிடத்து அவ்வுயிர் கெட வருதலும், சாரியை உளவழி சாரியை கெடுதலும்-சாரியையுள்ள இடத்து அச்சாரியை கெடுதலும், சாரியை உளவழி தன் உருபு நிலையலும்-சாரியை உள்ள விடத்து அச்சாரியையொடு தன்னுருபு நிற்றலும்,சாரியை இயற்கை உறழத்தோன்றலும்-சாரியை பெறுகவென்றவழி அச்சாரியை பெருது இயல்பாகிய மொழிகள் வருமொழியினும் நிலைமொழியினும் மிக்கும் திரிந்தும் வருமொழிவல்லெழுத்துக்கள் உறழ்ச்சியாகத்தோன்றுதலும், உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்-உயர்திணைப்பெயரிடத்துத் தன்னுருபு தொகாதே விரிந்து வருதலும், அஃறிணை விரவுப்பெயர்க்கு அ இயல் நிலையலும்-உயர்திணையோடு அஃறிணைவிரவும் பெயர்க்கு அவ்வுருபு அவ்வியல்பிலே நிற்றலும்,மெய் பிறிது ஆகு இடத்து இயற்கை ஆதலும்-மெய்பிறிதாய் முடியுமிடத்தில் இயல்பாய்முடிதலும், அன்ன பிறவும்-அத்தன்மையன பிறமுடிபுகளும், தன் இயல் மருங்கின் மெய் பெற கிளந்து பொருள் வரைந்து இசைக்கும்-தனது இயல்பாகிய கூற்ருல் அகத்தோத்தினுட் பொருள் பெற எடுத்தோதப்பட்ட வேற்றுமைப்பொருட்புணர்ச்சியது பொதுமுடிவினைத் தான் வரைந்து வேறுமுடிபிற்ருய்நின்று ஒலிக்கும், ஐகார வேற்றுமைத் திரிபு என மொழிப-ஐகாரவேற்றுமையினது வேறுபாட்டுப்புணர்ச்சி என்று சொல்லுவர் புலவர்.

உ-ம். விளக்குறைத்தான் என்பது மெல்லெழுத்து மிகுவழி வல்லெழுத்து மிக்கது. மரங்குறைத்தான் என்பது வல்லெழுத்து மிகுவழி மெல்லெழுத்து மிக்கது. தாய்க்கொலை என்பது இயல்பாமிடத்து மிக்கது. பலாக்குறைத்தான் என்பது உயிர் மிக வருவழி உயிர் கெட்டது. வண்டுகொணர்ந்தான் என்பது சாரியை உளவழிச் சாரியை கெட்டது. வண்டினைக்கொணர்ந்தான் என்பது சாரியை உளவழித் தன்னுருபு நிலையிற்று. புளிகுறைத்தான், புளிக்குறைத்தான், ஆல்குறைத்தான், ஆற்குறைத்தான் என இவை சாரியையியற்கை உறழத்தோன்றின. நம்பியைக்கொணர்ந்தான் என்பது உயர்திணைமருங்கின் ஒழியாது வந்தது. கொற்றனைக்கொணர்ந்தான் என்பது விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையது. மண்கொணர்ந்தான் என்பது மெய்பிறிதாகிடத்து இயற்கையாயது.

அன்ன பிறவும் என்றதனுற்கொள்வன கழிகுறைத்தான், பனைபிளந்தான் என்பன. பிறவும் அன்ன.

ஒழியாது என்றதனுன், ஒரோவழி ஒழிந்தும் வரும். அவர்க்கண்டு எனவும், "ஒன்னார்த்தெறலும்"எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்துவந்தன. மகற்பெற்ருன் மகட்பெற்ருன் என இவை விரவுப்பெயருள் ஒழிந்துவந்தன. இவ்விலேசுதன்னுனே, இவற்றின் முடிபுவேற்றுமையும் கொள்க.

'மெய்பெற' என்றதனுன், உறழ்ச்சியாய்முடிவனவும் கொள்க. மைகொணர்ந் தான், மைக்கொணர்ந்தான் எனவும்; வில்கோள், விற்கோள் எனவும் வரும். இவ் வாறு திரிந்துமுடியாது, அகத்தோத்தில் பொதுமுடிபே முடிபாய்க் கடுக்குறைத் தான், செப்புக்கொணர்ந்தான் என்றாற்போல முடிவன அறிந்து கொள்க. இவ் வாறு வேறுபடமுடிவது பெரும்பான்மையும் இரண்டாவது வினையொடு முடியும் வழிப்போலும். அது "தம்மி னாகிய தொழிற்சொன் முன்வரின்" [தொகைமரபு-கச] என நின்ற அதிகாரத்தாற் கொள்ளவைத்தார் போலும். "தன்னினமுடித் தல்" என்பதனுன், ஏழாம்வேற்றுமை வினையொடு முடியும்வழித்திரிபும்கொள்க. வரைபாய்வருடை, புலம்புக்கன்னே புல்லணற்காளை எனவரும். (கஞ)

௬௫அ. வேற்றுமை யல்வழி இ ஐ யென்னும்
ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைஇய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவு மென்மனார் புலவர்.

இஃது, இகரவீற்றுப் பெயர்க்கும் ஐகாரவீற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வேற்றுமை அல்வழி இ ஐ என்னும் ஈற்றுப்பெயர்க்கிளவி மூவகை நிலைய-வேற்றுமையல்லாத அல்வழியிடத்தும் இ ஐ என்னும் ஈற்றையுடைய பெய ர்ச்சொற்கள் மூவகைமுடிபு நிலைமையுடைய. அவைதாம் இயல்பாகுனவும் வல்லெ ழுத்து மிகுநவும் உறழாகுநவும் என்மனார் புலவர்-அவைதாம் இயல்பாய் முடிவ னவும் வல்லெழுத்துமிகுவனவும் உறழ்ச்சியாய்முடிவனவும் இவையென்று சொல் லுவர் புலவர்.

உ-ம். பருத்தி குறிது, கரை குறிது; சிறிது, தீது, பெரிது என இவை இயல்பு. அலிக்கொற்றன், புலிக்கொற்றன் என இவை மிகுதி. கிளி குறிது, கிளிக் குறிது. தினை குறிது, தினைக் குறிது என இவை உறழ்ச்சி.

'பெயர்க்கிளவி' மூவகை நிலைய எனவே, பெயர்க்கிளவியல்லாத கிளவி மிகுதி யும் இயல்பும் என இருவகைய எனக்கொள்க. ஒல்லைக்கொண்டான் என்பது ஐகா ரவீற்று வினைச்சொல்மிகுதி. இகரவீற்றுமிகுதி வந்தவழிக் கண்டுகொள்க.

தில்லைச்சொல்லே, மன்னைச்சொல்லே என்றது ஐகாரவீற்றிடைச்சொல் மிகுதி. இவற்றியல்பு வந்தவழிக் கண்டுகொள்க.

கடிகா என்பது இகரவீற்று உரிச்சொல்லியல்பு. இவ்வீற்றுமிகுதி வந்தவழிக் கண்டுகொள்க. பணைத்தோள் என்பது ஐகாரவீற்று உரிச்சொல்மிகுதி. இவற்றியல்பு வந்தவழிக் கண்டுகொள்க. (கரு)

௬௫க. சுட்டுமுத லாகிய இகர விறுதியும்
எகரமுதல் வினாவி னிகர விறுதியுஞ்
சுட்டுச்சினை நீடிய வையெ னிறுதியும்
யாவென் வினாவி னையெ னிறுதியும்
வல்லெழுத்து மிகுநவு முறழா குநவுஞ்
சொல்லிய மருங்கி னுளவென மொழிப.

இஃது, அவ்விகர வைகாரவீற்றுள் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொல்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டு முதலாகிய இகர இறுதியும்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய இகரவீற்று இடைச்சொல்லும், எகரமுதல் வினாவின் இகர இறுதியும்-எகரமாகிய மொழிமுதல் வினாவினையுடைய இகரவீற்று இடைச்சொல்லும், சுட்டுச்சினை நீடிய ஐஎன் இறுதியும்-சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட ஐகாரவீற்று இடைச்சொல்லும், யா என் வினாவின் ஐ என் இறுதியும்-யா என்னும் வினாவினை முதற்கண்ணுடைய ஐகாரவீற்று இடைச்சொல்லும், வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும் சொல்லிய மருங்கின் உள என மொழிப-வல்லெழுத்து மிக்குமுடிவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் மேற்சொல்லப்பட்ட இடத்தின்கண்ணே உள வென்று சொல்லுவர் புலவர்.

உ-ம். அதோளிக்கொண்டான், இதோளிக்கொண்டான், உதோளிக்கொண்டான், எதோளிக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்: ஆண்டைக்கொண்டான், ஈண்டைக்கொண்டான், ஊண்டைக்கொண்டான், யாண்டைக்கொண்டான் எனவும் இவை மிக்குமுடிந்தன.

அவ்வழிகொண்டான், அவ்வழிக்கொண்டான்; இவ்வழிகொண்டான், இவ்வழிக்கொண்டான்; உவ்வழிகொண்டான், உவ்வழிக்கொண்டான்; எவ்வழிகொண்டான், எவ்வழிக்கொண்டான் எனவும்: ஆங்கவைகொண்டான், ஆங்கவைக்கொண்டான்; ஈங்கிவைகொண்டான், ஈங்கிவைக்கொண்டான்; ஊங்குவைகொண்டான், ஊங்குவைக்கொண்டான்; யாங்கவைகொண்டான், யாங்கவைக்கொண்டான் எனவும் இவை உறழ்ந்துமுடிந்தன. இவற்றுள் ஐகாரவீற்றுள் உறழ்ந்துமுடிந்தன திரிபுடையன. திரிபில்லன பெற்றவழிக் கண்டுகொள்க.

'சொல்லியமருங்கு' என்றதனால், பிற ஐகாரவீறு மிக்குமுடிவனகொள்க. பண்டைச்சான்றோர், ஒருதிங்களைக்குழவி எனவரும். (௧௭)

௱௬௰. நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலுங்
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்
அறியத் தோன்றிய நெறியிய லென்ப.

இது, புள்ளிமயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும்-நெட்டெழுத்தின்முன் நின்ற ஒற்றுத் தன்வடிவு கெடுதலும், குறியதன்முன்னர் தன்னுருபு இரட்டலும்-குற்றெழுத்தின்முன்னர் நின்ற ஒற்றுத் தன்வடிவு இரட்டுதலும், அறிய தோன்றிய நெறி இயல் என்ப-இவை அறியும்படி தோன்றிய முறைமையான இயல்பையுடையனவென்று சொல்லுவர்.

உ-ம். கோறீது, கோனன்று என இவை நெடியதன்முன்னர் ஒற்றுக்கெட்டன.

மண்ணகல், பொன்னகல் என இவை குறியதன்முன்னர்த் தன்னுருபு இரட்டின.

மேலைச்சூத்திரத்து ஆறனுருபிற்கூறியவதனான், ஒற்று இரட்டுதல் உயிர்முதன்மொழிக்கண்ணதென்று கொள்க. குறியது பின்கூறிய முறையன்றி அக்கூற்றினால் நெடியன குறுகிநின்றவழியும் குறியதன்முன்னர் ஒற்றாய் இரட்டுதலும், குறியது திரிந்து நெடியதாயவழி அதன்முன்னர் ஒற்றாய்க்கெடுதலும் கொள்க.

தம்மை, நம்மை என இவை நெடியன குறுகின்று ஒற்று இரட்டின. மற்றை யது வந்தவழிக் கண்டுகொள்க.

'அறிய' என்றதனன், நெடியதன்முன்னர் ஒற்றுக் கெடுவது தகார நகாரங்கள் வந்து திரிந்தவழியென்பதூஉம், ஆண்டெல்லாம் கெடாதென்பதூஉங் கொள்க. தேன்றீது என்பது ஆண்டுக்கெடாதது.

'நெறியியல்' என்றதனற் குறியதன்முன்னர் நின்ற ஒற்றின்றிப் புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டுமென வுணர்க. அவ்வடை எனவரும். (௧அ)

௱௯௧. ஆற னுருபினு நான்க னுருபினுங்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை
ஈறாகு புள்ளி யகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகு மொழிமுன் னான.

இஃது, உருபியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஆறன் உருபினும் நான்கன் உருபினும் ஈறு ஆகு புள்ளி அகரமொடு நிலையும்-ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணும் ஈறாகு புள்ளிகள் அகரத் தொடு நிலைபெறும். நெடுமுதல் குறுகும் மொழிமுன் கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை-நெடிதாகிய முதலெழுத்துக் குறுகிமுடியும் மொழிக்கண் மேற்கூறிய குற் றொற்று இரட்டல் (ஆறனுருபின்கண்ணும் நான்கனுருபின்கண்ணும்) இல்லை.

உ-ம். தமது, தமக்கு; நமது; நமக்கு எனவரும்.

'கூறிய' என்றதனனே நெடுமுதல் குறுகாதமொழியும் குறுகுமொழியும் இவ் விருவிதியும்கொள்க. எல்லார் தமதும், எல்லார்தமக்கும் எனவரும். (௧௯)

[நெடுமுதல் குறுகாதமொழிகள் தம், நம், நும் என்னுஞ்சாரியை யிடைச்சொற் கள். ஆன் என்பது இடைச்சொல். அ என்பது அசை.] சாரியை

௱௯௨. நும்மெ னிறுதியு மந்நிலை திரியாது.

இதுவும் அது.

இ-ள் :—நும் என் இறுதியும் அ நிலை திரியாது-நும் என்னும் மகரவிறுதி மேற்கூறிய ஈறாகுபுள்ளி அகரமொடு நிலையலும் குற்றொற்றிரட்டாமையுமாகிய அந்நிலைமையில் திரியாது.

உ-ம். நுமக்கு, நுமது என வரும். (உ0)

௱௯௩. உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமு முயிரும் வருவழி யியற்கை.

இது, புள்ளிமயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிச்செய்கை கூறுதல் நுத லிற்று.

இ-ள் :—உகரமொடு புணரும் புள்ளி இறுதி-உகரப்பேற்றோடு புணரும் புள்ளி யிறுதிகள், யகரமும் உயிரும் வருவழி இயற்கை-யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ்வுகரம் பெறாது இயல்பாய்முடியும்.

உ-ம். உரிஞ்யாறு, உரிஞ் அனந்தா; பொருந் யாறு, பொருந் அனந்தா; உரிஞ் ஆதா, பொருந் ஆதர் என ஒட்டுக. (உ௧)

௱௬௪. உயிரும் புள்ளியு மிறுதி யாகி
அளவு நிறையு மெண்ணுஞ் சுட்டி
உளவெனப் பட்ட வெல்லாச் சொல்லுந்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப வேயென் சாரியை.

இஃது, அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் தம்மிற் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயிரும் புள்ளியும் இறுதியாகி அளவும் நிறையும் எண்ணும் சுட்டி உள எனப்பட்ட எல்லா சொல்லும்-உயிரும் புள்ளியும் ஈறாய் அளவையும் நிறையையும் எண்ணையும் கருதி உளவென்று சொல்லப்பட்ட எல்லாச்சொற்களும், தம் தம் கிளவி தம் அகப்பட்ட முத்தை வரும் காலம் தோன்றின் ஏ என் சாரியை ஒத்தது என்ப-தமக்கு இனமாகிய சொற்களாகிய தமக்கு அகப்படும் மொழியாயுள்ளன தம்முன்னே வரும் காலம் தோன்றுமாயின் ஏ என்னுஞ்சாரியை பெற்று முடிதலை பொருந்திற்று என்ப.

உ-ம். உழக்கேயாழாக்கு, கலனேபதக்கு என இவை அளவுப்பெயர். தொடியேகஃசு, கொள்ளேஐயவி என இவை நிறைப்பெயர். காணியேமுந்திரிகை, காலேகாணி என இவை எண்ணுப்பெயர்.

உயிரீறு புள்ளியீறு என்றதனானே, ஏ என்சாரியை பெறாதனவும் உளவென்று கொள்க. குறுணி நானாழி எனவரும். (௨௨)

௱௬௫. அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றாற் சாரியை யியற்கை.

இஃது, எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள் :—அரை என வரும் பால் வரை கிளவிக்கு புரைவது அன்று சாரியை இயற்கை-அரை என்றுசொல்ல வருகின்ற பொருட்கூற்றை யுணரநின்ற சொல்லிற்குப் பொருந்துவ தன்று மேற்கூறிய ஏ என் சாரியை பெறும் இயல்பு.

உ-ம். உழக்கரை, தொடியரை, ஒன்றரை எனவரும்.

இஃது "ஒட்டுதற் கொழுகிய வழக்கு" [புணரியல்-௩௰] அன்று என்றதனான் விலக்குண்ணாதோவெனில், 'தம்மகப்பட்ட' என்று வருமொழியையும் வரைந்தோதினமையின் இதற்கு அவ்விதிசெல்லாதென்பது. [ஆல் என்பது அசை.] (௨௩)

௱௬௬. குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிதுவிதி உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—குறை என் கிளவி முன் வருகாலை-குறை என்னும் சொல் அளவுமுதலியவற்றின்முன் வருங்காலத்து, நிறைய தோன்றும் வேற்றுமை இயற்கை-நிறையத் தோன்றும் மேல் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிமுடிபிற்குச் சொல்லும் இயல்பு.

உ-ம். உரிக்குறை, கலக்குறை, தொடிக்குறை, கொட்குறை, காணிக்குறை, காற்குறை எனவரும்.

'முன்' என்றதனான், பொருட்பெயரோடு புணரும்வழியும் வேற்றுமைமுடிபு எய்துகவென்பது. கலப்பயறு எனவரும்.

'நிறைய' என்பதனால், கூறு என்பதன்கண்ணும் வேற்றுமை முடிபு எய்துமென்பது. நாழிக்கூறு எனவரும். (உச)

௱௬௭. குற்றிய லுகரக் கின்னே சாரியை.

இது, வேற்றுமைமுடிபு விலக்கி இன் வருத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—குற்றியலுகரத்திற்கு-குற்றுகரவீற்று அளவுப்பெயர் முதலியவற்றிற்கு, சாரியை இன்-(குறையொடுபுணரும்வழி வரும்) சாரியை இன்.

உ-ம். உழக்கின் குறை, கழஞ்சின் குறை, ஒன்றின்குறை எனவரும்.

['குற்றியலுகரத்திற்கு' என்பது 'குற்றியலுகரக்கு' என விகாரப்பட்டு நின்றது. அஃது ஆகுபெயர், அவ்வீற்று அளவுப்பெயர் முதலியவற்றிற்கு ஆயினமையின். ஏகாரம் அசை.] (உரு)

௱௬௮. அத்திடை வரூஉங் கலமென் னளவே.

இதுவும் அது.

இ-ள் :—கலம் என் அளவு இடை அத்து வரும்-கலம் என்னும் அளவுப்பெயர் (குறை யொடு புணரும்வழி) இடையில் அத்து வரும்.

உ-ம். கலத்துக்குறை எனவரும்.

இது 'கலன்' என்னும் னகரவீறேல், நிலைமொழி ஒற்றுக்கேடும் வருமொழி ஒற்றுப்பேறும் "அத்தே வற்றே" [புணரியல்-௩௧] என்பதனாற் கொள்ளப்படும். 'கலனளவு' என ஓதாதது செய்யுளின்பம் நோக்கிப்போலும். சாரியை முற்கூறிய வதனான், இன்சாரியை பெற்றவழி முன் மாட்டேற்றான் எய்திய வல்லெழுத்து வீழ்க்க. (உசு)

௱௬௯. பனையி னளவுங் காவி னிறையும்
நிறையுங் காலை யின்னொடு சிவணும்.

இதுவும் அது.

இ-ள் :—பனை என் அளவும் கா என் நிறையும்-பனை என்னும் அளவுப்பெயரும் கா என்னும் நிறைப்பெயரும், நினையும் காலை இன்னொடு சிவணும்-(குறை என்பதனொடு புணருமிடத்து) ஆராயுங்காலத்து இன்சாரியையொடு பொருந்தும்.

உ-ம். பனையின்குறை, காவின்குறை எனவரும்.

'நினையுங் காலை' என்றதனான், வல்லெழுத்துப்பேறும் சிறுபான்மை கொள்க. பனைக்குறை, காக்குறை எனவரும். (உஎ)

௱௭௰. அளவிற்கு நிறையிற்கு மொழிமுத லாகி
உளவெனப் பட்ட வொன்பதிற் றெழுத்தே
அவைதாம்
க ச த ப வென்று ந ம வ வென்று
அகர உகரமோ டவையென மொழிப.

இஃது, அளவுப்பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் முதலாம் எழுத்திற்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி உள எனப்பட்ட ஒன்பதிற்று எழுத்து-அளவுப்பெயர்க்கும் நிறைப்பெயர்க்கும் மொழிமுதலாய் உளவென்று சொல்லப்பட்டன ஒன்பதெழுத்து. அவைதாம்-அவை (யாவையோவெனின்), க ச த ப என்று ந ம வ என்று அகரமொடு உகரமொடு அவை என மொழிப-க ச த பக்களும் ந ம வக்களும் அகரமும் உகரமு மாகிய அவை என்று சொல்லுவர்.

உ-ம். கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு எனவும்; கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, இம்மி எனவும் வரும்.

'உளவெனப் பட்ட' என்றதனான், உளவெனப்படாதனவும் அளவை உளவென்பது. ஓரடை, ஒராடை எனவரும்.

மற்று இவ்வரையறை கூறிப் பயந்தது என்னையெனின், மேல் அகத்தோத்தினுள் அவற்றிற்கு முடிபுகூறும்வழி, அதிகாரத்தான் வன்கணத்தும், மேற்சொல்லாதொழிந்தகணத்தினும் சேறற்கு என்பது. (உஅ)

['அகரமொடு' என்பது ஒடு கெட்டு நின்றது. 'என்று' என்பன இரண்டும், 'ஒடு' என்பன இரண்டும் எண்ணிடைச்சொல். ஏகாரம் ஈற்றசை.]

௱௭௧. ஈறியல் மருங்கி னிவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை யுரிய புணர்மொழி நிலையே.

இஃது, இவ்வோத்துப் புறநடை.

இ-ள் :—ஈறு இயல் மருங்கின்-உயிரும் புள்ளியும் இறுதியானவை வருமொழியொடு கூடி நடக்குமிடத்து, இவை இவற்று இயல்பு என கூறிய கிளவிப் பல் ஆறு எல்லாம்-இம்மொழிகளின்முடிபு இவற்றின் இயல்பெனக் கூறி முடிக்கப்பட்ட சொற்களினது (அவ்வாற்றான் முடியாதுநின்ற) பலவகை முடிபுகளெல்லாம், மெய் தலைப்பட்ட வழக்கொடு சிவணி ஒத்தவை உரிய புணர்மொழிநிலை-உண்மையைத்தலைப்பட்ட வழக்கொடு கூடிப் பொருந்தினவை உரியவாம் புணரும் மொழிகள்நிலைமைக்கண்.

உ-ம். விள ஞான்றது என்புழி நிலைமொழிப் பெயரது இயல்பும், ஞான்ற ஞாயிறு என நிலைமொழிவினையாயவழி இருமொழி இயல்புமாகிய "ஞ ந ம ய வ" [தொகை-உ] என்பதன் ஒழிபும், மண் கடிது என்புழி வருமொழி வன்கணத்து இயல்பாகிய "மொழிமுதலாகும்" [தொகை-ரு] என்பதன் ஒழிபும், நட ஞெள்ளா

என்னும் இயல்புகணத்து இருமொழி இயல்பும், நில்கொற்றா என்புழி நில்கொற்றா, நிற்கொற்றா என நிலைமொழிதிரிந்த உறழ்ச்சியும், துக்கொற்றா, துஞ்ஞெள்ளா என்னும் மிகுதியும், உரிஞ்ஞெள்ளா என்னும் இயல்புகணத்து உரிஞுஞெள்ளா என உகரப்பேறும், உரிஞ்யாறு, உரிஞ் அனந்தா என்னும் இருமொழி இயல்பும், மண்ணு கொற்றா, மண்ணுக்கொற்றா, மண்ணுஞெள்ளா எனவரும் ("ஔவென வருஉம்" [தொகை-ம] என்பதனுள் விலக்கப்படாத) ணகர னகர ளகர லகரமாகிய புள்ளியிறுதிகளின் நிலைமொழிஉகரப்பேறுமாகிய "உயிர் ருகிய முன்னிலைக் கிளவி" [தொகை-கூ] என்பதன் ஒழிபும், விரவுப்பெயர்த்திரிபின்மேல் எடுத்து ஓதப்படாதனவாய சின்னாண் என்றாற்போலவரும் "அஃறிணை விரவுப்பெயர்" [தொகை-மக] என்பதன் ஒழிபும், காவிக்கண், குவளைக்கண் என்றாற்போல அல்வழிமுடிபாகிய "வேற்றுமை யல்வழி" [தொகை-கஙு] என்பதன் ஒழிபும், குறுணி பதக்குநாழி, சீரகரை, ஒருமாவரை என்னும் "உயிரும் புள்ளியு மிறுதி யாகி" [குற்றியலுகரப் புணரியல்-எகூ] என்பதன் ஒழிபும், பிறவற்றின் ஒழிபுமெல்லாம் ஈண்டேகொள்க. (உக)

> ௩௭உ. பலரறி சொன்முன் யாவ ரென்னும்
> பெயரிடை வகரங் கெடுதலும் மேனை
> ஒன்றறி சொன்முன் யாதென் வினாவிடை
> ஒன்றிய வகரம் வருதலு மிரண்டும்
> மருவின் பாத்திபிற் றிரியுமன் பயின்றே.

இது, மருஉமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—பலர் அறி சொல்முன் யாவர் என்னும் பெயரிடை வகரம் கெடுதலும்-பலரை அறியும் சொல்முன்னர் வருகின்ற யாவர் என்னும் பெயரிடையில் வகரம் கெடுதலும், ஏனை ஒன்று அறி சொல்முன் யாது என் வினா இடை ஒன்றிய வகரம் வருதலும்-ஒழிந்த ஒன்றனை அறியும் சொல்முன்னர்வரும் யாதுஎன்னும் வினாமொழியிடை உயிரொடுபொருந்திய வகரம் வருதலும், இரண்டும் மருவின் பாத்தியில் பயின்று திரியும்-இரண்டும் மருஉக்களது முடிபினிடத்துப் பயின்று வழங்கும்.

உ-ம். அவர்யார் எனவும், அதுயாவது எனவும் வரும்.

'ஒன்றிய' என்றதனான், வகரஉயிர்மெய் என்றுகொள்க. இன்னும் அதனானே, யாரென்பதும் யாவதென்பதும் நிலைமொழியாய்ப் பிறவருமொழியொடு புணரும் வழியும் இம்முடிபுகொள்க. "யார்யார்க்கண்டேயுவப்பர்" எனவும், "யாவதுநன் றெனவுணரார்மாட்டும்" எனவும்வரும்.

'பயின்று' என்றதனால், பலரறிசொல்லும் ஒன்றறிசொல்லும் வருமொழியாய வழியும் இம்முடிபுகொள்ளப்படும். யாரவர், யாவதது எனவரும். (கூம)

ஐந்தாவது தொகைமரபு முற்றிற்று.

ஆறாவது - உருபியல்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உருபுகளொடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின், உருபியல் என்னும் பெயர்த்து. மேல் தொகுத்துப் புணர்த்த செய்கை ஈண்டுகின்றும் விரித்துப்புணர்க்கின்றாராகலின், தொகைமரபினோடு இயைபு உடைத்தாயிற்று.

௱௭௩. அ ஆ உ ஊ ஏ ஔ வென்னும்
அப்பா லாறனிலைமொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை.

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின் அகர ஆகார உகர ஊகார ஏகார ஔகார ஈறுகள் உருபினொடு புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—அ ஆ உ ஊ எ ஔ என்னும் அப்பால் ஆறன் நிலைமொழிமுன்னர்-அ ஆ உ ஊ எ ஔ என்றுசொல்லப்படுகின்ற அக்கூற்று ஆறனையும் ஈறாகவுடைய நிலைமொழிகளின்முன்னர், வேற்றுமை உருபிற்கு சாரியை இன்-வேற்றுமையுருபுகள் வருமொழியாய்வந்த நிலைமைக்கு இடைவரும் சாரியை இன்சாரியை.

உ-ம். விளவினை, விளவினொடு, விளவிற்கு, விளவின், விளவினது, விளவின்கண் எனவும்; பலாவினை, பலாவினொடு எனவும்; கடுவினை, கடுவினொடு எனவும்; கழூஉவினை, கழூஉவினொடு எனவும்; சேவினை, சேவினொடு எனவும்; வௌவினை, வௌவினொடு எனவும் கருவி அறிந்து ஒட்டுக. (௧)

௱௭௪. பல்லவை நுதலிய வகர விறுபெயர்
வற்றொடு சிவண லெச்ச மின்றே.

இது, மேற்கூறிய ஈற்றுள் அகரவீற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—பல்லவை நுதலிய பெயர் இறு அகரம்-பன்மைப்பொருளைக் கருதின பெயர்களின் இறுதி அகரம், வற்றொடு சிவணல் எச்சம் இன்று-வற்றுச்சாரியையொடு பொருந்துதலை ஒழிதல் இல்லை.

உ-ம். பல்லவற்றை, பல்லவற்றொடு; உள்ளவற்றை, உள்ளவற்றொடு; இல்லவற்றை, இல்லவற்றொடு; சில்லவற்றை, சில்லவற்றொடு என ஒட்டுக.

'எச்சமின்று' என்றதனான், ஈண்டும் உருபு இன் சாரியைபெற்றே முடியுமென்று கொள்க. இன்னும் இதனானே மேல் இன்பெற்றன பிற சாரியையும் பெறுமெனக் கொள்க. மகத்தை, நிலத்தை எனவரும். (௨)

௱௭௫. யாவென் வினவு மாயிய றிரியாது.

இஃது ஆகாரவீற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

யா என் வினவும் ஆ இயல் திரியாது-யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று வினாப்பெயரும் மேற்கூறப்பட்ட வற்றுப்பெறும் அவ்வியல்பில் திரியாது.

உ-ம். யாவற்றை, யாவற்றொடு என ஒட்டுக. (௩)

௱௭௬. சுட்டுமுத லுகர மன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே.

இஃது, உகரவீற்றுட் சிலமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டு முதல் உகரம் அன்னொடு சிவணி-சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகரவீற்றுச்சொல் அன்சாரியையொடு பொருந்தி, ஒட்டிய மெய் ஒழித்து உகரம் கெடும்-தான் பொருந்திய மெய்யை ஒழித்து உகரம் கெடும்.

உ-ம். அதனை, அதனொடு; இதனை, இதனொடு; உதனை, உதனொடு என ஒட்டுக.

௱௭௭. சுட்டுமுத லாகிய ஐயெ னிறுதி
வற்றொடு சிவணி நிற்றலு முரித்தே.

இஃது, ஐகாரவீற்றுட் சிலமொழிக்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்:—சுட்டு முதலாகிய ஐ என் இறுதி-சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச்சொல், வற்றொடு சிவணி நிற்றலும் உரித்து-வற்றுச்சாரியையொடு பொருந்தி அவ்வீற்றைகாரம் நிற்றலு முரித்து; (நில்லாமையு முரித்து).

உ-ம். அவையற்றை, அவையற்றொடு; இவையற்றை, இவையற்றொடு; உவையற்றை, உவையற்றொடு என ஒட்டுக.

ஐகாரம் கெட்டவழி, நின்ற வகரத்தினை வற்றின்மிசை ஒற்றென்று கெடுத்து அவற்றை, அவற்றொடு; இவற்றை, இவற்றொடு; உவற்றை, உவற்றொடு என ஒட்டுக.

மற்று இம்முடிபு சுட்டுமுதல் வகர வீற்றோடு ஒத்தமையின், ஆண்டு இது கூறல் மிகைபடக்கூறலாம் பிற எனின், அஃது ஒக்கும்; இவ்வாறு கூறுவன மேலும் உள; இவற்றிற்கெல்லாம் ஆசிரியன் கருத்து அறிந்துகொள்ளப்படு மென்பது. (௯)

௱௭௮. யாவென் வினாவி னையெ னிறுதியும்
ஆயிய றிரியா தென்மனார் புலவர்
ஆவயின் வகர மையொடுங் கெடுமே.

இதுவும் அது.

இ-ள் :—யா என் வினாவின் ஐ என் இறுதியும்-யா என்னும் வினாவினையுடைய ஐகாரவீற்றுச்சொல்லும், அ இயல் திரியாது என்மனார் புலவர்-மேற்கூறிய சுட்டுமுதல் ஐகாரம்போல வற்றுப்பெறும் அவ்வியல்பில் திரியாதென்றுசொல்லுவர் புலவர்; அவயின் வகரம் ஐயொடும் கெடும்-அவ்விடத்து வகரம் ஐகாரத்தொடுங்கூடக் கெடும்.

உ-ம். யாவற்றை, யாவற்றொடு என ஒட்டுக.

வகரம் வற்றின்மிசை ஒற்றென்று கெடுவதனை, ஆண்டுக் கேடோதியவதனால் பிற ஐகாரமும் வற்றுப்பெறுதல் கொள்க. கரியவற்றை, செய்யவற்றை எனவரும்.

௱௭௯. நீயெ னொருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயி னகர மொற்றா கும்மே.

இஃது, ஈகாரவீற்றுள் ஒருமொழிக்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—நீ என் ஒரு பெயர் நெடுமுதல் குறுகும்-நீ என்னும் ஒரு பெயர் நெடிதாகிய முதல் குறுகும்; அவயின் னகரம் ஒற்றாகும்-அவ்விடத்துவரும் னகரம் ஒற்றாகும்.

உ-ம். நின்னை, நின்னொடு என ஒட்டுக.

'ஒரு பெயர்' என்றது, நின் என்பதும் வேறொரு பெயர்போறலை விலக்கிற்று. பெயர்குறுகும் என்னாது முதல்குறுகும் என்றது, அப்பெயரின் நெட்டெழுத்து நிலையது அக்குறுக்க மென்றற் கென்பது. நெடுமுதல் என்றது அம்மொழிமுதலின் நகரம் குறுகுதலை விலக்கிற்று. ஈண்டு, உயிர்மெய்யொற்றுமைபற்றி நெடியது முதலாயிற்று. சாரியைப்பேற்றிடை எழுத்துப்பேறு கூறியது, மூன்றாம் உருபின்கண் சாரியைபெற்றே வந்த அதிகாரம் மாற்றி நின்றது. (௭)

௱௮௰. ஓகார விறுதிக் கொன்னே சாரியை.

இஃது, ஓகாரவீறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஓகார இறுதிக்கு சாரியை ஒன்-ஓகாரவீற்றுக்கு இடைவரும் சாரியை ஒன் சாரியை.

உ-ம். கோஒனை, கோஒனொடு என ஒட்டுக. (௮)

௱௮௧. அ ஆ வென்னு மரப்பெயர்க் கிளவிக்
கத்தொடுஞ் சிவணு மேழ னுருபே.

இஃது, அகர ஆகாரவீற்றுட் சிலமொழிக்கு, உருபின்கண் எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு-அ ஆ என்று சொல்லப்படும் மரத்தை உணரநின்ற பெயராகிய சொற்கு, அத்தொடும் சிவணும் ஏழன் உருபு-முன் கூறிய இன்னோடன்றி அத்தொடும் பொருந்தும் ஏழாம் உருபு.

உ-ம். விளவத்துக்கண், பலாவத்துக்கண் எனவரும். (௯)

௱௮௨. ஞ ந வென் புள்ளிக் கின்னே சாரியை.

இது, புள்ளியீற்றுள் ஞகாரவீறும் நகாரவீறும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஞ ந என் புள்ளிக்கு இன்சாரியை-ஞ ந என்று சொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்கு வரும்சாரியை இன்சாரியை.

உ-ம். உரிஞினை, உரிஞினொடு; பொருநினை, பொருநினொடு என ஒட்டுக [ஏகாரம் அசை.] (௰)

௱௮௩. சுட்டுமுதல் வகர மையு மெய்யும்
கெட்ட விறுதி யியற்றிரி பின்றே.

இது, வகரவீறு நான்கனுள்ளும் சுட்டுமுதல் வகரவீற்றிற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டுமுதல் வகரம்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகாரவீற்றுச் சொல், ஐயும் மெய்யும் கெட்ட இறுதி இயல் திரிபு இன்று-ஐகாரமும் அதனாற் பற்றப்பட்ட மெய்யும் கெட்டு வற்றுப்பெற்று முடிந்த சுட்டுமுதல் ஐகாரவீற்றியல்பில் திரிபின்றி வற்றுப்பெற்று முடியும்.

உ-ம். அவற்றை, அவற்றொடு; இவற்றை, இவற்றொடு; உவற்றை, உவற்றொடு என ஒட்டுக. (கக)

ா அசு. ஏனை வகர மின்னொடு சிவணும்.

இது, வகரவீற்றுள் ஒழிந்த வகரவீற்றிற்கு முடிவுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஏனை வகரம் இன்னொடு சிவணும்-ஒழிந்த வகரவீறு இன் சாரியை யொடு பொருந்தி முடியும்.

உ-ம். தெவ்வினை, தெவ்வினொடு என ஒட்டுக.

மற்று இது உரிச்சொலன்றோவெனின், உரிச்சொல்லேயெனினும் படுத்தலோசையாற் பெயராயிற்றெனக் கொள்க. (கஉ)

ா அரு. மஃகான் புள்ளிமு னத்தே சாரியை.

இது, மகரவீறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மஃகான் புள்ளிமுன் அத்து சாரியை-மகரமாகிய புள்ளியீற்றுச் சொல்முன் வருஞ்சாரியை அத்துச் சாரியை.

உ-ம். மரத்தை, மரத்தொடு எனவரும். (கங)

ா அசு. இன்னிடை வரூஉ மொழியுமா ருளவே.

இது, மகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—இன் இடைவரும் மொழியும் உள-மகரவீறு அத்துச்சாரியை யொழிய இன்சாரியை இடைவந்து முடியும் மொழிகளும் உள.

உ-ம். உருமினை, உருமினொடு என ஒட்டுக.

[ஆர் என்பது அசை. ஏகாரம் ஈற்றசை.] (கச)

ா அஎ. நும்மெ னிறுதி யியற்கை யாகும்.

இது, மகரவீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—நும் என் இறுதி இயற்கை ஆகும்-நும் என்னும் மகரவீறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறாது இயல்பாய் முடியும்.

உ-ம். நும்மை, நும்மொடு என ஒட்டுக. (கரு)

ா அஅ. தாம்நா மென்னு மகர விறுதியும்
யாமெ னிறுதியு மதனோ ரன்ன
ஆ எ ஆகும் யாமெ னிறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டு நெடுமுதல் குறுகும்.

இது, மகரவீற்றுள் முன்கூறிய முடிபு ஒவ்வாதனவற்றிற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாம் என் இறுதியும் அதன் ஓர் அன்ன-தாம் நாம் என்று சொல்லப்படும் மகரவீறும் யாம் என்னும் மகரவீறும் மேற்கூறிய நும் என்னும் மகரவீறுபோல அத்தும் இன்னும் பெறுது முடிதலையுடையவாம். யாம் என் இறுதி ஆ எ ஆகும்-யாம் என்னும் மகரவீற்றுமொழி ஆகாரம் எகரமாம்; அ வயின் யகரமெய் கெடுதல் வேண்டும்-அவ்விடத்து யகரமாகியமெய் கெடுதல்வேண்டும். ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்-ஒழிந்த இரண்டும் நெடியவாகிய முதல் குறுகிநின்று முடியும்.

உ-ம். தம்மை, தம்மொடு; நம்மை, நம்மொடு; எம்மை, எம்மொடு என ஒட்டுக.

'அவயின்மெய்'என்றதனுல், பிறவயின்மெய்யும் கெடுமெனக்கொள்க. தங்கண், நங்கண், எங்கண் எனவரும். (கசு)

௩அ௬. எல்லா மென்னு மிறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையு மிறுதி யான.

இது, மகரவீற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—எல்லாம் என்னும் இறுதிமுன்னர்-எல்லாம் என்னும் மகரவீற்றுச சொல்லின்முன்பு, வற்று என் சாரியை முற்ற தோன்றும்-மேற்கூறிய அத்தும் இன்னுமன்றி வற்று என்னும் சாரியை முடியத்தோன்றி முடியும், உம்மை நிலையும் இறுதியான்-உம் என்னும் சாரியை நிலைபெறும் இறுதிக்கண்.

உ-ம். எல்லாவற்றையும், எல்லாவற்றொடும் என ஒட்டுக.

'முற்ற' என்றதனுன், மூன்றும் உருபின்கண்ணும் நான்காம் உருபின்கண்ணும் ஆறும் உருபின்கண்ணும் உம்மின் உகரக்கேடு கொள்க. ['இறுதியான்' என்பது வேற்றுமை மயக்கம். அகரம் சாரியை.] (கஎ)

௩அ௭. உயர்திணை யாயி னம்மிடை வருமே.

இதுவும் அது.

இ-ள் :—உயர்திணையாயின் நம் இடை வரும்-எல்லாம் என்னும் விரவுப்பெயர் அஃறிணைப்பெயரன்றி உயர்திணைப்பெயராய் நிற்குமாயின், நம் இடைவரும்-நம் என்னும் சாரியை இடைவந்து புணரும்.

நிலைமொழியொற்றும் மேல் 'வற்று மிசையொற்று' என்று கெட்டுநின்ற அதிகாரத்தாற் கெடுக்க. இன்னும் அதனுனே உம்முப்பெறுதலும், அதன்கண் உகரம் சில உருபின்கண் கெடுதலும் கொள்க.

உ-ம். எல்லாநம்மையும், எல்லாநம்மொடும் என ஒட்டுக. (கஅ)

௩அ௮. எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரு மென்னு முன்னிலை யிறுதியும்
ஒற்று முகரமுங் கெடுமென மொழிப

நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையு மிறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉ முன்னிலை மொழிக்கே.

இது, மகரவீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும் எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்-எல்லாரும் என்றுசொல்லப்படும் படர்க்கையிடத்து மகரவீற்றுச் சொல்லும் எல்லீரும் என்றுசொல்லப்படும் முன்னிலையிடத்து மகரவீற்றுச்சொல்லும், ஒற்றும் உகரமும் கெடும் என மொழிப-இவற்றின்மகரவொற்றும் அதன்முன் நின்ற உகரமும் கெட்டுமுடியு மென்றுசொல்லுவர். ரகரப்புள்ளி நிற்றல் வேண்டும்-அவ்வுகரம் கெடுவழி அதனால் ஊரப்பட்ட ரகரப்புள்ளி கெடாது நிற்றல்வேண்டும்; இறுதியான் உம்மை நிலையும்-அவ்விருமொழிக்கும் இறுதிக்கண் உம் என்னும் சாரியை நிலைபெறும். படர்க்கைமேல் தம் இடைவரும்-படர்க்கையிடத்துத் தம்முச்சாரியை இடைவரும்; முன்னிலைமொழிக்கு நும் இடைவரும்-முன்னிலை மொழிக்கு நும்முச்சாரியை இடைவரும்.

உ-ம். எல்லார்தம்மையும், எல்லார்தம்மொடும்; எல்லீர்நும்மையும், எல்லீர்நும்மொடும் என ஒட்டுக.

'படர்க்கை' 'முன்னிலை' என்ற மிகுதியான், மகரவீற்றுத் தன்மைப் பெயரிடைக்கண் நம்முச்சாரியையும், ஈற்றுக்கண் உம்முச்சாரியையும் பெற்றுமுடிவன கொள்க. கரியேநம்மையும், கரியேநம்மொடும் என ஒட்டுக.

படர்க்கைப்பெயர் முற்கூறியவதனால், ரகாரவீற்றுப் படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் இறுதிக்கண் உம்மொடு தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் பெற்று முடிவனகொள்க. கரியார் தம்மையும், சான்றீர் நும்மையும் என ஒட்டுக. உகரமும் ஒற்றும் என்னாது முறையன்றிக் கூறினான், அம்மூன்று உருபின்கண் உம்மின் உகரக்கேடு எடுத்தோதியவற்றிற்கும் இலேசினாற் கொண்டவற்றிற்கும் கொள்க. [மேல் என்பது மேன் எனத் திரிந்து அகரச்சாரியை ஏற்றுநின்றது.] ()

ா௬௨. தான்யா னென்னு மாயீ ரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே.

இது, னகரவீற்றுட் சிலவற்றிற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—தான் யான் என்னும் அ இரு இறுதியும்-தான் யான் என்றுசொல்லப்படும் அவ்விரண்டு னகரவீறும், மேல் முப்பெயரொடும் வேறுபாடு இல-மேல்மகரவீற்றுட்சொல்லப்பட்ட மூன்றுபெயரொடும் வேறுபாடின்றித் தானென்பது நெடுமுதல்குறுகியும் யான் என்பதன்கண் ஆகாரம் எகாரமாய் யகரங்கெட்டும் முடியும்.

உ-ம். தன்னை, தன்னொடு; என்னை, என்னொடு என ஒட்டுக.

['இரு' என்பது தன்முன்னர் உயிர்வந்தமையால் 'ஈர்' என்றாயிற்று. அகரச சுட்டு நீண்டு யகர உடம்படுமெய் பெற்றது. ஏகாரம் ஈற்றசை.] (உ௰)

௱கூ௩. அழனே புழனே யாயிரு மொழிக்கும்
அத்து மின்னு முறழத் தோன்றல்
ஒத்த தென்ப வுணரு மோரே.

இதுவும் அது.

இ-ள் :—அழன் புழன் அ இரு மொழிக்கும்-அழன் புழனுகிய அவ்விருமொழிக்கும், அத்தும் இன்னும் உறழ தோன்றல் ஒத்தது என்ப உணருமோர்-அத்துச்சாரியையும் இன்சாரியையும் மாறிவரத்தோன்றுதலைப் பொருந்திற்றென்ப உணருவோர்.

உ-ம். அழத்தை, அழத்தொடு; அழனினை, அழனிெனுடு; புழத்தை, புழத்தொடு; புழனினை, புழனிெனுடு என ஒட்டுக.

'தோன்றல்' என்றதனுன், எவன் என்றும், என் என்றும் நிறுத்தி, வற்றுக்கொடுத்து வேண்டும் செய்கைசெய்து எவற்றை, எவற்றெடு எனவும், எற்றை, எற்றெடு எனவும் முடிக்க.

'ஒத்தது' என்றதனுல், எகின் எனநிறுத்தி, அத்தும் இன்னும் கொடுத்துச் செய்கைசெய்து எகினத்தை, எகினத்தொடு எனவும், எகினினை, எகினினெடு எனவும் முடிக்க.

அத்து முற்கூறியவதனுன், அத்துப் பெற்றவழி இனிது இசைக்குமெனக் கொள்க.

[அழன்-பிணம். முன் ஏகாரம் இரண்டும் எண்ணிடைச்சொல். பின் ஏகாரம் ஈற்றசை. 'உணருமோர்' என்பது தொல்லைவழக்கு.] (உக)

௱கூ௪. அன்னென் சாரியை யேழ னிறுதி
முன்னர்த் தோன்று மியற்கைத் தென்ப.

இது, ழகாரவீற்று ஒருமொழிக்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அன் என் சாரியை ஏழன் இறுதிமுன்னர் தோன்றும் இயற்கைத்து என்ப-அன் என்னும் சாரியை ஏழென்னும் சொல்லிறுதியின்முன்னே தோன்றும் இயல்பினை யுடைத்தென்று சொல்லுவர்.

உ-ம். ஏழனை, ஏழனெடு என ஒட்டுக.

சாரியை முற்கூறியவதனுல், பிறவும் அன்பெறுவனகொள்க. பூழனை, பூழனெடு; யாழனை, யாழனெடு என ஒட்டுக. (உஉ)

௱கூ௫. குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்று மின்னென் சாரியை.

இது, குற்றியலுகர ஈற்றிற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—குற்றியலுகரத்து இறுதிமுன்னர் முற்ற தோன்றும் இன் என் சாரியை-குற்றியலுகரமாகிய ஈற்றின்முன்னர் முடியத்தோன்றும் இன் என்சாரியை.

உ-ம். வரகினை, வரகினெடு; நாகினை, நாகினெடு என ஒட்டுக.

'முற்ற' என்றதனால், பிறசாரியை பெறுவனவும்கொள்க. வழக்கத்தாற் பாட்டாராய்ந்தான், கரியதனை, கரியதனொடு எனவரும். (உரு)

ஈகசு. நெட்டெழுத் திம்ப ரொற்றுமிகத் தோன்றும்
அப்பான் மொழிக ளல்வழி யான.

இஃது, அவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள் :—நெட்டெழுத்து இம்பர் ஒற்று மிகத்தோன்றும்-நெட்டெழுத்தின்பின்னாக (இடை) இனவொற்று மிகத்தோன்றும், அப்பால் மொழிகள் அல்வழியான்-அக்கூற்றுமொழிகள் அல்லாத இடத்தின்கண்ணே.

அவ்வீறு இன்சாரியை பெறுவது ஆண்டாயின் பெறாது.

உ-ம். யாட்டை, யாட்டொடு எனவரும்.

அப்பான்மொழிகளாவன க ச த ப க்கள். இவை இனவொற்றுமிகாவென்று கொள்க.

'தோன்றும்' என்றதனான், உயிர்த்தொடர்மொழியும் இன்பெறாது இனவொற்று மிகுதல்கொள்க. முயிற்றை, முயிற்றொடு எனவரும். (உசு)

ஈகஎ. அவைதாம்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இது, மேற் சாரியை விலக்கப்பட்டவற்றிற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அவைதாம்-மேற் சாரியை பெறாவென விலக்கப்பட்ட அவைதாம், இயற்கையவாகும் செயற்கைய என்ப-இயல்பாய்முடிதலையுடையவாகும் செய்கையையுடைய வென்றுசொல்லுவர்.

உ-ம். யாட்டை, யாட்டொடு என ஒட்டுக.

'செயற்கைய' என்றதனான், இனவொற்றுமிக்கன சிறுபான்மை இன்பெறுதலும்கொள்க. யாட்டினை, யாட்டினொடு; முயிற்றினை, முயிற்றினொடு எனவரும். (உஎ)

ஈகஅ. எண்ணி னிறுதி யன்னொடு சிவணும்.

இஃது, அவ்வீற்று எண்ணுப்பெயர் முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—எண்ணின் இறுதி அன்னொடு சிவணும் - எண்ணுப்பெயர்களினது குற்றுகரவீறு அன்சாரியையொடு பொருந்தும்.

உ-ம். ஒன்றனை, ஒன்றனொடு; இரண்டனை, இரண்டனொடு என ஒட்டுக. (உஅ)

ஈகக. ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா வெண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினு மான மில்லை
அஃதென் கிளவி யாவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.

இதுவும் அது.

இ-ள் :—ஒன்று முதலாக பத்து ஊர்ந்து வரும் எல்லா எண்ணும்-ஒன்று என்னும் எண்ணுப்பெயர் முதலாகப் பத்து என்னும் எண்ணுப்பெயரால் ஊரப்பட்டுவரும் எல்லா எண்ணுப்பெயர்களும், சொல்லுங்காலை-முடிபுசொல்லுங்காலத்து, ஆன் இடைவரினும் மானம் இல்லை-அவ்வீற்றிற்கு மேற்கூறிய அன்னேயன்றி ஆன்சாரியை இடைவரினும் குற்றமில்லை. அ வயின் அஃது என் கிளவி கெடும்-அவ்வான் சாரியை பெற்றவழி அஃது என்னும் சொல்கெடும். பஃகான்மெய் உய்தல்வேண்டும்-அதுகெடுவழி அவ்வகரத்தான் ஊரப்பட்ட பகரமாகியமெய் கெடாது நிற்றல் வேண்டும்.

உ-ம். ஒருபானை, ஒருபானொடு; இருபஃதினை, இருபஃதினொடு என ஒட்டுக. 'சொல்லுங்காலை' என்றதனான், ஒன்பதென்னும் எண்ணுப்பெயரும் ஆன் பெற்று அவ்வீற்றின் அது என்னும் சொற்கெட்டு முடிதல்கொள்க. ஒன்பானை, ஒன்பானொடு என ஒட்டுக. (உஎ)

உஅ. யாதெ னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த விறுதியு மன்னொடு சிவணும்
ஆய்தங் கெடுத லாவயி னான.

இதுவும் அக்குற்றுகரவீற்றுட் சிலவற்றிற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள் :—யாது என் இறுதியும்-யாது எனவரும் குற்றுகர ஈறும், சுட்டுமுதலாகிய ஆய்த இறுதியும்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும், அன் ஒடு சிவணும்-அன்சாரியையொடு பொருந்தும்; அ வயினான் ஆய்தம்கெடுதல்-அவ்விடத்து ஆய்தம் கெடுக.

உ-ம். யாதனை, யாதனொடு; அதனை, அதனொடு; இதனை, இதனொடு; உதனை, உதனொடு என ஒட்டுக. (உஅ)

[அகரச்சுட்டு நீண்டு நின்றது. 'ஆன்' என்பது வேற்றுமை மயக்கம். ஈற்றகரம் சாரியை.]

உகூ. ஏழ னுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி யியற்கையு மாகும்
ஆவயி னிறுதி மெய்யொடுங் கெடுமே.

இதுவும் குற்றுகரவீற்றுட் சிலவற்றிற்கு ஏழாம் உருபொடு முடிவு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஏழன் உருபிற்கு-ஏழாம்வேற்றுமைக்கு, திசைப்பெயர்முன்னர்-திசையை உணரநின்ற பெயர்களின்முன்னர், சாரியைக்கிளவி இயற்கையும் ஆகும்-இவ்வீற்றிற்கு முன்கூறிய இன்சாரியையாகிய சொல் நின்று முடிதலேயன்றி நில்லாது இயல்பாயும் முடியும்; அ வயின் இறுதி மெய்யொடும் கெடும்-இயல்பாயவழிப் பெயர் இறுதிக் குற்றுகரம் தன்னால் ஊரப்பட்ட மெய்யொடும் கெடும்.

உ-ம். வடக்கின்கண், கிழக்கின்கண், தெற்கின்கண், மேற்கின்கண் எனவும், வடக்கண், கிழக்கண், தெற்கண், மேற்கண் எனவும் வரும்.

உருபு முற்கூறியவதனால், கீழ்சார், கீழ்புடை; மேல்சார், மேல்புடை; தென்சார், தென்புடை; வடசார், வடபுடை என இவ்வாறு சாரியை பெறாது திரிந்து முடிவன வெல்லாம் கொள்க. [அகரச்சுட்டு நீண்டு நின்றது. ஏகாரம் ஈற்றசை.] (உகூ)

௨௱௨. புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாம்
தேருங் காலை யுருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே.

இஃது, இவ்வோத்திற்கெல்லாம் புறநடை கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—புள்ளி இறுதியும் உயிர் இறு கிளவியும் சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்-புள்ளியீற்றுச்சொல்லும் உயிரீற்றுச்சொல்லுமென முடிபுசொல்லியவை அல்லாத ஒழிந்தவையெல்லாம், தேரும் காலை-ஆராயுங்காலத்து, உருபொடு சிவணி சாரியை நிலையும் கடப்பாடு இல-உருபுகளொடு பொருந்தி இன் சாரியை நின்று முடியும் முறைமையை யுடையவல்ல. (நின்றும் நில்லாதும் முடியும்.)

புள்ளியீற்றுள் ஒழிந்தன ஐந்து; உயிரீற்றுள் ஒழிந்தது ஒன்று. 'இவையும் எடுத்தோதிய ஈற்றுள் ஒழிந்தனவுமெல்லாம் எண்டுக் கொள்ளப்படும்.

உ-ம். மண்ணினை, மண்ணை. வேயினை, வேயை, நாரினை, நாரை, கல்லினை, கல்லை, முள்ளினை, முள்ளை எனவும்; கிளியினை, கிளியை எனவும்; பொன்னினை, பொன்னை எனவும்; தாழினை, தாழை, தீயினை, தீயை, கழையினை, கழையை எனவும் ஒட்டுக.

புள்ளியீற்றுள் ஒழிந்தன பலவாகலின், அது முற்கூறப்பட்டது. 'தேருங்காலை' என்றதனான், உருபுகள் நிலைமொழியாகநின்று தம்பொருளொடு புணரும்வழி முடியும் முடிபுவேற்றுமையெல்லாம் கொள்க.

மண்ணினைக்கொணர்ந்தான், நம்பியைக்கொணர்ந்தான், கொற்றனைக்கொணர்ந்தான்; மலையொடுபொருதது மால்யானை; மரத்தாற்புடைத்தான்; மரத்துக்குப் போனான்; காக்கையிற்கரிது; காக்கையதுபலி; மரத்துக்கண்கட்டினான் என ஒட்டுக.

இஃது உருபியலாகலான், 'உருபொடுசிவணி' எனவேண்டாவன்றே. அதனான், உருபு புணர்ச்சிக்கண் சென்ற சாரியைகளெல்லாம் ஈற்றுப்பொதுமுடிபு உள்வழிப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் செல்லுமென்பது கொள்க. இன்னும் அதனானே, உயிரீறும் மெய்யீறும் சாரியை பெறாது இயல்பாய் முடிவனகொள்க. நம்பியை, கொற்றனை எனவரும். (௩௰)

ஆறாவது உருபியல் முற்றிற்று.

ஏழாவது - உயிர்மயங்கியல்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உயிரீறு வன்கணத்தொடும் சிறுபான்மை பிறகணத்தொடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தலின் உயிர்மயங்கியல் என்னும் பெயர்த்து. மேல் உருபுபுணர்ச்சி கூறி ஈண்டுப் பொருட்புணர்சசி கூறுகின்றமையின், மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

உாஅ. அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
தத்த மொத்த வொற்றிடை மிகுமே.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், அகரவீற்றுப்பெயர்க்கு வன் கணத்தோடு அல்வழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அகர இறுதி பெயர்நிலை முன்னர்-அகரமாகிய இறுதியையுடைய பெயர்ச்சொல்முன்னர், வேற்றுமை அல்வழி க ச த ப தோன்றின்-வேற்றுமையல்லாத அல்வழிக்கண் க ச த ப முதல்மொழி வருமொழியாய்த் தோன்றின், தம் தம் ஒத்த ஒற்று இடை மிகும்-தத்தமக்குப் பொருந்தின அக் க ச த ப க்களாகிய ஒற்று இடைக்கண் மிகும்.

உ-ம். விளக்குறிது, மகக்குறிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

'ஒத்த' ஒற்றென்றது 'தத்தம்' என்றதனான், அகரவீற்று உரிச்சொல் வல்லெழுத்துமிக்கும் மெல்லெழுத்துமிக்கும் முடியும் முடிபும், இடைச்சொற்களுள் எடுத்தோதாதவற்றின்முடிபும், அகரம் தன்னை உணரநின்றவழி முடியும் முடிபும்கொள்க.

தடக்கை, தவக்கொண்டான் என இவை உரிச்சொல்வல்லெழுத்துப்பேறு. தடஞ்செவி, தடந்தோள் என இவை மெல்லெழுத்துப்பேறு. "ம ட வ மன்ற தடவுநிலைக் கொன்றை" என்பது இடைச்சொல்முடிபு. அக்குறிது, சிறிது, தீது, பெரிது என்பது தன்னை உணரநின்றவழி வல்லெழுத்து மிகுதி. அவ்யாது என்பது இடையெழுத்து மிகுதி. அவ்வழகிது என்பது உயிர்க்கணத்து முடிபு. (க)

உாச. வினையெஞ்சு கிளவியு முவமக் கிளவியும்
எனவெ னெச்சமுஞ் சுட்டி னிறுதியும்
ஆங்க வென்னு முரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெத்து மிகுமே.

இஃது, அகரவீற்று வினைச்சொல்முடிபும் இடைச்சொல்முடிபும் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வினையெஞ்சு கிளவியும் உவமக்கிளவியும்-அகரவீற்று வினையெச்சமாகியசொல்லும் உவமச்சொல்லும், என என் எச்சமும் சுட்டின் இறுதியும்-என என்று வருகின்ற எச்சச்சொல்லும் சுட்டாகிய அகரவீறும், ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்-ஆங்க என்றுசொல்லப்படும் உரையசையாகியசொல்லும், ஞாங்கர் கிளந்த வல்லெழுத்து மிகும்-மேலைச்சூத்திரத்துச்சொன்ன வல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். உணக்கொண்டான், தினக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என்பன வினையெச்சம். மேலனவெல்லாம் இடைச்சொல். புலிபோலக்கொன்றான் என்பது உவமம். கொள்ளெனக்கொண்டான் என்பது என என் எச்சம். அக்கொற்றன்; சாத்தன், தேவன், பூதன் என்பன சுட்டின் இறுதி. ஆங்கக்கொண்டான் என்பது உரையசைக்கிளவி. (உ)

உ௱௫. சுட்டின் முன்னர் ஞ ந மத் தோன்றின்
ஒட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும்.

இது, சுட்டு மென்கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டின்முன்னர் ஞ ந ம தோன்றின்-சுட்டின்முன்னர் ஞ ந மக்கள் முதலாகியமொழி வருமொழியாய்த்தோன்றின், ஒட்டிய ஒற்று இடைமிகுதல் வேண்டும்-தத்தமக்குப் பொருந்திய ஒற்று இடைக்கண்ணே மிகுதல் வேண்டும்.

உ-ம். அஞ்ஞாலம்; நூல், மணி எனவரும். (௩)

உ௱௬. யவமுன் வரினே வகர மொற்றும்.

இது, சுட்டு இடைக்கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ய வ முன் வரின் வகரம் ஒற்றும்-யகர வகர முதல்மொழி சுட்டின் முன்னே வரின் இடைக்கண் வகரம் ஒற்றும்.

உ-ம். அவ்யாழ், அவ்வளை எனவரும். (௪)

உ௱௭. உயிர்முன் வரினு மாயிய றிரியாது.

இஃது, அச்சுட்டு உயிர்க்கணத்தொடு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—உயிர் முன் வரினும் அ இயல் திரியாது-உயிர்முதல்மொழி சுட்டின் முன்னர் வரினும் மேற்கூறிய வகரம் மிக்குமுடியும் அவ்வியல்பில் திரியாது.

உ-ம். அவ்வடை, அவ்வாடை என ஒட்டுக.

இடைமிக்க வகரத்தினை நெறியியல் என்ற இலேசினான் இரட்டுதல் கூறினமையின், அது நிலைமொழித்தொழி லென்பதுவே கூறப்பட்டது. 'திரியாது' என்றதனானே, மேற்சுட்டு நீண்டவழி யகரத்தொடு கொள்க. (௫)

உ௱௮. நீட வருதல் செய்யுளு ளுரித்தே.

இஃது, அச்சுட்டுச் செய்யுளுள் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: —நீட வருதல் செய்யுளுள் உரித்து-அச்சுட்டு நீளும்படியாக வருதல் செய்யுளிடத்து உரித்து.

உ-ம். "ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" [கிளவியாக்கம்-க] எனவரும்.

வருமொழி வரையாது கூறினமையின், இம்முடிபு வன்கணமொழிந்த கணமெல்லாவற்றொடும் சென்றது. உதாரணம் பெற்றவழிக் கண்டுகொள்க. (௬)

உ௱௯. சாவ வென்னுஞ் செயவெ னெச்சத்
திறுதி வகரங் கெடுதலு முரித்தே.

இது, மேல் "வினையெஞ்சு கிளவியும்" [உயிர்மயங்கியல்-உ] என்ற முடிபிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள் :—சாவ என்னும் செய என் எச்சத்து இறுதி வகரம் கெடுதலும் உரித்து- சாவ என்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் அகரமும் அதனைப் பற்றப்பட்ட வகரவொற்றும் கெடாது நிற்றலேயன்றி கெட்டுமுடிதலும் உரித்து.

உ-ம். சாக்குத்தினான்; சீறினான், தகர்த்தான், புடைத்தான் எனவரும்.

இதனை "வினையெஞ்சுகிளவியும்" [உயிர்மயங்கியல்-உ] என்றதன்பின் வையாது முறையன்றிய கூற்றினான், இயல்பு கணத்தும் அந்நிலைமொழிக்கேடு கொள்க. சானான்றார் எனவரும். (எ)

உகய. அன்ன வென்னு முவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த வென்னும் பெயரெஞ்சு கிளவியும்
செய்யிய வென்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம வென்னு முரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட
அன்றி யனைத்து மியல்பென மொழிப.

இஃது, அகரவீற்றுள் ஒருசார்ப்பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும் முன் எய்தியது விலக்கியும் எய்தாதது எய்துவித்தும் முடிபு கூறுதல் நுதலிற்று. அன்னவெ ன்பதும் செய்யியவென்பதும் பலவற்றிறுதிப் பெயர்க்கொடையென்பதும் எய்தியது விலக்கின. மற்றையன எய்தாதது எய்துவித்தன.

இ-ள் .—அன்ன என்னும் உவமக்கிளவியும்-அன்ன என்று சொல்லப்படும் உவம உருபாகிய இடைச்சொல்லும், அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்-அணி யாரைக்கருதிய விளியாகிய நிலைமையையுடைய உயர்திணைப்பெயர்ச்சொல்லும், செய்ம்மன என்னும் தொழில் இறு சொல்லும்-செய்ம்மன என்று சொல்லப்படும் வினைச்சொல்லாகிய அகரவீற்றுச்சொல்லும், ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவி யும்-ஏவலைக்கருதிய வியங்கோளாகிய வினைசசொல்லும், செய்த என்னும் பெயரெ ஞ்சு கிளவியும்-செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய வினைச்சொல்லும், செய்யிய என்னும் வினை எஞ்சு கிளவியும்-செய்யிய என்று சொல்லப்படும் வினையெ ச்சமாகிய வினைச்சொல்லும், அம்ம என்னும் உரைப்பொருள் கிளவியும்-அம்ம என்று சொல்லப்படும் உரையசைப்பொருண்மையையுடைய இடைச்சொல்லும், பலவற்று இறுதிப் பெயர்க்கொடை உளப்பட அன்றி அனைத்தும்-பன்மைப்பொரு ள்களின் அகரவீற்றுப் பலவென்னும் பெயர்ச்சொல்லுமாகிய அவ்வனைத்துச்சொல் லும், இயல்பு என மொழிப-இயல்பாய்முடியுமென்று சொல்லுவர் (ஆசிரியர்).

உ-ம். பொன் அன்ன குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; ஊரகொள், செல், தா, போ எனவும்; உண்மனகுதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; செல்க குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; உண்ட குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; இதன் எதிர்மறை உண்ணாத குதிரை எனவும்; இதன்குறிப்பு நல்லகுதிரை, செந்நாய் எனவும்: உண்ணியகொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வும்; அம்மகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; பல குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் வரும்.

'ஊரகொள்' என்பது உயிரீறுகிய உயர்திணைப்பெயர் என்பதனுள் அடங்கா தோவெனின், ஊரன் என்பது ஊர என ஈறு திரிந்தமையின் ஆண்டு அடங்காதா யிற்றென்பது.

விளிநிலைக்கிளவியாகிய பெயரைமுன்வைத்ததனுல், செய்தவென்பதன் மறை யன்றிச் செய்யும் என்பதற்கு மறையாகிய செய்யாத என்பதும் அவ்வியல்புமுடிபு உடைத்தெனக்கொள்க. அது வாராதகொற்றன் எனவரும்.

'உரையிற்கோடல்'என்பதனுல்,வியங்கோள் முன் வைக்கற்பாலதனை முன்வை யாது செய்ம்மன என்பதனை முன்வைத்ததனுன், இவ்வியல்புமுடிபின்கண் செய்ம் மன என்பது சிறப்புடைத்தெனப் பெறப்பட்டது. அதனுல், ஏவல்கண்ணுத வியங் கோளும் இவ்வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க. அது, "மன்னியபெருமநீ" [புறம்-௬] எனவரும்.

'பலவற்றிறுதிப்பெயர்க்கொடை'என்பதனை அம்ம என்பதற்குமுன் வையாதத னுல், பல என்பது மேற்கூறும் செய்யுள்முடிபில்திரிந்து முடிதல் ஈண்டை இயல் பிற் சிறப்பின்றென்பதூஉம், அகரவீற்றுள் முடிபுகூருத முற்றுவினையும் வினைக் குறிப்பும் அவ்வியல்பினவென்பதூஉம் பெறப்படும். உண்டனகுதிரை என்பது முற்று வினை. கரியகுதிரை என்பது முற்றுவினைக்குறிப்பு.

"தன்னினமுடித்தல்" [பொருள்-௬௬௬ உரை] என்பதனுல், பல என்பதின் இனமாகிய சில என்பதற்கும் அவ்வியல்புகொள்க. சிலகுதிரை எனவரும். (௮)

௨௧௧. வாழிய வென்னுஞ் சேயென் கிளவி
இறுதி யகரங் கெடுதலு முரித்தே.

இஃது, ஏவல்கண்ணுத வியங்கோட்களில் ஒன்றற்கு எய்திய இயல்பு விலக்கி விகாரம் கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வாழிய என்னும் சேய் என் கிளவி-வாழிய என்று சொல்லப்படுகி ன்ற அவ்வாழுங்காலம் அண்மையதன்றி சேய்மையது என்று உணர்த்தும்சொல், இறுதி யகரம் கெடுதலும் உரித்து-தன்னிறுதிக்கண் அகரமும் அதனுற்பற்றப்பட்ட யகரவொற்றும் கெடாது முடிதலேயன்றி கெட்டுமுடிதலும் உரித்து.

உ-ம். வாழிகொற்ரு எனவரும்.

'சேயென்கிளவி'என்றதனுன், அம்முடிபு இவ்'வாழிய' என்பதற்கு ஏவல் கண் ணுத நிலையதென்பது விளக்கிய நின்றது. "ஒன்றென முடித்தல்" [பொருள்-௬௬௬ உரை] என்பதனுல், பிறகணத்துக்கண்ணும் இவ்விதிகொள்க. வாழிஞெள்ளா என வரும். (௯)

௨௧௨. உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.

இஃது, அம்ம என்பதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள் :—உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார்-உரையசைப் பொருண் மையினையுடைய அம்ம என்னும் இடைச்சொல் தன் ஈற்றகரம் அகரமாய் நிற்றலே யன்றி ஆகாரமாய் நீண்டுமுடிதலையும் வரையார்.

உ-ம். அம்மாகொற்ரு எனவரும்.

"ஒன்றெனமுடித்தல்" [பொருள்-கூகக உரை] என்பதனான், அந்நீட்சி இயல்பு கணத்தும்கொள்க. அம்மாஒளுள்ளா எனவரும். (ா)

உகங. பலவற் றிறுதி நீடுமொழி யுளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான.

இது, மேற் "பலவற்றிறுதிப்பெயர்க்கொடை" [உயிர்மயங்கியல்-அ] என்று ஓதியதற்குச் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—பலவற்று இறுதி நீடும் மொழி உள-பல என்னும் சொல்லின் இறுதி அகரம் நீண்டு முடியும் மொழிகளும் உள. (யாண்டு உளவெனில்) செய்யுள் கண்ணிய தொடர்மொழியான்-செய்யுளாதலைக் கருதிய ஒன்றோடொன்று தொடர்ச்சிப்படும் செய்யுள்முடிபுடைய மொழிகளின்கண்ணே.

'செய்யுள்கண்ணியமொழி' என்னாது 'தொடர்மொழி' என்றதனான், இப்பல வென்பது நீளும்வழி வருமொழியாவது சிலவென்பதே என்று கொள்ளப்படும். 'செய்யுளான' என்னாது 'செய்யுள்கண்ணிய தொடர்மொழியான' என்றதனால், பல என்னும்மொழியீறு நீண்டவழி நிலைமொழி அகரப்பேறும் வருமொழி ஞகாரமெல் லெழுத்துப்பேறும், வருமொழியீறு நீண்டவழி அகரப்பேறும் மகரமாகிய மெல்லெ ழுத்துப்பேறும் கொள்க. 'உண்டு' என்னாது 'உள' என்றதனால், சிலவென்னும் வருமொழியிறுதி நீடலும்கொள்க.

உ-ம். "பலாஅஞ் சிலாஅ மென்மனார் புலவர்" எனவரும். இதன்சொல்நிலை பலசில என்னும் செவ்வெண். [அகரம் சாரியை.] (கக)

உகச. தொடர லிறுதி தம்முற் றாம்வரின்
லகரம் றகரவொற் றாதலு முரித்தே.

இது, பல சில என்பவற்றிற்கு இயல்பேயன்றித் திரிபும் உண்டென எய்திய தன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்-தொடர்மொழியல்லாத ஈரெ ழுத்தொருமொழியாகிய பல சில என்னும் அகரவீற்றுச்சொல் தம்முன்னே தாம் வரின், லகரம் றகர ஒற்று ஆதலும் உரித்து-தம் ஈற்றில்நின்ற லகரவொற்று றகர வொற்றாய்த்திரிந்து முடிதலும் உரித்து.

உ-ம். பற்பலகொண்டான் எனவும். சிற்சிலவித்தி எனவும் வரும்.

'தன்முற்றான்'என ஒருமையாற்கூறாது 'தம்முற்றாம்வரின்' என்றபன்மையான், மேல் பல சில என நின்ற இரண்டும் தழுவப்பட்டன. 'தொடரலிறுதி தம்முன்வ ரின்' என்னாது 'தாம்' என்றதனான்,இம்முடிபின்கண் பலவென்பதன்முன் பலவருக, சிலவென்பதன்முன் சிலவருக என்பது கொள்ளப்பட்டது.

'லகரம் றகரமாம்' என்னாது 'லகரம் றகரவொற்றாம்' என்ற ஞாபகத்தான், அகரம் கெடுமென்றானுகக் கொள்க. அருத்தாபத்திமுகத்தால், தம்முற்றாம்வரின் லகரம் றகரவொற்றாமெனவே, தம்முன் பிற வந்தவிடத்து லகரம் றகரவொற்றா காது அகரம் கெடுமென்பது கொள்ளப்படும். பல்படை, பல்யானை, சில்படை, சில் கேள்வி எனவரும்.

'தொடரலிறுதி' என்பது சுட்டல்லது ஓரெழுத்தொருமொழி அகரமின்மையின், ஓரெழுத்தொருமொழிமேற் செல்லாதாயிற்று. உரித்தென்றது, அகரவீற்றொருமைபற்றி. [ஏகாரம் ஈற்றசை.] (௧௨)

௨௧௫. வல்லெழுத் தியற்கை யுறழத் தோன்றும்.

இதுவும், மேற்கூறிய இரண்டிற்கும் இன்னும் ஓர் முடிபு வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—வல் எழுத்து இயற்கை உறழ தோன்றும்-மேற்கூறிய பலசில என்னும் இரண்டிற்கும் அகரவீற்றுப் பொதுவிதியிற் கூறிய வல்லெழுத்துமிகுதியது இயல்பு மிகலும் மிகாமையுமாகி உறழ்ந்துவரத்தோன்றும்.

உ-ம். பலப்பல, சிலச்சில; பலபல, சிலசில எனவரும்.

ஈண்டும் தம்முற்றும்வருதல் கொள்க. 'இயற்கை' என்றதனுன், முன்கூறிய பற்பல, சிற்சில என்னும் முடிபொடு பல்பல, சில்சில என்னும் முடிபுபெற்று உறழ்ச்சியாதல் கொள்க.

'தோன்றும்' என்றதனுன்,அகரம்கெட லகரம் ஆய்தமும் மெல்லெழுத்துமாய்த் திரிந்துமுடிதல் கொள்க.

உ-ம். பஃறுனை, பன்மரம்; சிஃறுழிசை, சின்னூல் எனவரும். (௧௩)

௨௧௬. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது, அகரவீற்றுப்பெயர்க்கு வன்கணத்தொடு வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-அகரவீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் மேற்கூறிய அல்வழியோடு ஒருதன்மைத்தாய் க ச த ப முதல்மொழி வந்தவழி தத்தம் ஒற்று இடைமிக்குமுடியும்.

உ-ம். இருவிளகொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவரும். விளக்குறுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் கொள்க. [இருவிளா-ஓலை; வேணுட்டகத்து ஓர் ஊர்.] (௧௪)

௨௧௭. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இஃது, அகரவீற்று மரப்பெயர்க் கிளவிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிகும்-அகரவீற்று மரப்பெயராகிய சொல் மெல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். விளங்கோடு, விளஞ்செதிள், தோல், பூ எனவரும். (௧௫)

௨௧௮. மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை.

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—மரப்பெயர்க்கிளவிக்கு இன்சாரியை-அகரவீற்று மக என்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண் வரும் சாரியை இன்.

உ-ம். மகவின்கை, செவி, தலை, புறம் எனவரும்.

சாரியைப்பேறு வரையாது கூறியவழி நான்குகணத்துக்கண்ணும் செல்லு மென்பதாகலின், மகவின்ஞாண் என இயல்புகணத்துக்கண்ணும் கொள்க. (கசு)

உகசு. அத்தவண் வரினும் வரைநிலை யின்றே.

இதுவும் அது.

இ-ள்:—அத்து அவண் வரினும் வரை நிலை இன்று-மேற்கூறிய இன்னேயன்றி அத்து என்னும் சாரியை இயைபுவல்லெழுத்தினோடு அம் மக என்னும் சொல்லிடத்து வந்து முடியினும் நீக்கும் நிலைமை இன்று.

உ-ம். மகத்துக்கை; செவி, தலை, புறம் எனச்செய்கை அறிந்துமுடிக்க.

'அவண்' என்றதனால், மகப்பால்யாடு என வல்லெழுத்துப் பேறும், மகவின்கை என மேல் இன்சாரியைபெற்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்வும், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் வந்தவழி வினவின்கோடு என இயைபுவல்லெழுத்து வீழ்வும் கொள்க. 'நிலை' என்றதனால், மகம்பால்யாடு என மெல்லெழுத்துப் பேறும் கொள்க. (கள)

உஉ௦. பலவற் றிறுதி யுருபிய னிலையும்.

இஃது, அகரவீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள் :—பலவற்று இறுதி உருபு இயல் நிலையும்-பல என்னும் அகரவீற்றுச் சொல் உருபுபுணர்ச்சிக்கண் வற்றுப்பெற்றுப் புணர்ந்த இயல்பின்கண்ணே நிற்கும்.

உ-ம். பலவற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவரும். (கஅ)

உஉக. ஆகார விறுதி யகர வியற்றே.

இஃது, ஆகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—ஆகார இறுதி அகர இயற்று-ஆகாரவீற்றுப்பெயர் (அல்வழிக்கண்) அகரவீற்று அல்வழியது இயல்பிற்றாய் வல்லெழுத்துப் பெற்றுமுடியும்.

உ-ம். தாராக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (கசு)

உஉஉ. செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்விய றிரியா தென்மனார் புலவர்.

இஃது, அவ்வீற்று வினைச்சொல் முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்: —செய்யா என்னும் வினை எஞ்சு கிளவியும்-(பெயரேயன்றி) செய்யா என்று சொல்லப்படும் ஆகாரவீற்று வினையெச்சச்சொல்லும், அ இயல் திரியாது என்மனார் புலவர் - வல்லெழுத்து மிக்குமுடியும் அவ்வியல்பில் திரியாதென்று சொல்லுவர் புலவர்.

உ-ம். உண்ணாக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'திரியாது' என்றதனால், 'செய்யா' என்னும் பெயரெச்சமும் அவ்வாறு முடியு மெனக்கொள்க. உண்ணாக்கொற்றன் எனவரும். (உ௦)

உஉஙூ. உம்மை யெஞ்சிய விருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக வகர மிகுமே.

இஃது, அவ்வீற்று அல்வழிக்கண் உம்மைத்தொகைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—உம்மை எஞ்சிய இருபெயர்த்தொகைமொழி-உம்மைதொக்க இருபெயராகிய தொகைச்சொல், மெய்ம்மையாக அகரம் மிகும்-மெய்யாக நிலைமொழியீற்று அகரம் மிக்குமுடியும்.

உ-ம். உவாஅப்பதினன்கு.

'மெய்ம்மையாக' என்றதனால், வல்லெழுத்துக்கொடுக்க. 'உம்மைதொக்க' என்னாது 'எஞ்சிய' என்ற வாய்பாட்டு வேற்றுமையான், இம்முடிபு இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கும் கொள்க. அராஅப்பாம்பு எனவரும்.

இன்னும் அதனான், எழுவாய்முடிபிற்கும் பெயரெச்சத்திற்கும் அகரப்பேறு கொள்க. உவாஅக்கொடிது, உவாஅக்காக்கை எனவரும்.

நிலைமொழியெழுத்துப்பேறு வருமொழிவரையாது கூறினவழி நான்குகணத்துக்கண்ணும் செல்லுமாகலின், இயல்புகணத்துக்கண்ணும் அகரப்பேறுகொள்க. இறாஅவழுதுணங்காய் எனவரும். (உக)

உஉச. ஆவு மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த வுரையசை மியாவும்
தன்றொழி லுரைக்கும் வினாவின் கிளவியோ
டன்றி யனைத்து மியல்பென மொழிப.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு இயல்பு கூறி எய்தியது விலக்குதலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ-ள் :—ஆவும் மாவும் விளிப்பெயர்க்கிளவியும்-ஆ என்னும் பெயர்ச்சொல்லும் மா என்னும் பெயர்ச்சொல்லும் விளித்தலையுடைய பெயராகிய உயர்திணைச்சொல்லும், யா என் வினாவும் பலவற்று இறுதியும்-யா என்னும் வினாப்பெயரும் அஃறிணைப்பன்மைப்பொருளை உணர்த்தும் ஆகாரவீற்று முற்றுவினைச்சொல்லும், ஏவல் குறித்த உரையசை மியாவும்-முன்னிலையில் ஏவல்வினைச்சொல்லைக் குறித்துவரும் உரையசையாகிய மியா என்னும் ஆகாரவீற்று இடைச்சொல்லும், தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு அன்றி அனைத்தும்-தனது தொழிலினைச் சொல்லும் ஆகாரவினாவினையுடைய வினைச்சொல்லுமாகிய அவ்வனைத்தும், இயல்பு என மொழிப-இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

உ-ம். ஆகுறிது, சிறிது, தீது பெரிது எனவும்; மாகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; ஊராகொள், செல், தா, போ எனவும்; யாகுறிய, சிறிய, தீய, பெரிய எனவும்; உண்ணுகுதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; கேண்மியாகொற்றா,சாத்தா, தேவா, பூதா எனவும்; உண்காகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

விளிப்பெயர்க்கிளவியும், பலவற்றிறுதியும், ஏவல்குறித்த உரையசைமியாவும், தன்றொழிலுரைக்கும் வினாவும் எய்தாதது எய்துவிக்கப்பட்டன. ஊராகொள் என்பது உயிரீறாகிய உயர்திணைப்பெயரென்பதனுள் அடங்காதோவெனின், முன் [உயிர் மயங்கியல்-அ] கூறிற்றே கூறுக. (உஉ)

உஉரு. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது அவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-(ஆகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண்ணேயன்றி) வேற்றுமைக்கண்ணும் அகரவீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். தாராக்கால், சிறகு, தலை, புறம் எனவரும். (உரு)

உஉசு. குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்று மகரக் கிளவி.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—குறியதன்முன்னரும் ஓர் எழுத்து மொழிக்கும்-குற்றெழுத்தின்முன் நின்ற ஆகாரவீற்றிற்கும் ஓரெழுத்தொருமொழி ஆகாரவீற்றிற்கும், அகரக்கிளவி அறிய தோன்றும்-(நிலைமொழிக்கண்) அகரமாகிய எழுத்து அறியத்தோன்றும்.

உ-ம். பலாஅக்கோடு, செதிள், தோல், பூ எனவும்; காஅக்குறை, செய்கை, தலை, புறம் எனவும் வரும்.

ஓரெழுத்தொருமொழி முற்கூறாதவதனால், அதன்கண் அகரப்பேறு சிறுபான்மையெனக் கொள்க. 'அறிய' என்றதனால் அவ்விருவழியும் அகரம் பொருந்திய வழியே வருதலும், அவ்வீற்றுவேற்றுமையுள் எடுத்தோதாதவற்றின்முடிபும், இவ்வீற்றுள் உருபிற்குச் சென்றசாரியை பொருட்கண் சென்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்வும், இவ்வுயிரீற்றில் வரும் உருபீற்றுச்செய்கையும் கொள்க.

உ-ம். அண்ணாஅத்துக்குளம், உவாஅத்துஞான்றுகொண்டான், உவாஅத்தாற்கொண்டான், யாவற்றுக்கோடு என இவை பிறமுடிபு. மூங்காவின்றோல் என்பது இயைபுவல்லெழுத்து வீழ்வு. இடாவினுட்கொண்டான் என்பது உருபீற்றுச் செய்கை. (உசு)

உஉஎ. இராவென் கிளவிக் ககர மில்லை.

இஃது, அவ்வகரப்பேற்றிற்கு ஒருவழி எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ-ள்: —இரா என் கிளவிக்கு அகரம் இல்லை-இரா என்னும் ஆகாரவீற்றுச் சொல்லிற்கு முன்கூறிய அகரப்பேறு இல்லை.

உ-ம். இராக்கொண்டான் எனவரும். (உஎ)

உஉஅ. நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்.

இஃது,அவ்வீற்றுள் ஒருமொழிவழி அகரம் விலக்கி அத்துவகுத்தல் நுதலிற்று

இ-ள் :—நிலா என் கிளவி அத்தொடு சிவணும்-நிலா என்னும் சொல் அத்துச் சாரியையொடு பொருந்திமுடியும்.

உ-ம். நிலாத்துக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

நிலைமொழித்தொழில் வருமொழித்தொழிலை விலக்குமாகலின், அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது. (உஅ)

உஉகூ. யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள் :—யா மரக்கிளவியும் பிடாவும் தளாவும் அ முப் பெயரும்-யா என்னும் மரத்தை உணரநின்ற சொல்லும் பிடா என்னும் சொல்லும் தளா என்னும் சொல்லுமாகிய அம்மூன்றுபெயரும், மெல்லெழுத்துமிகும்-வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். யாஅங்கோடு, பிடாஅங்கோடு, தளாஅங்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

மெல்லெழுத்துப்பேறு வருமொழித்தொழிலாதலின், வருமொழி வல்லெழுத்தை விலக்கிற்று.

உஉ௰. வல்லெழுத்து மிகினு மான மில்லை.

இது, மேலனவற்றிற்கு வல்லெழுத்தும் சிறுபான்மை மிக்குமுடியும் என இறந்தது காத்தல் நுதலிற்று.

இ-ள் :—வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை-மேற்கூறிய மூன்றுபெயரும் மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியினும் குற்றம் இல்லை.

உ-ம். யாஅக்கோடு, பிடாஅக்கோடு, தளாஅக்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

'மானமில்லை' என்றதனால், யா முதலிய மூன்றற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி, இயைபுவல்லெழுத்துவீழ்க்க.

உ-ம். யாஅவின்கோடு, பிடாஅவின்கோடு, தளாஅவின்கோடு எனவரும்.

இன்னும் அதனானே, யாஅத்துக்கோடு எனச் சிறுபான்மை அத்துப்பேறுண்டேனும் கொள்க, அவ்வகரப்பேற்றொடு வல்லெழுத்துப்பெறுதலின். "யாமரக்கிளவி" என்பதனைக்" "குறியதன்முன்னரும்" என்பதன்பின்வையாதவிதனால், இராவிற் கொண்டான், நிலாவிற்கொண்டான் என உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபுவல்லெழுத்துவீழ்க்க. நிலாவிற்கொண்டான் என்பதற்கு நிலாத்துக்கொண்டான் என்பது ஏற்றுப்பொதுமுடிபாயினவாறு அறிக. (உஅ)

உஉக. மாமரக் கிளவியு மாவு மாவும்
ஆமுப் பெயரு மவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவ ணிலையா
னகர மொற்று மாவு மாவும்.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—மாமரக்கிளவியும் ஆவும் மாவும் அ முப்பெயரும் அவற்று ஓர் அன்ன-மாமரமாகியசொல்லும் ஆ என்னும்சொல்லும் மா என்னும்சொல்லுமாகிய அம்

மூன்றுபெயர்ச்சொல்லும் மேற்கூறிய யா முதலிய மூன்றனொடும் ஒருதன்மையவாய் வல்லெழுத்துப்பெறாது மெல்லெழுத்துப்பெற்று முடிதலுமுடைய. ஆவும் மாவும் அகரம் வல்லெழுத்து அவைஅவண் நிலையா னகரம் ஒற்றும்-அவற்றுள் ஆவும் மாவும் முன்பெற்றுநின்ற அகரமும் வல்லெழுத்துமாகிய அவை அவ்விடத்து நிலைபெறா வாய் னகரமொற்றாகப் பெற்றுமுடியும்.

உ-ம். மாஅங்கோடு, செதிள், தோல், பூ எனவும்; ஆன்கோடு, மான்கோடு, செவி, தலை, புறம் எனவும் வரும்.

"அறிய" [உயிர்மயங்கியல்-உச] என்றதனால், சிறுபான்மை மாங்கோடு என அகரமின்றியும் வரும். இனி 'அவண்' என்றதனால், காயாங்கோடு, ஆணங்கோடு, நுணங்கோடு என்றாற்போலப் பிறவும் மெல்லெழுத்துப் பெறுதலும்; அங்காக்கொண்டான், இங்காக்கொண்டான், உங்காக்கொண்டான், எங்காக்கொண்டான் என இவ்வீற்று ஏழாம் வேற்றுமை இடத்துப்பொருள் உணரநின்ற இடைச்சொற்கள் வல்லெழுத்துப்பெறுதலும்; ஆவின்கோடு, மாவின்கோடு எனச் சிறுபான்மை இன் பெறுதலும், பெற்றவழி வல்லெழுத்துவீழ்வும் கொள்க. 'அவற்றோரன்ன' என்று மாட்டேற்றால் பெற்றுநின்றது மெல்லெழுத்தாகலின், 'அகரம் வல்லெழுத்தவைய வணிலையா' என்று ஓதற்பாலதன்றெனின், மேல் "ஊவென் னொருபெய ராவொடு சிவணும்" [உயிர்மயங்கியல்-கூ௭] என்றவழி, அம்மாட்டேற்றானே அதன்வல்லெழுத்து வீழ்வும் கொளல்வேண்டித் "திரிந்ததன்றிரிபது" என்னும் நயத்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக ஓதினானெனக் கொள்க. (உகூ)

உகூஉ. ஆனொற் றகரமொடு நிலையிட னுடைத்தே.

இஃது, அவ்வீற்றுள் ஆ என்றதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஆன் ஒற்று அகரமொடும் நிலை இடன் உடைத்து-முன்புபெற்றுநின்ற ஆன் என்னும் சொல்லினது னகரவொற்று அகரத்தொடும் நிற்கும் இடனுடைத்து.

'இடனுடைத்து' என்றதனான், வன்கணம் ஒழிந்தகணத்து இம்முடிபெனக் கொள்க.

உ-ம். "ஆனநெய்தெளித்து நான நீவி" எனவரும்.

'அகரமொடும்' என்ற உம்மையான், அகரமின்றி வருதலே பெரும்பான்மை எனக்கொள்க. (கூ௰)

உகூகூ. ஆன்முன் வரூஉ மீகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே.

இஃது, இன்னும் ஆ என்பதற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஆன்முன் வரும் ஈகாரபகரம்-ஆன் என்னும் சொல்முன்னர் வருமொழியாய்வருகின்ற ஈகாரத்தொடுகூடிய பகரமாகியமொழி, தான் மிக தோன்றி குறுக லும் உரித்து-அப்பகரமாகிய தான் மிகத் தோன்றி அவ்வீகாரம் இகரமாகக்குறுகி முடிதலையும் உடைத்து.

'தோன்றி' என்றதனால், நிலைமொழிப்பேறாகியனகரவொற்றின் கேடுகொள்க.

உ-ம். ஆப்பி எனவரும்.

உம்மையான், ஆன்பீ என்பதேபெரும்பான்மை யெனக்கொள்க. (௩௧)

உ௩௪. குறியத னிறுதிச் சினைகெட வுகரம்
அறிய வருதல் செய்யுளு ளுரித்தே

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்குச் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—குறியதன் இறுதிச்சினை கெட உகரம் அறிய வருதல் செய்யுளுள் உரித்து-குறியதன் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது சினையாகிய அகாரமாத்திரை கெட ஆண்டு உகரம் அறியவருதல் செய்யுளிடத்து உரித்து.

உ-ம். "இறவுப் புறத்தன்ன பிணர்படு தடவுமுதல்" எனவரும்.

'அறிய' என்றதனான், உகரம்பெறாது சினைகெடுதலும் கொள்க. அரவணிகொடி எனவரும்.

பிணவுநாய் முடுக்கிய என்றாற்போல வரும் அல்வழிமுடிபு "கிளந்தவல்ல" [குற்றியலுகரப்புணரியல்-என] என்னும் புறநடையதெனக் கொள்க. (௩௨)

உ௩௫. இகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது, இகரவீற்றுப்பெயர்க்கு அல்வழிமுடிபு தொகைமரபினுட் கூறினன்றமையின் அதன்வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—இகர இறுதிப் பெயர்நிலைமுன்னர் வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும்-இகரவீற்றுப் பெயர்ச்சொல்முன்னர் அதிகாரத்தாற் க ச த ப முதல்மொழி வந்தவழி வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். கிளிக்கால், சிறகு, தலை, புறம் எனவரும். (௩௩)

உ௩௬. இனியணி யென்னுங் காலையு மிடனும்
வினையெஞ்ச கிளவியுஞ் சுட்டு மன்ன.

இஃது, இவ்வீற்றுள் சில இடைச்சொல்லும் வினைச்சொல்லும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—இனி அணி என்னும் காலையும் இடனும் வினையெஞ்சுகிளவியும் சுட்டும் அன்ன-இனி என்றும் அணி என்றும் சொல்லப்படுகின்ற காலத்தையும் இடத்தையும் உணரநின்ற இடைச்சொல்லும் இவ்விகரவீற்று வினையெச்சமாகிய சொல்லும் இவ்வீற்றுச் சுட்டாகிய இடைச்சொல்லும் மேற்கூறியவாறே வல்லெழுத்து மிக்கு முடியும் தன்மைய.

உ-ம். இனிக்கொண்டான், அணிக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்: தேடிக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்; இக்கொற்றன்; சாத்தன், தேவன், பூதன் எனவும் வரும். (௩௪)

உ௩௭. இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற விகர முகர மாதல்
தொன்றியன் மருங்கிற் செய்யுளு ளுரித்தே.

இஃது, இவ்வீற்றுள் வினையெச்சக்குறிப்பினுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி நின்ற இகரம் உகரம் ஆதல்-இன்றி என்றுசொல்லப்படும் வினையெச்சத்து இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாய்த் திரிந்துமுடிதல், பழக நடந்த கூற்றையுடைய செய்யுட்களிடத்து உரித்து.

உ-ம். "உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே" எனவரும்.

'நின்ற' என்றதனான், முன் பெற்றுநின்ற வல்லெழுத்து வீழ்க்க. 'தொன்றியன் மருங்கு' என்றதனால், அன்றி என்பதும் செய்யுளுள் இம்முடிபிற்றாதல் கொள்க. "நாளன்று போகிப் புள்ளிடை தட்ப" எனவரும். (௫௫)

௨௫௮. சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே.

இஃது, இவ்வீற்றுச் சுட்டுப்பெயர் இயல்புகணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—சுட்டின் இயற்கை முன் கிளந்த அற்று-இகரவீற்றுச் சுட்டினது இயல்பு இயல்புகணம் வரும்வழியும் உயிர்க்கணம்வரும் வழியும் முன் அகரவீற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத்தாம்.

என்றது மென்கணம் வரும்வழி அம்மெல்லெழுத்து மிக்கும் [உயிர்மயங்கியல்-௩,] இடைக்கணம் வரும்வழியும் உயிர்க்கணம்வரும்வழியும் நிலைமொழி வகரம் பெற்றும் [உயிர்மயங்கியல்-௪, ௫,] செய்யுட்கண் வகரம்கெட்டுச் சுட்டுநீண்டும் [உயிர்மயங்கியல்-௯] முடியும் என்றவாறு.

உ-ம். இஞ்ஞானம், இந்நூல், இம்மணி எனவும்; இவ்யாழ், இவ்வட்டு எனவும்; இவ்வடை, இவ்வாடை, இவ்வெளவியம் எனவும்; ஈவயினான எனவும் வரும். (௫௬)

௨௫௯. பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.

இஃது, இவ்வீற்று அல்வழிகளில் அளவுப்பெயருள் ஒன்றற்கு மேல்தொ[illegible] மரபினுள் [சூத்-௨௨] எய்திய எ என்சாரியை விலக்கி வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: —பதக்கு முன் வரின் தூணிக்கிளவி முதல் கிளந்து எடுத்த வேற்றுமை இயற்று-பதக்கு என்னும்சொல் தன்முன்வரின் தூணி என்னும் சொல்லளவு முன்பு விதந்தெடுத்த வேற்றுமைமுடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். தூணிப்பதக்கு எனவரும்.

வருமொழி முற்கூறியவதனால், இருதூணிப்பதக்கு என அடையடுத்துவந்த வழியும் இவ்விதி கொள்க. 'கிளந்தெடுத்த' என்றதனால், தூணிமுன்னர்ப் பிறபொருட்பெயர்வந்தவழியும் ஆண்டு நிலைமொழியடையடுத்துவந்தவழியும் தன்முன்னர்த் தான் வந்தவழியும் இம்முடிபுகொள்க. இன்னும் அதனானே, தன்முன்னர்த்தான்வந்தவழி இக்குச்சாரியைப்பேறும் கொள்க.

உ-ம். தூணிக்கொள், தூணிச்சாமை எனவும்; இருதூணிக்கொள் எனவும்; தூணித்தூணி எனவும், தூணிக்குத்தூணி எனவும் வரும். (௫௭)

உசய. உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி யிகர மெய்யொடுங் கெடுமே
டகார மொற்று மாவயி னான.

இதுவும் அது.

இ-ள் :—உரி வரு காலை நாழிக்கிளவி இறுதி இகரம் மெய்யொடும் கெடும்-உரி என்னும்சொல் வருமொழியாய் வந்தகாலத்து நாழி என்னும் சொல் தன் ஈற்றில் நின்ற இகரம் தான் ஊர்ந்துநின்ற மெய்யொடும் கெடும். அவயின் டகாரம் ஒற்றும்-அவ்விடத்து டகரம் ஒற்றாய்வரும்.

உ-ம். நாடுரி எனவரும்.

வருமொழிமுற்கூறியவதனான், நிலைமொழி அடையடுத்து இருநாடுரி என்றவழியும் இம்முடிபுகொள்க. 'இகரம்' என்னாது 'இறுதியிகரம்' என்றதனால், ஈண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று பிறபொருட்பெயரொடு வல்லெழுத்துமிக்குமுடிதலும் கொள்க. நாழிக்காயம், உரிக்காயம் எனவரும்.(உஅ)

உசக. பனியென வரூஉங் கால வேற்றுமைக்
கத்து மின்னுஞ் சாரியை யாகும்.

இஃது,இவ்வீற்றுவேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தினொடு சாரியை பெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—பனி என வரும் காலவேற்றுமைக்கு அத்தும் இன்னும் சாரியை ஆகும்-பனி என்றுசொல்ல வருகின்ற பனிக்காலத்தை உணரநின்ற வேற்றுமை முடிபுடைய பெயர்க்கு வரும் சாரியை அத்தும் இன்னும் ஆகும்.

உ-ம். பனியத்துக்கொண்டான், பனியிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'வேற்றுமை' என்றதனான், இன்பெற்றவழி இயைபு வல்லெழுத்தை வீழ்க்க.()

உசஉ. வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்விய னிலையல் செவ்வி தென்ப.

இதுவும் அது.

இ-ள் :—வளி என வரும் பூதக்கிளவியும் அ இயல் நிலையல் செவ்விது என்ப-வளி என்றுசொல்ல வருகின்ற இடக்கரல்லாத ஐம்பெரும் பூதங்களில் ஒன்றை உணரநின்ற சொல்லும் மேற்கூறிய அத்தும் இன்னும் பெறும் அவ்வியல்பின்கண் நிற்றல் செவ்விதென்று சொல்லுவர் புலவர்.

உ-ம். வளியத்துக்கொண்டான், வளியிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'செவ்விது' என்றதனால், இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. (௬௰)

உசந. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இஃது, இவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்: —உதிமரக்கிளவி மெல்லெழுத்து மிகும்-உதி என்னும் மரத்தினை உணரநின்றசொல் வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். உதிங்கோடு; செதிள், தோல், பூ எனவரும். (உசக)

உசஉ. புளிமரக் கிளவிக் கம்மே சாரியை.

இஃது, இவ்வீற்றுமரப்பெயர் ஒன்றற்கு மேல் எய்தியவல்லெழுத்து விலக்கிச் சாரியை விதித்தல் நுதலிற்று.

இ-ள்: —புளிமரக்கிளவிக்கு சாரியை அம்-புளி என்னும் மரத்தினை உணரநின்ற சொல்லிற்கு வரும் சாரியை அம்முச்சாரியை.

உ-ம். புளியங்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

சாரியைப்பேற்றிடை எழுத்துப்பேறு கூறியவதனால், அம்முப்பெற்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. (உசஉ)

உசடு. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.

இஃது, அம்மரப்பெயரல்லாத புளிப்பெயர்க்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: —ஏனை புளிப்பெயர் மெல்லெழுத்து மிகும்-அம்மரப்பெயரன்றி ஒழிந்த சுவைப்புளி உணரநின்ற பெயர் வல்லெழுத்துமிகாது மெல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். புளிங்கூழ்; சோறு, தயிர், பாளிதம் எனவரும். (உசந)

உசசு. வல்லெழுத்து மிகினு மான மில்லை
ஒல்வழி யறிதல் வழக்கத் தான.

இஃது, மேலதற்கு வல்லெழுத்துமிகுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை-ஏனைப்புளிப்பெயர்முன் எய்திய மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியினும் குற்றம் இல்லை. ஒல்வழி அறிதல் வழக்கத்தான-பொருந்தும் இடமறிக வழக்கிடத்து.

உ-ம். புளிக்கூழ்; சோறு, தயிர், பாளிதம் எனவரும்.

'ஒல்வழியறிதல்' என்றதனால், புளிச்சோறு என்றதுபோல மற்றையவை வழக்குப்பயிற்சி இலவென்பதும் கொள்க. 'வழக்கத்தான' என்றதனான், இவ்வீற்றுள் எடுத்தோத்தும் இலேசும் இல்லாதனவற்றின் முடிபுவேற்றுமையெல்லாம் கொள்க. கூதாளங்கோடு எனவும், கணவிரங்கோடு எனவும், துளியத்துக்கொண்டான் எனவும், பருத்திக்குச்சென்றான் எனவும், கப்பிதந்தை கப்பிந்தை எனவும், கட்டி அகல் கட்டகல் எனவும், குளிகுறுமை குளிக்குறுமை எனவும், இன்னினிக்கொண்டான், அண்ணணிக்கொண்டான் எனவும், புளியங்காய் எனவும் வரும்.

இன்னும் அதனானே, இவ்வீற்றுள் உருபிற்குச்சென்றசாரியை பொருட்கண் சென்றவழி,இயைபுவல்லெழுத்து வீழ்தலும்கொள்க.கிளியின்கால் எனவரும்.(உசச)

உசஎ. நாண்முற் றோன்றுந் தொழினிலைக் கிளவிக்
கானிடை வருத லைய மின்றே.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்குச் சாரியைவிதித்தல் நுதலிற்று.

இ-ள் :—நாள் முன் தோன்றும் தொழில்நிலைக்கிளவிக்கு - இகரவீற்று நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றும் வினைச்சொல்லிற்கு, ஆன் இடை வருதல் ஐயம் இன்று-ஆன்சாரியை இடை வந்துமுடிதல் ஐயம் இல்லை.

உ-ம். பரணியாற் கொண்டான் ; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.
'ஐயமின்று' என்றதனான், இயைபுவல்லெழுத்து வீழ்க்க. (சரு)

உசரு. திங்கண் முன்வரி னிக்கே சாரியை.

இதுவும் அது.

இ-ள் :—திங்கள்முன் வரின் சாரியை இக்கு - திங்களை உணர நின்ற இகரவீற்றுப் பெயர்முன்னர்த் தொழினிலைக்கிளவி வரின் வரும் சாரியை இக்குச்சாரியை.

உ-ம்.ஆடிக்குக்கொண்டான் ; சென்றான், தந்தான், போயினான் எனவரும். (சசு)

உசசு. ஈகார விறுதி யாகார வியற்றே.

இஃது, ஈகாரவீற்றுப்பெயர் அல்வழியின்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—ஈகார இறுதி ஆகார இயற்று-ஈகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வரும்வழி வல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். தீக்கடிது ; சிறிது, தீது, பெரிது எனவரும். (சஎ)

உருய. நீயென் பெயரு மிடக்கர்ப் பெயரும்
மீயென மரீஇய விடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—நீ என் பெயரும் இடக்கர்ப்பெயரும் மீ என மரீஇய இடம் வரை கிளவியும்-நீ என்னும் பெயரும் இடக்கர்ப்பெயராகிய பீ என்னும் ஈகாரவீற்றுப்பெயரும் மீ என்று சொல்லவரூஉம் மருவாய்வழங்கின ஓர் இடத்தினை வரைந்துணர்த்தும் சொல்லும், அ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும் - மேல் இவ்வீற்றுட்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்.

உ-ம். நீ குறியை; சிறியை, தீயை, பெரியை எனவும்: பீகுறிது; சிறிது, தீது, பெரிது எனவும் : மீகண் ; செவி, தலை, புறம் எனவும் வரும்.

'நீ குறியை' என்பது மேல் "அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே" [தொகை மரபு-கரு] என்றவழி அடங்காதோவெனின், மேல் வேற்றுமைக்கண் நின்கை எனத் திரிந்து முடிதலின் அடங்காதாயிற்றென்க. மீகண் என்பது அல்வழி முடிபன்றெனினும் இயல்பாதல்நோக்கி உடன்கூறப்பட்டது. (சஅ)

உருக. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியு முளவென மொழிப.

இது, மேற்கூறியவற்றுள் மீ என்பதற்கு வேறொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—இடம் வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம் உடன் நிலை மொழியும் உள என மொழிப - இடத்தினை வரைந்துணர்த்தும் மீ என்னும் சொல்முன் இயல்பாய் முடிதலேயன்றி வல்லெழுத்து மிக்குமுடியும் தம்மில் இயைந்து நிற்றலையுடைய மொழிகளும் உளவென்று சொல்லுவர்.

உ-ம். மீக்கோள், மீப்பல் எனவரும்.

'உடனிலை' என்றதனால், மீங்குழி, மீந்தோல் என மெல்லெழுத்துப்பெற்று முடிவனவும் கொள்க (சஎகூ)

உ௫௰. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது, அவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - ஈகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஆகாரவீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்துப்பெற்று முடியும்.

உ-ம். ஈக்கால்; சிறகு, தலை, புறம் எனவரும். (௫௰)

உ௫௧. நீயெ னொருபெய ருருபிய னிலையும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, அவ்வீற்று வேற்றுமை முடிபினுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—நீ என் ஒருபெயர் உருபு இயல் நிலையும்-நீ என நின்ற ஒரு பெயர் உருபு புணர்ச்சிக்கண் நெடுமுதல் குறுகி னகரவொற்றுப்பெற்று முடிந்த இயல்பின்கண்ணே நின்றுமுடியும்; அ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும் - அவ்வாறு முடிந்தவிடத்து இயைபுவல்லெழுத்து மிகாது.

உ-ம். நின்கை; செவி, தலை, புறம் எனவரும். (௫௧)

உ௫௨. உகர விறுதி யகர வியற்றே.

இஃது, உகரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—உகர இறுதி அகர இயற்று - உகரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் அகரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். கடுக்குறிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (௫௨)

உ௫௩. சுட்டின் முன்னரு மத்தொழிற் றாகும்.

இஃது, இவ்வீற்றுச்சுட்டு வன்கணத்தொடு கூடி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—சுட்டின் முன்னரும் அ தொழிற்று ஆகும் - உகாவீற்றுச் சுட்டின்முன்னரும் வல்லெழுத்து வரும்வழி அவ்வகரவீற்று அல்வழியின் தொழிற்றாய் வல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். உக்கொற்றன்; சாத்தன், தேவன், பூதன் எனவரும். (௫௩)

உ௫௪. ஏனவை வரினே மேனிலை யியல்பே.

இஃது, அவ்வீற்றுச்சுட்டு ஒழிந்த கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்.—ஏனவை வரின் மேல் நிலை இயல்பு - உகரவீற்றுச் சுட்டின்முன் ஒழிந்த கணம் வருமொழியாக வரின் மேல் அகரவீற்றுச்சுட்டு முடிந்து நின்ற நிலைமையின் இயல்பையுடையவாய் முடியும்.

உ-ம். உஞ்ஞாண், உந்நூல், உம்மணி எனவும்; உவ்யாழ், உவ்வட்டு எனவும்; உவ்வடை, உவ்வாடை, உவ்வௌவியம் எனவும்; ஊவயினை எனவும் வரும். (௫௪)

உருஎ. சுட்டுமுத லிறுதி யியல்பா கும்மே.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—சுட்டு முதல் இறுதி இயல்பாகும்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர வீற்றுப்பெயர் மேற்கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

உ-ம். அதுகுறிது, இதுகுறிது, உதுகுறிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (ருரு)

உருஅ. அன்றுவரு காலை யாவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப.

இஃது, இவ்வீற்றுச் சுட்டுமுதற்பெயர்க்கு ஓர் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—அன்று வருகாலை ஆ ஆகுதலும் - அதிகாரத்தான் நின்ற சுட்டுமுதல்உகர வீற்றுப்பெயர் அன்று என்னும்சொல் வருமொழியாய் வருங்காலத்து அவ்வுகரம் ஆகாரமாகித் திரிந்துமுடிதலும், ஐ வருகாலை மெய் வரைந்து கெடுதலும்-ஐ என்னும் சாரியை இடைவந்து முடியுங்காலத்து அவ்வுகரம் தான் ஊர்ந்த மெய்யை ஒழித்துக் கெட்டுமுடிதலும், செய்யுள் மருங்கின் உரித்து என மொழிப-அவ்விருமுடிபும் செய் யுட்கண் உரித்தென்று சொல்லுவர்.

உ - ம். அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன்றம்ம எனவும்; அதை மற்றம்ம, இதைமற்றம்ம, உதைமற்றம்ம எனவும் வரும். (ருசு)

உருகூ. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது, இவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - உகரவீற்றுப்பெயர் வேற் றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ்வகரவீற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். கடுக்காய்; செதிள்; தோல், பூ எனவரும். (ருஎ)

உசும. எருவுஞ் செருவு மம்மொடு சிவணித்
திரிபிட னுடைய தெரியுங் காலை
அம்மின் மகரஞ் செருவயிற் கெடுமே
தம்மொற் று மிகூஉம் வல்லெழுத் தியற்கை.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதியும் ஒன் றற்கு வல்லெழுத்தினொடு சாரியை விதியும் கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—எருவும் செருவும் அம்மொடு சிவணி திரிபு இடன் உடைய தெரியும் காலை - எரு என்னும் சொல்லும் செரு என்னும் சொல்லும் அம்முச்சாரியையொடு பொருந்தி முன் சொன்ன வேற்றுமைப் பொதுவிதியின் வேறுபட்டு முடியும் இடனு டைய ஆராயுங்காலத்து; அம்மின் மகரம் செருவயின் கெடும் - அவ்வம்முச்சாரியையது ஈற்றின் மகரம் செரு என்னும் சொல்லிடத்துக் கெட்டு முடியும்; வல்லெழுதது இயற்கை தம் ஒற்று மிகூஉம் - அவ்வாறு கெட்டவிடத்துச் செரு என்பது வல்லெழுத்தாகிய இயல்பையுடைய தமது ஒற்று மிக்கு முடியும்.

உ-ம். எருவங்குழி; சேறு, தாது, பூழி எனவும்: செருவக்களம்; சேனை, தானை, பறை எனவும் வரும்.

'தெரியுங்காலை' என்றதனால், எரு என்பதற்குப் பெரும்பான்மை மெல்லெழுத்துப்பேறும் சிறுபான்மை வல்லெழுத்துப்பேறும், செரு என்பதற்குச் சிறுபான்மை வல்லெழுத்துப்பேறும் கொள்க. எருங்குழி, எருக்குழி, செருக்களம் எனவரும்.

'வல்லெழுத்தியற்கை' என்றதனான், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி அவ்விருமொழிக்கும் அதிகார வல்லெழுத்துவீழ்வும் கொள்க. எருவின் கடுமை, செருவின்கடுமை எனவரும்.

இன்னும் அதனானே, 'அம்மொடு சிவணித் திரிபிட னுடைய' என வல்லெழுத்தின்கண்ணதாக வரைந்து கூறினமையின், அம்முச்சாரியை இயல்புகணத்துக்கண் பெறுவன கொள்க. எருவஞாற்சி, செருவஞாற்சி எனவரும். (ருஅ)

உசுக. ழகர வுகர நீடிட னுடைத்தே
உகரம் வருத லாவயி னான.

இஃது, இவ்வீற்றிற் சிலவற்றிற்குச் செய்யுளுள் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—ழகர உகரம் நீடு இடன் உடைத்து - இவ்வீற்றுமொழிகளுள் ழகரத் தொடுகூடிய உகரவீற்றுமொழி அவ்வுகரம் ஊகாரமாய் நீண்டு முடியும் இடன் உடைத்து; அ வயின் உகரம் வருதல் - அவ்விடத்து உகரம் வந்துமுடிக.

'இடனுடைத்து' என்றதனான், இது செய்யுளிடத்தெனக்கொள்க.

உ-ம். "பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி" எனவரும். (ருக)

உசுஉ. ஒடுமரக் கிளவி யுதிமர வியற்றே.

இஃது, இவ்வீற்று மரப்பெயருள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ - ள் :—ஒடு மரக்கிளவி உதிமர இயற்று-ஒடு என்னும் மரத்தினை உணர நின்ற சொல் உதி என்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்றுமுடியும்.

உ-ம். ஒடுங்கோடு; செதிள், தோல், பூ எனவரும். (சுo)

உசுங. சுட்டுமுத லிறுதி யுருபிய னிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—சுட்டு முதல் இறுதி உருபு இயல் நிலையும் - சுட்டெழுத்தினை முதலாக வுடைய உகரவீற்றுச் சொற்கள் உருபுபுணர்ச்சியிற்சொன்ன இயல்பிலே நின்று அன் சாரியை பெற்று உகரம் கெட்டு முடியும்; வல்லெழுத்து இயற்கை ஒற்று இடைமிகா-அவ்விடத்து வல்லெழுத்து இயற்கையாகிய ஒற்று இடைக்கண் மிகா.

உ-ம். அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

'ஒற்று இடைமிகா' என்றதனால், சாரியை வகுப்ப வல்லெழுத்து மிகாதென்பது பெற்றாம். 'வல்லெழுத்தியற்கை' என்றதனால், இவ்வீற்றுள் உருபிற்குச்சென்ற சாரி

யை பொருட்கண் சென்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. கடுவின்குறை, ஒடுவின் புறம் எனவரும். (௬௧)

உ௬௪. ஊகார விறுதி யாகார வியற்றே.

இஃது, ஊகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—ஊகார இறுதி ஆகார இயற்று - ஊகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். கொண்மூக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (௬௨)

உ௬௫. வினையெஞ்சு கிளவிக்கு முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை யவ்வகை வரையார்.

இஃது, இவ்வீற்று வினைச்சொல் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும் - ஊகாரவீற்று வினையெச்சமாகிய சொல்லிற்கும் முன்னிலைமொழியாகிய வினைச்சொல்லிற்கும், நினையும் காலை அவ்வகை வரையார் - ஆராயுங்காலத்து அவ்வல்லெழுத்து மிக்குமுடியும் கூற்றினை நீக்கார்.

உ-ம். உண்ணூக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்: கைதூக்கொற்றா; சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

'நினையுங்காலை' என்றதனான், இவ்வீற்று உயர்திணைப்பெயர் அல்வழிக்கண் வல்லெழுத்து மிக்கு முடிவனகொள்க. ஆடூஉக்குறியன், மகடூஉக்குறியள் எனவரும். (௬௩)

உ௬௬. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இஃது, ஊகாரவீறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-ஊகாரவீறு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் அவ்வாகாரவீற்று அல்வழியோடு ஒத்த இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். கொண்மூக்குழாம்; செலவு, தோற்றம், பறைவு எனவரும். (௬௪)

உ௬௭. குற்றெழுத் திம்பரு மோரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டு முகரக் கிளவி.

இஃது, இவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—குற்றெழுத்து இம்பரும் ஓர் எழுத்து மொழிக்கும் உகரக் கிளவி நிற்றல் வேண்டும் - குற்றெழுத்தின்பின் நின்ற ஊகாரவீற்றுமொழிக்கும் ஓரெழுத்தொரு மொழியாகிய ஊகாரவீற்றுமொழிக்கும் உகரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும்.

உ - ம். உடூஉக்குறை, தூஉக்குறை; செய்கை, தலை, புறம் எனவரும்.

'நிற்றல்' என்றதனால் இவ்வீற்று உயர்திணைப்பெயர் வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிக்கு முடிவனவென்பது. ஆடூஉக்கை, மகடூஉக்கை; செவி, தலை, புறம் எனவரும்.

உ௬அ. பூவெ னொருபெய ராயியல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே.

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்தும் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறுமென எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—பூ என் ஒரு பெயர் அ இயல்பு இன்று - பூ என்னும் ஊகாரவீற்றை யுடைய ஒரு பெயர் மேற்சொன்ன உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் அந்த இயல்பில்லாமையை உடைத்து. எனவே, வேறு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

ஆ வயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து - அவ்விடத்து அம்மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து.

மெல்லெழுத்துப் பெறுமென்றது, உரையிற் கோடலாற் கொள்ளப்பட்டது.

உ - ம். பூங்கொடி, பூக்கொடி ; செய்கை, தாமம், பந்து எனவரும். (சுசு)

உசுசு. ஊவெ னொருபெய ராவொடு சிவணும்.

இஃது, இன்னும் அவ்வீற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கி நிலைமொழி னகரம் பெறுமென எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—ஊ என் ஒரு பெயர் ஆவொடு சிவணும்-ஊ என்று சொல்லப்படும் ஊகாரவீற்றையுடைய ஒரு பெயர் ஆகாரவீற்றில் ஆ என்னும் சொல்லொடு பொருந்தி உகரமும் வல்லெழுத்தும் பெறாது நிலைமொழி னகரவொற்றுப் பெற்று முடியும்.

உ - ம். ஊன்குறை ; செய்கை, தலை, புறம் எனவரும். (சுஎ)

உஎ0. அக்கென் சாரியை பெறுதலு முரித்தே
தக்கவழி யறிதல் வழக்கத் தான.

இஃது, இன்னும் அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—அக்கு என் சாரியை பெறுதலும் உரித்து - அதிகாரத்தான் நின்ற ஊ என்னும் பெயர் மேற்கூறிய னகரத்தோடு அக்கு என்னும் சாரியை பெற்று முடிதலும் உரித்து; வழக்கத்தான் தக்க வழி அறிதல் - வழக்கிடத்து அம்முடிபு தக்க இடம் அறிக.

'தக்க வழியறிதல்' என்றதனால், சாரியை பெற்றவழி நிலைமொழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும் முன் மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாதுநிற்றலும் கொள்க.

உ - ம். ஊனக்குறை; செய்கை, தலை, புறம் எனவரும்.

'வழக்கத்தான' என்றதனான், இவ்வீற்றுஉருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. கொண்மூவின் குழாம் எனவரும். (சுஅ)

உஎக. ஆடூஉ மகடூஉ வாயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினு மான மில்லை.

இஃது, அவ்வீற்று உயர்திணைப்பெயர்க்கு முன் எய்திய வல்லெழுத்தேயன்றி, சாரியையும் பெறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஆடூஉ மகடூஉ அ இரு பெயர்க்கும்-ஆடூஉ மகடூஉவாகிய அவ்விரண்டு பெயர்க்கும், இன் இடை வரினும் மானம் இல்லை-மேல் "குற்றெழுத் திம்பரும்" [உயிர் மயங்கியல்-சுடு] என்னும் சூத்திரத்தின் "நிற்றல்" என்பதனால் வந்த வல்லெழுத்தேயன்றி இன்சாரியை இடை வரினும் குற்றம் இல்லை.

உ - ம். ஆடூஉவின்கை, மகடூஉவின்கை; செவி, தலை, புறம் என வரும்.

'மானமில்லை' என்றதனால், இன் பெற்றவழி மேல் இலேசினானெய்திய வல்லெழுத்து வீழ்க்க. (சுக)

உஎஉ. எகர வொகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய வென்மனார் புலவர்
தேற்றமுஞ் சிறப்பு மல்வழி யான.

இஃது, எகரவீற்றிற்கும் ஒகரவீற்றிற்கும் ஈறாகாத நிலையில் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்:—எகரம் ஒகரம் பெயர்க்கு ஈறு ஆகா-எகரமும் ஒகரமும் பெயர்ச்சொற்கு ஈறு ஆகா; முன்னிலை மொழிய என்மனார் புலவர் - வினைச்சொல்லுள் முன்னிலை மொழியிடத்தனவென்று சொல்லுவர் புலவர்; தேற்றமும் சிறப்பும் அல்வழியான்- தேற்றப்பொருண்மையில் வரும் இடைச்சொல் எகாரவீறும் சிறப்புப்பொருண்மையின் வரும் இடைச்சொல் ஒகாரவீறும் அல்லாதவிடத்து.

உ - ம். ஏஎ எனவும், ஓஒ எனவும் வரும். இவை முன்னிலைவினை.

ஏஎ கொண்டான், ஓஒ கொண்டான். இவை இடைச்சொல். (எ0)

உஎ௩. தேற்ற வெகரமுஞ் சிறப்பி னொவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத் துமிகா.

இது, முன் ஈறும் என்னப்பட்ட எகர ஒகர ஈற்று இடைச்சொற்கும் அவ்வீற்று முன்னிலைவினைச்சொற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும் - தேற்றப்பொருண்மையில் வரும் எகரவீற்று இடைச்சொல்லும் சிறப்புப்பொருண்மையில் வரும் ஒகரவீற்று இடைச்சொல்லும், மேல் கூறு இயற்கை வல்லெழுத்து மிகா-மேலை முன்னிலை வினைச்சொற்குக் கூறப்படும் இயல்புடைய வல்லெழுத்து மிகாவாய் இயல்பாய் முடியும்.

'மேற் கூறியற்கை வல்லெழுத்து மிகா' என்றதனால், "வந்தது கண்டு வாராதது உணர்க" என்னும் தந்திரவுத்திவகையான் வல்லெழுத்து மிகு மென்பது கூறப் பட்டதாயிற்று.

உ - ம். யானேஎ கொண்டேன், நீயேஎ கொண்டாய், அவனேஎ கொண்டான் எனவும்; ஓஒகொண்டேன், ஓஒகொண்டாய், ஓஒ கொண்டான் எனவும் வரும். இவை இடைச்சொல்.

ஏஎக்கொற்றா, ஓஒக்கொற்றா; சாத்தா, தேவா, பூதா எனவும் வரும். இவை முன்னிலைவினை. 'இயற்கை' என்றதனான், அம்முன்னிலைவினைகளை அளபெடையாக நிறீஇக்கொள்க. (எக)

உஎ௪. ஏகார விறுதி யூகார வியற்றே.

இஃது, ஏகாரவீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—ஏகார இறுதி ஊகார இயற்று - ஏகாரவீற்றுப்பெயர் அல்வழிக்கண் ஊகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ - ம். சேக்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும். (எஉ)

உஎ௫. மாறுகொ ளெச்சமும் வினவு மெண்ணும்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, அவ்வீற்று இடைச்சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—மாறுகொள் எச்சமும் வினவும் எண்ணும் - மாறுபாடுகோடலையுடைய எச்சப்பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும் வினப்பொருண்மைக் கண்வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும் எண்ணுப்பொருண்மைக்கண் வரும் ஏகார வீற்று இடைச்சொல்லும், கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும் - மேற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்.

உ-ம். யானே கொண்டேன்; சென்றேன், தந்தேன், போயினேன் எனவும்: நீயே கொண்டாய்; சென்றாய், தந்தாய், போயினாய் எனவும்: கொற்றனே சாத்தனே தேவனே பூதனே எனவும் வரும்.

'கூறிய' என்றதனால், பிரிநிலைப்பொருண்மைக்கண்ணும் ஈற்றசைக்கண்ணும் வரும் ஏகாரங்களின் இயல்புமுடிபு கொள்க.

அவனே கொண்டான் என்பது பிரிநிலை. கடலே பாடெழுந் தொலிக்கும் என்பது ஈற்றசை. (எ௩)

உஎசு. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே

இஃது, இவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று - ஏகாரவீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ்வூகாரவீற்று அவ்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ - ம். வேக்குடம்; சாடி, தூதை, பானை எனவரும். (எச)

உஎஎ. ஏயெ னிறுதிக் கெகரம் வருமே.

இஃது, அவ்வீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஏ என் இறுதிக்கு எகரம் வரும் - அவ்வேற்றுமைக்கண் ஏ என்னும் இறுதிக்கு எகரம் வரும்.

உ-ம். ஏஎக்கொட்டில்; சாலை, துளை, புழை எனவரும்.

'உரையிற்கோடல்' என்பதனான், அவ்வெகரப்பேறு பொருந்தினவழிக் கொள்க. (எ௫)

உஎஅ. சேவென் மரப்பெய ரொடுமர வியற்றே.

இஃது, அவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்:—சே என் மரப்பெயர் ஒடுமர இயற்று - சே என்னும் மரத்தினை உணர நின்ற பெயர் ஒடுமரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். சேங்கோடு; செதிள், தோல், பூ எனவரும். (எசு).

உஎகூ. பெற்ற மாயின் முற்றவின் வேண்டும்.

இஃது, அம்மரப்பெயரல்லாத சே என்பதற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்.—பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும் - மேற்கூறிய சே என்பது பெற்றத்தினை உணரநின்ற பொழுதாயின் முடிய இன்சாரியை பெற்று முடியவேண்டும்.

உ - ம். சேவின் கோடு ; செவி, தலை, புறம் எனவரும்.

'முற்ற' என்றதனான் இச் சே என்பது எடுத்தோத்தான் இன் பெற்றவழியும், அதுவே மரப்பெயராய் உருபிற்கு எய்திய சாரியைஇன் பெற்றவழிடம், பிறசொல் அவ்வாறு இன் பெற்றவழியும் இயைபுவல்லெழுத்து வீழ்க்க.

உ-ம். சேவின்கோடு ; செவி, தலை, புறம் எனவும்; சேவின்கோடு;செதிள் தோல், பூ எனவும்: ஏவின்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும். (எஎ)

உ அக. ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது, ஐகாரவீற்று அல்வழிமுடிபு தொகைமரபினுட் கூறிநின்றமையின் அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்.—ஐகார இறுதிப் பெயர்நிலைமுன்னர் - ஐகாரவீற்றுப் பெயர்ச்சொல்முன்னர், வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகும் - அதிகாரத்தாற் க ச த ப முதல் மொழி வந்தவழி வேற்றுமைப்பொருட்புணர்ச்சியில் தமக்குப்பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். யானைக்கோடு; செவி, தலை, புறம் எனவரும். (எஅ)

உ அஉ. சுட்டுமுத விறுதி யுருபிய னிலையும்.

இஃது, இவ்வீற்றுட் சுட்டுமுதற்பெயர்க்கு வல்லெழுத்தொடு வற்று வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—சுட்டு முதல் இறுதி உருபு இயல் நிலையும் - சுட்டெழுத்தினை முதலாக வுடைய ஐகாரவீற்றுப்பெயர் உருபுபுணர்ச்சியிற் கூறிய இயல்பின்கண்ணே நின்று ஐகாரம் கெடாதும் கெட்டும் வற்றுப்பெற்று முடியும். [உருபியல் சூத் - ரு பார்க்க]

உ - ம். அவையற்றுக்கோடு, இவையற்றுக்கோடு, உவையற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவும்: அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவும் வரும். (எகூ)

உ அரு. விசைமரக் கிளவியு ஞெமையு நமையும்
அவைமுப் பெயருஞ் சேமர வியல.

இஃது, இவ்வீற்றுள் மரப்பெயர் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—விசை மரக்கிளவியும் ஞெமையும் நமையும் அவை முப்பெயரும் - விசை என்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும் ஞெமை என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லும் நமை என்னும் மரத்தினை உணரநின்ற சொல்லும் ஆகிய அம் மூன்று பெயரும், சேமர இயல - மேற்கூறிய வல்லெழுத்துமிகாது சே என்னும் மரத்தினது இயல்பினவாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு; செதிள், தோல், பூ என வரும். (அய)

உ அச. பனையு மரையு மாவிரைக் கிளவியும்
நினையுங் காலை யம்மொடு சிவணும்
ஐயெ னிறுதி யரைவரைந்து கெடுமே
மெய்யவ ணொழிய வென்மனார் புலவர்.

இதுவும் அது.

இ-ள் :—பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்-பனை என்னும் சொல்லும் அரை என்னும் சொல்லும், ஆவிரை என்னும் சொல்லும் நினையுங்காலை அம்மொடு சிவணும்-ஆராயுங்காலத்து மேற்கூறிய வல்லெழுத்து மிகாது அம் என்னும் சாரியையொடு பொருந்தி முடியும். ஐ என் இறுதி அரை வரைந்துகெடும் - அவ்விடத்து ஐ என்னும் ஈறு அரை என்னும் சொல்லை நீக்கிக் கெடும், மெய் அவண் ஒழிய என்மனார் புலவர் - தன்னானூரப்பட்ட மெய் அச்சொல்லிடத்தே ஒழியவென்று சொல்லுவர் புலவர்.

உ-ம். பனங்காய்; செதிள், தோல், பூ எனவும்: அரையங்கோடு; செதிள், தோல், பூ எனவும்: ஆவிரங்கோடு; செதிள், தோல், பூ எனவும் வரும்.

'நினையுங்காலை' என்றதனால், பிறவும் தூதுணை, வழுதுணை, தில்லை, ஓலை எனவருவனவற்றிற்கும் அம்முக்கொடுத்து ஐகாரம்கெடுத்துத் தூதுணங்காய், வழுதுணங்காய் தில்லங்காய், ஓலம்போழ் என்று முடிக்க. (அக)

உ அடு. பனையின் முன்ன ரட்டுவரு காலை
நிலையின் றாகு மையெ னுயிரே
ஆகாரம் வருத லாவயி னான.

இதுவும் அது.

இ-ள் :—பனையின்முன்னர் அட்டு வருகாலை - மேற்கூறிய வழியேயன்றி பனை என்னும் சொல்லின்முன்னர் அட்டு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலை இன்றாகும் ஐ என் உயிர் - நிற்றல் இன்றாம் ஐ என்னும் உயிர்; அ வயின் ஆகாரம் வருதல் - அவ்விடத்து ஆகாரம் வந்து அம்மெய்ம்மேல் ஏறிமுடிக.

உ-ம். பனாஅட்டு எனவரும்.

'ஆவயின்' என்றதனால், விச்சாவாதி என்றாற்போல்வனவற்றது வேற்றுமை முடிபுகொள்க. (அஉ)

உ அசு. கொடிமுன் வரினே யையவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி.

இதுவும் அது.

இ-ள் :—கொடி முன் வரின்-கொடி என்னும் சொல் பனை என்னும் சொல்முன்னர்வரின், ஐ அவண் நிற்ப வல்லெழுத்து மிகுதி கடிநிலை இன்று-மேற் கெடும் எனப்பட்ட ஐகாரம் ஆண்டுக் கெடாதே நிற்ப வல்லெழுத்துமிகுதி நீக்கும் நிலைமையின்று.

உ - ம். பனைக்கொடி எனவரும்.

'கடிநிலை' என்றதனான், இவ்வீற்றுள் எடுத்தோத்தானும் இலேசினானும் அம்முச் சாரியையும் பிறசாரியையும் பெற்றவழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. இன்னும் இதனானே, உருபிற்குச் சென்ற சாரியை பொருட்குச் சென்றவழியும் இயைபுவல் லெழுத்து வீழ்க்க. பனையின்காய், அரையின்கோடு, ஆவிரையின்கோடு எனவும்; விசை

யின்கோடு, ஞெமையின்கோடு, நமையின்கோடு எனவும்; தூதுணையின்காய், வழுதுணை யின்காய் எனவும்; வழையின்கோடு, வழையின்பூ எனவும் வரும். 'அவண்' என்றதனால், பனைத்திரள் என வல்லெழுத்துப்பேறும்கொள்க. (அரு)

உஅஎ. திங்களு நாளு முந்துகிளந் தன்ன.

இஃது, இயைபுவல்லெழுத்தினொடு சாரியைப்பேறும் வல்லெழுத்துவிலக்கிச் சாரியைப்பேறும் கூறுகின்றமையின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் எய்தியதுவிலக் கிப் பிறிதுவிதியும் வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—திங்களும் நாளும் முந்து கிளந்த அன்ன - ஐகாரவீற்றுத் திங்களை உணரநின்ற பெயரும் அவ்வீற்று நாளை உணரநின்ற பெயரும் முன் இகரவீற்றுத் திங்களும் நாளும் கிளந்த தன்மையவாய் இக்கும் ஆனும் பெற்று முடியும்.

உ - ம். சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண்டான்; சென்றான் தந்தான், போயினான் எனவரும்.

நாள் முன்கூறாது திங்கள் முன்கூறியவதனால், கரியவற்றுக்கோடு எனவும்; அவை யத்துக்கொண்டான் எனவும்; வழைங்கோடு, வழைக்கோடு எனவும்; கலைங்கோடு, கலைக் கோடு எனவும் இவ்வீற்று முடியாதன வெல்லாம் கொள்க. (அசு)

உஅஅ. மழையென் கிளவி வளியிய னிலையும்.

இஃது, இயைபுவல்லெழுத்தினோடு அத்துப்பேறும் வல்லெழுத்து விலக்கி இன் னும் வகுக்கின்றமையின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் எய்தியதுவிலக்கிப் பிறிது விதியும் கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—மழை என் கிளவி வளி இயல் நிலையும்-மழை என்னும் ஐகார வீற்றுச் சொல் இகரவீற்று வளி என்னும் சொல் அத்தும் இன்னும் பெற்று முடிந்த இயல்பின் கண்ணே நின்று முடியும்.

உ-ம். மழையத்துக் கொண்டான், மழையிற்கொண்டான்; சென்றான், தந்தான் போயினான் எனவரும். (அஎ)

உஅகூ. செய்யுண் மருங்கின் வேட்கை யென்னும்
ஐயெ னிறுதி யவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுத லென்மனார் புலவர்
டகார ணகார மாதல் வேண்டும்.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண் செய்யுள் முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்:—செய்யுள் மருங்கின் வேட்கை என்னும் ஐ என் இறுதி - செய்யுளிடத்து அல்வழிக்கண் வேட்கை என்னும் ஐகார வீற்றுச்சொல், அவா முன்வரின்-அவா என் னும் சொல் தனக்கு முன்னர் வரின், மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்-அவ் வைகாரம் தான் ஊர்ந்த மெய்யொடுங்கூடக் கெடுமென்று சொல்லுவர் புலவர்; டகா ரம் ணகாரம் ஆதல் வேண்டும்-அவ்விடத்து நின்ற டகாரவொற்று ணகாரவொற்றாய்த் திரிந்துமுடிதல் வேண்டும்.

உ - ம். 'வேணவா நலிய வெய்ய வுயிரா" எனவரும். இதனை உம்மைத் தொகைபாகக்கொள்க. அவாவென்பது அவ்வேட்கையின் மிகுதி.

இவ்வல்வழியை வேற்றுமை முடிபிற்கு முன் கூறுதலால் விச்சாவாதி என்றாற் போல வரும் உம்மைத்தொகை அல்வழி முடிபும், பாறங்கல் என இருபெயரொட்டு அல்வழி முடிபும் கொள்க. (அசு)

உகூ0. ஓகார விறுதி யேகார வியற்றே.

இஃது, ஓகாரவீற்று அல்வழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—ஓகார இறுதி ஏகார இயற்று-ஓகாரவீற்று அல்வழிப்பெயர்ச்சொல் ஏகாரவீற்று அல்வழி இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ - ம். ஓக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (அஎ)

உகூக. மாறுகொ ளெச்சமும் வினாவு மையமும்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்று இடைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்-மாறுபாட்டினைக்கொண்ட எச்சப்பொருண்மையினையுடைய ஓகாரமும் வினாப்பொருண்மையையுடைய ஓகாரமும் ஐயப்பொருண்மையினையுடைய ஓகாரமும், கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்-முன் பெயர்க்குக் கூறிய வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்.

உ-ம். யானோகொண்டேன் எனவும், நீயோகொண்டாய் எனவும், பத்தோபதினொன்றோ எனவும் வரும்.

'கூறிய' என்றதனால், பிரிநிலையும் தெரிநிலையும் சிறப்பும் எண்ணும் ஈற்றசையும் இயல்பாய் முடிதல் கொள்க. அவனோகொண்டான் எனவும், நன்றோதீதோவன்று எனவும், ஓஒ கொண்டான் எனவும், "குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளை மாவென்கோ" எனவும், யானோதேறேன் எனவும் வரும். (அஅ)

உகூஉ. ஒழிந்தத னிலையு மொழிந்தவற் றியற்றே.

இதுவும் அது.

இ - ள் :—ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்று இயற்று-ஒழியிசை ஓகாரத்தினது நிலையும் மேற்சொல்லியொழிந்த ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய்முடியும்.

உ-ம். கொளலோகொண்டான் எனவரும். (அகூ)

உகூ௩. வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே
ஒகரம் வருத லாவயி னான.

இஃது, அவ்வீற்று வேற்றுமை முடிபுகூறுதல் நுதலிற்று.

இ - ள் :—வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-ஓகாரவீற்று வேற்றுமைக்கண்ணும் அவ்வோகாரவீற்று அல்வழியோடொத்து வல்லெழுத்துப்பெற்றுப் புணரும். ஆவயின் ஒகரம் வருதல்-அவ்விடத்து ஒகரம் வருக.

உ-ம். ஓஒக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவரும். (கூ0)

உகூ௪. இல்லொடு கிளப்பி னியற்கை யாகும்.

இஃது, எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ - ள் :—இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும்-ஓகாரவீற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழியொடு சொல்லின் ஓகாரம் மிகாது இயல்பாய் முடியும்.

உ - ம். கோயில் எனவரும்.

நிலைமொழி ஒகரவெழுத்துப்பேறும் வரையாது கூறினவழி நான்கு கணத்துக்கண்ணும் செல்லுமென்பதனாற் பெற்றாம். கோவென்றது உயர்திணைப்பெயரன்றோ வெனின், கோவந்ததென அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப்பாற் பட்டது போலும். (௧௧)

௨௬௫. உருபிய னிலையு மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது, அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—உருபு இயல் நிலையும் மொழியும் உள-அவ்வீற்றுட் சில உருபுபுணர்ச்சியது இயல்பிலே நின்று ஒன்சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள; அவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்-அவ்விடத்து வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்.

உ - ம். கோஒன்கை; செவி, தலை, புறம் எனவரும்.

இதனானும் பெற்றாம், சாரியைப்பேறு வருமொழி வல்லெழுத்து விலக்காமை. (௧௨)

௨௬௬. ஒளகார விறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு வீற்றும் உகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே.

இஃது, ஒளகாரவீறு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—ஒளகார இறுதி பெயர்நிலை முன்னர் அல்வழியானும் வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து மிகுதல் வரைநிலை இன்று-ஒளகாரவீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் வல்லெழுத்துமுதல்மொழி வரின் அவை அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து மிக்குமுடிதல் நீக்கும் நிலையின்றாம். அ இரு ஈற்றும் உகரம் வருதல் செவ்விது என்ப சிறந்திசினோர்-அவ்விருகூற்று முடிபின்கண்ணும் நிலைமொழிக்கண் உகரம் வந்துமுடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோர்.

உ - ம். கௌவுக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்: கௌவுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

'செவ்விது' என்றதனான், மென்கணத்துக்கண்ணும் இடைக்கணத்துக்கண்ணும் இருவழியும் உகரப்பேறுகொள்க. கௌவுஞான்றது, கௌவுஞாற்சி எனவும்; கௌவு வலிது, கௌவு வலிமை எனவும்வரும்.

'நிலை' என்றதனால், கௌவின்கடுமை என உருபிற்குச்சென்றசாரியை பொருட் கண் சென்றவழி, இயைபுவல்லெழுத்து வீழ்வுகொள்க. (௧௩)

ஏழாவது-உயிர்மயங்கியல் முற்றிற்று.

எட்டாவது - புள்ளிமயங்கியல்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், புள்ளியீறு வன்கணத்தோடும் சிறு பான்மை பிறகணத்தோடும் மயங்கிப்புணரும் இயல்பு உணர்த்தினமையின் புள்ளிமயங் கியல் என்னும் பெயர்த்து.

உகஎ. ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே
உகரம் வருத லாவயி னான.

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோவெனின், ஞகாரவீறு வன்கணத்தோடு இரு வழிக்கண்ணும் புணருமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்-ஞகாரம் ஈற்றின்கண் ஒற் றாகநின்ற தொழிற்பெயரின்முன்னர், அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்- அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைக்கண்ணும், வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகும் - வல்லெழுத்துமுதல்மொழி வருமொழியாய் இயையின் வல் லெழுத்துவருமொழிக்கண் மிக்குமுடியும். அ வயின் உகரம் வருதல் - ஆண்டு நிலைமொ ழிக்கண் உகரம் வருக.

உ-ம். உரிஞுக்கடிது; சிறிது, தீது, பெரிது என்வும்: உரிஞுக்கடுமை ; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும். (க)

உகஅ. ஞநமவ வியையினு முகர நிலையும்.

இஃது, அவ்வீறு மென்கணத்தோடும் இடைக்கணத்துவகரத்தோடும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஞ ந ம வ இயையினும் உகரம் நிலையும்-அந்த ஞகாரவீறு வன்கணமன்றி ஞ ந ம வ முதன்மொழி வருமொழியாய் இயையினும் நிலைமொழிக்கண் உகரம் நிலை பெற்று முடியும்.

உ - ம். உரிஞுஞான்றது; நீண்டது, மாண்டது எனவும்: உரிஞுநாற்சி; நீட்சி, மாட்சி எனவும்: உரிஞுவலிது; வலிமை எனவும்வரும்.

இடைக்கணத்து யகரத்தோடும் உயிரோடும் புணருமாறு தொகைமரபினுள் "உகர மொடு புணரும் புள்ளி யிறுதி" [சூத்-உக] என்பதனுட் கூறப்பட்டது. (உ)

உகக. நகர விறுதியு மதனோ ரற்றே.

இது, நகரவீறு மேற்கூறிய கணங்களோடு ஒருவழிமுடியுமாறு கூறுதல்நுதலிற்று.

இ - ள்:—நகர இறுதியும் அதன் ஓர் அற்று-நகரவீற்றுப்பெயரும் மேற்கூறிய கணங் களொடு புணரும்வழி அஞ்ஞகாரவீற்றோடு ஓர் இயல்பிற்றாய்முடியும்.

உ - ம். பொருநக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்: பொருந ஞான்றது; நீண்டது, மாண்டது எனவும் : பொருநவலிது எனவும் ஒட்டுக. (௩)

௩௱. வேற்றுமைக் குக்கெட வகர நிலையும்.

இஃது, அவ்வீற்றுவேற்றுமைக்கண் நிலைமொழிமுடிபு வேறாய் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—வேற்றுமைக்கு உ கெட அகரம் நிலையும்-அந்நகரவீறு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் எய்திய நிலை மொழி உகரம் கெட அகரம் நிலைபெற்று முடியும்.

உ - ம். பொருநக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும்: பொருநஞாற்சி; நீட்சி, மாட்சி எனவும்: பொருநவலுமை எனவும் வரும்.

'அகரம்நிலையும்' என்றது 'உகரங்கெட' என்றதனான், அவ்விருவீற்றின் உருபிற்குச் சென்றசாரியை பொருட்கண்சென்றவழி இயைபுவல்லெழுத்துவீழ்வும் சிறுபான்மை உகரப்பேறும் கொள்க. பொருநின்குறை, உரிஞின்குறை எனவும்; "உயவல் யானை பொருநச்சென் றன்ன" [அகம்-௬௫] எனவும் வரும். (௪)

௩௱க. வெரிநெ னிறுதி முழுதுங் கெடுவழி
வருமிட னுடைத்தே மெல்லெழுத் தியற்கை.

இஃது, அந்நகரவீற்று ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—வெரிந் என் இறுதி முழுதும் கெடுவழி-வெரிந் என்றுசொல்லப்படும் நகரவீற்றுமொழி தன் ஈற்றுநகரம் முன்பெற்ற அகரத்தோடு எஞ்சாமற்கெட்டவிடத்து, மெல்லெழுத்து இயற்கை வரும் இடன் உடைத்து - மெல்லெழுத்துப் பெறும் இயல்பு வந்து முடியும் இடனுடைத்து.

உ - ம். வெரிங்குறை; செய்கை, தலை, புறம் எனவரும். (௫)

௩௱உ. ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே.

இஃது, இன்னும் அம்மொழிக்கு எய்தியதோர் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—அ வயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து-அவ்வெரிந் என்னும்சொல் அவ்வாறு ஈறு கெட்டுநின்றவிடத்து மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து.

உ - ம். வெரிக்குறை; செய்கை, தலை, புறம் எனவரும்.

ஞகாரவீற்றொடு நகாரவீறு ஒத்தமுடிபிற் றாதலின் உடன்கூறப்பட்டது. (௬)

௩௱௩. ணகார விறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது, ணகாரவீறு வேற்றுமைப்பொருட்கண் புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்:—ணகார இறுதி வல்லெழுத்து இயையின்-ணகாரவீற்றுப்பெயர் வல்லெழுத்துமுதன்மொழி இயையின், டகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கு-டகாரமாய் முடியும் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்.

உ - ம். மட்குடம்; சாடி, தூதை, பானை எனவரும். (௭)

௩௱௪. ஆணும் பெண்ணு மஃறிணை யியற்கை.

இஃது, அவ்வீற்றுவிரவுப்பெயருட் சிலவற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வருத்தல் நுதலிற்று.

இ - ள்:—ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை-ஆண் என்னும்பெயரும் பெண் என்னும்பெயரும் மேல் தொகைமரபினுள் "மொழிமுத லாகும்" [சூத்திரம்·ரு] என்பதன்கண் அஃறிணைப்பெயர் முடிந்த இயல்புபோல் தாம் வேற்றுமைக்கண் இயல்பாய் முடியும்.

உ - ம். ஆண்கை, பெண்கை; செவி, தலை, புறம் எனவரும்.

மற்றிது தொகைமரபினுள் "அஃறிணை விரவுப்பெயர்" [சூத்திரம்-௰௩] என்பதனுள் இயல்பாய் முடிந்ததன்றோ வெனின், இவை ஆண்டுமுடிந்தனபோலத் தத்தம் மரபின் வினையாற் பாலறியப்படுவனவன்றி, இருதிணைக்கண்ணும் அஃறிணையாய் முடிதலின் அவ்வஃறிணைப்பெயரது இயல்போடு மாட்டெறிந்து முடித்தான் எனக்கொள்க. இவ்வாறாதலின், ஆண்கடிது பெண்கடிது என்னும் அல்வழியும் "மொழிமுத லாகும்" [தொகைமரபு-ரு] என்பதனுட் கொள்ளப்படும். (அ)

௩௱ரு. ஆண்மரக் கிளவி யரைமர வியற்றே.

இது, திரிபுவிலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—ஆண் மரக் கிளவி அரை மர இயற்று - ஆண் என்னும் மரத்தை உணர நின்ற பெயர்ச்சொல் அரை மரம் அம்முப்பெறும் இயல்பிற்றாய்த் தானும் அம்முப் பெற்று முடியும்.

உ - ம். ஆணங்கோடு; செதிள், தோல், பூ எனவரும். (கூ)

௩௱௬. விண்ணென வரூஉங் காயப் பெயர்வயின்
உண்மையு முரித்தே யத்தென் சாரியை
செய்யுண் மருங்கிற் றொழில்வரு காலை.

இது, செய்யுளுள் திரிபு விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—விண் என வரும் காயப் பெயர்வயின் - விண் என்று சொல்லவருகின்ற ஆகாயத்தை உணர நின்ற பெயர்க்கண், அத்து என்னும் சாரியை உண்மையும் உரித்து-அத்து என்னும் சாரியை உண்டாதலும் உரித்து இல்லையாதலும் உரித்து, செய்யுள் மருங்கின் தொழில் வரு காலை-செய்யுளிடத்து வினை வரும் காலத்து.

உ - ம். விண்ணத்துக் கொட்கும் எனவும், "விண்குத்து நீள்வரை" [நாலடி-௨௨௬] எனவும் வரும். (௰)

௩௱௭. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி உகரமும் வல்லெழுத்தும் வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—தொழிற் பெயரெல்லாம் தொழிற் பெயர் இயல-ணகாரவீற்றுத் தொழிற் பெயரெல்லாம் அவ்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத்தொழிற் பெயரது இயல்பாய் வன்கணம் வந்தவழி வல்லெழுத்தும் உகரப்பேறும் மென்கணமும் இடைக்கணத்துவகரமும் வந்தவழி உகரமும் பெற்றுமுடியும்.

உ-ம். மண்ணுக்கடிது எனவும்; மண்ணுக்கடுமை எனவும்; மண்ணுஞான்றது, மண்ணுஞாற்சி எனவும்; மண்ணுவலிது, மண்ணுவலிமை எனவும் இருவழியும் ஒட்டுக.

'எல்லாம்' என்றதனான், தொழிற்பெயரல்லனவும் உகரமும் வல்லெழுத்தும் பெறுவன கொள்க. வெண்ணுக்கரை, எண்ணுப்பாறு, மண்ணுச்சோறு எனவரும். (௰௧)

௩௱அ. கிளைப்பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—கிளைப் பெயரெல்லாம் கொள திரிபு இல - ணகாரவீற்றுள் ஓர்இனத்தை உணரநின்ற பெயரெல்லாம் திரிபுடையவென்று கருதும்படியாகத் திரிதலுடையவன்றி இயல்பாய் முடியும்.

உ-ம். உமண்குடி; சேரி, தோட்டம், பாடி எனவரும்.

'எல்லாம்' என்றதனான், இவ்வீற்றுச் சாரியை பெற்று முடிவனவும் இயல்பாய் முடிவனவும் கொள்க. மண்ணக்கடி, எண்ணநோலை எனவும்; பாண்கால், கவண்கால் எனவும் வரும்.

'கொள' என்றதனான், இவ்வீற்று ஏழாம் வேற்றுமைப்பொருண்மை உணர நின்ற இடைச்சொல் திரிந்து முடிவனகொள்க. அங்கட்கொண்டான், இங்கட்கொண்டான், உங்கட்கொண்டான் எனவும்; ஆங்கட்கொண்டான், ஈங்கட்கொண்டான், ஊங்கட்கொண்டான் எனவும்; அவட்கொண்டான், இவட்கொண்டான், உவட்கொண்டான் எனவும் ஒட்டுக.

['மண்ணக்கடி' என்பதில் அக்குச்சாரியையும் 'எண்ணநோலை' என்பதில் அம்முச்சாரியையும் வந்தன.] (௰௨)

௩௱௯. வேற்றுமை யல்வழி யெண்ணெ னுணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே.

இஃது, அவ்வீற்றுள் ஒன்று அல்வழியுள் வேற்றுமைமுடிபுபோலத் திரிந்துமுடிவது கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமை அல்வழி - வேற்றுமையல்லாதவிடத்து, எண் என் உணவுப் பெயர் - எண் என்று சொல்லப்படுகின்ற உணவினைபுணர்த்தும் பெயர், வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்து - வேற்றுமையது திரிந்துமுடியும்இயல்பு நிற்றலும் உரித்து.

உ-ம். எட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

உம்மையால், எண்கடிது என்று இயல்பாதலே பெரும்பான்மை. (௰௩)

௩௱௰. முரணென் றொழிற்பெயர் முதலிய னிலையும்.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயருள் ஒன்றற்குத் தொழிற்பெயர்முடிபு விலக்கி இவ்வீற்று அல்வழி முடிபும் வேற்றுமை முடிபும் கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—முரண் என் தொழிற்பெயர் முதல் இயல் நிலையும்-முரண் என்று கூறப்படும் தொழிற்பெயர் இவ்வீற்றிற்கு இருவழியும் முன்கூறிய இயல்பும் திரிபுமாகிய இயல்பின்கண்ணே நின்று முடியும்.

உ-ம். முரண்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்: முரட்கடுமை; சேனை, தானை, பறை எனவும் வரும்.

இதனைத் "தொழிற்பெய ரெல்லாம்" [சூத்திரம்-௰க] என்பதன்பின் வையாத முறையன்றிய கூற்றினான், முாண்கடுமை என்னும் இயல்பும், ஆண்கடுமை, அரட்கடுமை என்னும் உறழ்ச்சியும் கொள்க. (௰௪)

௩௰க. மகர விறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.

இது, மகரவீற்றிற்கு மேற்கூறிய ணகரவீற்று வேற்றுமைமுடிபோடு இயைய வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மகர இறுதி வேற்றுமையாயின்-மகரவீற்றுப் பெயர்ச்சொல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணாயின், துவரக் கெட்டு வல்லெழுத்து மிகும்-அம்மகரம் முற்றக்கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். மரக்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

'துவர' என்றதனான், இயல்புகணத்துக்கண்ணும் உயர்திணைப்பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் மகரக்கேடு கொள்க.மரஞாண், - நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும்; நங்கை; எங்கை,- செவி, தலை, புறம் எனவும்; நுங்கை, தங்கை எனவும் வரும், (௰௫)

௩௰உ. அகர ஆகாரம் வருஉங் காலை
ஈற்றுமிசை யகர நீடலு முரித்தே.

இஃது, அவ்வீற்றுமுடிபு வேற்றுமையுடையன கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அகரம் ஆகாரம் வருங்காலை - அகரமுதல்மொழியும் ஆகாரமுதல்மொழியும் வருமொழியாய் வருங்காலை, ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்து - நிலைமொழிக்கண் ஈற்றின்மேல்நின்ற அகரம் நீளாது நிற்பதேயன்றி நீண்டுமுடிதலும் உரித்து.

உ-ம். மராஅடி, குளாஅம்பல் எனவும்; மரவடி, குளவாம்பல் எனவும் வரும்.

வருமொழி முற்கூறியவதனான், இவ்வீற்றுட் பிறவும் வேறுபாட்டின் முடிபு கொள்க. கோணகோணம், கோணவட்டம் எனவரும்.

முன்னர்ச் "செல்வழியறிதல்" [சூத்-௰௭] என்பதனால், குளாஅம்பல் என்புழி வருமொழி ஆகாரக்குறுக்கமும், கோணகோணம் என்புழி வருமொழி வல்லெழுத்துக் கேடும் கொள்க.

[கோணகோணம், கோணவட்டம் என்பனவற்றுள் கோணத்துட்கோணம் கோணத்துள் வட்டம் என ஏழனுருபுவிரிக்க.] (௰௬)

௩௰௩. மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான.

இஃது, இவ்வீற்றுட்சிலவற்றிற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மெல்லெழுத்து உறழும் மொழியும் உள - மெல்லெழுத்தோடு உறழ்ந்து முடியும் மொழிகளும் உள; வழக்கத்தான் செல்வழி அறிதல்-வழக்கின்கண் அவைவழங்கும் இடம் அறிக.

உ-ம். குளங்கரை, குளக்கரை; சேறு, தாது, பூழி எனவரும்,

'செல்வழியறிதல்' என்றதனால், குளங்கரை, குளக்கரை என்றதுபோல, அல்லன ஒத்த உறழ்ச்சியல்ல வென்பதுகொள்க. 'வழக்கத்தான' என்றதனான், இவ்வீற்று வேற்றுமைக்கண் முடியாதனவெல்லாம் முடித்துக்கொள்க. இலவங்கோடு எனவும், புலம்புக்கனனே எனவும், நிலத்துக்கடந்தான் எனவும் வரும். (௰௭)

௩௰௮. இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ-ள்:—இல்லம் மரப்பெயர் விசை மர இயற்று-இல்லம் என்னும் மரத்தினையுணர நின்றபெயர் விசையென்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். இல்லங்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

இதன்கண் மகரக்கேடு முன்னர் "எல்லாம்" (சூத்திரம் - ௧௧) என்பதனாற் கொள்க. (௰௮)

௩௰௯. அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்.

இஃது, அவ்வீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அல்வழி எல்லாம் மெல்லெழுத்து ஆகும் - மகரவீறு அல்வழிக்கணெல்லாம் மெல்லெழுத்தாய்த் திரிந்துமுடியும்.

உ-ம். மரங்குறிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

'எல்லாம்' என்றதனான், இவ்வீற்று அல்வழிமுடிபில் முடியாதனவெல்லாம் கொள்க. மரஞான்றது; நீண்டது, மாண்டது எனவும்: வட்டத்தழை, வட்டப்பலகை எனவும்: கலக்கொள், கலநெல் எனவும்: நீலக்கண், பவளவாய் எனவும்: நிலநீர் எனவும்: கொல்லுங்கொற்றன், பறக்குநாரை எனவும் வரும். (௰௧)

௩௰௧. அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இஃது, இவ்வீற்றுள் மரூஉ முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அகம் என் கிளவிக்கு கை முன்வரின் - அகம் என்னும் சொல்லிற்கு கை என்னும் சொல் முன்வரின், முதல்நிலை ஒழிய முன்னவை கெடுதலும் - முன் "மகர விறுதி" [சூத்திரம்-௧௫] என்றதனான் மகரம் கெட்டுநின்ற நிலைமொழி முதல்நின்ற அகரம் ஒழிய அதன்முன்நின்ற அகரமும் அகரத்தாற்பற்றப்பட்ட ககரமெய்யும் கெட்டுமுடிதலும் அவைகெடாதுநின்று முடிதலும், வரைநிலை இன்று ஆசிரியர்க்கு - நீக்கும் நிலைமையின்று ஆசிரியர்க்கு; அவயின் மெல்லெழுத்து மிகுதல்-அவ்விரண்டிடத்தும் மெல்லெழுத்து மிக்குமுடிக.

உ-ம். அங்கை, அகங்கை எனவரும். [ஒழிய-தவிர.] (௨௰)

௩௰௭. இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யு ளான.

இஃது, அவ்வீற்று உரிச்சொல்லுள் ஒன்றற்குச் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள். இலம் என் கிளவிக்கு படு வருகாலை - இலம் என்னும் சொல்லிற்குப் படு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலையலும் உரித்து செய்யுளான் - முன் "மகரவிறுதி" [சூத்திரம்-கரு] என்பதனாற் கெட்ட ஈறுகெடாது நின்று முடிதலும் உரித்துச் செய்யுட்கண்.

உ-ம். "இலம்படு புலவ ரேற்றகை நிறைய" என வரும்.

உரிச்சொல்லாகலான் உருபுவிரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவரென்னும் பொருள் உணர நிற்றலின், வேற்றுமை முடிபாயிற்று. உம்மை மகரவீறு என்னும் சாதியொருமை பற்றிவந்த எதிர்மறை. (உக)

௨௱௪௮. அத்தொடு சிவணு மாயிரத் திறுதி
ஒத்த வெண்ணு முன்வரு காலை.

இஃது, இவ்வீற்று எண்ணுப்பெயருள் ஒன்றற்குத் தொகைமரபினுள் எய்திய ஏ என்சாரியை விலக்கி அத்து வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—ஆயிரத்து இறுதி-ஆயிரம் என்னும் எண்ணுப்பெயரின் மகரமெய், ஒத்த எண் முன் வருகாலை - தனக்கு அகப்படு மொழியாய்ப் பொருந்தின எண்ணுப்பெயர். தன்முன் வருங்காலத்து, அத்தொடு சிவணும் - தொகைமரபிற்கூறிய ஏ என் சாரியை ஒழித்து அத்துச்சாரியை பொருந்திமுடியும்.

உ-ம். ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு; மூன்று, நான்கு என ஒட்டுக.

நிலைமொழி முற்கூறாது சாரியை முற்கூறியவதனான், இதன்முன்னர்க் குறை, கூறு, முதல் என்பன வந்தவழியும் இம்முடிபு கொள்க. ஆயிரத்துக்குறை,- கூறு, முதல் என ஒட்டுக. (உஉ)

௨௱௪௯. அடையொடு தோன்றினு மதனோ ரற்றே.

இஃது, அவ்வெண்ணுப்பெயர் அடையடுத்தவழி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அடையொடு தோன்றினும் அதன் ஓர் அற்று - அவ்வாயிரம் என்னும் எண்ணுப்பெயர் அடையடுத்த மொழியொடு தோன்றினும் மேற்சொன்னதனோடு ஒரு தன்மைத்தாய் அத்துப்பெற்று முடியும்.

உ-ம். பதினாயிரத்தொன்று;- இரண்டு என ஒட்டுக.

மேல் இலேசினான் வந்தனவும் அடையடுத்து ஒட்டுக. பதினாயிரத்துக்குறை,-கூறு, முதல் என வரும். (உ௩)

௨௱௫௰. அளவு நிறையும் வேற்றுமை யியல.

இஃது, அவ்வெண்ணின் முன்னர் அளவுப்பெயர் நிறைப்பெயர் வந்தால் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அளவும் நிறையும் வேற்றுமை இயல - ஆயிரத்துமுன் அளவும் நிறையும் வந்தால் இவ்வீற்று வேற்றுமை இயல்பாய் மகரம்கெட்டு வல்லெழுத்து மிக்குமுடியும்.

உ-ம். ஆயிரக்கலம்; - சாடி, தூதை, பானை எனவும்: ஆயிரக்கழஞ்சு; - தொடி, பலம் எனவும் ஒட்டுக.

இம்மாட்டேற்றானே, மேல் "துவர" [சூத்திரம்-கரு] என்ற இலேசினான், இயல்புகணத்துக்கட்கு எய்திய மகரம் ஈண்டும் கெடுத்துக்கொள்க. ஆயிரநாழி;- வட்டி, அகல் எனவரும்.

பதினாயிரக்கலம் என்றாற்போல அடையடுத்து வந்த வழியும் ஒட்டுக. (உ௪)

௧௨௯. படர்க்கைப் பெயரு முன்னிலைப் பெயருந்
தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயி னுருபிய னிலையும்
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இஃது, இவ்வீற்றுட் சில உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் வேற்றுமைக்கண் உருபுபுணர்ச்சி முடிபெய்தி முடிந்தவாறே பொருட்புணர்ச்சிக்கண் முடிதலுமுடைய வென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: — படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் தொடக்கம் குறுகும் பெயர் நிலைக்கிளவியும்-எல்லாரும் என்னும் படர்க்கைப்பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப்பெயரும் கிளைத்தொடர்ச்சிப் பொருளவாய் நெடுமுதல் குறுகிமுடியும் தாம் நாம் யாம் என்னும்பெயரும், வேற்றுமையாயின் உருபு இயல் நிலையும் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் ஆயின் உருபுபுணர்ச்சிக்கண் சொன்ன இயல்பின்கண்ணே நின்று, சாரியைபெறுவன ஈறுகெட்டு இடையும் ஈறும் சாரியைபெற்றும், நெடுமுதல் குறுகுவன நெடுமுதல் குறுகியும் முடியும். அவ்வயின் மெல்லெழுத்து மிகுதல் ஆன-அந் நெடுமுதல் குறுகுமொழிக்கண் மெல்லெழுத்து மிகும்.

உ - ம். எல்லார்தங்கையும், எல்லீர்நுங்கையும்;- செவியும், தலையும், புறமும் எனவும்: தங்கை, நங்கை, எங்கை;- செவி, தலை புறம் எனவும் ஒட்டுக.

'வேற்றுமையாயின்' என்றதனால், படர்க்கைப்பெயர்க்கும் முன்னிலைப்பெயர்க்கும் இயல்புகணத்துக்கண் ஞகரமும் நகரமும் வந்தவழி தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் ஈறு கெடுதல் கொள்க.

'ஆவயினான' என்றதனால், படர்க்கைப்பெயர்க்கும் முன்னிலைப் பெயர்க்கும் ஞகரமும் நகரமும் வந்துழி அவை மிகுதலும், தொடக்கம் குறுகும் பெயர்க்கு ஞகரமும் நகரமும் வந்துழி மகரங்கெட்டு அவை மிகுதலும் கொள்க. எல்லார்தஞ்ஞாணும், எல்லீர்நுஞ்ஞாணும்; - நூலும் எனவும்: தஞ்ஞாண், நஞ்ஞாண், எஞ்ஞாண்; - நூல் எனவும் வரும்.

இன்னும் 'ஆவயினான' என்றதனால், படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் சாரியைபெறாது இறுதி உம்முப்பெறுதலும் கொள்க. எல்லார்கையும், எல்லீர்கையும்; செவியும், தலையும், புறமும் எனவரும் இன்னும் அதனானே, உருபீற்றுச் செய்கை யெல்லாம்கொள்க. தமகாணம் எனவரும். [இஃது அகரவுருப்பெற்று முடிந்தவாறு காண்க.]

௧௩௦. அல்லது கிளப்பி னியற்கை யாகும்.

இது, மேலனவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—அல்லது கிளப்பின் இயற்கை ஆகும் - மேற்கூறிய படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் தொடக்கம் குறுகும் பெயர்நிலைக்கிளவியும் அல்வழியைச் சொல் லுமிடத்து இயல்பாய் முடியும்.

ஈண்டு இயல்பென்பது சாரியை பெறாமை நோக்கி. இவற்றின் ஈறு திரிதல் "அல்வழியெல்லாம்" (சூத்திரம் - ௰௬) என்றதனுள் "எல்லாம்" என்னும் இலேசி னாற்கொள்க.

உ - ம். எல்லாருங் குறியர்;- சிறியர், தீயர், பெரியர் எனவும்: எல்லீருங்குறியீர்;- சிறியீர், தீயீர், பெரியீர் எனவும்: தாம் குறியர்;- சிறியர், தீயர், பெரியர் எனவும்: நாங் குறியம்;-சிறியம், தீயம், பெரியம் எனவும்: யாங்குறியேம்; சிறியேம், தீயேம், பெரியேம் எனவும் வரும்.

இன்னும் "எல்லாம்" என்னும் இலேசினானே, இவ்வீற்றுக்கண் மென்கணத்து மகரம் ஒழிந்தன வந்தவழி மகரம் அவ்வொற்றாய்த் திரிதலுங் கொள்க. எல்லாருஞ் ஞான்றார்;- நீண்டார் எனவும்: எல்லீருஞ்ஞான்றீர்;- நீண்டீர் எனவும்: தாஞ்ஞான்றார்;- நீண்டார் எனவும்: நாஞ்ஞான்றாம்;- நீண்டாம் எனவும்: யாஞ்ஞான்றேம்; நீண்டேம் எனவும் கொள்க. (உசு)

௩௨௩. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா மெனும்பெய ருருபிய னிலையும்
வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது.

இஃது, அவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் உருபியலொடு மாட்டெறிந்து முடிபுகூறுதல் நுதலிற்று.

இ - ள்:—அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் - அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப்பொருட் புணர்ச்சியிடத்தும், எல்லாம் எனும் பெயர் உருபு இயல் நிலையும்-எல்லாம் என்னும் விரவுப்பெயர் உருபுபுணர்ச்சியின் இயல்பிலே நின்று வற்றுச்சாரியையும் இறுதி உம்முச்சாரியையும் பெற்று முடியும், வேற்றுமை அல்வழி சாரியை நிலையாது-அப்பெயர் வேற்றுமையல்லாத இடத்து சாரியைபெறுதல் நிலையாதாயே முடியும்.

மாட்டேறு ஏலாத அல்வழியினையும் உருபியலோடு மாட்டெறிந்துவிலக்கிய மிகுதியான், அல்வழிக்கண் வன்கணத்திறுதி உம்முப்பேறும் நிலைமொழி மகரகேடும் வருமொழி வல்லெழுத்துப்பேறும், மென்கணத்து மகரக்கேடும் பண்புத்தொகைக்கண் மகரக்கேட்டோடு இறுதி உம்முப்பேறும் கொள்க.

உ - ம். எல்லாக்குறியவும்;- சிறியவும், தீயவும், பெரியவும் எனவும்: எல்லாவற்றுக் கோடும்;-செவியும், தலையும், புறமும் எனவும்: எல்லாஞான்றன;- நீண்டன, மாண்டன எனவும்: எல்லாஞாணும்;- நூலும், மணியும், யாப்பும், வலிமையும், அடைவும், ஆட்டமும் எனவும்: எல்லாவற்றுஞாணும்;-நூலும், மணியும், யாப்பும், வலிமையும்,அடைவும், ஆட்டமும் எனவும் வரும்.

எல்லாக் குறியரும்; சிறியரும், தீயரும், பெரியரும் என உயர்திணைக்கண்ணும் ஒட்டுக.

ஈண்டுச் சாரியை பெற்றவழி, மகரக்கேடு வற்றின்மிசை ஒற்றாய்க் கெட்டது. இது விரவுப்பெயராகலின், ஈற்றுப் பொதுமுடிவிற்கு ஏலாதென்று சாரியை வல்லெழுத்துக் கொள்ளப்பட்டது. (உஎ)

௩௨௪. மெல்லெழுத்து மிகினு மான மில்லை.

இது, மேற்கூறிய எல்லாம் என்பதற்கு அல்வழிக்கண் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை-அவ்வெல்லாமென்பது அல்வழிக்கண் மேல் இலேசினாற் கூறிய வல்லெழுத்தேயன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை.

மேற்கூறிய செய்கைமேலே இது கூறினமையின், மகரக்கேடும் இறுதி உம்முப் பேறுங் கொள்க.

உ - ம். எல்லாங்குறியவும்;- சிறியவும், தீயவும், பெரியவும் எனவும்: எல்லாங்குறியரும்;- சிறியரும், தீயரும், பெரியரும் எனவும் ஒட்டுக.

இனி உரையிற்கோடல் என்பதனால், இறுதி உம்மின்றி எல்லாங்குறிய, எல்லாருங்குறியர் எனவும் வரும்.

மேல் இலேசிற்கூறிநின்ற வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துவருத்தமையின், இஃது அல்வழியாயிற்று. (உ௮)

/220. உயர்திணை யாயி னுருபிய னிலையும்.

இது, மேலதற்கு உயர்திணை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்.—உயர்திணையாயின் உருபு இயல் நிலையும் - அவ்வெல்லாமென்பது அஃறிணைப்பெயராயன்றி உயர்திணைப்பெயராய் நின்ற நிலைமையாயின் உருபுபுணர்ச்சியின் இயல்பிலே நின்று ஆண்டுக்கூறிய நம்முச்சாரியை பெற்று முடியும்.

வற்றுவகுத்த செய்கை மேல் வகுத்தமையின், மகரக்கேடு கொள்க. இறுதி உம்மையும் அச்செய்கை மேலே வகுத்தமையிற் கொள்க.

உ-ம். எல்லாநங்கையும்;- செவியும், தலையும், புறமும் எனவரும்.

மேல் "மானமில்லை" [சூத்திரம்-உ௮] என்றதனால், அல்வழிக்கண் வன்கணத்து மகரம் கெட்டு வல்லெழுத்து மிக்கு இறுதி உம்முப்பெற்று முடிதலும், இயல்புகணத்துக்கண் மகரம் கெட்டு இறுதி உம்முப்பெற்று முடிதலும் கொள்க. எல்லாக்கொல்லரும்; மணியகாரர்? சேவகரும், தச்சரும், புலவரும் எனவும்: எல்லாஞாயிறும்;- நாயகரும், மணியகாரரும், வணிகரும், அரசரும் எனவும் வரும். (உக)

/221. நும்மெ னொருபெயர் மெல்லெழுத்து மிகுமே.

இதுவும், அவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—நும் என் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகும் - நும் என்று சொல்லப்படுகின்ற ஓர் விரவுப்பெயர் வேற்றுமைக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ - ம். நுங்கை ;-செவி, தலை; புறம் என வரும்.

மகரம் "துவர" (சூத்திரம் - கரு) என்ற இலேசினாற்கெட்டது. 'ஒரு பெயர்' என்றதனான், ஞகர நகரங்கள்வந்த இடத்தும் அவ்வொற்றுமிகுதல் கொள்க. நுஞ்ஞாண், நுந்நூல் என வரும்.

'ஒன்றினமுடித்தல்' என்பதனால், உங்கை என உம் என்பதன்முடிபும் இவ்வீற்றுக் கொள்க. (கூ௰)

222. அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயி னீவர
இஇடை நிலைஇ யீறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பான் மொழிவயி னியற்கை யாகும்.

இது, மேலதற்கு அல்வழி முடிபுகூறுதல் நுதலிற்று.

இ - ள். அல்லதன் மருங்கின் சொல்லும் காலை-அந் நம் என் ஒரு பெயர் தன்னை அல்வழியிடத்துச் சொல்லுங்காலே, உ கெட நின்ற மெய்யின் ஈ வர இ இடைநிலை இ ஈறு கெட ரகரம் புள்ளியொடு புணர்ந்து நிற்றல்வேண்டும்-நகரத்து உகரங்கெட அந் நின்ற மெய்யிடத்து ஈகாரம் வர, ஓர் இகரம் இடையிலே பெற மகரம் கெட அவ்விடத்து ஒரு ரகரம்புள்ளியோடு பொருந்தி நிற்றல்வேண்டும். அப்பால் மொழிவயின் இயற்கையாகும்-வருமொழியிடத்து அம்மொழிதான் இவ்வாறு திரியாது இயல்பாதல்வேண்டும்.

உ-ம். நீயிர்குறியீர் ; சிறியீர், தீயீர், பெரியீர் எனவரும்.

ஞான்றீர், நீண்டீர், மாண்டீர் என இயல்புகணத்தொடும் ஒட்டுக. (௩௧)

௪௨௭. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கண் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—தொழிற்பெயரெல்லாம் தொழிற்பெயர் இயல-மகரவீற்றுத்தொழிற்பெயரெல்லாம் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பினவாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் இயல்புகணத்து உகரம் பெற்றும் வரும்.

உ - ம். செம்முக்கடிது ;- சிறிது, தீது, பெரிது எனவும் ; செம்மு ஞான்றது ;- நீண்டது, மாண்டது, வலிது எனவும் : செம்முக்கடுமை;- சிறுமை, தீமை, பெருமை எனவும்: செம்முஞாற்சி ;- நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனான், உகரம்பெறாது அல்வழிக்கண் நாட்டங்கடிது என மெல்லெழுத்தாய்த் திரிவனவும், வேற்றுமைக்கண் நாட்டக்கடுமை என மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கு வருவனவுங் கொள்க. (௩௨)

௪௨௮. ஈமுங் கம்மு முருமென் கிளவியும்
ஆமுப் பெயரு மவற்றோ ரன்ன.

இது, பொருட்பெயருட் சில அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் தொழிற்பெயரோடு ஒத்து முடியுமெனக் கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—ஈமும் கம்மும் உரும் என் கிளவியும் ஆ முப்பெயரும்-ஈம் என்னும் சொல்லும் கம் என்னுஞ்சொல்லும் உரும் என்னும் சொல்லுமாகிய அம் மூன்றுபெயரும், அவற்று ஓர் அன்ன-அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் அத்தொழிற்பெயரோடு ஒரு தன்மையவாய் வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் இயல்புகணத்து உகரம்பெற்றும் முடியும்.

உ - ம். ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது ; - சிறிது, தீது, பெரிது எனவும் : ஈமுஞான்றது, கம்முஞான்றது, உருமுஞான்றது ;- நீண்டது, மாண்டது, வலிது எனவும் : ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை ;-சிறுமை, தீமை, பெருமை எனவும் : ஈமுஞாற்சி, கம்முஞாற்சி, உருமுஞாற்சி ;- நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

[ஈம்-இடுகாடு, கம்-கம்மியர் துதொழில், உரும்-இடி]. (௩௩)

௪௨௯. வேற்றுமை யாயி னேனை யிரண்டும்
தோற்றம் வேண்டு மக்கென் சாரியை.

இது, மேல் முடிபு கூறிய மூன்றனுள் இரண்டிற்கு வேற்றுமைக்கண் வேறு ஓர் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—வேற்றுமை ஆயின் - வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின், ஏனை இரண்டும்அக்கு என் சாரியை தோற்றம் வேண்டும் - இறுதி உரும் ஒழிந்த இரண்டும் அக்கு என்னும் சாரியை தோற்றி முடிதல் வேண்டும்.

'தோற்றம்' என்றதனான் உகரம் நீக்குதல் வேண்டு மென்க.

உ-ள். ஈமக்குடம், கம்மக்குடம்; சாடி, தூதை, பானை என்வரும்.

மேல் வேற்றுமை கூறிய முடிபு குணவேற்றுமைக்கண்ணதென்றும், ஈண்டுக்கூறிய முடிபு பொருட்பெயர்க்கண்ணதென்றும் கொள்க. (௩௪)

௩௩௧. வகார மிசையு மகாரங் குறுகும்.

இது, பருந்து விழுக்காடாய் "அரை யள பு குறுகல்" [நூன்மரபு - சூத்திரம் ௧௩] என்பதற்கு ஓர் புறநடை கூறுகின்றது.

இ-ள்:—வகாரம் மிசையும் மகாரம் குறுகும்-மேல் ஒரு மொழிக்கண் கூறிய "னகார முன்னரே" [மொழிமரபு - சூத்திரம் ௧௯] அன்றி ஈண்டுப் புணர்மொழிக்கண் வகரத்தின்மேலும் மகரம் குறுகும்.

உ-ம். நிலம் வலிது எனவரும். (௩௫)

௩௩௨. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
அத்து மான்மிசை வரைநிலை யின்றே
ஒற்றுமெய் கெடுத லென்மனார் புலவர்.

இஃது, இவ்வீற்று நாட்பெயர்க்கு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—நாள்பெயர்க் கிளவி மேல் கிளந்து அன்ன - மகர வீற்று நாட்பெயர்ச் சொல்மேல் இகரவீற்று நாட்பெயரிற் கிளந்த தன்மையவாய் ஆன் பெற்று முடியும்; அத்து ஆன்மிசையும் வரைநிலை இன்று - அத்துச்சாரியை அவ்வான்சாரியை மேலும் பிறசாரியைமேலும் நீக்கும் நிலைமையின்றும்; ஒற்று மெய் கெடுதல் என்மனார். புலவர் - அவ்விடத்து மகரவொற்றுத் தம் வடிவு கெடுக வென்று சொல்லுவர் புலவர்.

உ-ம். மகத்தாற் கொண்டான்; மகத்துஞான்று கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்

'ஒற்று' என்றது 'மெய்' என்றதனான், நாட்பெயரல்லாத பொருட்பெயர்க்கண்ணும் அம்முடிபு கொள்க. மரத்தாற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும். [ஞான்று என்பது சாரியை.] (௩௬)

௩௩௩. னகார விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது, னகார வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—னகர இறுதி வல்லெழுத்து இயையின்-னகரவீற்றுப்பெயர் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வந்து இயையின், றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கு-றகாரம் ஆகும் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்.

உ-ம். பொற்குடம்; சாடி, தூதை, பானை எனவரும். (௩௭)

௩௩௪. மன்னுஞ் சின்னு மானு மீனும்
பின்னு முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன வியல வென்மனார் புலவர்.

இஃது, அவ்வீற்று அசைநிலை இடைச்சொல்லும் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்களும் வினையெச்சமும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மன்னும் சின்னும் ஆனும் ஈனும் பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும் - மன் என்னும் சொல்லும் சின் என்னும் சொல்லும் ஆன் என்னும் சொல்லும் ஈன் என்னும் சொல்லும் பின் என்னும் சொல்லும் முன் என்னும் சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், அன்ன|இயல என்மனார் புலவர் - மேற்கூறிய இயல்பினவாய் னகரம் றகரமாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

உ-ம். அதுமற் கொண்கன் றேரே, காப்பும் பூண்டிசிற் கடையும் போகல் எனவும்: ஆற்கொண்டான், ஈற்கொண்டான், பிற்கொண்டான், முற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்: வரிற்கொள்ளும்: செல்லும், தரும், போம் எனவும் வரும்.

பெயராந் தன்மையவாகிய ஆன், ஈன் என்பனவற்றை முற்கூறாததனான், ஆன்கொண்டான், ஈன்கொண்டான் எனத் திரியாது முடிதலும் கொள்க.

பின், முன் என்பன பெயர்நிலையும் வினையெச்சநிலையும் உருபுநிலையும் படும். அவற்றுள் வினையெச்சநிலை ஈண்டு வினையெஞ்சுகிளவியும் என்பதனான் முடியும். உருபுநிலை உருபியலுள் முடியும். ஈண்டுப் பெயர் கூறுகின்றது. அப்பெயரை முன்கூறாததனால், பின்கொண்டான், முன்கொண்டான் எனத் திரியாமையும் கொள்க.

'இயல' என்றதனான், ஊன் என்னும் சுட்டு ஊன்கொண்டான் என இயல்பாய் முடிதல் கொள்க. (௩௮)

சுட்டுமுதல் வயினு மெகரமுதல் வயினும்
அப்பண்பு நிலையு மியற்கைய வென்ப.

இஃது, இவ்வீற்றுள் ஒருசார் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்திநின்ற இடைச்சொல்லிற்கு முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்:—சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும் - சுட்டெழுத்தினை முதலாகவுடைய வயின் என்னும் சொல்லும் எகரமாகிய முதலையுடைய வயின் என்னும் சொல்லும், அ பண்பு நிலையும் இயற்கைய என்ப - மேல் றகரமாய் முடியுமென்ற அப்பண்பு நிலைபெற்றுமுடியும் இயற்கையையுடைய என்று சொல்லுவர்.

உ - ம். அவ்வயிற்கொண்டான், இவ்வயிற்கொண்டான், உவ்வயிற்கொண்டான் எவ்வயிற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'இயற்கைய' என்றதனால், திரியாது இயல்பாய் முடிவனவும் கொள்க, கான்கோழி எனவரும். (௩௯)

௩௩௬. குயினென் கிளவி யியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—குயின் என் கிளவி இயற்கையாகும் - குயின் என்னும் சொல் திரியாதி இயல்பாய் முடியும்.

உ-ம். குயின்குழாம்; செலவு, தோற்றம், மறைவு எனவரும். குயின் என்பது மேகம். (௩௰)

௩௩௭. எகின்மர மாயி னாண்மர வியற்றே.

இது, திரிபு விலக்கி அம்மு வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:— எகின் மரம் ஆயின்ஆண்மர இயற்று - எகின் என்னும் சொல் மரப் பெயராயின் ஆண்மரத்தினது இயல்பிற்றாய் அம்முப் பெற்று முடியும்.

உ - ம். எகினங்கோடு; செதிள், தோல், பூ எனவரும். (௩௧)

௩௩௮. ஏனை யெகினே யகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்.

இதுவும் அது.

இ-ள்:—ஏனை எகின் அகரம் வரும் - ஒழிந்த மரமல்லா எகின் நிலைமொழிக்கண் அகரம் வந்து முடியும்; வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும் - அவ்விடத்து வருமொழி வல்லெழுத்து இயல்பு மிக்கு முடிதல் வேண்டும்.

உ - ம். எகினக்கால்; செவி, தலை, புறம் எனவரும்.

மேலைச் சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனான், இயல்புகணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க. எகினஞாற்சி; யாப்பு, அடைவு எனவரும்.

'இயற்கை'என்றதனான், அகரப்பேற்றோடு மெல்லெழுத்துப்பேறும் கொள்க. எகினங்கால்; செவி, தலை, புறம் எனவரும். (௩௨)

௩௩௯. கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல.

இஃது, இவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:— கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல-ணகாரவீற்றுக் கிளைப்பெயரெல்லாம் ணகாரவீற்றுக் கிளைப்பெயர்போலத் திரியாது இயல்பாய் முடியும்.

உ - ம். எயின்குடி; சேரி, தோட்டம், பாடி எனவரும்.

'எல்லாம்'என்றதனான், அக்குச்சாரியையும் வல்லெழுத்தும் பெற்று எயினக்கன்னி என முடிதலும், பார்ப்பனக்கன்னி என நிலைமொழியீறு திரிந்து அக்கும் வல்லெழுத்தும் பெறுதலும், இனிச் சாரியை பெறாது ஈறு திரிந்து வேளாண்குமரி, வேளாண் வாழ்க்கைஎன முடிதலும் கொள்க. (௩௩)

௩௪௰. மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே.

இதுவும், அவற்றுள் ஒன்றற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மீன் என் கிளவி வல்லெழுத்து உறழ்வு - மீன் என்னும் சொல்தன் திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்து முடியும்.

உ - ம். மீன்கண், மீற்கண்; சினை, தலை, புறம் எனவரும். (௩௪)

௩௯௪. தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை யொத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை.

இதுவும் அது.

இ-ள்:—தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின்-தேன் என்னும் சொல் வல்லெழுத்து முதன்மொழியாய் வந்து பொருந்தின், மேல்நிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும் அ முறை இரண்டும் உரிமையும் உடைத்து - மேல் மீன் என்னும் சொல்லிற்குச் சொன்ன திரிபுறழ்ச்சியின் நிலைமையை யொத்து முடிதலும் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுமாகிய அம்முறையையுடைய இரண்டினையும் உரித்தாதலையும் உடைத்து; வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை- வல்லெழுத்து மிகுமிடத்து நிலைமொழியிறுதி னகரவொற்று நிலையின்றிக் கெடும்.

'உரிமையும்' என்றவும்மை "மெல்லெழுத்து மிகினும்" [சூத்-௩௯௫] என மேல் வருகின்ற முடிவினை நோக்கி நின்றது.

உ -ம் . தேன்குடம், தேற்குடம்; சாடி, தூதை, பானை எனவும்; தேக்குடம்; சாடி, தூதை, பானை எனவும் வரும்.

௩௯௫. மெல்லெழுத்து மிகினு மான மில்லை. (௪௫)

இது, மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மெல்லெழுது மிகினும் மானம் இல்லை- தேன் என் கிளவி வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து மிகுதலேயன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை.

னகரக்கேடு அதிகாரத்தாற் கொள்க.

உ-ம் :—தேங்குடம்; சாடி, தூதை, பானை எனவரும். (௪௬)

௩௯௬. மெல்லெழுத் தியையி னிறுதியோ டுறழும்.

இது, மேலதற்கு மென்கணத்துக்கண் தொகைமரபிற் கூறிய முடிபு ஒழிய வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மெல்லெழுத்து இயையின் இறுதியோடு உறழும் - அத்தேன் என் கிளவி மெல்லெழுத்து முதல்மொழி வந்து இயையின் நிலைமொழியிறுதி னகர வொற்றுக் கெடுதலும் கெடாமையுமாகிய உறழ்ச்சியாய் முடியும்.

உ-ம். தேன்ஞெரி, தேஞெரி; நுனி, முரி எனக் கொள்க.

மேல் "மானமில்லை" [சூத்திரம் ௪௬] என்றதனான், இறுதியோடு உறழும் என்றது ஈறுகெட்டு வருமொழி மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் உறழ்தற்கும், வருமொழி மிகாது இறுதி கெட்டும் கெடாதும் உறழ்தற்கும், அவ்விரண்டற்கும் உரித்தாய்ச்சென்றதனை விலக்கி வருமொழி மிகாதே நிற்ப அவ்வீறே கெட்டும் கெடாதும் நின்று உறழுமென்பது கொள்ளப்பட்டது.

அதன்மேல் "ஆமுறை" [சூத்திரம் ௪௫] என்றதனான், சிறுபான்மை ஈறு கெட்டுத் தேஞ்ஞெரி; நுனி, முரி என மெல்லெழுத்து மிகுதலும் கொள்க (௪௭)

௩௪௪. இருஅற் றோற்ற மியற்கை யாகும்.

இஃது, இன்னும் அதற்கு உயிர்க்கணத்து ஒருமொழிக்கண் முடியும் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—இருஅல் தோற்றம் - தேன் என்னும் சொல் இறால் என்னும் வருமொழி யது தோற்றத்துக்கண், இயற்கை ஆகும் - நிலைமொழி னகாரங்கெடாதே நின்று இயல்பாய் முடியும்.

உ-ம். தேனிறால் எனவரும். (௪௪)

௩௪௫. ஒற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்தே.

இதுவும், அதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஒற்று மிகு தகரமொடு நிற்றலும் உரித்து- அத்தேன் என்பது இறால் என்னும் வருமொழிக்கண் பிறிதும் ஓர் தகரவொற்று உடன்மிகு தகரத்தோடு நின்று முடிதலும் உரித்து.

மேல் "வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை" [சூத்-௪௫] என்றதனன் நிலை மொழி யீறு கெடுக்க. 'தகரமிகும்' என்னது, 'ஒற்றுமிகு தகரம்' என்றதனல் ஈரொற் றாக்குக.

உ-ம். தேத்திறால் எனவரும்.

மேலைச் சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனல், பிற வருமொழிக்கண்ணும் இம்முடிபு கொள்க. தேத்தடை, தேத்தீ எனவரும்.

'தோற்றம்' என்றதனல், தேனடை, தேனீ என்னும் இயல்பும் கொள்க. (௪௫)

௩௪௬. மின்னும் பின்னும் பன்னுங் கன்னும்
அந்நாற் சொல்லுந் தொழிற்பெய ரியல.

இஃது, அவற்றுட் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மின் னும் பின் னும் பன் னும் கன் னும் அ நால் சொல்லும் - மின் என்னும் சொல்லும் பின் என்னும் சொல்லும் பன் என்னும் சொல்லும் கன் என்னும் சொல் லுமாகிய அந்நான்கு சொல்லும், தொழிற்பெயர் இயல - வேற்றுமைக்கண்ணும் அல்வ ழிக்கண்ணும் ஞகரவீற்றுத் தொழிற்பெயர்போல வன்கணம் வந்தவழி உகரமும் வல் லெழுத்தும் பெற்றும் மென்கணத்துக்கண்ணும் இடைக்கணத்துக்கண்ணும் உகரம் பெற்றும் முடியும்.

உ-ம். மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது, யாது எனவும்: மின்னுக்கடுமை, பின்னுக்கடுமை, பன்னுக்கடுமை, கன்னுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை, யாப்பு எனவும் வரும்.

'தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல' என்று ஓதாது இவ்வாறு எடுத் தோதியவதனல், இம்முடிபினைத் தொழிற்பெயர்க்கும் பொருட்பெயர்க்கும் உடன் கொள்க. மின் என்பது ஓர் தொழிலு முண்டு; பொருளு முண்டு. பிறவும் அன்ன. (௪௬)

௩௪௭. வேற்றுமை யாயி னேனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி.

இது, மேல் முடிபு கூறியவற்றுள் ஒன்றற்கு வேறு ஓர் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—கன் என் கிளவி வேற்றுமையாயின் - கன் என்னும்சொல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், ஏனை எகினொடு தோற்றம் ஒக்கும் - ஒழிந்த மரமல்லா எகினொடு தோற்றம் ஒத்து அகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும்.

உ-ம். கன்னக்குடம்; சாடி, தூதை, பானை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவரும்.

சிறுபான்மை கன்னக்கடுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் இம்முடிபுகொள்க

'தோற்றம்' என்றதனால்' அல்வழிக்கண் அகரமும், வன்கணத்துக்கண் மெல்லெழுத்தும் கொள்க. கன்னங்கடிது; சிறிது, தீது,பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவரும்.

இன்னும் 'தோற்றம்' என்றதனால், சிறுபான்மை கன்னங்கடுமை; சிறுமை தீமை, பெருமை என்ற குணவேற்றுமைக்கண்ணும் அகரமும் மெல்லெழுத்தும் கொள்க.

இக் 'கன்' என்பது வேற்றுமை முடிபிற்கு மேற்கூறியது குணவேற்றுமைக்கு எனவும், ஈண்டுக்கூறியது பொருட்பெயர்க்கு எனவும் கொள்க. (௫௧)

௩௪௮. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட வகர நிலையும்
மெய்யொழித் தன்கெடு மவ்வியற் பெயரே.

இஃது, இவ்வீற்று விரவுப்பெயருள் இயற்பெயர்க்குத் தொகைமரபினுள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—இயற்பெயர் முன்னர் தந்தை முறைவரின் - னகாரவீற்று இயற்பெயர்முன்னர்த் தந்தை என்னும் முறைப்பெயர் வருமொழியாய் வரின், முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்-முதற்கண் மெய்கெட .அதன்மேல் ஏறிநின்ற அகரம் கெடாது நிலைபெறும். அ இயற்பெயர் மெய் ஒழித்து அன் கெடும் - நிலைமொழியாகிய இயற்பெயர் அவ் அன் என்னும் சொல்லில் அகரம் ஏறிநின்ற மெய்யை ஒழித்து அவ் அன்தான் கெட்டு முடியும்.

உ-ம். சாத்தந்தை, கொற்றந்தை எனவரும்.

'முதற்கண் மெய்' என்றதனால், சாத்தன் றந்தை, கொற்றன் றந்தை என்னும் இயல்பு முடிபும் கொள்க. (௫௨)

௩௪௯. ஆதனும் பூதனுங் கூறிய வியல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே.

இது, மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஆதனும் பூதனும்-மேற்கூறிய இயற்பெயருள் ஆதனும் பூதனும் என்னும் இயற்பெயர்கள், கூறிய இயல்போடு பெயர் ஒற்று அகரம் துவரகெடும் - மேற்கூறிய செய்கையோடு நிலைமொழிப்பெயருள் அன் கெடாநின்ற ஒற்றும் வருமொழியுள் ஒற்றுக் கெடாநின்ற அகரமும் முற்றக்கெட்டு முடியும்.

உ-ம். ஆந்தை, பூந்தை எனவரும்.

இயல்பு என்றதனால், பெயரொற்றும் அகரமும் கெடாதேநின்று முடிந்தவாறே முடிதலும் கொள்க. ஆதந்தை, பூதந்தை எனவரும்.

'துவர' என்றதனால், அழான், புழான் எனநிறுத்திப் பொருந்தின செய்கை செய்து, அழாந்தை புழாந்தை என முடிக்க. (ருங)

ருருய. சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்.

இஃது, எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—சிறப்பொடு வருவழி இயற்கை ஆகும் - அவ் வியற்பெயர் பண்படுத்து வருவழி முன்கூறிய இருமொழிச் செய்கையும் தவிர்ந்து இயல்பாய் முடியும்.

உ-ம். பெருஞ்சாத்தன்றந்தை, பெருங்கொற்றன் றந்தை எனவரும். (ருச)

ருருக. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியே
நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉ மருங்கி னான.

இது, மேலதற்கு வேறு ஓர் வருமொழிக்கண் எய்தாதது எய்துவித்தது.

இ-ள்:— அ பெயர் மக்கள் முறை தொகும் மருங்கின் ஆன மெய் ஒழித்து அன் கெடுவழி - அவ்வியற்பெயர் மக்கள் என்னும் முறைப்பெயர் வந்துகூடும் இடத்தின்கண்ணும் பிறிதிடத்தும், தான் ஏறிய மெய்யை ஒழித்து அன்கெடு மவ்வழி, அம் என் சாரியை நிற்றலும் உரித்து-அம் என்னும் சாரியை நிற்றலும் உரித்து.

உ-ம். சாத்தங்கொற்றன், கொற்றங்கொற்றன் எனவும்; சாத்தங்குடி, கொற்றங்குடி எனவும் வரும். (ருரு)

ருருஉ. தானும் பேனுங் கோனு மென்னும்
ஆமுறை யியற்பெயர் திரிபிட னிலவே.

இது, மேலதற்கு ஒருவழி எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—தானும் பேனும் கோனும் என்னும் அ முறை இயற்பெயர் - அவ்வியற்பெயருள் தானும் பேனும் கோனும் என்னும் முறைமையினையுடைய இயற்பெயர்கள் தந்தைகள் மக்கள் என்னும் முறைப்பெயரொடு புணரும்வழி, திரிபு இடன் இல-மேற்கூறிய திரிபுகள் இன்றி இயல்பாய் முடியும்.

உ-ம். தான்றந்தை, பேன்றந்தை, கோன்றந்தை எனவும்; தான்கொற்றன், பேன்கொற்றன், கோன்கொற்றன் எனவும் வரும். (ருகூ)

ருருங. தான்யா னெனும்பெய ருருபிய னிலையும்.

இது, விரவுப்பெயருள் தான் என்பதற்கும் உயர்திணைப்பெயருள் யான் என்பதற்கும் வேற்றுமைக்கண் தொகைமரபினுள் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—தான் யான் எனும் பெயர் உருபு இயல் நிலையும் - தான் என்னும் விரவுப்பெயரும் யான் என்னும் உயர்திணைப்பெயரும் மேல் தொகைமரபினுட் கூறிய இயல்பு

கள் ஒழித்து உருபுபுணர்ச்சியிற் கூறிய இயல்பின்கண்ணே நிலைபெற்றுத் தான் என்பது நெடுமுதல் குறுகித்தன் என்றாயும் யான் என்பது யகரம்கெட்டு ஆகாரம் எகரமாய் என் என்றாயும் முடியும்.

உ - ம். தன்கை, என்கை; செவி, தலை, புறம் எனவும்; தன்ஞாண், என்ஞாண்; நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும். (௫௭)

௩௫௪. வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலும்
தோற்ற மில்லை யென்மனார் புலவர்.

இது, மேலவற்றிற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—வேற்றுமை அல்வழி - மேற்கூறிய தான் யான் என்னும் பெயர்கள் வேற்றுமைப்புணர்ச்சி யல்லாத விடத்து, குறுகலும் திரிதலும் தோற்றம் இல்லை என்மனார் புலவர்-தான் என்பது நெடுமுதல் குறுகலும் யான் என்பது அவ்வாறு திரிதலும் தோற்ற மின்றி இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

உ - ம். தான்குறியன்; சிறியன், தீயன், பெரியன், ஞான்றான், நீண்டான், மாண்டான் எனவும்: யான்குறியேன் ; சிறியேன், தீயேன், பெரியேன், ஞான்றேன், நீண்டேன், மாண்டேன் எனவும் வரும்.

'தோற்றம்' என்றதனான், வேற்றுமைக்கண் அவ்வாறன்றித் திரிதலும் கொள்க.

உ - ம். தற்புகழ், தற்பகை எனவும்; எற்பறை, எற்பாடி என்வும் வரும். (௫௮)

௩௫௫. அழனென் னிறுதிகெட வல்லெழுத்து மிகுமே.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தல் நுதலிற்று.

இ- ள்:—அழன் என் இறுதி கெட வல்லெழுத்து மிகும் - அழன் என்னும் சொல் அழன் என்னும் னகரவீறு கெட வருமொழிவல்லெழுத்து மிக்கு முடியும்.

உ- ம். அழக்குடம்; சாடி, தூதை, பானை எனவரும். அழனென்பது பிணம். (௫௯)

௩௫௬. முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை றகர மொற்றல்
தொல்லியன் மருங்கின் மரீஇய மரபே.

இஃது, இவ்வீற்றுள் இலக்கணத்தொடு பொருந்திய மரூஉக்களுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்: —முன் என் கிளவி முன்னர்த் தோன்றும் இல் என் கிளவிமிசை றகரம் ஒற்றல் - முன் என்னும் சொல்லின்முன்னர்த் தோன்றும் இல் என்னும் சொல்லின் மேல் றகரவொற்று வந்துமுடிதல், தொல் இயல் மருங்கின் மரீஇய மரபு-பழையதாகிய இயல்பினையுடைய விடத்து மருவிவந்த இலக்கணமுடிபு.

உ - ம். முன்றில் எனவரும.

இது கடைக்கண் என்றாற்போலவருஉம் மரூஉ முடிபுபோ லன்றி முன்னில் என ஒற்றிரட்டி முடியற்பாலது இருமொழிக்கும் இயல்பிலதோர் ஒற்று மிக்கு முடிந்த மரூஉமுடிபு. (௬௰)

௩௫௭. பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுண் மருங்கிற் றொடரிய லான.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்குச் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—பொன் என் கிளவி ஈறு கெட முன்னர் முறையின் லகாரம் மகாரம் தோன்றும் - பொன் என்னும் சொல் பகரமுதன்மொழி வந்தவிடத்துத் தன் ஈற்றின் னகரம் கெட அதன்முன்னர் முறையானே லகரமும் மகரமும் தோன்றிமுடியும்; செய்யுள் மருங்கின் தொடர் இயலான்-(யாண்டெனில்,) செய்யுளிடத்துச் சொற்கள் தம்மில் தொடர்ச்சிப்படும் இயல்பின்கண்.

'முறையின்' என்றதனால், லகரம் உயிர்மெய்யாகவும் மகரம் தனிமெய்யாகவும் கொள்க.

உ - ம். "பொலம்படை பொலிந்த கொய்சுவற் புரவி" எனவரும்.

'தொடரியலான்' என்றதனான், பகரம் அல்லாத வன்கணத்துக்கண்ணும் சிறுபான்மை ஈறுகெட்டு லகரமும் வல்லெழுத்திற் கேற்ற மெல்லெழுத்தும் மிக்கு முடிதல் கொள்க. பொலங்கலம், பொலஞ்சுடர், பொலந்தேர் எனவரும்,

'ஒன்றெனமுடித்தல்'என்பதனால், பொலநறுந்தெரியல், பொலமலராவிரை என்றாற்போல வரும் பிறகணத்து முடிபும் கொள்க. (௬௧)

௩௫௮. யகர விறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே.

இது, யகர வீற்றிற்கு வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின் - யகரவீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், வல்லெழுத்து இயையின் அ எழுத்து மிகும் - வல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின் அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ - ம். நாய்க்கால்; செவி, தலை, புறம் எனவரும். (௬௨)

௩௫௯. தாயென் கிளவி யியற்கை யாகும்.

இஃது, இவ்வீற்று விரவுப்பெயருள் ஒன்றற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—தாய் என் கிளவி இயற்கையாகும் - தாய் என்னும் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

உ - ம். தாய்கை; செவி, தலை, புறம் எனவரும்.

இவ்வியல்பு மேல் இன்னவழி மிகும் என்கின்றமையின், அஃறிணை விரவுப்பெயர் என்பதனுள் அடங்கா தாயிற்று. (௬௩)

௩௬௦. மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே.

இது, மேலதற்கு அடையடுத்து வந்தவழி இன்னவாறு முடியுமென எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ - ள் :—மகன் வினை கிளப்பின் முதல் நிலை இயற்று - அத்தாய் என்னும் சொல் மகனது வினையைக் கிளந்து சொல்லுமிடத்து இவ்வீற்று முதற்கண் கூறிய நிலைமையின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ - ம். மகன்றாய்க்கலாம் ; செரு, தார், பகை எனவரும்.

'மகன்வினை' என்றது மகற்குத்தாயாய்ப் பயன்படும் நிலைமையன்றி, அவனோடு பகைத்த நிலைமையை. (௬௪)

௩௬௧. மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே.

இஃது, இவ்வீற்றுட் சிலவற்றிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ -ள் :—மெல்லெழுத்து உறழும் மொழியும் உள - மேற்கூறிய வல்லெழுத்தி னொடு மெல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியும் மொழிகளும் உள.

உ - ம். வேய்ங்குறை; வேய்க்குறை: சிறை, தலை, புறம் எனவரும். (௬௫)

௩௬௨. அல்வழி யெல்லா மியல்பென மொழிப.

இஃது, இவ்வீற்று அல்வழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்.—அல்வழி எல்லாம் இயல்பு என மொழிப- யகரவீற்று அல்வழியெல்லாம் இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

உ - ம். நாய்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

'எல்லாம்' என்றதனால், இவ்வீற்று உருபு வாராது, உருபின் பொருள்பட வந்த இடைச்சொல் முடிபும், வினையெச்சமுடிபும், இருபெயரொட்டுப்பண்புத்தொகைமுடிபும், அல்வழியுறழ்ச்சிமுடிபும் கொள்க. அவ்வாய்க்கொண்டான், இவ்வாய்க்கொண்டான், உவ்வாய்க்கொண்டான், எவ்வாய்க்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்: தாய்க்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்: பொய்ச்சொல், மெய்ச்சொல் எனவும்: வேய்கடிது, வேய்க்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும் வரும். (௬௬)

௩௬௩. ரகார விறுதி யகார வியற்றே.

இது, ரகாரவீற்று வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ரகார இறுதி யகார இயற்று- ரகாரவீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் யகாரவீற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி மிக்கு முடியும்,

உ - ம். தேர்க்கால்; செய்கை, தலை, புறம் எனவரும். (௬௭)

௩௬௪. ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத் தோன்றும்.

இஃது,இவ்வீற்றுட் சிலவற்றிற்குஎய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல்நுதலிற்று.

இ - ள்:—ஆரும் வெதிரும் சாரும் பீரும்-ஆர் என்னும் சொல்லும் வெதிர் என்னும் சொல்லும் சார் என்னும் சொல்லும் பீர் என்னும் சொல்லும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெற தோன்றும் - மெல்லெழுத்து மிக்குமுடிதல் மெய்ம்மைபெறத் தோன்றும்.

உ - ம். ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு, சார்ங்கோடு, பீர்ங்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

'மெய்பெற' என்றதனால், பிறவும் மெல்லெழுத்து மிகுதல் கொள்க. குதிர்ங்கோடு துவர்ங்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

இன்னும் அதனானே, பீர் என்பது மேல் அம்முப் பெற்றவழி இயைபு வல்லெழுத்துவீழ்வும் கொள்க. (சுஅ)

௩௬௫. சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்.

இது, மேலனவற்றுட் சார் என்பதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—சார் என் கிளவி காழ்வயின் வலிக்கும் - சார் என்னும் சொல் காழ் என்னும் சொல்லொடு புணருமிடத்து வல்லெழுத்து மிக்குப் புணரும்.

உ - ம்- சார்க்காழ் எனவரும். (௬௯)

௩௬௬. பீரென் கிளவி யம்மொடுஞ் சிவணும்.

இஃது, அவற்றுட் பீர் என்பதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள் :—பீர் என் கிளவி அம்மொடும் சிவணும்- பீர் என்னும் சொல் மெல்லெழுத்தேயன்றி அம்முச்சாரியையும் பெற்றுவந்து முடியும்.

உ - ம். பீரங்கோடு; செதிள், தோல், பூ எனவரும். (௭௰)

௩௬௭. லகார விறுதி னகார வியற்றே.

இது, லகாரவீற்றிற்கு னகாரவீற்று வேற்றுமையோடு இயைய வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—லகார இறுதி னகார இயற்று- லகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வல்லெழுத்து முதன்மொழி வரின் னகாரவீற்றின் இயல்பிற்றாய் லகாரம் றகாரமாய்த் திரிந்துமுடியும்.

உ - ம் கற்குறை; சிறை, தலை, புறம் எனவரும். (௭௧)

௩௬௮. மெல்லெழுத் தியையி னகார மாகும்.

இஃது, அவ்வீறு மென்கணத்தொடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—மெல்லெழுத்து இயையின் னகாரம் ஆகும்- அவ்வீறு மென்கணம் வந்து இயையின் லகாரம் னகாரமாய்த் திரிந்துமுடியும்.

உ - ம். கன்ஞெரி; நுனி, முறி எனவரும்.

இச்சூத்திரத்தினை வேற்றுமையது ஈற்றுக்கண் அல்வழியது எடுத்துக்கோடற்கண் சிங்கநோக்காக வைத்தமையான், அல்வழிக்கும் இம்முடிபு கொள்க. கன்ஞெரிந்தது; நீண்டது, மாண்டது எனவரும். (௭௨)

௩௬௯. அல்வழி யெல்லா முறழென மொழிப.

இஃது, அவ்வீற்றிற்கு அல்வழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—அல்வழி எல்லாம் உறழ் என மொழிப- அவ்வீறு அல்வழிக்கணெல்லாம் தந்திரிபு வல்லெழுத்திேனாடு உறழ்ந்து முடியும்.

உ - ம். கல்குறிது, கற்குறிது; சிறிது,தீது, பெரிது எனவரும்.

'எல்லாம்' என்றதனால், கல்குறுமை, கற்குறுமை எனக் குணம்பற்றி வந்த வேற்றுமைக்கு இவ்வுறழ்ச்சி கொள்க.

இன்னும் அதனானே, இவ்வீற்று வினைச்சொல்லீறு திரிந்தனவும் கொள்க. வந்தானற்கொற்றன் எனவரும்.

இன்னும் அதனானே, அக்காற்கொண்டான், இக்காற்கொண்டான், உக்காற் கொண்டான், எக்காற்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபும் ஈண்டே கொள்க.

இதனால் பிறவும் உள்ளவாறு அறிந்து ஒட்டிக்கொள்க. (௭௩)

௩௭௪. தகரம் வரும்வழி யாய்த நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே.

இது, மேலதனுள் ஒருகூற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—தகரம் வரும் வழி-அவ்வாறு றகாரமாய்த்திரிந்த லகாரம் தகரமுதன்மொழி வருமொழியாய் வந்தவழி, ஆய்தம் நிலையலும் புகர் இன்று என்மனார் புலவர்- அவ்வாறு றகாரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாய்த்திரிந்து நிற்றலும் குற்றமின்றென்று சொல்லுவர் ஆசிரியர்.

உ-ம். கஃறீது, கற்றீது எனவரும்.

'புகரின்று' என்றதனால், "நெடியத னிறுதி" [சூத் - ௭௫] என்பதனுள் வேறீது, வேற்றீது என்னும் உறழ்ச்சிமுடிபு கொள்க. (௭௪)

௩௭௫. நெடியத னிறுதி யியல்புமா ருளவே.

இது, மேலதற்கு ஒருவழி எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—நெடியதன் இறுதி இயல்பும் உள - நெடியதன் இறுதிக்கண் நின்ற லகாரவீறு குறியதன் இறுதிக்கண்நின்ற லகாரம்போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவனவும் உள்ளன.

உ-ம். பால்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

இயல்பாகாது திரிந்தன வேல்கடிது வேற்கடிது என்றாற்போல்வன. (௭௫)

௩௭௬. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.

இஃது, இவ்வீற்று அல்வழியுட் சிலவற்றிற்கு வேறுமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்.—நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்- நெல் என்னும் சொல்லும் செல் என்னும் சொல்லும் கொல் என்னும் சொல்லும் சொல் என்னும் சொல்லும் ஆகிய இவைநான்கு சொல்லும், அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல-அல்வழியைச் சொல்லுமிடத்தும் தம் வேற்றுமை முடியின் இயல்பிற்றாய் லகாரம் றகாரமாய்த் திரிந்து முடியும்.

உ - ம். நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும். (௭௬)

௩௭௭. இல்லென் கிளவி யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலு மையிடை வருதலும்

இயற்கை யாதலு மாகாரம் வருதலும்
கொளத்தகு மரபி னாகிட னுடைத்தே.

இஃது, இவ்வீற்று வினைக்குறிப்புச் சொல் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—இல் என் கிளவி இன்மை செப்பின் - இல் என்னும் சொல் புக்குறையும் இல்லை உணர்த்தாது ஒரு பொருளது இல்லாமையை உணர்த்து மிடத்து,வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும் இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும் - அல்வழி வல்லெழுத்து மிகுதலும் ஐ இடைவருதலும் இயல்பாதலும் ஆகாரம் மிக்குமுடிதலும் ஆகிய இம்முடிபு நான்கும், கொளத்தகும் மரபின் ஆகு இடன் உடைத்து - இச்சொல்லிற்கு முடிபாகக் கொளத்தகும் மரபானே இதன்முடிபு ஆகும் இடன் உடைத்து.

'கொளத்தகு மரபு'என்றதனான்,வல்லெழுத்து மிக்கவழி ஐகாரம் வருதலும்,ஆகாரம் மிக்கவழி வல்லெழுத்து மிகுதலும் கொள்க. இயல்பு முற்கூறாது ஒழிந்ததனால், வல்லெழுத்துமிகுதி ஆகாரம் வந்தவழி மிக்கே முடிதலின் சிறப்புடைத்தாதலும், ஐகாரம் வந்தவழி மிகுதலும் மிகாமையு முடைமையின் சிறப்பின்றாதலும் கொள்க.

உ-ம், இல்லைக்கல், இல்லைகல்; இல்கல், இல்லாக்கல்; சுனை, துடி, பறை என வரும்.

இல்லைக்கல், இல்லைகல் என்பன இல்லை என்னும் ஐகாரவீற்றுச் சொல் முடிபன்றோவென்றும், இல்லாக்கல் என்பது உள்ள என்னும் பெயரெச்சத்து எதிர்மறையாகிய ஆகாரவீற்றுச் சொல்லது முடிபன்றோ வென்றும், இல்கல் என்பது பண்புத்தொகைமுடிபன்றோ வென்றும் கூறின்,அம்முடிபுகளோடு இம்முடிபுகள் எழுத்தொப்புமையன்றி, இவை ஓசைவேற்றுமையுடைய வென்பது போலும் கருத்து. அவ்வோசை வேற்றுமையாவன, ஐகார வீறாயவழி அவ்வைகாரத்துமேல் ஒலியூன்றியும், லகாரவீறாய வழி அந்த லகாரவொற்றின்மேல் ஒலியூன்றியும், அந்த லகாரவீறு இயல்புமுடிபாய வழிப் பண்புத்தொகைபோல ஒரு திரண்மையாக ஒலியாது இடையற்று லகரத்துமேல் ஒலியூன்றியும்,ஆகாரவீறாயவழி ஒரு திரண்மையாய் அவ்வாகாரத்துமேல் ஒலியூன்றியும், ஆண்டு லகாரவீறாயவழி ஒரு திரண்மையாக ஒலியாது அந்த லகரத்துமேல் ஒலியூன்றியும் வரும் வேறுபாடுகள் போலும்.

இல் என்பது எதிர்மறை வினைக்குறிப்புமுற்று விரவுவினை. (எஎ)

௩எச. வல்லெலன் கிளவி தொழிற்பெய ரியற்றே.

இதுவும், இவ்வீற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—வல் என் கிளவி தொழிற்பெயர் இயற்று - வல் என்னும் சொல் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகாரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும்.

உ-ம், வல்லுக்கடிது ; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்: வல்லுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும். (எஅ)

௩௭௫. நாயும் பலகையும் வரூஉங் காலை
ஆவயி னுகரங் கெடுதலு முரித்தே
உகரங் கெடுவழி யகர நிலையும்.

இது, மேலதற்கு எய்தியது ஒருமருங்கு மறுத்துப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—நாயும் பலகையும் வரும் காலை - மேல் நின்ற வல் என்பதன்முன் நாய் என்னும் சொல்லும் பலகை என்னும் சொல்லும் வருமொழியாய் வருங்காலத்து, அ வயின் உகரம் கெடுதலும் உரித்து - அவ்விடத்து உகரம் கெடாதே நின்று முடிதலே யன்றிக் கெட்டு முடியவும் பெறும். உகரம் கெடுவழி அகரம் நிலையும் - அவ் வுகரம் கெடு மிடத்து அகரம் நிலைபெற்று முடியும்.

உ-ம். வல்லநாய், வல்லப்பலகை எனவரும்.

'அகரம் நிலையும்' என்னாது 'உகரம்கெடும்' என்றதனால், பிற வருமொழிக்கண்ணும் அவ் அகரப்பேறு கொள்க.

உ - ம். வல்லக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவரும். (எ௧).

௩௭௬. பூல்வே லென்றா வாலென் கிளவியொ
டாமுப் பெயர்க்கு மம்மிடை வருமே.

இதுவும், அவற்றுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—பூல் வேல் ஆல் என் கிளவியோடு அ முப்பெயர்க்கும் - பூல் என்னும் சொல்லும் வேல் என்னும் சொல்லும் ஆல் என்னும் சொல்லும் ஆகிய அம்மூன்று பெயர்க்கும், அம் இடை வரும் - வேற்றுமைக்கண் திரிபின்றி அம்முச்சாரியை இடை வந்து முடியும்.

உ - ம். பூலங்கோடு, வேலங்கோடு, ஆலங்கோடு; செதிள், தோல், பூ என வரும். [என்றா என்பது எண்ணிடைச் சொல்.] (அ௰)

௩௭௭. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல - லகாரவீற்றுத் தொழிற்பெய ரெல்லாம் ஞகாரவீற்றுத் தொழிற்பெயரின் இயல்பினவாய் அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கண்ணும் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும்.

உ - ம். கல்லுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்: கல்லுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனால், இவ்வாறு முடியாது பிறவாறு முடிவனவும் கொள்க. பின்னல் கடிது, துன்னல்கடிது; பின்னற்கடுமை, துன்னற்கடுமை எனவரும்.

இன்னும் அதனானே, மென்கணம் வந்தவழி பின்னன்ஞான்றது; பின்னன் ஞாற்சி என மெல்லெழுத்தாய்த் திரிந்து முடிவனவும் கொள்க. (அ௧)

௩எஅ. வெயிலென் கிளவி மழையிய னிலையும்.

இதுவும், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ - ள்:—வெயில் என் கிளவி மழை இயல் நிலையும் - வெயில் என்னும் கிளவி மழை என்னும் சொல்லியல்பின்கண்ணே நிலைபெற்று அத்தும் இன்னும் பெற்று முடியும்.

உ - ம். வெயிலத்துக்கொண்டான் ; வெயிலிற்கொண்டான் ; சென்றான், தந்தான், போயினான் எனவரும். (அஉ)

௩எக. சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த வுருபிய னிலையும்.

இது, வகரவீற்றுப் பெயர் நான்கினும் சுட்டுமுதல் வகரம் மூன்றற்கும் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்:—சுட்டு முதலாகிய வகர இறுதி - சுட்டெழுத்தை முதலாகவுடைய வகார வீற்றுச்சொல், முற்பட கிளந்த உருபு இயல் நிலையும் - வேற்றுமைக்கண் முற்படச் சொன்ன உருபுபுணர்ச்சியின் இயல்பு நிலைபெற்று வற்றுப் பெற்றுப்புணரும்.

உ - ம். அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவரும்.

'முற்படக்கிளந்த' என்றதனான், வற்றினோடு இன்னும் பெறுதல்கொள்க. அவற்றின்கோடு, இவற்றின்கோடு, உவற்றின்கோடு ; செவி, தலை, புறம் எனவரும். (அ௩)

௩அ௰. வேற்றுமை யல்வழி யாய்த மாகும்.

இது, மேலவற்றிற்கு அல்வழிமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள் :—வேற்றுமை அல்வழி ஆய்தம் ஆகும் - அச்சுட்டுமுதலாகிய வகரவீறு வன்கணம் வந்தால் வேற்றுமைப்பொருட்புணர்ச்சி யல்லாத அல்வழிக்கண் அவ் வகரம் ஆய்தமாய்த் திரிந்துமுடியும்.

உ - ம். அஃகடிய, இஃகடிய, உஃகடிய ; சிறிய, தீய, பெரிய எனவரும். (அச)

௩அக. மெல்லெழுத் தியையி னவ்வெழுத் தாகும்.

இது, மேலனவற்றிற்கு மென்கணத்து முடிபுகூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மெல்லெழுத்து இயையின் அ எழுத்து ஆகும் அச்சுட்டு முதலாகிய வகர வீறு மென்கணம் வந்து இயைந்தவிடத்து அவ்வகரம் அம்மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும்.

உ-ம். அஞ்ஞாண், இஞ்ஞாண், உஞ்ஞாண்; நூல், மணி எனவரும். (அ௫)

௩அஉ. ஏனவை புணரி னியல்பென மொழிப.

இது, மேலவற்றிற்கு இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் முடிபு கூறுகின்றது.

இ-ள்:—ஏனவை புணரின் இயல்பு என மொழிப - அச்சுட்டு முதலாகிய வகரவீறு ஒழிந்த இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணரின் அவ்வகரம் திரியாது இயல்பாய் முடியும்.

உ-ம். அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ்; வட்டு, அடை, ஆடை என ஒட்டுக. (அ௬)

௩௮௩. ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே.

இஃது, இவ்வீற்றுள் ஒழிந்த ஒன்றற்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் முடிபு கூறுகின்றது.

இ-ள்:—ஏனை வகரம் தொழிற்பெயர் இயற்று- ஒழிந்த வகரவீறு ஞகரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் அல்லனவற்றுக்கண் உகரமே பெற்றும் முடியும்.

உ-ம். தெவ்வுக்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்: தெவ்வுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும். (௮எ)

௩௮௪. ழகார விறுதி ரகார வியற்றே.

இது, ழகாரவீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ழகார இறுதி ரகார இயற்று-ழகாரவீற்றுப்பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகாரவீற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம். பூழ்க்கால்; சிறகு, தலை, புறம் என வரும். (௮௮)

௩௮௫. தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருத லுரித்து மாகும்.

இஃது, இவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—தாழ் என் கிளவி கோலொடு புணரின்- தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லொடு புணரும் இடத்து, அக்கு இடை வருதலும் உரித்து - வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச்சாரியை இடை வந்து முடிதலும் உரித்து.

உ-ம். தாழக்கோல் என வரும். (௮௯)

௩௮௬. தமிழென் கிளவியு மதனோ ரற்றே.

இதுவும் அது.

இ-ள்:—தமிழ் என் கிளவியும் அதன் ஓர் அற்று- தமிழ் என்னும் சொல்லும் அதனோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குப் பெற்றும் முடியும்.

உ-ம். தமிழக்கூத்து; சேரி, தோட்டம், பள்ளி என வரும். (௯௰)

௩௮எ. குமிழென் கிளவி மரப்பெய ராயின்
பீரென் கிளவியோ டோரியற் றாகும்.

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—குமிழ் என் கிளவி மரப்பெயர் ஆயின் - குமிழ் என்னும் சொல் குமிழ்த்தல் என்னும் தொழிலன்றி மரப்பெயராயின், பீர் என் கிளவியோடு ஓர் இயற்று ஆகும் - பீர் என் கிளவியோடு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்தும் அம்முச்சாரியையும் பெற்று முடியும்.

உ-ம். குமிழங்கோடு; செதிள், தோல், பூ எனவரும்.

'ஓர் இயற்று' என்றதனால், பிறவற்றிற்கும் இம்முடிபுகொள்க. மகிழங்கோடு என வரும். (௯௧)

௩௮௮. பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே.

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்வு-பாழ் என்னும் சொல் வல்லெழுத்தோடு மெல்லெழுத்து உறழ்ந்து முடியும்.

உ-ம். பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு; சேரி, தோட்டம், பாடி என வரும்.

['ஏகாரம்' ஈற்றசை.] (௬௨)

௩௮௯. ஏழென் கிளவி யுருபிய னிலையும்.

இஃது, இவ்வீற்று எண்ணுப்பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஏழ் என் கிளவி—ஏழ் என்னும் எண்ணுப்பெயரது இறுதி, உருபு இயல் நிலையும்—உருபுபுணர்ச்சிக்கண் சொன்ன இயல்பின்கண்ணே நிலைபெற்று (அன் பெற்று) முடியும்.

உ-ம். ஏழன் காயம்; சுக்கு, தோரை, பயறு எனவரும்.

இயல்பு வல்லெழுத்து இவ்வோத்தின் புறனடையான் வீழ்க்க. ['கிளவி' ஆகுபெயர்.] (௬௩)

௩௯௦. அளவு நிறையு மெண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலு முகரம் வருதலும்
கடிநிலை யின்றே யாசிரி யர்க்க.

இது, மேலதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ-ள்:—அளவும் நிறையும் எண்ணும் வருவழி—(அவ் ஏழ் என்னும் எண்ணுப்பெயர்) அளவுப்பெயரும் நிறைப்பெயரும் எண்ணுப்பெயரும் (வருமொழியாய்) வருமிடத்து, நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும் ஆசிரியர்க்கு கடிநிலை இன்று—நெடுமுதல் குறுகுதலும்(ஆண்டு)உகரம் வருதலும் ஆசிரியர்க்கு நீக்கும் நிலைமை இன்று.

உ-ம். எழுகலம்; சாடி, தூதை, பலம் எனவும்: எழுமூன்று, எழுநான்கு எனவும் வரும்.

'நிலையின்று' என்றதனான், வன்கணத்துப் பொருட்பெயர்க்கும் இம்முடிபு கொள்க.

உ-ம். எழுகடல்; சிலை, திசை, பிறப்பு எனவரும்.

['ஏகாரம்' அசை. 'ஆசிரியர்க்கு' என்பது 'ஆசிரியர்க்க' என்றாயிற்று.] (௬௪)

௩௯௧. பத்தென் கிளவி யொற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டு மாய்தப் புள்ளி.

இது, மேலதற்கு ஒருவழி எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—பத்து என் கிளவி இடை ஒற்று கெடுவழி ஆய்தப்புள்ளி நிற்றல் வேண்டும்—(அவ்) ஏழ் என்பதனோடு பத்து என்பது (புணரும் இடத்து அப்பத்து என்[னும்]

கிளவி[யின்] இடை ஒற்றுக் கெடுவழி ஆய்தமாகிய புள்ளி நிற்றல் வேண்டும்.

உ-ம். எழுபஃது எனவரும். (௬௫)

௩௯௨. ஆயிரம் வருவழி யுகரங் கெடுமே.

இது, மேலதற்கு எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்:—ஆயிரம் வருவழி உகரம் கெடும்—(அவ் எழ் என்பது) ஆயிரம் என்பது வருமிடத்து (முன் பெற்ற) உகரம் பெறாது முடியும்.

உ-ம். எழாயிரம் எனவரும். ['எகாரம்' ஈற்றசை.] (௬௬)

௩௯௩. நூறூர்ந்து வரூஉ மாயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்க மின்றே.

இதுவும், மேலதற்கு ஒருவழி எய்தியது முழுவதும் விலக்குகின்றது.

இ-ள்:—நூறு ஊர்ந்து வரும் ஆயிரக்கிளவிக்கு - (அவ் எழ் என்பது) நூறு என்னும் சொல் ஊர்ந்து வருகின்ற ஆயிரக்கிளவியாகிய நூறாயிரம் என்பதற்கு, கூறிய நெடு முதல் குறுக்கம் இன்று—(முன்) கூறிய நெடுமுதல் குறுகி உகரம் பெறுதல் இன்று.

உ-ம். எழ் நூறாயிரம் எனவரும்.

'கூறிய' என்றதனான், நெடுமுதல் குறுகி உகரம் பெற்று எழுநூறாயிரம் என்றும் ஆம்.

இவ்விலேசினானே எழாயிரம் என்றும் ஆம்.

இன்னும் அதனானே, இயல்புகணத்து முடிபு கொள்க. எழுஞாயிறு, எழுநாள் எனவரும். ['எகாரம்' ஈற்றசை] (௬௭)

௩௯௪. ஐயம் பல்லென வரூஉ மிறுதி
அல்பெய ரெண்ணு மாயிய னிலையும்.

இதுவும், மேலதற்கு ஒருவழி எய்தியது முழுவதும் விலக்குகின்றது.

இ-ள்:—ஐ அம் பல் என வரும் இறுதி அல் பெயர் எண்ணும்— (அவ் எழ் என்னும் எண்தான்) ஐ என்றும் அம் என்றும் பல் என்றும் வருகின்ற இறுதிகளையுடைய (பொருட்பெயர்) அல்லாத எண்ணுப்பெயராகிய தாமரை வெள்ளம் ஆம்பல் என்பனவும் (வந்தால்), அ இயல் நிலையும்—(நெடுமுதல் குறுக்கம் இன்றி உகரம் பெறாது) அவ் இயல்பின் கண்ணே நின்று முடியும்.

உ-ம். எழ்தாமரை, எழ்வெள்ளம், எழாம்பல் எனவரும். ['ஆகாரம்' செய்யுள் விகாரம்.] (௬௮)

௩௯௫. உயிர்முன் வரினு மாயிய றிரியாது.

இதுவும், மேலதற்கு எய்தியது ஒருவழி விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்:—உயிர் முன் வரினும்—(அவ் எழ் என்பது அளவு முதலிய பெயர்களுள்) உயிர் முதல்மொழி[முன்] வரினும், அ இயல் திரியாது— (நெடுமுதல் குறுகி உகரம் வாராது முடியும்) அவ் இயல்பில் திரியாது முடியும்.

உ-ம். எழகல், எழுழக்கு, எழொன்று, எழிரண்டு எனவரும். ['ஆகாரம்' செய்யுள் விகாரம்.] (௬௯)

௩௯௫. கீழென் கிளவி யுறழத் தோன்றும்.

இஃது, இவ் ஈற்றுள் ஒன்றற்கு வேற்றுமைக்கண் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—கீழ் என் கிளவி உறழ தோன்றும்— கீழ் என்னும் சொல் உறழ்ச்சியாகத் தோன்றி முடியும்.

உ-ம். கீழ் குளம், கீழ்க்குளம் எனவரும்.

'தோன்றும்' என்றதனான், நெடுமுதல் குறுகாது உகரம் வருதலும் கொள்க. [ஆங்கு] இயைபு வல்லெழுத்து இவ்வோத்தின் புறனடையான் வீழ்க்க.

உ-ம். கீழுகுளம்; சேரி, தோட்டம், பாடி எனவரும். (ா)

௩௯௬. ளகார விறுதி ணகார வியற்றே.

இது, ளகார ஈற்றிற்கு ணகார ஈற்று வேற்றுமைமுடிபோடு இயைய வேற்றுமைமுடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ளகார இறுதி ணகார இயற்று—ளகார ஈற்றுப் பெயர் (வேற்றுமைக்கண்) ணகார ஈற்று இயல்பிற்றாய் (வன்கணம் வந்தால் ளகாரம் டகாரமாய்த் திரிந்து) முடியும்.

உ-ம். முட் குறை; சிறை, தலை, புறம் எனவரும். ['ஏகாரம்' ஈற்றசை.] (ாக)

௩௯௭. மெல்லெழுத் தியையின் ணகார மாகும்.

இது, மேலதற்கு மென்கணத்து முடிபு கூறுகின்றது.

இ-ள்:—மெல்லெழுத்து இயையின் ணகாரம் ஆகும்—(ளகார ஈறு) மெல்லெழுத்து (வருமொழியாய் வந்து) இயையின் ணகாரமாய் (த்திரிந்து) முடியும்.

உ-ம். முண் ஞெரி; நுனி, முறி எனவரும். இதனை வேற்றுமை இறுதிக்கண் அல்வழியது எடுத்துக் கோடற்கண் சிங்க நோக்காக வைத்தலின், அல்வழிக்கும் இம்முடிபு கொள்க.

உ-ம். முண் ஞெரிந்தது; நீண்டது, மாண்டது எனவரும். (ாஉ)

௩௯௮. அல்வழி யெல்லா முறழெ்ன மொழிப.

இது, மேலதற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அல்வழி எல்லாம் உறழ் என மொழிப— (ளகார ஈற்று) அல்வழிகளெல்லாம் (திரிந்தும் திரியாதும்) உறழ்ந்து முடியும் என்று சொல்லுவர் (புலவர்).

உ-ம். முள் கடிது, முட் கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்,

'எல்லாம்' என்றதனல், குணவேற்றுமைக்கண்ணும் இவ் வுறழ்ச்சி கொள்க.

உ-ம். முள் குறுமை, முட் குறுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும்; கோள் கடுமை, கோட் கடுமை எனவும் வரும்.

இன்னும் அதனானே, உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபும் கொள்க.

உ-ம். அதோட் கொண்டான், இதோட் கொண்டான், உதோட் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும். (ாா)

௩௭௩. ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வரூஉங் காலை யான.

இது, மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—ஆய்தம் நிலையலும் வரை நிலை இன்று—(ளகாரம் டகாரமாயே திரியாது) ஆய்தமாய்(த்திரிந்து) நிற்றலும் வரையும் நிலைமை இன்று, தகரம் வரும் காலை-தகர முதல்மொழி வரும் காலத்து.

உ-ம். முஃடீது, முட்டீது எனவரும்.['ஏகாரம்' ஈற்றசை. உகரநீட்டம் செய்யுள் விகாரம். 'ஆன்' இடைச்சொல்; 'அகரம்' சாரியை. வரைநிலைமை-கடியும்நிலைமை. (௩௪)

௩௭௪. நெடியத னிறுதி யியல்பா குநவும்
வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்
போற்றல் வேண்டு மொழியுமா ருளவே.

இது, மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—நெடியதன் இறுதி இயல்பாகுநவும்-(ளகாரம்) நெடியதன் இறுதி திரியாது இயல்பாய் முடிவனவற்றையும், வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும்-வேற்றுமை அல்லாத அல்வழியிடத்து வேற்றுமை (யின் இயல்புடையனவாய்த்திரிந்து) முடிதலையும், போற்றல் வேண்டும் மொழியும் உள-போற்றுதல் வேண்டும் மொழிகளும் உள.

உ-ம், வாள்கடிது, கோள்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்: தோட்கடிது, நாட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும் வரும்.

'போற்றல் வேண்டும்' என்றதனான், உதளங்காய்; செதிள், தோல், பூ என அம் முப்பெற்று முடிவன கொள்க.

['ஆர்,' 'ஏ' அசைகள். அம்மு-அம் சாரியை.] (௩௫)

௩௭௫. தொழிற்பெய ரெல்லாந் தொழிற் பெயரியல.

இஃது, இவ்வீற்றுத் தொழிற்பெயர்க்கு வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல-(ளகார ஈற்றுத்) தொழிற்பெயரெல்லாம் (வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் (வன்கணம் வந்தவழி வல்லெழுத்தும் உகரமும் பெற்றும் மென்கணமும் இடைக்கணத்து வகரமும் வந்தவழி உகரம் பெற்றும்) முடியும்.

உ-ம். துள்ளுக் கடிது; சிறிது, தீது, பெரிது: ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்: துள்ளுக் கடுமை; சிறுமை, தீமை, பெருமை; ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனால், தொழிற் பெயர்கள் இருவழியும் இவ்வாறன்றிப் பிற வாறு முடிவனவும் கொள்க.

உ-ம். கோள் கடிது, கோட் கடிது; வாள்கடிது, வாட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்: கோள் கடுமை, கோட் கடுமை; வாள் கடுமை, வாட் கடுமை; சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

ஈண்டு, வாள் என்றது வாள்லுதலை. (௩௬)

௩௭௩. இருளென் கிளவி வெயிலிய னிலையும்.

இதுவும், அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—இருள் என் கிளவி வெயில் இயல் நிலையும் - இருள் என்னும் சொல் (வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்) வெயில் என்னும் சொல்லின் இயல்பிலே (நின்று அத்தும் இன்னும் பெற்று) முடியும்.

உ-ம்:—இருளத்துக் கொண்டான், இருளிற் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும். (௭௭)

௩௭௪. புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல.

இதுவும், அவ்வீற்றுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் இயல - புள் என்னும் சொல்லும் வள் என்னும் சொல்லும் (வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் ளகார ஈற்றுத்) தொழிற்பெயர் இயல்பிற்றாய் (வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும்) முடியும்.

உ-ம்:—புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது; சிறிது, தீது, பெரிது; ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்: புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை; சிறுமை, தீமை, பெருமை; ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

இதனைத் "தொழிற்பெயரெல்லாம்" என்றதன் பின் வையாத முறையன்றிய கூற்றினான், இருவழியும் வேற்றுமைத்திரிபு எய்தி முடிவனவும் கொள்க.

உ-ம்:—புட்கடிது, வட்கடிது; சிறிது, தீது, பெரிது; ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும்: புட்கடுமை, வட்கடுமை; சிறுமை, தீமை, பெருமை; ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் வரும்.

இன்னும் அதனானே, பள் என்பதன் கண்ணும், கள் என்பதன் கண்ணும் இருவழியும் இவ் விரு முடிபு பெற்றவழிக் கொள்க.

பள்ளுக்கடிது, கள்ளுக்கடிது; பள்ளுக்கடுமை, கள்ளுக்கடுமை எனவும்: பட்கடிது; கட்கடிது; பட்கடுமை, கட்கடுமை எனவும் ஒட்டுக. (௭௮)

௩௭௫. மக்க ளென்னும் பெயர்நிலைக் கிளவி
தக்கவழி யறிந்து வலித்தலு முரித்தே.

இது, மக்கள் என்னும் உயர்திணைப் பெயருக்கு "உயிரீறாகிய வுயர்திணைப்பெயரும்" [தொகை மரபு - சூத்திரம் ௰௧] என்பதனுள் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—மக்கள் என்னும் பெயர்நிலை கிளவி - மக்கள் என்னும் பெயர்ச் சொல்லின் இறுதி, தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்து-(இயல்பேயன்றித்) தக்க இடம் அறிந்து வல்லொற்றாய் (த்திரிந்து) முடிதலும் ஆம்.

'தக்கவழி' என்றதனால், அம்மக்கள் உடம்பு உயிர் நீங்கிய காலத்து இம் முடிபு எனக்கொள்க.

உ-ம்:—மக்கட்கை; செவி, தலை, புறம் என வரும்.

['இளவி' ஆகுபெயர். 'ஏகாரம்' ஈற்றசை.] (௯௧)

௩௯௧. உணரக் கூறிய புணரியன் மருங்கின்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.

இஃது, இவ்வோத்திற்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—உணரக் கூறிய-உணரக் கூறப்பட்ட புள்ளியீறு[கள்],புணர் இயல் மருங்கின்-(வருமொழியோடு) புணரும் இயல்பிடத்து, கண்டு செயற்கு உரியவை கண்ணினர் கொளல்-(மேல் முடித்த முடிபுகளேயன்றி வழக்கினுள்) கண்டு முடித்தற்குரிய பிற முடிபுகளைக் கருதிக் கொண்டு முடிக்க.

உ-ம்:—விழன் குளம்; சேறு, தறை, பழனம் என இவை னகார ஈற்று வேற்றுமைக்கண் திரியாது இயல்பாய் முடிந்தன.

பொன்னப்பத்தம் என்பது அவ்வீறு அக்குப்பெற்று முடிந்தது.

நீர் குறிது; சிறிது, தீது, பெரிது என்பது ரகார ஈற்று அல்வழி முடிபு.

வேர் குறிது; வேர்க்குறிது [என்பது] அவ்வீற்று அல்வழி உறழ்ச்சி.

அம்பர்க்கொண்டான், இம்பர்க்கொண்டான், உம்பர்க்கொண்டான், எம்பர்க்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என்பன அவ்வீற்றுள் உருபு வாராது உருபின் பொருள்பட வந்தவற்றின் முடிபு.

தகர்க்குட்டி என்பது அவ்வீற்று இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகிய அல்வழி முடிபு.

வடசார்க்கூரை, தென்சார்க்கூரை என்பன அவ்வீற்று இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ முடிபு.

உசிலங்கோடு, எலியாலங்கோடு என்பன லகார ஈற்று அம்முப்பேறு.

கல்லம்பாறை என்பது அவ்வீற்று அல்வழி அம்முப்பேறு.

அழலத்துக்கொண்டான் என்பது அவ்வீற்று அத்துப்பேறு.

அழுக்கற்போர் என்பது அவ்வீற்று அல்வழித்திரிபு.

யாழ்குறிது; சிறிது, தீது, பெரிது என்பன ழகார ஈற்று அல்வழி முடிபு.

வீழ்குறிது, வீழ்க்குறிது என்பன அவ்வீற்று அல்வழி உறழ்ச்சி.

தாழப்பாவை என்பது அவ்வீறறு அல்வழி அக்குப்பேறு.

இனி "உணரக்கூறிய" என்றதனால், குளத்தின்புறம், மரத்தின்புறம் என உருபிற்கு எய்திய அத்தோடு இன்பெறுதலும் கொள்க.

இனிக் "கண்ணினர்" என்றதனால், ஒருநாளைக் குழவி என ளகார ஈறு ஐ என்னும் சாரியையும் வல்லெழுத்தும் பெற்று முடிந்தன கொள்க.

பிறவும், இவ்வோத்தின் வேறுபட வருவன வெல்லாம் இதன் அகத்து முடித்துக் கொள்க. (௯௰)

எட்டாவது புள்ளிமயங்கியல் முற்றிற்று.

ஒன்பதாவது—குற்றியலுகரப் புணரியல்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், குற்றியலுகர ஈறு வருமொழியோடு புணரும் இயல்பு உணர்த்தினமையின் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது.

சாஎ. ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன்.

இத்தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இக்குற்றியலுகரம் வரும் இடத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—ஈர் எழுத்து ஒரு மொழி - இரண்டு எழுத்தாலாகிய ஒரு மொழியும், உயிர்த்தொடர் - உயிர்த்தொடர்மொழியும், இடைத்தொடர் - இடைத்தொடர்மொழியும், ஆய்தத்தொடர் - ஆய்தத்தொடர்மொழியும், வன்தொடர் - வன்தொடர்மொழியும், மென்தொடர் மொழி - மென்தொடர்மொழியும், அ இரு மூன்று (ஆகிய) அவ் ஆறு (என்று சொல்லப்படும்), உகரம் குறுகு இடன் - உகரம் குறுகி வரும் இடன்.

உ-ம்:—நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு என வரும்.

[நாகு - இளமரம். தெள்கு - ஒரு பூச்சி. எஃகு - வேல். 'தொடர்' நான்கும் ஆகுபெயர். சுட்டின் நீட்டமும் வகர உடம்படுமெய் யகர உடம்படுமெய்யானதும் செய்யுள் விகாரம். 'ஏகாரம்' தேற்றேகாரம். நன்னூலார் போல இந்நூலார் வல்லொற்றின் மீது ஏறிய உகரமே குறுகும் என்று கூறாமை காண்க.] (க)

சாஅ. அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா.

இஃது, அவ் ஆறனுள் ஓர் ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—அவற்றுள் ஈர் ஒற்று தொடர்மொழி - அவற்றுள் ஈர் ஒற்றுத்தொடர் மொழி[களில்], இடைத்தொடர் ஆகா - இடைத்தொடர் ஆகா. (வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் ஆம்.)

உ-ம்:—ஈர்க்கு; மொய்ம்பு எனவரும்.

[(இடையில்) இரண்டு ஒற்றெழுத்துக்கள் தொடர்ந்து வரும் (மூவெழு) மொழிகளில் இடைத்தொடர் மொழிகள் உகரம் குறுகும் இடன் ஆகா என்பதே நேர் உரை. உ-ம்:—வெய்த்து எனவரும். இவ்விடைத்தொடர்மொழிகள் "அலர்பெய்த்து ஆராமிழிப்பினு மென்றெடு, மலர்கொய்த்து ஆடு மகிழ்ந்து" என்றது போன்ற செய்யுளின் கண்ணே நிகழும். இரண்டொற்று இடைவிடாமையைக் குறித்து நின்றது.]

௪௱௯. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா விறுதியு முகர நிறையும்.

இஃது, எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்:—அல்லது கிளப்பினும் - அல்வழியைச் சொல்லும் இடத்தும், வேற்றுமைக்கண்ணும் - வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண்ணும், எல்லா இறுதி உகரமும் நிறையும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்.

உ-ம்:—நாகு கடிது; நாகு கடுமை; வரகு கடிது; வரகு கடுமை என வரும்.

['நிலையும்' என்ற பாடங்கொண்டு, அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் (ஒற்றுக்கள் இரண்டு தொடர்ந்துவரும் இடைத்தொடர்மொழிகள் அல்லாத) அறுவகை மொழிகளின் இறுதிக்கண்ணும் குற்றியலுகரம் நிற்கும் என்று உரைத்தலே பொருத்தம் உடைத்து.] (௯)

௪௱௰. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி
தொல்லை யியற்கை நிலையலு முரித்தே.

இஃது, எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

இ-ள்:—வல்லொற்றுத் தொடர்மொழி – (அவ் ஈற்றுள்ளும்) வல்லொற்றுத் தொடர்மொழி, வல்லெழுத்து வருவழி-வல்லெழுத்து முதல்மொழி(வருமொழியாய்) வரும் இடத்து, தொல்லை இயற்கை நிலையலும் உரித்து – முன் (கூறிய) இயற்கை நிற்றலும் உரித்து.

உ-ம்:—கொக்குக் கடிது; கொக்குக் கடுமை எனவரும்.

['ஏகாரம்' ஈற்றசை. 'தொல்லை இயற்கை' என்பதற்கு ஈண்டுக் கூறும் உகரம் (அதாவது குற்றியலுகரம்) தனது முந்திய தன்மையில் (அதாவது முற்றுகரமாக) நிற்றலும் உரித்து, நில்லாமையும் உரித்து என்று உரைத்தலே பொருத்தம் உடைத்து.

உ-ம்:—கொக்கு கடிது; கொக்கு கடுமை என்பவற்றில் முற்றுகரம் ஒலித்தலும், கொக்குக்கடிது; கொக்குக்கடுமை என்பவற்றில் குற்றுகரம் ஒலித்தலும் காண்க.] (௰)

௪௧௧. யகரம் வருவழி யிகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத்தோன் றாது.

இது, குற்றியலிகரம் புணர்மொழியுள் வருமாறு உணர்த்துதல் நுதலிற்று. [இது, குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆம் இடம் உணர்த்துதல் நுதலிற்று என்று கூறுதல் மிகப்பொருத்தம் உடைத்து.]

இ-ள்:—யகரம் வருவழி உகரக் கிளவி துவரத்தோன்றாது - யகர முதல்மொழி வரும் இடத்து நிலைமொழி உகரம் முற்றத்தோன்றாது; இகரம் குறுகும் - [ஆண்டு] ஓர் இகரம் (வந்து) குறுகும்.

உ-ம்:—நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது, கொக்கியாது, குரங்கியாது எனவரும்.

இதனானே, ஆகார ஈறு அகரம் பெற்றாற் (உயிர் மயங்கியல் - சூத்திரம் ௨௪) போல ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் இகரம் பெற்று யகர முதல்மொழியோடு புணருமாறு கூறிற்றாயிற்று. (௧)

௪௩௨. ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

இது, மேற்கூறிய ஆறினுள்ளும் முன்னின்ற இரண்டிற்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

இ-ள்:—ஈர் எழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும் - ஈர் எழுத்து ஒரு மொழிக் குற்றியலுகர ஈறும் உயிர்த்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வேற்றுமை ஆயின் - வேற்றுமைப்பொருட் புணர்ச்சியாயின், இன ஒற்று இடை மிக வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும் - இனமாகிய ஒற்று இடையிலே மிக வல்லெழுத்துமிகுதி தோற்றி முடிதல் வேண்டும்.

உ-ம்:—யாட்டுக்கால்; செவி, தலை, புறம் எனவும்: முயிற்றுக்கால்; சினை, தலை, புறம் எனவும் வரும்.

'தோற்றம்' என்றதனால், இவ்விரண்டிற்கும் [வினைக்கணைத்து] இயல்பு கணைத்து முடிபு கொள்க.

உ-ம்:—யாட்டுஞாற்சி, முயிற்றுஞாற்சி; நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம் எனவரும். [மொழி இரண்டும் ஆகுபெயர்.] (௬)

௪௩௩. ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.

இஃது, எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ-ள்:—இன ஒற்று இடை மிகா மொழியும் உள - இன ஒற்று இடை [யில்] மிக்கு முடியாத மொழிகளும் உள; வல்லெழுத்து மிகல் அ திறத்து இல்லை - வல்லெழுத்து மிக்கு முடிதல் அக்கூற்றுள் இல்லை.

உ-ம்:—நாகுகால்; சினை, தலை, புறம் எனவும்: வரகு கதிர்; சினை, தலை, புறம் எனவும் வரும்.

'அத்திறம்' என்றதனால், உருபிற்கு எய்திய சாரியை பொருட்கு எய்தியவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. யாட்டின்கால், முயிற்றின்கால், நாகின்கால், வரகின்கால் எனவரும்.

['ஆர்' அசை. ஏகாரம் இரண்டும் ஈற்றசை.] (௭)

௪௩௪. இடையொற்றுத் தொடரு மாய்தத் தொடரும்
நடையா யியல வென்மனார் புலவர்.

இஃது, இடை நின்ற இரண்டிற்கும் முடிபு கூறுகின்றது.

இ-ள்:—இடை ஒற்றுத்தொடரும் ஆய்தத்தொடரும் நடை - இடை ஒற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் ஆய்தத்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் நடக்கும் இடத்து, அ இயல என்மனார் புலவர் - மேற்கூறிய இயல்பு முடிபினை உடைய என்று சொல்லுவர் புலவர்.

உ-ம்:—தென்குகால்; சிறை, தலை, புறம் எனவும்: எஃகுகால்; சிறை, தலை, புறம் எனவும் வரும். [சுட்டின் நீட்டம் செய்யுள் விகாரம்.] (௮)

௪௧௫. வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்.

இது, பின் நின்ற இரண்டிற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் - வன்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வந்த வல்லெழுத்து ஒற்று இடை மிகும் - (வருமொழியாய்)வந்த வல்லொற்று இடையிலே மிக்கு முடியும்; மெல்லொற்று தொடர்மொழி மெல்லொற்று எல்லாம் - (அவ்விரண்டு ஈற்றினுள்)மெல்லொற்றுத் தொடர்மொழி (க்கண் நின்ற) மெல்லொற்றெல்லாம், இறுதி வல்லொற்று கிளை ஒற்று ஆகும் - இறுதி வல்லொற்றும் கிளைவல்லொற்றும் ஆய்முடியும்.

உ-ம்:—கொக்குக் கால்; சிறகு, தலை, புறம் எனவும்: எட்டுக்குட்டி; செவி, தலை, புறம் எனவும் வரும்.

'வந்த' என்றதனால், இவ்விரண்டிற்கும் உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கு எய்திய வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கொக்கின்கால், குரங்கின்கால் எனவரும்.

'எல்லாம்', என்றதனால், பறம்பிற்பாரி என்றாற் போல்வன மெல்லொற்றுத் திரியாமையும் கொள்க.

'ஒற்று' என்ற மிகுதியான், இயல்புகணத்துக்கண்ணும் குரக்குஞாற்சி; நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை, அடைவு, ஆட்டம் என மெல்லொற்றுத் திரிதலும் கொள்க.

[ஏகாரம் ஈற்றசை. 'மொழியும்' என்ற இரண்டும் ஆகுபெயர்.] (௯)

௪௧௬. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை.

இஃது, அவ்வீற்று இரண்டிற்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மரப்பெயர் கிளவிக்கு சாரியை அம் - (வன்றொடரின்கண்ணும் மென்றொடரின்கண்ணும்) மரப்பெயராகிய சொல்லிற்கு(வரும்)சாரியை அம்(முச்சாரியை).

உ-ம்:—குருந்தங்கோடு; செதிள், தோல், பூ எனவும்: வேப்பங்கோடு; செதிள், தோல், பூ எனவும் வரும். (௰)

௪௧௭. மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே.

இது, மென்றொடர் மொழிக்கு எய்தியது ஒரு மருங்கு மறுக்கின்றது.

இ-ள்:—மெல்லொற்று வலியா மரப்பெயரும் உள - மெல்லொற்று வல்லொற்றாய்த்திரியாது முடியும் மரப்பெயரும் உள.

உ-ம்:—குருந்தங்கோடு; செதிள், தோல், பூ எனவும்: புன்கங்கோடு; செதிள், தோல், பூ எனவும் வரும்.

மற்று, இது நிலைமொழித்தொழிலை நிலைமொழி விலக்குமாதலின் சாரியை வகுப் பவே முடியும் பிற எனின், இது நிலைமொழியின் உள்தொழிலாகலின் அவ்வாறு விலக் குண்ணு தென்பது கருத்து. [ஏகாரம் ஈற்றசை.] (௧௧)

௪௧அ. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம்மிடை வரற்கு முரியவை யுளவே
அம்மர பொழுகு மொழிவயி னான.

இஃது, ஈரெழுத்து ஒருமொழிக்கும் வன்றொடர்மொழிக்கும் எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று.

இ-ள்:—ஈர் எழுத்து மொழியும் வல்லொற்றுத்தொடரும் - ஈரெழுத்து ஒரு மொழிக் குற்றியலுகரமும் வன்றொடர்மொழிக் குற்றியலுகரமும், அம் இடை வரற்கும் உரியவை உள - (முன் முடித்துப்போந்த முடிபுகளன்றி) அம் (முச்சாரியை) இடை வந்து முடிதற்கு உரியனவும் உள. (யாண்டெனின்,) அம்மரபு ஒழுகும் மொழிவயின் - அவ் இலக்கணம் நடக்கும் மொழியிடத்து.

உ-ம்:—ஏறங்கோள், வட்டம்போர் என வரும்.

'உள' என்றதனால், தெங்கங்காய், பயிற்றங்காய் என வன்றொடர் அல்லனவற் றிற்கு அம் (முப்) பேறு கொள்க.

'அம்மரபொழுகும்' என்றதனால், அரசக்கன்னி, முரசக்கடிப்பு என அக்குப்பே றும் கொள்க.

இன்னும் அதனானே, இருட்டத்துக்கொண்டான் என்னும் அத்துப் பேறும் கொள்க.

இன்னும் அதனானே, மயிலாப்பிற் கொற்றன், பறம்பிற்பாரி என இன்பேறும் கொள்க.

இன்னும் அதனானே, கரியதன் கோடு என அன் பேறும் கொள்க.

[ஏகாரம் ஈற்றசை. 'ஆன்' இடைச்சொல்; அகரம் சாரியை. 'மொழியும்' 'தொட ரும்' ஆகுபெயர். 'அம்' சாரியையை 'அம்மு' ச் சாரியையெனக்கூறுவது வழக்கு.] (௧௨)

௪௧௯. ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியு முளவென மொழிப.

இது, மென்றொடர் மொழியுள் சிலவற்றிற்கு எய்தியது விலக்குதலும் எய்திய தன்மேல் சிறப்பும் கூறுகின்றது.

இ-ள்:—ஒற்று நிலை திரியாது அக்கொடு வரும் அ கிளை மொழியும் உள என. மொழிப- ஒற்று (முன் நின்ற) நிலை திரியாது அக்குச்சாரியையோடு(ம் பிறசாரியை யோ டும்) வரும் அக் கிளையெழுத்து மொழியும் உள என்று சொல்லுவர் (ஆசிரியர்).

உ-ம்:—குன்றக் கூகை, மன்றப் பெண்ணை என வரும்.

'உம்'மையால், கொங்கத்துழவு, வங்கத்து வாணிகம் என அத்துப் பெற்றன.

'நிலை' என்றதனன், ஒற்று நிலை திரியா அதிகாரத்துக்கண் இயைபு வல்லெழுத்து விலக்குக.

'அக்கிளைமொழி' என்றதனால், பார்ப்பனக்கன்னி, பார்ப்பனச்சேரி என அன்னும் அக்கும் வந்தன கொள்க.

[உகர நீட்டம் செய்யுள் விகாரம். 'அக்கிளை' ஆகுபெயர்.] (௧௩)

௪௨௰. எண்ணுப் பெயர்க்கிளவி யுருபிய னிலையும்.

இது, குற்றுகர ஈற்று எண்ணுப்பெயரோடு பொருட்பெயர் முடிக்கின்றது.

இ-ள்:—எண்ணுப் பெயர் கிளவி உருபு இயல் நிலையும் - எண்ணுப் பெயராகிய சொற்கள் உருபுபுணர்ச்சியின் இயல்பின்கண்ணே நின்று (அன்பெற்று) முடியும்.

உ-ம்:—ஒன்றன்காயம், இரண்டன்காயம்; சுக்கு, தோரை, பயறு எனவரும். (௧௪)

௪௨௧. வண்டும் பெண்டு மின்னொடு சிவணும்.

இது, மென்றொடர்மொழியுள் சிலவற்றிற்குப் பிற முடிபு கூறுகின்றது.

இ-ள்:—வண்டும் பெண்டும் இன் ஒடு சிவணும் - வண்டு என்னும் சொல்லும் பெண்டு என்னும் சொல்லும் இன்சாரியையோடு பொருந்தி முடியும்.

உ-ம்:—வண்டின் கால், பெண்டின் கால் எனவரும். (௧௫)

௪௨௨. பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்.

இது, மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—பெண்டு என் கிளவிக்கு அன்னும் வரையார் – பெண்டு என்னும் சொல்லிற்கு (இன்னேயன்றி) அன்சாரியையும் வரையார் [ஆசிரியர்].

உ-ம்:—பெண்டன்கை எனவரும். (௧௬)

௪௨௩. யாதெ னிறுதியுஞ் சுட்டு முதலாகிய
ஆய்த விறுதியு முருபிய னிலையும்.

இஃது, ஈரெழுத்து ஒருமொழியுள் ஒன்றற்கும் சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழிக்கும் வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—யாது என் இறுதியும் சுட்டு முதல் ஆகிய ஆய்த இறுதியும் - யாது என்னும் ஈறும் சுட்டு முதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், உருபு இயல் நிலையும் - உருபு புணர்ச்சியின் இயல்பின் (கண்ணே) நின்று சுட்டு முதல் மொழிகள் அன்பெற்றும் ஆய்தம் கெட்டும் முடியும்.

உ-ம்:—யாதன் கோடு, அதன் கோடு, இதன் கோடு, உதன் கோடு எனவரும்.

௪௨௪. முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டு மல்வழி யான.

இது, மேற்கூறிய ஈற்றுள் சுட்டு முதல் ஈற்று உகரத்திற்கு ஒருவழி அல்வழி முடிபு கூறுகின்றது.

இ-ள்:—முன் உயிர் வரும் இடத்து - (அவற்றுள் சுட்டு முதல் ஆய்தத் தொடர்மொழி உகர ஈறு தன்) முன்னே உயிர் வரும் இடத்து, ஆய்தப்புள்ளி மன்னல் வேண்

டும் - ஆய்தப்புள்ளி (முன்பு போலக் கெடாது) நிலைபெற்று முடிதல் வேண்டும், அல்வழியான் - அல்வழியின்கண்.

உ-ம்:—அஃதடை, இஃதடை, உஃதடை; ஆடை, இலை என ஒட்டுக.

'முன்' என்றதனான், வேற்றுமைக்கண்ணும் உயிர் முதல் மொழி வந்த இடத்து அஃதடைப்பு, அஃதாட்டம் என ஆய்தம் கெடாமை கொள்க.

['ஆன்' என்பது வேற்றுமை மயக்கம். அகரம் சாரியை.] (கஅ)

சஉ௫. ஏனைமுன் வரினே தானிலை யின்றே.

இது, மேலனவற்றிற்குப் பிறகணத்தோடு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஏனை முன்வரின் தான் நிலையின்று - (அச்சுட்டுமுதல் உகர ஈறு உயிர்க் கணம் ஒழிந்த) பிற கணங்கள் முன்வரின் அவ் ஆய்தம் நிலையின்றி முடியும்.

உ-ம்:—அது கடிது, இது கடிது, உது கடிது; சிறிது, தீது, பெரிது; ஞான்றது, நீண்டது, மாண்டது; யாது, வலிது எனவரும். [முன்னைய ஏகாரம் அசை. பின்னையது ஈற்றசை.] (கக)

சஉ௬. அல்லது கிளப்பி னெல்லா மொழியும்
சொல்லிய பண்பி னியற்கை யாகும்.

இஃது, ஆறு ஈற்றுக் குற்றியலுகரத்திற்கு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—அல்லது கிளப்பின் - அல்வழியைச் சொல்லும் இடத்து, எல்லா மொழியும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும், சொல்லிய பண்பின் இயற்கை ஆகும் - மேற் சொல்லிய பண்பினையுடைய இயல்பாய் முடியும்.

உ-ம்:—நாகு கடிது, வரகு கடிது, தெள்கு கடிது, எஃகு கடிது, குரங்கு கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

'எல்லா மொழியும்' என்றதனால், வினைச்சொல்லும் வினைக்குறிப்புச்சொல்லும் இயல்பாய் முடிந்தன கொள்க. கிடந்தது குதிரை, கரிது குதிரை எனவரும்.

'சொல்லிய' என்றதனான், இருபெயரொட்டுப் பண்புத்தொகை முடிபு கொள்க. காட்டுக்கானம், குருட்டெருது எனவரும்.

'பண்பின்' என்றதனான், ஐ என்னும் சாரியை பெற்று வரும் அல்வழி முடிபும் கொள்க. அன்றைக்கூத்தன், பண்டைச்சான்றூர், ஒற்றை யாட்டை யானை, மற்றை யானை எனவரும். (உ0)

சஉ௭. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே.

இஃது, அவ் ஈற்றுள்ளும் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—வல்லொற்றுத்தொடர்மொழி – வல்லொற்றுத்தொடர்மொழிக் குற்றியலுகரம், வல்லெழுத்து மிகும் - (வல்லெழுத்து வருவழி) வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்:—கொக்குக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

['வல்லொற்றுத்தொடர்மொழி' என்பது ஆகுபெயர். 'ஏகாரம்' ஈற்றசை.] (உக)

௪௨௮. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை.

இதுவும், அவ் ஈற்றுள் ஒன்றன்கண் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்:—சுட்டு சினை நீடிய மென்றொடர்மொழியும் - சுட்டாகிய சினையெழுத்து நீண்ட மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், யா வினா முதலிய மென்றொடர் மொழியும் - யா என்னும் வினா முதலாகிய மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், வல்லெழுத்து இயற்கை அ இயல் திரியா - (மேற்கூறிய)வல்லெழுத்து இயற்கையாகிய அவ் இயல்பில் திரியா (து முடியும்).

உ-ம்:— ஆங்குக்கொண்டான்; ஈங்குக்கொண்டான், ஊங்குக்கொண்டான், யாங்குக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'இயற்கை' என்றதனான், அக்குற்றுகர ஈற்று வினையெச்ச முடிபு கொள்க. செத்துக்கிடந்தான், இருந்துகொண்டான் எனவரும்.

['மென்றொடர்மொழி' என்ற இரண்டும் ஆகுபெயர். அகர நீட்டம் செய்யுள் விகாரம்.] (௨௨)

௪௨௯. யாவினா மொழியே யியல்பு மாகும்.

இது, மேலவற்றுள் ஒன்றன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—யா வினா மொழி இயல்பும் ஆகும் -(அவற்றுள்,) யா வினா மொழி (மேற்கூறிய விகாரமேயன்றி) இயல்பாயும் முடியும்.

உ-ம்:—யாங்குக் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும். ()

௪௩௰. அந்நான் மொழியுந் தந்நிலை திரியா.

இது, மேலவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

இ-ள்:—அ நால் மொழியும் -(சுட்டு முதல் மூன்றும் யா முதல் மொழியுமாகிய) அந்நான்கு மொழியும், தம் நிலை திரியா-தம் மெல்லொற்று நிலை திரிந்து வல்லொற்று ஆகாது முடியும்.

'தந்நிலை' என்றதனால், மெல்லொற்றுத்திரியாது மிக்கு முடிவன பிறவும் கொள்க.

உ-ம்:—அங்குக் கொண்டான், இங்குக் கொண்டான், உங்குக் கொண்டான், எங்குக் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'யாமொழி' என்னாது 'வினா' என்றதனால், பிற இயல்பாய் முடிவனவும் கொள்க. முந்து கொண்டான், பண்டு கொண்டான், இன்று கொண்டான், அன்று கொண்டான் எனவரும். [~~'ஏகாரம்' அசை.~~] (௨௪)

௪௫௧. உண்டென் கிளவி யுண்மை செப்பின்
முந்தை யிறுதி மெய்யொடுங் கெடுதலும்
மேனிலை யொற்றே ளகார மாதலும்
ஆமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து வருஉங் காலை யான.

இது, மென்றொடர்மொழியுள் ஒரு வினைக்குறிப்பு மொழிக்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—உண்டு என் கிளவி உண்மை செப்பின் - உண்டு என்னும் சொல் (உண்டு என்னும் தொழில் ஒழிய) உண்மை என்னும் பண்பு உணர நிற்கும் இடத்து, முந்தை இறுதி மெய்யொடும் கெடுதலும் மேல் நிலை ஒற்று ளகாரம் ஆதலும் - முற்பட்ட ஈற்றுக் குற்றியலுகரம் (தான் ஏறி நின்ற) மெய்யோடும் கெடுதலும் அதற்கு மேல் நின்ற ணகார ஒற்று ளகாரம் ஆதலுமாகிய, அ முறை இரண்டும் உரிமையும் உடைத்து - அம் முறைமையுடைய இரண்டினையும் உரித்தாதலும் உடைத்து, வல்லெழுத்து வரும் காலை - வல்லெழுத்து முதல்மொழி வருங்காலத்து.

வல்லெழுத்ததிகாரம் வாரா நிற்ப, ('வல்லெழுத்து வருஉங்காலை' என்றதனான்) இவ் இருமுடிபும் உள்ளது பகர முதல்மொழி வந்தால். மற்றை மூன்று எழுத்தின் கண்ணும் ஈறு கெடாதே நின்று முடியும் என்று கொள்க.

இன்னும் அதனானே, இயல்பு கணத்து இறுதி கெடாதே முடிதல்கொள்க.

உ-ம்:—உள் பொருள், உண்டு பொருள் எனவும்: உண்டு காணம், உண்டு சாக்காடு, உண்டு தாமரை எனவும்: உண்டுஞாண்; நூல், மணி, யாழ், வட்டு, அடை, ஆடை எனவும் வரும்.

'உள்பொருள்' என்பது பண்புத்தொகை முடிபு அன்றே எனின், அஃது ஓசை ஒற்றுமைபடச்சொல்லும் வழியது; இஃது, ஓசை இடையறவுபடச்சொல்லும் வழியது போலும்.

[உண்மைப்பண்பாவது, ஒரு பொருள் தோன்றுங்கால் தோன்றி அது கெடுந்துணையும் உண்டாய் நின்ற தன்மை. 'ஏகாரம்' அசை. அகர நீட்டமும் உகர நீட்டமும் செய்யுள் விகாரம். 'ஆன்' இடைச்சொல்; அகரம் சாரியை.] (௨௫)

௪௫௨. இருதிசை புணரி னேயிடை வருமே.

இது, குற்றுகர ஈற்றுத்திசைப் பெயர்க்கு அல்வழிக்கண் வேறு முடிபு கூறுகின்றது.

இ-ள்:—இருதிசை புணரின் ஏ இடை வரும் – இரண்டு பெருந்திசைகள் (தம்மிற்) புணரின் ஏ என்னும் சாரியை இடை வந்து புணரும்,

உ-ம்:—வடக்கே தெற்கு, கிழக்கே மேற்கு எனவரும். ['ஏகாரம்' ஈற்றசை]. (௨௬)

௪௫௩. திரிபுவேறு கிளப்பி னொற்று மிறுதியும்
கெடுதல் வேண்டு மென்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணருங் காலை யான.

இஃது, அப்பெருந்திசையோடு கோணத்திசை புணருமாறு உணர்த்துதல் நுத லிற்று.

இ-ள்:—திரிபு வேறு கிளப்பின் — (அப்பெருந்திசைகளோடு) கோணத்திசைகளை வேறாகப் புணர்க்கும் இடத்து, ஒற்றும் இறுதியும் கெடுதல் வேண்டும் என்மனார் புலவர் — (அவ் உகாரம் ஏறி நின்ற) ஒற்றும் அவ் ஈற்று உகாரமும் கெட்டு முடிதல் வேண்டு மென்று சொல்லுவர் புலவர்; தெற்கொடு புணரும் காலை — தெற்கு என்னும் திசை யோடு புணரும் காலத்து, ஒற்று மெய் திரிந்து னகாரம் ஆகும் — (அதன்கண் நின்ற) றகார ஒற்று (த்தன் வடிவு) திரிந்து னகாரமாய் முடியும்.

'திரிந்து' என்றதனான், வடக்கு என்பதன்கண் இடை நின்ற கசர ஒற்றுக் கெடுக்க.

உ-ம்:—வட கிழக்கு, வட மேற்கு: தென் கிழக்கு, தென் மேற்கு எனவரும்.

'வேறு' என்றதனால், திசைப்பெயரொடு பொருட்பெயருக்கும் இவ்விதி கொள்க. வட கடல், வட வரை எனவரும்.

'மெய்' என்றதனான், அத்திசைப்பெயரோடு பொருட்பெயர் புணருமிடத்து இறு தியும் முதலும் திரிந்து முடிவனவெல்லாம் கொள்க. கீழ் கூரை, மேல் கூரை என வரும். (உஎ)

சஙச. ஒன்று முதலாக வெட்ட னிறுதி
எல்லா வெண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே
முற்றவின் வரூஉ மிரண்டலங் கடையே.

இஃது, இவ்வீற்று எண்ணுப்பெயரோடு எண்ணுப்பெயருக்கு முடிபு கூறுகின் றது.

இ-ள்:—ஒன்று முதலாக எட்டு என் இறுதி எல்லா எண்ணும் — ஒன்று என்னும் சொல் முதலாக எட்டு என்னும் சொல் இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப்பெயரும், பத்தன் முன்வரின் — பத்து என்னும் எண்ணுப்பெயர் முன்வரின், குற்றியலுகரம் மெய்யொடும் கெடும் - (அப் பத்து என்னும் சொல்லிற்) குற்றியலுகரம் (தான் ஏறி நின்ற) மெய்யோடும் கெட்டு முடியும்; இரண்டு அலம் கடை முற்ற இன் வரும் — இரண்டாகிய எண்ணுப்பெயர் அல்லாத எண்ணுப்பெயரிடத்து முடிய இன் வந்து புணரும்.

உ-ம்:—பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதி னேழு, பதினெட்டு எனவரும்.

நிலைமொழி முற்கூறாததனால், பிறமொழியும் அவ் இன்பேறு கொள்க. ஒன்ப தின்பால், ஒன்பதின்கூறு எனவரும்.

'முற்ற' என்றதனான், மேல் எடுத்தோத்தானும் இலேசானும் இன்பெற்றவழி பதிற்றொன்று, பதிற்றிரண்டு என்றாற்போல முடிபுகள் வேறுபட வருவனவெல்லாம் கொள்க.

['எகாரம்' இரண்டும் ஈற்றசை. உகர நீட்டம் செய்யுள் விகாரம்.] (உஅ)

௪௩௫. பத்தனொற் றுக்கெட னகார மிரட்டல்
ஒத்த தென்ப விரண்டுவரு காலை.

இது, மேல் இன் பெறுதென்று விலக்கிய அதற்குப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்:—பத்தன் ஒற்று கெட னகாரம் இரட்டல் – பத்து என்னும் சொல்லின் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்று வந்து இரட்டுதல், ஒத்தது என்ப–பொருந்திற்று என்று சொல்லுப [புலவர்], இரண்டு வரு காலை – இரண்டு என்னும் எண் வரும் காலத்து.

உ-ம்:—பன்னிரண்டு எனவரும். (௩௧)

௪௩௬. ஆயிரம் வரினு மாயிய றிரியாது.

இதுவும், எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஆயிரம் வரினும்-(மேற்கூறிய பத்து என்னும் எண்ணுப்பெயர் முன்னர் ஒன்று முதலாகிய எண்ணுப் பெயரேயன்றி) ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வந்தாலும், அ இயல் திரியாது – மேல் ஈறு கெட்டு இன் பெற்ற இயல்பில் திரியாதே முடியும்.

உ-ம்:—பதினாயிரம் எனவரும். [அகர நீட்டம் செய்யுள்விகாரம்.] (௩௨)

௪௩௭. நிறைபு மளவும் வரூஉங் காலையும்
குறையா தாகு மின்னென் சாரியை.

இஃது, எண்ணுப் பெயரொடு நிறைப் பெயரும் அளவுப் பெயரும் புணர்க்கின்றது.

இ-ள்:—நிறையும் அளவும் வரும் காலையும் – (மேல் நின்ற பத்து என்பதன்முன்) நிறைப்பெயரும் அளவுப்பெயரும் வரும் காலத்தும், இன் என் சாரியை குறையாது ஆகும் – (அவ்) இன் என்னும் சாரியை குறையாது வந்து முடியும்.

உ-ம்:—பதின்கழஞ்சு; தொடி, பலம் எனவும்: கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும் வரும்.

'குறையாதாகும்'என்றதனால்,பத்து என்பதன்முன்னர்ப் பொருட்பெயர்க்கு வரும் முடிபும் கொள்க. பதின்றிங்கள், பதிற்று முனம், பதிற்று வேலி, பதிற்றிதழ் எனவரும்.

௪௩௮. ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையு மியற்கைத் தென்ப
கூறிய வியற்கைக் குற்றிய லுகரம்
ஆற னிறுதி யல்வழி யான.

இஃது, எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

இ-ள்:—ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர் நின்ற பத்தன் ஒற்று கெட ஆய்தம் வந்து இடை நிலையும் இயற்கைத்து என்பர்– ஒன்று முதலாக ஒன்பது ஈறாகச் சொல்லப்படுகின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர் (வருமொழியாய் வந்து) நின்ற

பத்து என்னும் சொல்லினது தகர ஒற்றுக் கெட ஆய்தமானது வந்து இடை[யில்]நிலை பெறும் இயல்பையுடைத்தென்று சொல்லுவர் [புலவர்]. ஆறன் இறுதி அல்வழி குற்றியலுகரம் கூறிய இயற்கை — (அவற்றுள்) ஆறு என்னும் ஈறு அல்லாத இடத்து குற்றியலுகரம் மேற்கூறிய இயற்கை (யாய் மெய்யோடும் கெட்டு முடியும்).

உ-ம்:—ஒருபஃது, இருபஃது என ஒட்டுக.

'வந்து' என்றதனால், ஆய்தமாய்த் திரியாது கெட்டு ஒருபது என்றுமாம். ['ஆன்' இடைச்சொல். அகரம் சாரியை.] (௩௨)

௪௩௯. முதலீ ரெண்ணி னொற்றுரகர மாகும்
உகரம் வருத லாவயி னான.

இது, மேற்கூறிய முடிபிற்கு உரிய தொன்று உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—முதல் ஈர் எண்ணின் ஒற்று ரகரம் ஆகும்—(அவற்றுள்) முதற்கண் நின்ற இரண்டு எண்ணின் ஒற்று ரகார ஒற்றும், அ வயின் உகரம் வருதல் — அவ் விடத்து உகரம் வருக.

உ-ம்:—ஒருபஃது எனவரும். ['ஆன்' இடைச்சொல். அகரம் சாரியை.] (௩௩)

௪௪0. இடைநிலை ரகர மிரண்டெ னெண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயி னான.

இதுவும் அது.

இ-ள்:—இரண்டு என் எண்ணிற்கும் இடைநிலை ரகரம் பொருள்வயின் நடைமருங்கு இன்று—அவ் இரண்டு என்னும் எண்ணிற்கும் இடை நின்ற ரகாரம் அம்மொழி பொருளாமிடத்து நடக்கும் இடம் இன்றிக் கெடும்.

உ-ம்:—இருபஃது எனவரும். ['ஏகாரம்' அசை. 'ஆன்' என்பதனை மேற்கூறியாங்குக் கொள்க.] (௩௪)

௪௪௧. மூன்று மாறு நெடுமுதல் குறுகும்
மூன்ற னொற்றே பகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—மூன்றும் ஆறும் நெடு முதல் குறுகும் — மூன்றும் என்னும் எண்ணும் ஆறு என்னும் எண்ணும் நெடு முதல் குறுகி முடியும். மூன்றன் ஒற்று பகாரம் ஆகும் — மூன்று என்னும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்றுப் பகர ஒற்றாய் முடியும்.

உ-ம்:—முப்பஃது [, அறுபஃது] எனவரும். [ஏகாரம் அசை.] (௩௫)

௪௪௨. நான்க னொற்றே றகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—நான்கன் ஒற்று றகாரம் ஆகும் — நான்கு என்னும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று றகர ஒற்றாய் முடியும்.

உ-ம்:—நாற்பஃது எனவரும். [ஏகாரம் அசை.] (௩௬)

௪௪௩. ஐந்த னொற்றே மகாரம் ஆகும்.

இதுவும் அது.

இ-ள்:—ஐந்தன் ஒற்று மகாரம் ஆகும் – ஐந்து என்னும் எண்ணின்கண் நின்ற நகார ஒற்று மகார ஒற்றாய் முடியும்.

உ-ம்:—ஐம்பஃது எனவரும்.

ஆறன் நெடு முதல் குறுகியவாறே நின்று அறுபஃது எனவரும். 'ஏழு' ஈற்றுகர ஈறு அன்றாம். (௬௭)

௪௪௪. எட்ட னொற்றே ணகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—எட்டன் ஒற்று ணகாரம் ஆகும் – எட்டு என்னும் எண்ணின்கண் நின்ற டகார ஒற்று ணகார ஒற்றாய் முடியும்.

உ-ம்:—எண்பஃது எனவரும். [ஏகாரம் அசை.] (௬௮)

௪௪௫. ஒன்பா னொகரமிசைத் தகர மொற்றும்
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—ஒன்பான் ஒகர மிசை தகரம் ஒற்றும் –(நிலைமொழியாகிய) ஒன்பது என்னும் சொல்லின் ஒகரத்திற்கு மேலாகத் தகரம் ஒற்றாய் மிக்கு வரும். முந்தை ஒற்று ணகாரம் இரட்டும் - முன் சொன்ன ஒகரத்தின் முன்னர் னகர ஒற்று இரண்டு ணகார ஒற்றாய் மிக்கு வரும். பஃது என் கிளவி பகரம் ஆய்தம் கெட ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும் – (வருமொழியாகிய) பஃது என்னும் சொல் தன்கண் பகரமும் ஆய்தமும் கெட (நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர்) ஊகாரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும்; ஒற்றிய தகரம் றகாரம் ஆகும் – (வருமொழியாகிய பஃது என்பதன் ஈற்ற தன்மேல் ஏறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப)ஒற்றாய் நின்ற தகரம் றகார ஒற்றாகும்.

இஃது, ஒன்பதும் பஃதும் என நின்றால் முடியற்பால [இன்ன] வென்பது. பகர ஆய்தம் என்னாத முறையன்றிய கூற்றினான், நிலை மொழிக்கண் பகரங்கெடும் கொள்க. குற்றியலுகரமும் அஃது ஏறிய மெய்யும் முன்னர் மாட்டேற்றாற் கெட்டன. ['ஏகாரம்' அசை. [இச்சூத்திரம் "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" ஆம்.]

உ-ம்:—தொண்ணூறு எனவரும். (௬௯)

௪௪௬. அளந்தறி கிளவியு நிறையென் கிளவியும்
கிளந்த வியல தோன்றுங் காலை.

இது, மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களோடு அளவுப்பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்:—அளந்து அறி கிளவியும் நிறை என் கிளவியும் தோன்றும் காலை — (மேற்கூறிய ஒன்று முதல் ஒன்பான்களின் முன்னர்) அளந்து அறியப்படும் அளவுப் பெயர்ச் சொல்லும் நிறை என்னும் பெயர்ச்சொல்லும் தோன்றுங்காலத்து, கிளந்த இயல — அவ் ஒன்று முதல் ஒன்பான்கள் மேல் பத்து என்பதனோடு புணரும் வழி கிளந்த இயல் பினவாய் முடியும்.

உ-ம்:—ஒரு கலம், இரு கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி எனவும்: கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'தோன்றுங்காலை' என்றதனான், அவ்வெண்களின்முன் எடுத்தோத்தானும் இலே சானும் முடியாது நின்ற எண்ணுப்பெயரையெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்து வித்து முடித்துக்கொள்க.

ஓரொன்று, ஓரிரண்டு; ஈரொன்று, ஈரிரண்டு; ஒரு முந்திரிகை, இரு முந்திரிகை; ஓரரைக்கால், ஈரரைக்கால்; ஒரு கால், இரு கால்; ஓரரை, ஈரரை; ஒரு முக்கால், இரு முக்கால் என ஒட்டிக்கொள்க. (௪௰)

௪௪௭. மூன்றனொற்றே வந்த தொக்கும்.

இது, மாட்டேறு எய்தாததற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மூன்றன் ஒற்று வந்தது ஒக்கும் — மூன்றும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வருமொழியாய் வந்த அளவுப்பெயர் நிறைப்பெயரின் முத[லி]ல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்.

உ-ம்:—முக்கலம்; சாடி, தூதை, பானை எனவும்: கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

மாட்டேற்றானே நாற்கலம்; சாடி, தூதை, பானை எனவும்: கழஞ்சு, தொடி பலம் எனவும் வரும். [ஏகாரம் அசை.] (௪௧)

௪௪௮. ஐந்தனொற்றே மெல்லெழுத் தாகும்.

இதுவும் அது.

இ-ள்:—ஐந்தன் ஒற்று மெல்லெழுத்து ஆகும் — ஐந்தாவதன்கண் நின்ற நகர ஒற்று (மேல் வருகின்ற வருமொழி முதல் வல்லெழுத்திற்கு ஏற்ற) மெல்லெழுத்தாய் முடியும்.

உ-ம்:—ஐங்கலம்; சாடி, தூதை, பானை எனவும்: ஐங்கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும். [ஏகாரம் அசை.] (௪௨)

௪௪௯. கசதப முதன்மொழி வரூஉங் காலை.

இது, மேற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரையறுக்கின்றது.

இ-ள்:—க ச த ப முதல் மொழி வரும் காலை — (மூன்றன் ஒற்று வந்தது ஒப்பதூஉம் ஐந்தன் ஒற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வளவுப்பெயர் நிறைப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய) க ச த ப முதல் மொழிகள் வந்த இடத்து.

மேன் மாட்டேற்றானே, அறுகலம்; சாடி, தூதை, பானை எனவும்: அறுகழஞ்சு; தொடி, பலம் எனவும் வரும்.

எழு குற்றுகர ஈற்றன்மையின், மாட்டேறு எலாதாயிற்று. [முந்தின இரண்டு சூத்திரமும் இதுவும் ஒரு சூத்திரமாயிருந்து கால அளவில் மூன்றாயின போலும்.] (௪௩)

௪௫௰. நமவ வென்னு மூன்றொடு சிவணி
அகாம் வரினு மெட்டன்மு னியல்பே.

இது, வேண்டா கூறி வேண்டியது முடித்தல் நுதலிற்று.

இ-ள்:—ந ம வ என்னும் மூன்றொடு சிவணி அகரம் வரினும் - (அளவுப்பெயர் நிறைப்பெயர்களில் மென்கணத்து இரண்டும் இடைக்கணத்து ஒன்றுமாகிய) ந ம வ என்னும் மூன்றனோடும் பொருந்தி (உயிர்க்கணத்து) அகர முதல்மொழி வரினும் (உம்மையால் அவ்வுயிர்க்கணத்து ஒழிந்த உகரமும் கூறாத வல்லெழுத்துக்களும் வரினும்), எட்டன் முன் இயல்பு - எட்டென்பதன் முன் (மேற்கூறி நின்ற விகாரமே விகாரமாக வேறோர் விகாரமின்றி) இயல்பாய் முடியும்.

உ-ம்:—எண்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல் உழக்கு எனவும்: எண்கழஞ்சு; தொடி; பலம் எனவும் வரும்.

இவ் வேண்டா கூறலான், எண்ணகல் எனத் தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்ளப்பட்டது. ['ஏகாரம்' ஈற்றசை.] (௪௪)

௪௫௧. ஐந்து மூன்று நமவருங் காலை
வந்த தொக்கு மொற்றிய னிலையே.

இதுவும், மேல்மாட்டேற்றோடு ஒவ்வா வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—ஐந்தும் மூன்றும் ந ம வரும் காலை - ஐந்து என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் நகர முதல்மொழியும் மகர முதல்மொழியும் வருங்காலத்து, ஒற்று இயல் நிலை வந்தது ஒக்கும் - தங்கண்நின்ற ஒற்று நடக்கும் நிலைமை (சொல்லின்) அவ் வருமொழிமுத[லி]ல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்.

உ-ம்:—முந்நாழி, மும்மண்டை; ஐந்நாழி, ஐம்மண்டை எனவரும்.

மூன்றும் ஐந்தும் என்னாத முறையன்றிய கூற்றினான், நானாழி என்னும் முடிபின்கண் விகாரமாகிய னகரத்தின்முன்னர் வருமொழிநகரத்திரிபும், அது காரணமாக நிலைமொழி னகரக் கேடும் கொள்ளப்பட்டன. ['ஏகாரம்' ஈற்றசை.] (௪௫)

௪௫௨. மூன்ற னொற்றே வகாரம் வரும்வழித்
தோன்றிய வகாரத் துருவா கும்மே.

இதுவும் அது.

இ-ள்:—மூன்றன் ஒற்று வகாரம் வரும் வழி - மூன்றும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று வகர வருமொழி வரும் இடத்து, தோன்றிய வகாரத்து உருவு ஆகும்—வருமொழியாய வகரத்து உருவாய் முடியும்.

உ-ம்:—முவ்வட்டி எனவரும்.

'தோன்றிய' என்றதனான், முதல் நீண்டு வகர ஒற்றின்றி மூவட்டி என்றுமாம்.

இன்னும் அதனானே, முதல் நீளாது ஒற்றின்றி முவட்டி என்றுமாம். [மகர ஒற்று மிகுதி செய்யுள் விகாரம். ஏகாரம் ஈற்றசை.] (௪௬)

௪௫௩. நான்க னொற்றே லகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—நான்கன் ஒற்று லகாரம் ஆகும்— நான்காம் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று (வகரம் வந்தால்) லகர ஒற்றாய்த் திரிந்து முடியும்.

உ-ம்:—நால் வட்டி எனவரும். ['ஏகாரம்' அசை.] (௪௭)

௪௫௪. ஐந்த னொற்றே முந்தையது கெடுமே.

இதுவும் அது.

இ-ள்:—ஐந்தன் ஒற்று முந்தையது கெடும்— ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று (வகரம் வந்தால்) முன் நின்ற வடிவு கெட்டு முடியும்.

உ-ம்:—ஐ வட்டி எனவரும்.

'முந்தை' என்றதனால், நகர ஒற்றுக் கெடாது அவ்வகரமாய்த் திரிந்து ஐவ்வட்டி என்றும் ஆம். [முதல் ஏகாரம் அசை. இரண்டாம் ஏகாரம் ஈற்றசை.] (௪௮)

௪௫௫. முதலீ ரெண்ணின்முன் னுயிர்வரு காலை
தவலென மொழிப வுகரக் கிளவி
முதனிலை நீட லாவயி னான.

இதுவும் அது.

இ-ள்:—முதல் ஈர் எண்ணின்முன் உயிர் வரு காலை — முற்பட்ட இரண்டு எண்ணின்முன் உயிர் முதல்மொழி வருங்காலத்து, உகரக் கிளவி தவல் என மொழிப — உகரமாகிய எழுத்துக் கெடும் என்று சொல்லுவர் [புலவர்.] முதல் நிலை அவ்வயின் நீடல்— (அவ்வெண்ணின்) முதற்கண் நின்ற எழுத்துக்கள் அவ்விடத்து நீண்டு முடிக.

உ-ம்:—ஓரகல், ஈரகல், ஓருழக்கு, ஈருழக்கு எனவரும். ['ஆன்' இடைச்சொல் அகரம் சாரியை.] (௪௯)

௪௫௬. மூன்று நான்கு மைந்தென் கிளவியும்
தோன்றிய வகரத் தியற்கை யாகும்.

இதுவும் அது.

இ-ள்:—மூன்றும் நான்கும் ஐந்து என் கிளவியும் — மூன்று என்னும் எண்ணும் நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணுச்சொல்லும், தோன்றிய வகரத்து இயற்கையாகும் —(மேல்) தோன்றிமுடிந்த வகரத்து இயற்கையாய் மூன்றன்கண் வகர ஒற்றும் நான்கின்கண் லகர ஒற்றும் ஐந்தன்கண் ஒற்றுக் கெட்டும் முடியும்.

உ-ம்:—முவ்வகல், முவ்வுழக்கு எனவும்; நாலகல், நாலுழக்கு எனவும்; ஐயகல், ஐயுழக்கு எனவும் வரும்.

'தோன்றிய' என்றதனான், மேல் மூன்று என்பது முதல் நீண்டவிடத்து நிலைமொழி னகர ஒற்றுக் கெடுத்துக்கொள்க. (௫௦)

௪௫௭. மூன்றன் முதனிலை நீடலு முரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான.

இதுவும் அது.

இ-ள்:—மூன்றன் முதல் நிலை உழக்கு என் கிளவி வழக்கத்தான்-மூன்று என்னும் எண்ணின்கண் முத[லி]ல் நின்ற எழுத்து உழக்கு என்னுங் கிளவியது வழக்கிடத்து, நீடலும் உரித்து – குறுகாது நீண்டு முடிதலும் உரித்து.

உ-ம்:—மூவுழக்கு எனவரும்.

'வழக்கத்தான்' என்றதனான், அகல் என்பதன்கண்ணும் இச்செய்கை கொள்க.

மூவகல் எனவரும். [ஏகாரம் ஈற்றசை. 'வழக்கத்தான்' வேற்றுமை மயக்கம். அகரம் சாரியை.] (௬௩)

௪௫௮. ஆறன் கிளவி முதனீ டும்மே.

இதுவும் அது.

இ-ள்:—ஆறு என் கிளவி முதல் நீடும்– ஆறு என்னும் சொல் (உயிர் முதல் மொழி வந்தால் முன் குறுகி நின்ற) முதலெழுத்து நீண்டு முடியும்.

உ-ம்:—ஆறகல், ஆறுழக்கு என்வரும். [மகர ஒற்று மிகுதி செய்யுள் விகாரம். ஏகாரம் ஈற்றசை.] (௬௨)

௪௫௯. ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.

இதுவும் அது.

இ-ள்:—ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மொழி இன் பெறல் வேண்டும் – ஒன்பது என்னும் எண்ணின் இறுதி தன் வடிவு நிலை திரியாது சாரியை மொழியாகிய இன் பெற்று முடிதல் வேண்டும்.

உ-ம்:—ஒன்பதின்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்: கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'உருபு' என்றதனான், ஒன்பதிற்றகல் என்புழி இரட்டிய றகரமாகக்கொள்க. [ஏகாரம் ஈற்றசை.] (௬௫)

௪௬௦. நூறுமுன் வரினுங் கூறிய வியல்பே.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்பதன் முடிபு கூறுகின்றது.

இ-ள்:—நூறு முன் வரினும் கூறிய இயல்பு – நூறு என்பது (ஒன்று முதல் ஒன்பான்கண்) முன் வரினும் (மேல் பத்தென்பனோடு புணரும் வழி) கூறிய இயல்பு எய்தி முடியும்.

உ-ம்:—ஒரு நூறு, இரு நூறு, அறு நூறு, எண் ணூறு எனவரும். இவை மாட்டேற்றானே முடிந்தன. (௬௪)

௪௬௧. மூன்ற னொற்றே நகார மாகும்.

இது, மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மூன்றன் ஒற்று நகாரம் ஆகும் — மூன்றும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று நகர ஒற்றாகும்.

உ-ம்:—முந்நூறு எனவரும். ['ஏகாரம்' அசை] (௬௰)

௪௬௨. நான்கு மைந்து மொற்றுமெய் திரியா.

இதுவும் அது.

இ-ள்:—நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா — நான்கு என்னும் எண்ணும் ஐந்து என்னும் எண்ணும் தம் ஒற்றுக்கள் நிலை திரியாது முடியும்.

உ-ம்:—நானூறு, ஐந்நூறு எனவரும்.

'மெய்' என்றதனால், நானூறு என்புழி வருமொழி ஒற்றிய நகரக்கேடு கொள்க. இன்னும் அதனானே, ஒற்றின்றி ஐநூறு எனவரும் முடிபும் கொள்க. [முந்திய இரண்டு சூத்திரங்களும் இதுவும் ஒன்றாயிருந்து கால அளவில் மூன்றாயின போலும்.] (௬௧)

௪௬௩. ஒன்பா னுதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகு மியற்கைத் தென்ப
ஆயிடை வருத லிகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகார மொற்றும்.

இதுவும் அது.

இ-ள்:—ஒன்பான் முதல் நிலை முந்து கிளந்த அற்று — ஒன்பது என்னும் சொல்லின் முதல் நின்ற ஒகரம் மேல் (பத்தென்பதனோடு புணரும் வழிக்) கூறியவாறு போல ஒகரமிசைத் தகர ஒற்று மிகும். முந்தை ஒற்று ளகாரம் இரட்டும் — அவ்வொகரத்தின் முன்னின்ற (னகர) ஒற்று இரண்டு ளகர ஒற்றாம். நூறு என் கிளவி நகார மெய் கெட ஊ ஆ ஆகும் இயற்கைத்து என்ப -(வருமொழியாகிய) நூறு என்னும் சொல்லும் நகாரமாகிய மெய் கெட (அதன் மேல் ஏறிய)ஊகாரம் ஆகாரமாம் இயல்பையுடைத்து என்பர் (புலவர்.) அ இடை இகாரம் ரகாரம் வருதல் — அம்மொழியிடை ஓரிகாரமும் ரகாரமும் வருக. ஈறு மெய் கெடுத்து மகாரம் ஒற்றும் — இதற்கு ஈறாகிய குற்றியலுகரத்தினையும் அஃது ஏறி நின்ற றகார ஒற்றினையும் கெடுத்து ஓர் மகரம் ஒற்றாய் வந்து முடியும்.

'மெய்' என்றதனான், நிலைமொழிக்கண் நின்ற பகரம் கெடுக்க.

உ-ம்:—தொள்ளாயிரம் எனவரும். ['அகரம்' செய்யுள் விகாரத்தாற் கெட்டது. ஏகாரங்கள் அசைகள். அகரச்சுட்டின் நீட்டம் செய்யுள் விகாரம்.][இச்சூத்திரமும் "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" ஆம்.] (௬௨)

௪௬௪. ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதலீ ரெண்ணி னுகரங் கெடுமே.

இஃது, அவ்வொன்று முதல் ஒன்பான்கள்முன் ஆயிரம் என்பது வருங்கால் முடிபு கூறுகின்றது.

இ-ள்:—ஆயிரக் கிளவி வரும் காலை முதல் ஈர் எண்ணின் உகரம் கெடும் - ஆயிரம் என்னும் சொல் (ஒன்று முதல் ஒன்பான்கள்) முன் வருங்காலத்து முதல் ஈர் எண்ணின் கண் பெற்று நின்ற உகரம் கெட்டு முடியும்.

உ-ம்:—ஒராயிரம், இராயிரம் எனவரும். ['ஏகாரம்' ஈற்றசை. முதல் ஈர்-முதல் இரண்டு. அவையாவன ஒரு, இரு என்பன.] (௩௮)

௪௬௫. முதனிலை நீடினு மான மில்லை.

இஃது, எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—முதல் நிலை நீடினும் மானம் இல்லை - அம்முதல் ஈர் எண்ணின் முதற்கண் நின்ற ஒகர இகரங்கள் நீண்டு முடியினும் குற்றம் இல்லை.

உ-ம்:—ஓராயிரம், ஈராயிரம் எனவரும். (௩௯)

௪௬௬. மூன்ற னொற்றே வகார மாகும்.

இதுவும் மாட்டேற்றோடு ஒவ்வா முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்:—மூன்றன் ஒற்று வகாரம் ஆகும் - மூன்றும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று வகர ஒற்றாய் முடியும்.

உ-ம்:—முவ்வாயிரம் எனவரும்.

'முதனிலை' என்றதனான், முதல் நீண்டு வகர ஒற்றுக்கெட்டு மூவாயிரம் என்றும் வரும். [ஏகாரம் அசை.] (௪௰)

௪௬௭. நான்க னொற்றே லகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—நான்கன் ஒற்று லகாரம் ஆகும் - நான்காம் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாய் முடியும்.

உ-ம்:—நாலாயிரம் எனவரும். [ஏகாரம் அசை.] (௪௧)

௪௬௮. ஐந்த னொற்றே யகார மாகும்.

இதுவும் அது.

இ-ள்:—ஐந்தன் ஒற்று யகாரம் ஆகும்- ஐந்தாம் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று யகர ஒற்றாய் முடியும்.

உ-ம்:—ஐயாயிரம் எனவரும். முன்னர் இவ்வாறு ஓதாமையான், ஐயகல், ஐயுழக்கு [என்பவை] உடம்படு மெய் பெற்றது. [ஏகாரம் அசை.] (௪௨)

௪௬௯. ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்.

இதுவும் அது.

இ-ள்:—ஆறன் மருங்கின் குற்றியலுகரம் ஈறு மெய் ஒழிய கெடுதல் வேண்டும் — ஆறும் எண்ணின்கண் நின்ற குற்றியலுகரம் (தான் ஏறிய) மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்ப (உகரமாகிய அவ்வீறு தானே) கெட்டு முடிதல் வேண்டும்.

உ-ம்:—அறாயிரம் எனவரும்.

திரிந்ததன் திரிபது என்னும் நயத்தான், ஆறன் மருங்கின் என்று ஓதப்பட்டது. ஆறு என்பது அறு எனக்குற்றியலுகரம் முற்றியலுகரமாக ஓதப்பட்டு நின்றமையின், அவ்வுகரக்கேடு ஓதப்பட்டது.

ஈறு எனவும் மெய் எனவும் அவ்வுயிர் மெய்யைப் பிரித்துச் செய்கை ஓதினமை யான், அவ்வுயிர் மெய்யினை ஒற்றுமை நயத்தாற் குற்றியலுகரம் என்று ஓதினுைக் கொள்க.

ஆறன் மருங்கின் ஈறு மெய்யொழியக் கெடும் என்றது குற்றியலுகரம் என்றே தினமையான், நெடுமுதல் குறுகாதே நின்று ஆறாயிரம் என்றும் ஆம்.

இன்னும் அதனானே "ஆறுகுவதே" [சொல்லதிகாரம் – வேற்றுமையியல் – சூத்திரம் கஅ.] என்றாற் போலப் பொருட்பெயர்க்கண் வரு முடிபும் கொள்க.

மேல் மாட்டேற்றானே எண்ணாயிரம் என முடிந்தது. (௪௬௯)

௪௭௰. ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.

இதுவும் அது.

இ-ள்:—ஒன்பான் இறுதி உருபு நிலை திரியாது சாரியை மரபு இன்பெறல் வேண்டும் – ஒன்பது என்னும் எண்ணின் இறுதிக் குற்றியலுகரம் தன் வடிவு நிலை திரிந்து கெடாது சாரியையாகிய மரபினையுடைய இன்பெற்று முடிதல் வேண்டும்.

உ-ம்:—ஒன்பதினாயிரம் எனவரும்.

உருபு என்றும், நிலை என்றும், சாரியை மரபு என்றும் கூறிய மிகுதியான், ஆயிரமல்லாத பிற எண்ணின்கண்ணும் பொருட்பெயரிடத்தும், இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபும் கொள்க.

ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றொன்று, ஒன்பதிற்றுத்தடக்கை, ஒன்பதிற்றெழுத்து என வரும்.

இன்னும் அவ்விலேசானே, மேல் எண்ணாயிரம் என்ற வழி ஒற்றிரட்டுக் கொள்க. [எகாரம் ஈற்றசை.] (௪௭௰)

௪௭௧. நூறா யிரமுன் வரூஉங் காலை
நூற னியற்கை முதனிலைக் கிளவி.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு நூறு என்னும் அடையடுத்து ஆயிரம் என்பது முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்:—நூறாயிரம் முன் வரு காலை முதல் நிலைக்கிளவி நூறு என் இயற்கை – நூறாயிரம் என்னும் அடையடுத்த மொழி (ஒன்று முதல் ஒன்பான்கள்) முன்வருங் காலத்து முதனிலைக்கிளவியாகிய ஒன்று என்னும் எண் (மேல் ஒன்று முதல் ஒன்பான்களோடு முடிந்த) நூறு என்னும் சொல் அவ்வொன்றனோடு முடிந்த விகார இயற்கை எய்தி முடியும்.

வழிநிலைக்கிளவியாகிய இரண்டு முதல் எண்கள் விகாரம் எய்தியும் எய்தாதும் இயல்பாயும் முடியும்.

உ-ம்:—ஒரு நூறாயிரம் எனவரும். இரு நூறாயிரம், இரண்டு நூறாயிரம்; முந்நூறாயிரம், மூன்று நூறாயிரம்; நா னூறாயிரம், நான்கு நூறாயிரம்; ஐந் நூறாயிரம், ஐந்து நூறாயிரம்; அறு நூறாயிரம், ஆறு நூறாயிரம்; எண் ணூறாயிரம், எட்டு நூறாயிரம்; ஒன்பது நூறாயிரம் எனவரும்.

உரையிற் கோடல் என்பதனான், தொள்ளாயிரம் என்ற முடிபினோடு மாட்டேறு சென்றதேனும் அவ்வாறு முடியாதென்று கொள்க.

'முன்' என்பதனான் இன்சாரியைபெற்று ஒன்பதினூறாயிரம் என்றும் ஆம்.

'நிலை' என்றதனான், மூன்றும் ஆறும் இயல்பாய் முடியும் முடிபின்கண் நெடுமுதல் குறுகாமை கண்டு கொள்க. இன்னும் அதனானே நானூறாயிரம் என்புழி வருமொழி நகரக்கேடு கொள்க. (௪௭௧)

௪௭௨. நூறென் கிளவி யொன்றுமுத லொன்பாற்
கீறுசினை யொழிய வினவொற்று மிகுமே.

இது, நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ-ள்:—நூறு என் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு ஈறு சினை ஒழிய இன ஒற்று மிகும்— நூறு என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பான்களோடு புணருமிடத்து ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினையும் கெடாது நிற்ப (சினைக்கு) இனமாகிய இன ஒற்று மிக்குமுடியும்.

உ-ம்:—நூற்றொன்று; இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு, எட்டு, ஒன்பது எனவரும்.

'ஈறுசினை' என்று ஓதிய மிகையானே, நூறு என்பதனோடு பிற எண்ணும் பிற பொருட்பெயரும் இவ்விதியும் பிறவிதியும் முடியுமாறு கொள்க. நூற்றுக்கோடி, நூற்றுப்பத்து, நூற்றுத்தொண்ணூறு எனவும்; நூற்றுக்குறை, நூற்றடுக்கு எனவும் வரும். ['ஏகாரம்' ஈற்றசை.] (௬௬)

௪௭௩. அவையூர் பத்தினு மத்தொழிற் றாகும்.

இஃது, அந்நூறு என்பதனோடு ஒன்று முதல் ஒன்பான்கள் அடையடுத்தவழிப் புணருமாறு கூறுகின்றது.

இ-ள்:—அவை ஊர்பத்தினும் அத்தொழிற்று ஆகும் – (அந்நூறு என்பது)ஒன்று முதல் ஒன்பான்களான் ஊரப்பட்ட பத்தினோடு புணருமிடத்தும் அத்தொழிற்றாய் இன ஒற்று மிக்கு முடியும்.

உ-ம்:—நூற்றொருபஃது; இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது எனவரும்.

'ஆகும்' என்றதனான், நிலைமொழியடையடுத்து வரும் முடிபும் கொள்க. ஒரு நூற்றொருபஃது என ஒட்டுக. (௬௭)

௪௭௪. அளவு நிறையு மாயிய றிரியா
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

இஃது, அந்நூறு என்பதனோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்:—அளவும் நிறையும் அ இயல் திரியா – (அந்நூறு என்பதனோடு புணருமிடத்து) அளவுப்பெயரும் நிறைப்பெயரும் மேற்கூறிய இயல்பில்திரியாதே நின்று இனவொற்று மிக்கு முடியும். குற்றியலுகரமும் வல்லெழுத்து இயற்கையும் முன் கிளத்தால் அன்ன என்மனார் புலவர் – (அவ்விடத்துக்) குற்றியலுகரம் கெடாமையும் (இன ஒற்று மிக்கு வன்றொடர்மொழியாய் நின்றமையான் வருமொழி) வல்லெழுத்து மிகும் இயல்பும் மேல் (வன்றொடர்மொழிக்குக்) கூறிய தன்மையவென்று சொல்லுவர் புலவர்.

உ-ம்:—நூற்றுக்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு எனவும்: கழஞ்சு, தொடி, பலம் எனவும் வரும்.

'திரியா' என்றதனான், நூறு என்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க.

உ-ம்:—ஒரு நூற்றுக்கலம், இருநூற்றுக்கலம் என ஒட்டுக. [ஆகாரம் செய்யுள் விகாரம். கிளந்து என்பது வினையெச்சத்தொகை.] (௯௮)

௪௭௫. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற வாய்தங் கெடுதல் வேண்டும்.

இஃது, ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்கள் அடையடுத்த பத்திேனாடு ஒன்று முதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ-ள்:—ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி — ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஊரப்பட்ட சொற்கள், ஒன்று முதல் ஒன்பாற்கு—அவ்வொன்று முதல் ஒன்பான்கள் வருமொழியாய் வந்து புணருமிடத்து, நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும் — (ஆண்டு)நின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும், ஒற்று இடை மிகும்— (கெட்ட வழி இனவொற்றாய் ஓர் தகர) ஒற்று இடை மிக்கு முடியும்.

உ-ம்:—ஒருபத்தொன்று, இருபத்தொன்று; ஒருபத்திரண்டு, இருபத்திரண்டு; ஒருபத்துமூன்று, இருபத்துமூன்று என ஒட்டிக்கொள்க.

'நின்ற' என்றதனான், மேல் ஒரு பதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்பேறும் கொள்க. [ஏகாரம் ஈற்றசை.] (௯௯)

௪௭௬. ஆயிரம் வரினே யின்னாஞ் சாரியை
ஆவயி னொற்றிடை மிகுத லில்லை.

இஃது, அவ்வடையடுத்த பத்திேனாடு ஆயிரத்தினைப் புணர்க்கின்றது.

இ-ள்:—ஆயிரம் வரின் சாரியை இன் ஆம் - (அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன்) ஆயிரம் என்பது வரின் இடை வந்து புணருஞ்சாரியை இன் ஆம். அவயின் ஒற்று இடை மிகுதல் இல்லை - அவ் விடத்து (முன் கூறிய) ஒற்று இடை மிகுதல் இன்றி முடியும்.

உ-ம்:—ஒருபதினாயிரம், இருபதினாயிரம் என ஒட்டுக.

'அவயின்' என்றதனான், ஒருபதிற்றுக்கலம், என்னும் முடிபிற்கு உகரமும் வல்லெழுத்துப் பேறும் கொள்க. [ஏகாரம் அசை. ஆகாரம் செய்யுள் விகாரம்.] (௱)

௪௭௭. அளவு நிறையு மாயிய றிரியா.

இஃது, அவ்வொன்றுமுதலாகிய பத்தூர் கிளவி முன் அளவுப்பெயரும் நிறைப் பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்:—அளவும் நிறையும் அ இயல் திரியா - (அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவிமுன்) அளவுப்பெயரும் நிறைப்பெயரும் (மேல்) ஆயிரத்தோடு புணரும் வழி முடிந்த இயல்பில் திரியாதே நின்று இன்பெற்று முடியும்.

உ-ம்:—ஒருபதின்கலம், இருபதின்கலம்; சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி. அகல், உழக்கு எனவும்: ஒருபதின்கழஞ்சு, தொடி, பலம் எனவும் கொள்க.

'திரியா' என்றதனான், ஒருபதிற்றுக்கலம் என்னும் முடிபிற்கு இன்னின் னகரம் இரட்டிய றகரமாகலும், ஒருபதினாழி என்னும் முடிபின்கண் வருமொழி நகாம் திரிந்தவழி நிலைமொழியின் னகரக்கேடும் கொள்க. [ஆகாரம் செய்யுள் விகாரம்.] (௱௧)

௪௭௮. முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஞ ந ம தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை யியற்கை யென்மனார் புலவர்.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெயரைப் புணர்க்கின்றது.

இ-ள்:—முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும் ஞ ந ம தோன்றினும் ய வ வந்து இயையினும் - முதனிலை எண்ணாகிய ஒன்று என்னும் எண்ணின் முன் வல்லெழுத்து முதன்மொழி வரினும் ஞ ந ம க்களாகிய மெல்லெழுத்து முதன் மொழி வரினும் ய வ க்களாகிய இடையெழுத்து முதன் மொழி வந்து பொருந்தினும், முதல்நிலை இயற்கை என்மனார் புலவர்-அவ்வொன்று முதல் ஒன்பான்கள் முன் எய்திய முடிபுநிலை எய்தி முடியும் என்று சொல்லுவர் புலவர்.

எனவே, வழிநிலை எண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம் முதனிலை முடிபாகிய விகாரம் எய்தியும் எய்தாதும் இயல்பாயும் முடியும்.

உ-ம்:—ஒருகல்; சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு எனவரும். இருகல், இரண்டுகல்; சுனை, துடி, பறை, ஞாண், நூல், மணி, யாழ், வட்டு என ஒன்பதின் காறும் ஒட்டுக.

ஒன்பதின்கல் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க.

'நிலை' என்றதனான், மாட்டேற்றுக்கு ஏலாத ஞகார யகாரங்களின் முடிபு கொள்ளப்பட்டது. (௭௨)

௪௭௯. அதனிலை யுயிர்க்கும் யாவரு காலையும்
முதனிலை யொகர மோவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே.

இஃது, ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெயருள் உயிர் முதன்மொழி முடியுமாறும் மேற்கூறிய யகரம் வேறுபட முடியுமாறும் கூறுகின்றது.

இ-ள்:—அதன் நிலை உயிர்க்கும் யா வருகாலையும் முதல்நிலை ஒகரம் ஓ ஆகும் — அவ்வொன்று முதல் ஒன்பான்களோடு புணருமிடத்து உயிர் முதன்மொழி வந்த இடத்தும் யா முதல்மொழி வந்த இடத்தும் முதனிலை எண்ணாகிய ஒன்று என்பதன் கண் ஒகரம் ஓகாரம் ஆம். ரகரத்து உகரம் துவரக்கெடும் — (அவ்விடத்து) ரகரத்து உகரம் முற்றக்கெட்டு முடியும்.

எனவே, வழிநிலை யெண்களுள் உயிர்நிலை முதன்மொழி வந்த இடத்து முன் கூறியவாறே இருவாற்றானும் முடியும்.

உ-ம்:—ஓராடை, ஓராடை எனவும்; இருவடை, இருவாடை, இரண்டடை, இரண்டாடை எனவும் உயிர் முதல் மொழிகளை ஒட்டிக்கொள்க.

யா முதல்மொழி ஓர் யாழ் எனவரும்.

'துவர' என்றதனான், இரண்டு என்னும் எண்ணும் மூன்று என்னும் எண்ணும் செய்யுளகத்து ஈரசை எனவும் மூவசை எனவும் முதல் நீண்டு வேறுபட முடியுமாறு கொள்க.

'அதனிலை' என்றதனான் முதனிலை நீளாதே நின்று உகரம் கெட்டு ஓரடை, ஓராடை, ஓர்யாழ் எனவரும் முடிபும் கொள்க. [ஏகாரங்கள் ஈற்றசைகள்.] (௭௩)

சஅய. இரண்டுமுதல் லொன்பா னிறுதி முன்னர்
வழங்கியன் மாவென் கிளவி தோன்றின்
மகர வளவொடு நிகரலு முரித்தே.

இஃது, இரண்டு முதல் ஒன்பான்கள் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மா என்பது புணருமாறு கூறுகின்றது.

இ-ள்:—இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர் – இரண்டு முதலாக ஒன்பது ஈறாகச் சொல்லப்படுகின்ற எண்களின்முன்னர், வழக்கு இயல் மா என் கிளவி தோன்றின் – வழக்கின்கண்ணே நடக்கின்ற (விலங்கு மரம் முதலிய அல்லாத அளவு முதலியவற்றிற்குரிய)மா என்னும் சொல் தோன்றின்,மகர அளவொடு நிகரலும் உரித்து - (இயல்பாய் முடிதலேயன்றி மேற் கூறிய) மண்டை என்னும் அளவுப்பெய ரோடு ஒத்து வேறுபட முடிவனவும் பெறும்.

உ-ம்:—இரண்டுமா, இருமா; மூன்றுமா, மும்மா; என ஒன்பதின்காறும் இவ்வாறு ஒட்டுக.

இரண்டு முதல் ஒன்பான் என்று எடுத்தமையின், ஒன்றற்கு ஒருமா என்னும் முடிபேயன்றி ஒன்றுமா என்னும் முடிபு இல்லையாயிற்று. இவற்றுள், மிக்க எண் ணோடு குறைந்த எண்வருங்கால் உம்மைத்தொகையாகவும், குறைந்த எண்ணோடு மிக் கது வரிற் பண்புத்தொகையாகவும் முடித்தாரென்க. ['ஏகாரம்' ஈற்றசை.] (எச)

சஅக. லனவென வரூஉம் புள்ளி யிறுதிமுன்
உம்முங் கெழுவு முளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.

இது, லகார னகார ஈற்றுச் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ-ள்:—ல ன எனவரும் புள்ளி இறுதி முன் - ல ன என்று சொல்ல வருகின்ற புள்ளியீற்றுச் சொல்முன், உம்மும் கெழுவும் உளப்பட பிறவும் - உம் என்னும் சாரி யையும் கெழு என்னும் சாரியையும் உளப்படப் பிற சாரியையும், அன்ன மரபின் மொழியிடைத்தோன்றி செய்யுள் தொடர்வயின் மெய் பெற நிலையும் – அப் பெற்றிப் பட்ட மரபினையுடைய மொழியிடைத் தோன்றிச் செய்யுள் மொழிகளைத் தொடர்ந்து சொல்லும் இடத்து மெய்ம்மைபெற நிலைபெற்று முடியும். வேற்றுமை குறித்த பொருள் வயின்–வேற்றுமை குறித்த பொருட்புணர்ச்சிக்கண்.

உ-ம்:—"வானவரி வில்லுந் திங்களும், கல்கெழு கானவர் நல்குறு மகளே" எனவும்; "மாநிதிக் கிழவனும் போன்ம்" எனவும்; "கான்கெழுநாடு" எனவும் வரும்.

'மொழியிடைத் தோன்றி' என்ற மிகையால், பிற ஈற்றுள்ளும் இச்சாரியைபெற்று முடிவன கொள்க. துறைகெழு மாந்தை, வளங்கெழு திருநகர் எனவரும்.

'அன்னமரபின்' என்றதனால், சாரியை காரணமாக வல்லெழுத்துப் பெறுதலும், அது காரணமாக நிலைமொழியீறு திரிதலும், சாரியையது உகரக்கேடும், எகர நீட்சி யும் கொள்க. பூக்கேழூரன், வளங்கேழ்திருநகர் என்று அவ்வாறு வந்தமை யறிக.

'மெய் பெற' என்றதனான், இச்சாரியைப் பேற்றின்கண் ஈற்று வல்லெழுத்து வீழ்க்க. ['ஆன்' இடைச்சொல், அகரம் சாரியை.] (எரு)

சஅஉ. உயிரும் புள்ளியு மிறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினு மிசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை யஃறிணை யாயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்
செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும்
தம்மியல் கிளப்பிற் றம்முற் றம்வரூஉம்
எண்ணின் றொகுதி யுளப்படப் பிறவும்
அன்னவை யெல்லா மருவின் பாத்திய
புணரிய னிலையிடை யுணரத் தோன்றா.

இஃது, இவ்வதிகாரத்துப் புணர்க்கப்படா மொழிகள் இவையென அவற்றை எடுத்து உணர்த்துகின்றது.

இ-ள்:—உயிரும் புள்ளியும் இறுதியாகி குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்பட வாரா குறைச்சொல் கிளவியும் — உயிரெழுத்தும் புள்ளியெழுத்தும் ஈறாகிக் குறிப்பின்கண்ணும் பண்பின்கண்ணும் இசையின்கண்ணும் தோன்றி ஒரு நெறிப்பட வாராக் குறைச்சொற்களாகிய உரிச்சொற்களும், உயர்திணை அஃறிணை அ இரு மருங்கின் ஐம்பால் அறியும் பண்பு தொகு மொழியும்—உயர்திணை அஃறிணை யாகிய அவ்விரண்டு திணையிடத்தும் உளவாய ஐந்து பாலினையும் அறியவரும் பண்புத்தொகை மொழிகளும், செய்யும் செய்த என்னும் கிளவியின் மெய் ஒருங்கு இயலும் தொழில் தொகு மொழியும்—செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களின்படி ஒருங்குநடக்கும் வினைச்சொல் தொக்க வினைத்தொகையும், தம்இயல் கிளப்பின்—(எண்கள்) தம்இயல்பு கிளக்கும் இடத்து, தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதி உளப்பட பிறவும் அன்னவை எல்லாம்—(நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாய் வாராது) தம்முன் தாம் வரும் எண்ணின் தொகுதியும் உட்பட்ட பிறவும் அத்தன்மைய வெல்லாம், மருவின் பாத்திய—வழக்கிடத்து மருவிடைந்த இடத்துள்ளன. (ஆகலான் அவ்வாறே கொள்ளப்படும்.) புணர்இயல் நிலையிடை உணரத்தோன்றா—புணர்ச்சிஇயன்ற நிலைமைக்கண் (அவற்றின் முடிபு) விளங்கத் தோன்றா.

உ-ம்:—விண்விணைத்தது, கார்கறுத்தது, ஒல்லொலித்தது இவைகுறைச்சொற் கிளவி ஆயினமையின் முடிக்கப்படாவாயின; விண்ணென விசைத்ததென இடைச் சொல்லோடுகூடிய வழிப்புணர்க்கப்படும்.

கருஞ்சான்றான் என்றது பண்புத்தொகை. இது கரும் என பண்புணர்கின்றது. கருஞ்சான்றானெனத் தொகையாயவழி கருமென்பது கரியானெனப் பால்காட்டி நிற்றலில் புணர்க்கப்படாதாயிற்று.

கொல்யானை என்றது வினைத்தொகை. அதுவும் கொல்லெனத் தொழின்மை உணர்கின்றது. கொல்யானை எனத் தொகையாயவழி, கொன்ற எனக்காலம் காட்டி நின்றமையின், புணர்க்கப்படாதாயிற்று.

ஒரொன்று என இது தம்முற்றாம் வந்த எண். இது நிறுத்த சொல்லும் குறித்து

வருகிளவியும் அன்மையிற் புணர்க்கப்படாதாயிற்று. இது தானே ஓரொன்றாகக் கொடு என்புழிப் புணர்க்கப்படும்.

"பிறவும்" என்றதனான் முடியாதன உண்டான், கரியன் என்பன. இவை உண் எனவும் கருமை எனவும் பிரித்து நிறுத்திய வழி ஆனும் அன்னும் குறித்துவருகிளவி யன்மையான் வந்து புணராமையின், புணர்க்கப்படாவாயின.

'தோன்றி' என்றதனால், கொள்ளெனக்கொண்டான் என்புழிக் கொள்ளென்ப தனை என என்பதனோடு புணர்க்கப்படாமைகொள்க.

'மெய் ஒருங்கியலும்' என்றதனான், உண்டான் என்புழிச்செய்கையும் காலமும் பாலும் தோற்றிநிற்குமாறு பிரித்துப் புணர்க்கப்படாமை கொள்க. [அகரச் சுட்டின் நீட்டம் செய்யுள் விகாரம்]. (எக)

சஅரு. கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்
வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.

இஃது, இவ்வதிகாரப் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:- கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும் - முன் எடுத்தோதின அல்லாதன செய்யுளிடத்து வேறுபட வருவனவற்றையும், வழங்கு இயல் மருங்கின் மருவொடுதிரிநவும் - வழக்கு நடக்குமிடத்து மருவுதலோடு வேறுபட வருவனவற்றையும், விளம்பிய இயற்கையின் வேறுபடத்தோன்றின் - முன் சொன்ன முடிபியற்கையின் வேறுபடத்தோன்றின், நல்மதி நாட்டத்து வழங்கு இயல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல் - நல்லறிவினது ஆராய்ச்சியான் வழக்கு இயலுமிடத்து அவற்றின் முடிபு வேறுபாடுகளை யறிந்து நடத்துக, என்மனார் புலவர் - என்று சொல்லுவர் புலவர்.

உ-ம்:—நறவங்கண்ணி, கள்ளியங் கோடு, புன்னையங்கானல், பொன்னந்திகிரி, ஆரங் கண்ணி, காலம் பெருந்துறை என இவை வேற்றுமைக்கண் அம்முப் பெற்று முடிந்தன.

"வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை" என்பது ரகர வீறு அத்துப் பெற்று முடிந்தது. முளவுமா, பிணவுநாய் என்பன அல்வழிக்கண் மென்கணத்துக் குறியதன் இறுதிச் சினைகெட்டு உகரம்பெற்று முடிந்தன.

"அஞ்செவி நிறைய மந்திரங் கூறி" என்பது அகம் என்னும் நிலைமொழி செவி என்னும் வருமொழியோடு வேறுபட முடிந்தது.

'ஆயிடை' என்பது அவ்வென்னும் வகரவீறு வேறுபட முடிந்தது.

தடவுத்திரை, தடவுத்தோள், என்பன உரிச்சொல் முடிபு.

அருமருந் தன்னான் எனற்பாலது அருமருந்தான் என மருஉவாய் முடிந்தது. சோணாடு மலாடு என்பதும் அது.

பொதியி லென்பதும் அது. பிறவும் அன்ன. [உணர்ந்தனர் என்பது இறந்தகால வினையெச்சம்.] (எஎ)

ஒன்பதாவது குற்றியலுகரப் புணரியல் முற்றிற்று.

எழுத்ததிகாரம் இளம்பூரணருரை முற்றுப்பெற்றது.

எனது நூல்களும் பிரசுரங்களும்.

நூல்கள்.		ரூ.	அ.	பை.
மனம்போல வாழ்வு— மூன்றாம் பதிப்பு.	...	0	8	0
அகமே புறம் — மூன்றாம் பதிப்பு.	...	0	8	0
வலிமைக்கு மார்க்கம்— இரண்டாம் பதிப்பு-அச்சில்.	...	0	12	0
மெய்யறிவு — மூலமும் உரையும்.	...	0	12	0
மெய்யறம் — மூலமும் உரையும்.	...	1	0	0
எனது பாடற்றிரட்டு— இரண்டாம் பதிப்பு.	...	0	12	0
வள்ளியம்மை சரித்திரம்— அரும்பதவுரையுடன்	...	0	8	0
இன்னிலை— மூலமும் உரையும்— இரண்டாம் பதிப்பு.	...	0	12	0
திருக்குறள்— மணக்குடவருரை— அறத்துப்பால்.	...	1	[illegible]	[illegible]
ஷை பொருட்பால்—அச்சில்.	...	1	8	0
ஷை இன்பத்துப்பால்—அச்சில்.	...	0	8	0
தொல்காப்பியம்— இளம்பூரணம்— எழுத்ததிகாரம்.	...	1	8	0
ஷை — பொருளதிகாரம்— அகப்புறத்திணைகள்.	...	1	0	0
எனது அரசியல் பெருஞ்சொல்.	...	0	8	0

கோவில்பட்டி, S. I. R.
திருநெல்வேலி ஜில்லா.

வ. உ. சிதம்பரம்பிள்ளை,
வக்கீல்.

BINDED AT RAMA LAW BOOK-BINDING WORKS,
TINNEVELLY TOWN.